# அனுதினமும் தேவனுடன்



மெய்யான நீதியிலும்
பரிசுத்தத்திலும்
தேவனுடைய சாயலாக
சிருஷ்டிக்கப்பட்ட
புதிய மனுஷனைத்
தரித்துக்கொள்ளுங்கள்.
எபேசியர் 4:24



ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
2013

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| ஜனவரி காலை | ஜனவரி மாலை | | பெப்ரவரி காலை | பெப்ரவரி மாலை |
|---|---|---|---|---|
| ஆதி. 1,2 | மத். 1 | 01 | யாத். 24,25,26 | மத். 22:23-46 |
| ஆதி. 3,4,5 | மத். 2 | 02 | யாத். 27,28 | மத். 23:01-22 |
| ஆதி. 6,7,8 | மத். 3 | 03 | யாத். 29,30 | மத். 23:23-39 |
| ஆதி. 9,10,11 | மத். 4 | 04 | யாத். 31,32 | மத். 24:01-14 |
| ஆதி. 12,13,14 | மத். 5:01-30 | 05 | யாத். 33,34 | மத். 24:15-31 |
| ஆதி. 15,16,17 | மத். 5:31-48 | 06 | யாத். 35,36 | மத். 24:32-51 |
| ஆதி. 18,19 | மத். 6 | 07 | யாத். 37,38 | மத். 25:01-30 |
| ஆதி. 20,21,22 | மத். 7 | 08 | யாத். 39,40 | மத். 25:31-46 |
| ஆதி. 23,24 | மத். 8 | 09 | லேவி. 1,2,3 | மத். 26:01-25 |
| ஆதி. 25,26 | மத். 9:01-17 | 10 | லேவி. 4,5 | மத். 26:26-46 |
| ஆதி. 27,28 | மத். 9:18-38 | 11 | லேவி. 6,7 | மத். 26:47-75 |
| ஆதி. 29,30 | மத். 10:01-23 | 12 | லேவி. 8,9 | மத். 27:01-26 |
| ஆதி. 31,32 | மத். 10:24-42 | 13 | லேவி. 10,11 | மத். 27:27-45 |
| ஆதி. 33,34,35 | மத். 11 | 14 | லேவி. 12,13 | மத். 27:46-66 |
| ஆதி. 36,37 | மத். 12:01-21 | 15 | லேவி. 14 | மத். 28 |
| ஆதி. 38,39,40 | மத். 12:22-50 | 16 | லேவி. 15,16 | மாற். 1:01-20 |
| ஆதி. 41,42 | மத். 13:01-23 | 17 | லேவி. 17,18,19 | மாற். 1:21-45 |
| ஆதி. 43,44 | மத். 13:24-43 | 18 | லேவி. 20,21 | மாற். 2 |
| ஆதி. 45,46 | மத். 13:44-58 | 19 | லேவி. 22,23 | மாற். 3 |
| ஆதி. 47,48 | மத். 14:01-21 | 20 | லேவி. 24,25 | மாற். 4:01-20 |
| ஆதி. 49,50 | மத். 14:22-36 | 21 | லேவி. 26,27 | மாற். 4:21-41 |
| யாத். 1,2,3 | மத். 15:01-28 | 22 | எண். 1,2 | மாற். 5:01-20 |
| யாத். 4,5 | மத். 15:29-39 | 23 | எண். 3,4 | மாற். 5:21-43 |
| யாத். 6,7 | மத். 16 | 24 | எண். 5,6 | மாற். 6:01-13 |
| யாத். 8,9 | மத். 17 | 25 | எண். 7 | மாற். 6:14-31 |
| யாத். 10,11,12 | மத். 18 | 26 | எண். 8,9,10 | மாற். 6:32-56 |
| யாத். 13,14 | மத். 19 | 27 | எண். 11,12,13 | மாற். 7:01-23 |
| யாத். 15,16 | மத். 20 | 28 | எண். 14,15 | மாற். 7:24-37 |
| யாத். 17,18,19 | மத். 21:01-27 | 29 | | |
| யாத். 20,21 | மத். 21:28-46 | 30 | | |
| யாத். 22,23 | மத். 22:01-22 | 31 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

(DAILY DEVOTIONS)


## ஜனவரி - ஏப்ரல்

## 2013

நிர்வாக இயக்குனர் : திரு. மயூக பெரேரா

தமிழ்பணி முகாமையாளர் : திரு. ரவி சங்கர்

தொகுப்பாசிரியர் : திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்




தபால் முகவரி:
சத்தியவசனம்
த.பெ. 1012,
கொழும்பு, இலங்கை.

நேரில்:
120A, தர்மபால மாவத்தை
கொழும்பு 7
இலங்கை.

Email: svsl@sltnet.lk

TEL: 011-2695441, FAX: 011-2698843


இது ஒரு சத்தியவசன வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியமுள்ள வாசகர்களுக்கு,

இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

புதிய வருடத்தில், எல்லாமே புதிதாக மாற்றமடையவேண்டும் என்று அநேகர் வாஞ்சிப்பதுண்டு. எனினும், "கிறிஸ்து இயேசுவுக்குள் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்றும் "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்ன தென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்றும், கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற நமக்கு பரிசுத்த வேதாகமம் கற்பித்துள்ளது. அப்படியிருக்க, நாம் லௌகீக விடயங்களிலா, அல்லது தேவவார்த்தைக்கூடாக நமது உள்ளான ஜீவியத்திலா, எவற்றில் புதியவற்றைத் தேடப்போகின்றோம்?

எல்லாவற்றையும் புதிதாக்கும் தேவனை நம்பி வாழுகின்ற நமக்கு, 'நோய்களும் துன்பங்களும் அழிவுகளும் வருவதேன்?' இது நாம் அடிக்கடி கேட்கின்ற கேள்வி. ஆனால் கேட்கவேண்டிய கேள்வி அதுவல்ல; இந்த உலகம் உள்ளவரைக்கும், நோய், துன்பம், கஷ்டம், பணநெருக்கடி போன்றவை வரத்தான் செய்யும். ஆகவே 'ஏன்' என்பதை விட்டுவிட்டு, 'இப்படிப்பட்ட நேரத்தில் நான் என்ன செய்கி றேன்? யாரிடத்திற்குப் போகிறேன்?' என்ற கேள்வி கேட்கப்படவேண்டும். இந்தக் கேள்விக்கு நமது பதில் என்ன? புதிய வருடத்திலும் உங்கள் ஆவிக்குரிய வாழ்வினைப் பெலப்படுத்தவும், நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவசாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளவும், மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக்கப்படவும், தேவனுக்குப் பிரியமான தெரிவுகளையும் தெரிந்தெடுக்கவும் இந்தத் தியானங்கள் உங்களுக்கு மிகுந்த உதவிபுரியும் என்று நம்பிக்கையுடனும் ஜெபத்துடனும் தொகுத்துள்ளோம்.

இம்முறை ஜனவரி மாத தியானங்களை *சகோதரி தர்ஷினி சேவியர் அவர்களும்*, பெப்ரவரி 1-18 நாட்களுக்கான தியானங்களை *சகோதரி சாந்தி பொன்னு அவர்களும்* லெந்து நாட்களுக்கான தியானங் களை *சகோதரி ஜெபி பீடில் அவர்களும்*, ஏப்ரல் மாத தியானங்களை *உட்ரோ குரோல் அவர்களும்* (மொழிபெயர்ப்பு) எழுதியுள்ளார்கள். இவர்களுக்காக தேவனைத் துதிப்போம். <u>இனிவரும் நாட்களில், நான்கு மாதங்களுக்கு ஒருமுறை (வருடத்திற்கு 3 தடவை) இத்தியான நூல் வெளிவரும்</u> என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

அன்புடனும் ஜெபத்துடனும்,

***சகோதரன் வஷ்னீ ஏனர்ஸ்ட்***

(தொகுப்பாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
1
செவ்வாய்

# தேவனோடு உடன்படிக்கை

...என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.
(ஆதியாகமம் 17:7)

மீண்டும் ஒரு புதிய வருடத்தினுள் பிரவேசித்திருக்கிறோம். வருடத்தின் முதல் ஞாயிறு நம்மில் அநேகர் உடன்படிக்கை ஆராதனையில் கலந்து கொள்வதுண்டு. அதில் தேவனோடு செய்யும் உடன்படிக்கைக்கு எவ்வளவோ முக்கியத்துவத்தை நாம் கொடுக்கிறோம். தேவன் மனிதரோடு உடன்படிக்கை செய்ததை வேதாகமத்திலே பல இடங்களில் காணலாம். தேவன் தாம் செய்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராகவே இருக்கிறார். ஆகவே, அவரைத் தொழுதுகொள்ளும் நாமும் அவருடனான உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழவேண்டியது அவசியம் அல்லவா.

என் வாழ்வில் எவ்வளவோ சிக்கல்களும் பிரச்சனைகளும் வந்த போதிலும், அவற்றிற்கூடாக வெற்றியோடு கடந்துச்செல்வதற்கு, திருமணத்தில் தான் தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்கையும் தனக்குக் கைகொடுத்தது என்று, திருமண பந்தத்தில் பல வருடங்களைப் பூர்த்திசெய்த ஒருவர் மகிழ்ச்சியோடு கூறினார். ஆனால் இன்று, திருமண பந்தத்தில் தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மறந்து, சுயநலமான மனப்போக்குடன் தீர்மானங்களை எடுத்து, திருமண பந்தத்தையே முறித்து, விவாகரத்து எடுப்பதை நாகரீகம் என கருதும் முற்போக்குவாதிகள் மலிந்துவிட்டார்கள்.

தேவனோடு நாம் செய்யும் உடன்படிக்கை மிகவும் முக்கியமானது. அதனைக் காத்துக்கொள்ள நாம் பிரயாசப்படவேண்டும். அதற்கு உடன்படிக்கையின் தேவனும் நமக்கு உதவிசெய்வார். நோவாவின் காலத்தில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட அழிவுக்குப் பின்பு, தாம் இனி வெள்ளத்தால் பூமியை அழிப்பதில்லை என்று சொன்ன தேவன், தமக்கும், பூமியிலுள்ள சகல மாம்ச ஜீவன்களுக்கும் இடையில் செய்த உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை வைத்தார். இன்று வானவில்லை கண்டதும் மழைவராது என்கிறோம். இவ்விதமாக உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தேவனை ஆராதிக்கும் நாமும், அவரோடு செய்யும் உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இப் புதிய வருடத்தின் முதல் நாளில் இத் தியானத்தில் இணைந்திருக்கும் தேவபிள்ளையே, கடந்த காலங்களில் தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்திருக்கிறோமா? அல்லது, ஒவ்வொரு வருடமும் செய்த உடன்படிக்கை ஜனவரி மாதத்துடனே காணமற்போகின்றனவா? இவ்வருடத்தில் நாம் தேவனோடு செய்துகொள்ளும் உடன்படிக்கையை உண்மையாய் காத்துக்கொள்ள தேவன் கிருபை செய்வாராக.

*வாசிப்பு:*
ஆதியாகமம் 9:8-17

*ஜெபம்:*
உடன்படிக்கையில் மாறாத என் தேவனே, இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை என்றைக்கும் காத்திட என்னை உமதாவியால் நிரப்பும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
2
புதன்

# எல்லாம் அறிந்தவர்

என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது...
(சங்கீதம் 31:15)

இன்றைக்கு அல்லது நாளைக்கு நாம் என்ன செய்யப்போகிறோம் என்று திட்டமிட்டிருந்தாலும், அடுத்த நிமிடம் என்னவாகும் என்று யாருக்குத் தெரியும்? ஆனால், நாம் ஆராதிக்கும் தேவனுக்கோ சகலமும் தெரியும். அவர் எல்லாவற்றையும் அறிந்து ஆளுகை செய்கிறவர். எல்லாவற்றையும் கடந்து நிற்பவர். அவரை நம்பி வாழுவது எத்தனை பெரிய பாக்கியம். இதைத்தான் சங்கீதக்காரரும், "என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது" என்று எழுதி வைத்துள்ளார். எமது காலங்கள் எப்படிப்பட்டது என்று எமக்குத் தெரியாத போது அதைத் தெரிந்துவைத்திருக்கும் ஆண்டவரிடம் அதை முழு நம்பிக்கை யோடு ஒப்புக்கொடுப்பது பெரிய ஆசீர்வாதமல்லவா.

தாவீது தனது வாழ்வில் பலவிதமான கஷ்டங்களுக்கூடாகக் கடந்து சென்றவர். எல்லாவேளைகளிலும் அவர் தனது தேவனையே சார்ந்து வாழ்ந்த வர். அப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலையில்தான் இந்த 34ம் சங்கீதத்தையும் அவர் பாடிவைத்துள்ளார். இதில் விசேஷமாக, கர்த்தருக்குப் பயந்து வாழுகிற வர்களுக்கு எப்படியான வழிநடத்துதலும் ஆசீர்வாதங்களும் உண்டு என்பதை அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கர்த்தரே எல்லாப் பயத்துக்கும் எம்மை விடுவித்துக் காப்பவர் என்றும், கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர் களைச் சூழப்பாளயம் இறங்கி அவர்களை விடுவிக்கிறார் என்றும், கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையுங் குறைவுபடாது என்றும், தெளிவாகத் தன் அனுபவத்தைக்கொண்டு பாடிவைத்துள்ளார். அதுமாத்திரமல்ல, நீதிமானுக்கு வரும் துன்பங்களைக் குறித்தும் தாவீது இங்கே குறிப்பிடுகிறார். கர்த்தரை நம்பியிருக்கிறவனுக்குத் துன்பம் வராது என்றில்லை. ஆனால், துன்பத்தி னூடே அவன் சென்றாலும் கர்த்தரே அவனைத் தாங்குகிறார் என்பதுதான் உண்மை. தம்மை நம்புகின்றவர்களைக் கர்த்தர் கைவிடுவதில்லை.

ஒரு புதிய வருடத்தின் ஆரம்பத்தில் வந்து நிற்கும் நாம், இவ்வருடம் எப்படிப்பட்டதாய் இருக்குமோ என்று தெரியாத நிலையில், சகலத்தையும் அறிந்த தேவனின் கரத்தில் நமது காலங்களை ஒப்புவித்துவிடுவோமாக. ஒவ்வொரு வருட ஆரம்பத் திலும், "கர்த்தாவே, இனி வரப்போவது எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். எந்த சூழ்நிலைக்கூடாக நான் சென்றாலும் என்னோடுகூடவே நீர் வருகிறீர். ஆகவே, சகலத்தையும் உமது கரத்தில், உமது சித்தத்துக்குள் ஒப்படைத்து வருடத்தை ஆரம்பிக்கி றேன்" என்று நான் ஜெபிப்பதுண்டு. நீங்கள் எப்படியோ? தேவனை நம்பி உங்களை ஒப்புக் கொடுத்து பாருங்கள். தேவன் நிச்சயம் செம்மை யான வழிகளிலே வழிநடத்துவார்.

*வாசிப்பு:*
சங்கீதம் 34:1-22

*ஜெபம்:*
என்னை என்றும் வழிநடத்தும் என் ஆண்டவரே, என் கால நேரங்களை உமது கரத்தில் ஒப்படைக்கிறேன். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
3
வியாழன்

# வழிநடத்தும் தேவ கரம்

அங்கேயும் உமது கை என்னை நடத்தும். உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். (சங்கீதம் 139:10)

வீதியில் செல்லும்போது, தன் மகளின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தார் அம்மா. தனது கைப்பைக்குள்ளிருந்து குடையை வெளியே எடுத்த மகள், அதை தாய் பிடித்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். தாயோ, அந்தக் குடையைப் பிடித்தபடியே வீதியில் நடக்க ஆரம்பித்தார். தனியாக எப்படி நடந்து வந்தீர்கள் என்று கேட்டபோது, எதையோ ஒன்றைப் பற்றிப் பிடித்திருக்கிறேன் என்ற நம்பிக்கையில் வந்துவிட்டேன் என்றார். அவர் இடறி விழுந்திருந்தால் அந்தக் குடை கைகொடுத்திருக்குமா?

இன்னுமொரு உதாரணத்தையும் சிந்தித்துப் பார்க்கலாம். ஒரு தாய்க் குரங்கு ஒருபோதும் குட்டியைப் பிடித்திருக்காது; மாறாக, குட்டிதான் தாயை இறுகப் பிடித்திருக்கும். மரம்விட்டு மரம் தாவும்போது தற்செயலாக குரங்குக் குட்டி தவறி விழுந்துவிட்டால், பின்னர் அத் தாய் குரங்கு குட்டியைச் சேர்த்துக் கொள்ளாது. எமது வாழ்விலும் நாம் எதைப் பற்றிப் பிடித்திருக்கிறோம், எப்படியாகப் பற்றிப் பிடித்திருக்கிறோம் என்பது மிக முக்கியம்.

33ம் சங்கீதத்தில், கர்த்தர் சகலவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கிறார்; தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களுக்கு அடைக்கலமாய் இருக்கிறார். அவரைத் தமக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும் அவரைத் தமக்குச் சுதந்தரமாகக்கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது என்றார் சங்கீதக்காரர். அதேபோல் தாவீதும், 139ம் சங்கீதத்தில், எங்கே சென்றாலும் தேவனுடைய கை நம்மை நடத்தும் என்று பாடியுள்ளார்.

அழகான ஒரு பாடல் வரிகள் இவை: "என் கரம் உம் கையைப் பிடித்து சென்றால் தவறவிடுவேனே; ஆனால், உம் கரம் என் கையை பிடித்துச் சென்றால் ஒருக்காலும் தவறிடேனே." நாம் தேவனைப் பிடித்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, நம்மை அறியாமலேயே அவரது கையை விட்டு வழுவிச் சென்றுவிடுவோம். பிரச்சனை வந்ததும் கையை தளர்த்தி பிரச்சனைக்குள் விழுந்து மூழ்கிவிடுகிறோம். ஆகவே, நாம் தேவனைப் பற்றிப் பிடித்திருப்பதிலும் பார்க்க, நமது கரத்தைப் பிடித்து வழிநடத்தும்படிக்கு தேவனுடைய கரத்தில் எமது கரத்தை ஒரு குழந்தையைப்போல கொடுத்து விடுவோமாக. தேவன் நம்மை நடத்தும் பாதை கரடுமுரடாக இருக்கலாம். கற்கள் முற்கள் நிறைந்ததாயிருக்கலாம். இடுக்கமான வழியாகக் கூட இருக்கலாம். அதற்கூடாகவும் நம்மை வழி நடத்திச் செல்லுபவர் தேவனே என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அப்போது நமது கரத்தை தேவ கரத்தில் ஒப்புவிக்க நாம் தயங்கமாட்டோம்.

*வாசிப்பு:*
சங்கீதம் 33:12-22

*ஜெபம்:*
கர்த்தாவே,
நான் அல்ல;
நீரே என்
கரங்களை
இறுகப்பிடித்து,
உமது வழியில்
என்னை நடத்தும்.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
4
வெள்ளி

# நம்பிக்கையூட்டும் வசனம்

என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது. (சங்கீதம் 94:19)

"கூவிக்கொண்டு ஷெல் வரும் சத்தம் ஓயாமல் கேட்ட வண்ணமிருந்தது. வீட்டினுள்ளே மர கதிரைகளின் கீழ் எமது பிள்ளைகளோடு படுத்திருந்தோம். நமது குழந்தைகள் தங்கள் மழலை மொழியில், தேவன் தானியேலை சிங்கங்களின் வாயினின்று தப்புவித்தார். சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ ஆகியோரை தேவன் நெருப்பிலிருந்து காப்பாற்றினார் என்று நாம் சொல்லிக் கொடுத்த வேதக்கதைகளை அசைப்போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் எமக்கிருந்த ஒரே ஆறுதலும் நம்பிக்கையும் அப்பிள்ளைகள் பேசிக் கொண்டிருந்த நம்பிக்கையின் வசனங்கள்தான்". யுத்தசூழலுக்குள் சிக்கித் தவித்த ஒரு குடும்பத்தினரின் அனுபவம் இது.

இங்கே சங்கீதக்காரனும், "கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால் என் ஆத்துமா சீக்கிரமாய் மௌனத்தில் வாசம்பண்ணியிருக்கும். ...என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது" என்று எழுதுகிறார். பலவித சூழ்நிலைகளுக்குள் நாம் அகப்பட்டு, நம்பிக்கையிழந்துபோகும் நேரங்களில் எமக்கு நம்பிக்கையைத் தந்து, நாம் தொடர்ந்து நடக்க உதவுவது தேவனுடைய வசனமேயாகும். ஆண்டவர் எமக்கு எத்தனையோ வாக்குத்தத்தங்களையும், நம்பிக்கையான வசனங்களையும் தந்திருக்கிறார். எத்தனையோ தேவபிள்ளைகளின் வாழ்வின் சம்பவங்கள் எமக்கு முன்மாதிரியாகவும் எச்சரிப்பாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் எமது கைகளில் வைத்துக்கொண்டு, அதனைத் திறந்து வாசிக்க நேரமில்லாமல் நாம் அவதிப்படுவது ஏன்?

வாழ்வுக்கு நம்பிக்கையூட்டும் வசனங்களைக் கையில் வைத்துக் கொண்டு, நம்பிக்கையற்றவர்களாய் விரக்தியின் உச்சக்கட்டத்துக்குள் நாம் கடந்து செல்லுவது ஏன்? பின்னர் செயலாற்ற முடியாதவர்களாய் ஒரு மூலைக்குள் முடங்கி, மருந்து மாத்திரைகளில் தஞ்சம் புகுவது ஏன்? இவ்விதமான ஒரு நிலை நம்மில் யாருக்கும் வரக்கூடாது. ஒருநாளில் ஒரு மணிநேரத்தை யாவது தேவனுடைய வசனத்துக்காக ஒதுக்கக் கூடாதா? "தேவையானது ஒன்றே; மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டாள்" என்று ஆண்டவர் இயேசு கூறிய அந்த நல்ல பங்கு இந்த நம்பிக்கையூட்டும் வசனங்களே. அந்த நல்ல பங்கை நாம் கைவிடலாமா? நமக்கு ஏன் வீணான சோர்வு? ஏன் விரக்தி? எல்லா நிலைமையிலும் நம்மைத் தூக்கிவிடுவதற்கு நம்பிக்கையூட்டும் தேவ வார்த்தைகள் நமக்குண்டு. அதைப் பிடித்துக்கொண்டு தைரியமாக முன்செல்வோமாக.

*வாசிப்பு:*
சங்கீதம் 94:14-23

*ஜெபம்:*
உம் பாதம் அமர்ந்து, உம் வசனம் தியானித்து, உம்மோடு நெருங்கி உறவோடி, உமக்கென்று வாழ எனக்கு உதவிடும் ஆண்டவரே. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
5
சனி

# பாதைக்கு வெளிச்சம்

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்கீதம் 119:105)

"வைத்தியசாலையிலிருந்து குழந்தையை அழைத்துக்கொண்டு புறப்பட்டபோது, திடீரென வீதிவிளக்குகள் அணைந்துவிட்டன. அன்று அமாவாசை இருட்டு வேறு. சற்று தூரம் சென்றபின், நாம் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் விளக்கும் திடிரென அணைந்துவிட்டது. பிரயாணமோ நீண்ட தூரம். ஆண்டவரைத் துதித்துப் பாடியவண்ணம் மெதுவாக சென்றுகொண்டிருந்தோம். அப்போது, திடிரென ஒரு சைக்கிள் வேகமாக எம் பக்கம் வருவது தெரிந்தது. அந்த சைக்கிள் வெளிச்சத்தில் நாமும் முன்சென்றோம். நாம் போகவேண்டிய இடம்மட்டும் எம்மோடு சைக்கிளில் வந்த அவர், நாம் நன்றி சொல்ல திரும்பியபோது, முன்சென்று மறைந்துபோனார். அன்று மட்டும் அவர் வந்திராவிடில் அந்த இருட்டில் நாம் மிகவும் கஷ்டப்பட்டிருப்போம்" என்று தங்கள் அனுபவ சாட்சியை ஒரு குடும்பத்தினர் பகிர்ந்துகொண்டனர். ஒரு மோட்டோர் சைக்கிளை வழிநடத்தியது ஒரு சாதாரண சைக்கிள் வெளிச்சம். ஆம், இருளின் மத்தியில்தான் வெளிச்சத்தின் மகிமை புரியும்.

சங்கீதக்காரரோ, "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்கிறார். அதாவது, தனது வாழ்க்கை பாதையில் தன்னை வழிநடத்துவதற்கு வெளிச்சமாக தேவனுடைய வார்த்தை இருக்கிறது என்கிறார். இந்த இரகசியம் தேவனுடைய வார்த்தைகளைத் தினமும் தியானிப்போருக்கு மட்டுமே புரியும். இது சங்கீதக்காரனின் அனுபவம்; இந்தக் காலத்தில் இது எப்படி எம்மை வழிநடத்தும்' என்று தியானம் செய்யாமல் தர்க்கிப்போரும் இருக்கிறார்கள்.

எனது வாழ்வில் தேவ வார்த்தை வழிகாட்டியாக, ஆறுதலாக, வெளிச்சமாக இருந்தது என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லமுடியும். அது உங்கள் வாழ்விலும் வெளிச்சமாகவும், கால்களுக்குத் தீபமாகவும் இருக்கவேண்டுமானால், தேவவார்த்தைகளைத் தியானிக்க நீங்கள் தான் நேரம் செலவிடவேண்டும். இருளான பாதையில் நடக்கும்போது டோச் வெளிச்சம் மிகவும் சிறிதானாலும் கால்கள் இடறிப் போகாதவாறு அது உதவுகிறது. அப்படியே, வாழ்வு இருண்டுபோகும் சமயங்களில் வழிதெரியாமல் தடுமாறும்போது பாதைக்கு வெளிச்சமாக தேவ வார்த்தை அமைகிறது. இந்த மங்காத வெளிச்சத்தைக் கைகளில் வைத்துக்கொண்டு நாம் ஏன் தடுமாறவேண்டும்? செய்வது எது, செய்யக் கூடாதது எது என்று பட்டியலிட்டுக் காட்டுவதுதான் வேத வார்த்தை என்பது பலரது தவறான கருத்து. இதனால் அதன் ஆழத்தைக் காணமுடியாத குருடராகி விடுகின்றனர். நாம் எப்படி?

*வாசிப்பு:*
சங்கீதம் 119:105-112

*ஜெபம்:*
பிதாவே, என் பாதைக்கு வெளிச்சமாகிய உமது வார்த்தைகளை தினமும் தியானித்து, ஒளியின் பிள்ளையாக வாழ உதவி செய்திடும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
6
ஞாயிறு

# தேவையானது ஒன்றே!

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய்....
அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி,
அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பு அவசியம். ஏனெனில், மனிதன் பிறக்கும்போதே பாவ சுபாவத்துடனேயே பிறக்கிறான். "பெற்றோரான நாம் இரட்சிப்பைப் பெற்றிருந்தாலும், நமது பிள்ளைகள் இயேசுவைத் தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தாமாகவே ஒரு தீர்மானத்துக்குள் வர வேண்டும் என்பது எமது நீண்டநாள் ஜெபமாயிருந்தது. இதற்காக அவர்களது குழந்தைப் பருவம் முதல் நாம் ஜெபிக்க ஆரம்பித்தோம். அவர்கள் வாலிபப் பருவத்தை அடைந்ததும் தங்கள் வாழ்வைத் தேவனுக்கு ஒப்புவித்து ஒரு தீர்மானத்துக்குள் வந்தனர். இதற்காக பல ஆண்டுகள் ஜெபித்தாலும், இது மிகவும் முக்கியமான, தேவையான ஒன்று என்பதை உணர்ந்திருந்தோம். பிள்ளைகள் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டபோது நாம் பெற்ற சந்தோஷத் துக்கு அளவே இருக்கவில்லை." இது ஒருவரது சந்தோஷ சாட்சி.

ரோமர் 3:12ல், "எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை" என்று எழுதப்பட்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் மீட்கப்படவேண்டியது அவசியமாயிற்று. அதனாலேயே தேவன் தாமே மனிதனாகி, தம்மையே ஏகபலியாக ஒப்புக் கொடுத்து, கிருபையாக நமக்கு ஜீவனைத் தந்தருளினார். தேவனுடைய கிருபையினாலே நாம் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்படுகிறோம். தேவன்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படிக்கு அவர்களுக்குத் தேவனே அதிகாரம் கொடுத்திருக்கிறார். பாவிகளாக இருந்த நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறோம் என்றால் அது எத்தனை மேன்மை. அது ஒவ்வொருவருக்கும் தேவை.

பிள்ளைகளுக்குப் படிப்பு, நல்ல ஒழுக்கம், நல்ல உடை, நல்ல பாடசாலை என்றெல்லாம் தேடித் தேடி வாங்கிக் கொடுக்கும் பெற்றோராகிய நாம், அவர்களுடைய நித்திய வாழ்வுக்கு அத்தியாவசியமான இரட்சிப்பைக் குறித்து அசட்டையாக இருப்பது எப்படி? பிள்ளைகளின் ஏனைய தேவைகளுக்காக நாம் ஜெபிப்பது போலவே அவர்களின் ஆத்தும இரட்சிப்புக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டியது மிகவும் அவசியம். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். பாவத்தை அறிக்கை செய்கிற ஆத்துமா பிழைக்கும். ஆனால் பாவத்தை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. இரட்சிப்பை நாம் கொடுக்கமுடியாது. அது முற்றும் தேவனாலே ஆகிறது. ஆகையால் ஒவ்வொருவரின் இரட்சிப்பைக் குறித்தும் பாரப்பட்டு ஜெபிப்போமாக.

*வாசிப்பு:*
ரோமர் 3:10-24

*ஜெபம்:*
பிதாவே, இரட்சிப்பைப் பெற்றிராத ஒவ்வொருவருக்காகவும் பாரத்தோடு ஜெபிக்க இன்று என்னை முற்றும் ஒப்புவிக்கிறேன், ஏற்றருளும். ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
7
திங்கள்

# கேளுங்கள்...

'...கேளுங்கள். அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்...'
(லூக்கா 11:9)

அப்பா, தனது பிள்ளைகளுக்குத் தேவையானவற்றைப் பார்த்துப் பார்த்துச் செய்வதுண்டு. மறுபுறத்தில், பிள்ளைகளும் தேவையானவற்றை அப்பாவிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதும் உண்டு. அதுபோலவே, எமக்குத் தேவையானதைத் தேவன் நமக்கு அருளுகிறார். அத்துடன், நமது தேவைகளை நாம் தம்மிடம் வேண்டிக்கொள்ளவேண்டும் என்றும் அவர் ஆசிக்கிறார்.

ஒரு தம்பதியினர் சில பிரச்சனைகளினால் பிரிந்தனர். அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அவரவர் விட்ட பிழைகளை உணர்ந்து திருந்தி, ஒருவரோடொருவர் பேசி சீர்பொருந்தும்படி ஒருசில கால அவகாசமும் கொடுக்கப்பட்டது. அத்துடன் நிறுத்திவிடாமல் அவர்களுக்காக அனைவரும் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டனர். அவ்வாறு தொடர்ந்து ஜெபித்து வந்த ஒருவர், அவர்கள் இப்போது எப்படியிருக்கிறார்கள் என்று விசாரித்தார். அவர்கள் மிகவும் சந்தோஷமாகச் சேர்ந்து வாழுவதை அறிந்து தேவனைத் துதித்தார். அவர் கேட்டார்; கர்த்தர் கொடுத்தார்.

ஆண்டவருக்கு எல்லாம் தெரியும்; பின்னர் நாம் ஏன் கேட்கவேண்டும் என்றும், கேட்பதெல்லாம் கிடைப்பதில்லை, ஆதலால், கேட்பதில் பயனில்லை என்றும் சொல்லி, ஜெபிக்காமலும், ஜெபத்தில் விசுவாசமில்லாமலும் இருப்பவர்களும் உண்டு. 'கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்று இயேசு நமக்குக் கற்றுகொடுத்திருக்கிறார். மாத்திரமல்ல, தாமும் பிதாவை நோக்கி வேண்டிக்கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

நமது குடும்ப ஜெபத்தில், சகல தேவைகளுக்காகவும், பிறருடைய தேவைகளுக்காகவும் அனுதினமும் வேண்டிக்கொள்வதுண்டு. அதனை நமது பிள்ளைகள் சிறுகுழந்தைகளாக இருந்த காலத்திலிருந்து இவ்விதமாக நாம் வேண்டிக்கொள்வதையும், பதில் கிடைக்கப்பெற்று நன்றி சொல்லுவதையும் கண்ட பிள்ளைகளுக்குள் தேவபயமும், ஜெபத்தில் விசுவாசமும் தானாகவே வேரூன்றின. அதை வேறாக சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியம் எமக்கு ஏற்படவில்லை. தமது பெற்றோர் ஜெபிப்பதைக் காணும் பிள்ளைகள், தாங்களாகவே ஜெபிக்க ஆரம்பிப்பார்கள். ஆம், ஜெப ஜீவியமும், தேவநம்பிக்கையும் முதலில் நம் குடும்பங்களிலேயே ஆரம்பமாகின்றது. குடும்ப ஜெபத்தின் முக்கியத்துவம் இன்று குடும்பங்களில் அற்றுப்போய்க் கிடப்பது துக்கத்திற்குரியது. இன்றே நாம் குடும்ப ஜெபத்தை ஆரம்பிப்போமாக. முன்னர் செய்து விட்டுவிட்டவர்கள் மீளத் தொடங்குவோமாக. கேளுங்கள். அதனைத் தேவன் தருவார்.

*வாசிப்பு:*
லூக்கா 11:5-13

*ஜெபம்:*
அன்பின் தேவனே, உம்மை நோக்கிக் கூப்பிட, உம்மை நோக்கி மன்றாட, உம்மை நோக்கி ஜெபிக்க என்னைப் பக்குவப்படுத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
8
செவ்வாய்

# அயலவர்களுக்கான ஜெபம்

'உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.'
(மத்தேயு 5:44)

"நாம் புதிதாக வீடு வாங்கி குடிவந்த நாட்களில் எமது அயல்வீட்டுக் காரரோடு பலவிதமான பிரச்சனைகள் தலைதூக்கியது. அவர்களோடு பேசினோம். அத்துடன், சகல பிரச்சனைகளையும் தேவபாதத்தில் வைத்து ஜெபித்தோம். இன்று, பிரச்சனைகளும் தீர்ந்ததுமன்றி, அவர்களோடு ஒரு உறவையும் பேணக்கூடியதாக இருக்கிறது." இது ஒருவரது அனுபவ சாட்சி.

மிகவும் ஒற்றுமையாக வாழும் அயலகத்தாரும் உண்டு; ஆபத்துக்கு உதவாத அயலகத்தாரும் உண்டு. பிரச்சனைப்படுத்தும் அயலும் உண்டு; பிரச்சனையில் உதவும் அயலகத்தாரும் வாய்ப்பதுண்டு. நண்பர்களான அயலும் உண்டு; சத்துருக்களான அயலும் உண்டு. அதனால் அவர்களை நாம் அப்படியே ஒதுக்கிவிடமுடியுமா? எந்த சூழ்நிலையிலும் நம்மிடம் முதலில் வருகிறவர்கள் நமது அயலகத்தார்தானே. சமீபத்திலே அயல்வீட்டுச் சண்டையில் கத்திகள் பொல்லுகளுடன்கூட அநேகர் வந்து தாக்கியதான ஒரு காரியத்தைக்கூடக் கேள்விப்பட்டேன்.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" என்றும் இயேசு சொன்னார். ஆகவே, எமது அயலார் எமக்குச் சத்துருக்களானால் அவர்களுக்காகவும் நாம் ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்காக நாம் ஜெபித்து, பிரச்சனைகளை அணுகும்போதுதான் எமது கிறிஸ்தவ சாட்சியையும் நாம் காத்துக்கொள்ள முடியும். எமது அயலார் ஒருவேளை வேறு மதத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கலாம். ஆனால், அவர்களுக்காக ஜெபித்து பிரச்சனைகளைச் சுலபமாகத் தீர்த்துக் கொள்ள நாமாகவே முயற்சிப்பது மிகவும் அவசியம்.

இன்று குடும்பங்களில் சொத்துச்சண்டை, காணிச்சண்டை, வேலிச் சண்டை, கிணற்று பங்குச்சண்டை, இப்படியாக அயல்வீட்டு சண்டைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நாம் அறிந்ததே. இந்த உலகத்திற்கு நாம் ஒன்றும் கொண்டுவந்ததும் இல்லை; ஒன்றும் கொண்டு போகப்போவதும் இல்லை. ஆகையால், அநித்தியமான இந்த உலகப்பொருட்களுக்காக அநாவசியமாகச் சண்டையிட்டு, நமது சாட்சியை இழந்துபோகாமல், சகலவற்றையும் ஆண்டவர் பாதத்துக்குக் கொண்டுவந்து, அவர் பெலனோடு கூட சகலத்தையும் வெற்றிகொள்ளுவோம். இனி நம்மால் கூடுமானவரை எல்லோருடனும் சமாதான மாக வாழுவோமாக.

*வாசிப்பு:*
மத்தேயு 5:43-48

*ஜெபம்:*
என்னை வழிநடத்தும் என் அன்பின் தேவனே, எவ்வித பிரச்சனைகளையும் உமது பெலனோடு எதிர்கொண்டு வெற்றிபெற, உமதருள் ஈந்தருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
9
புதன்

# சாட்சியுள்ள வாழ்வு

'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப்போஸ்தலர் 16:31)

இரட்சிக்கப்படாத குடும்பத்தினருக்காக ஒரு தம்பதியினர் ஒவ்வொரு கிழமையும் உபவாசித்து ஜெபித்து வந்தனர். மாத்திரமல்ல, அவர்கள் மீது இவர்கள் காட்டிய கரிசனை, அந்தக் குடும்பத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. காலத்தில் முழுக் குடும்பமும் தேவனை ஏற்றுக்கொண்டனர்.

பவுலையும் சீலாவையும் பார்த்து, 'இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்' என்று கேட்ட சிறைச்சாலைக்காரனுக்கு அவர்கள் கொடுத்த பதில், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்பதாகும். ஒரு வீட்டில் ஒருவர் இரட்சிப்புப் பெற்றுவிட்டால், மற்றையோரும் இரட்சிப்புப் பெறுவர் என்பது வாக்குறுதி. இது எப்படி ஆகும்? இரட்சிப்படைந்தவரின் சாட்சியுள்ள வாழ்வே இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது. அதேவேளை இரட்சிக்கப்பட்டவர் தனது வீட்டிலே நற்சாட்சி மிகுந்த ஜீவியத்தை இழந்துபோவாரேயாகில், அதுவே மற்றையோரின் பின்மாற்றத்துக்கும் காரணமாகிவிடும் என்பதையும் மறந்துபோகக்கூடாது.

இன்று கிறிஸ்தவர்களின் நடத்தையைப் பார்த்து, 'ஐயோ! இந்த கிறிஸ்தவமே வேண்டாம்' என்று சொல்லுவோரும் உண்டு. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் எமது வாழ்வில் கிறிஸ்துவின் படிப்பினைகளும், அவரது அன்பும் இல்லையானால் எம்மில் கிறிஸ்துவை எப்படி பிறர் காண முடியும்? எப்படி கிறிஸ்துவிடம் அவர்கள் வரமுடியும்? ஒருவரை முழுமையாக காணவேண்டுமென்றால் அவரது சொந்தக் குடும்பத்தில் சென்று பாருங்கள் என்பார்கள். சொந்தக் குடும்பத்தில் சாட்சியாக வாழுவது கடினம்தான். ஆனாலும், நாம் வாழ்ந்தேயாகவேண்டும்.

அருமையானவர்களே! நமது சொந்தக் குடும்பத்தில் நமது சாட்சி எப்படியிருக்கிறது? நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாய் வாழுகிறோமா? எமது குடும்பத்தினருக்கும் எமது பிள்ளைகளுக்கும் நல்ல முன்மாதிரியாய் இருக்கவேண்டும். குடும்பம் என்பது சமுதாயத்தின் ஒரு சிறிய அலகு. குடும்பத்தில் எமது சாட்சியைக் காத்துக்கொள்ளாவிடில், பின்னர் எப்படி எமது சபைகளிலும், சமுதாயத்திலும் சாட்சியாக வாழுவது? சற்று சிந்தனை செய்து பார்ப்போம். இரட்சிக்கப்படாத எமது குடும்பத்தினரை எமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வதுடன் காரியம் முடிவதில்லை. அவர்கள் காணக்கூடிய நமது நடத்தை, ஜெப வாழ்வு, பழக்கங்கள் இவையே நமது குடும்பத்தினரின் இரட்சிப்பில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை உணர்ந்து ஜீவிப்போமாக.

*வாசிப்பு:*
மத்தேயு 28:16-20

*ஜெபம்:*
என்னை இரட்சித்த என் ஆண்டவரே, என் குடும்பத்தாரும் அந்த மீட்பைப் பெற்றுக்கொள்ளும்படி என் சாட்சியைக் காத்துக் கொள்ள கிருபை செய்யும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
**10**
வியாழன்

# அதிகாலையில் தேடு

கர்த்தாவே. காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்.
காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி.
காத்திருப்பேன். (சங்கீதம் 5:3)

"அதிகாலையிலே நீ என்னைத் தேடு; நீ அறியாததும் எட்டாததுமான காரியங்களை உனக்குக் காண்பிப்பேன்; பரலோகத்தின் காட்சிகளால் உன்னை நிரப்புவேன்.' நான் ஞானஸ்நானம் எடுத்தபோது எனக்காக ஜெபித்த ஒரு ஊழியர் வாயில் வந்த ஜெப வார்த்தைதான் இது. இதனை ஆண்டவர் எனக்குத் தந்த வார்த்தையாக நான் எடுத்துக்கொண்டேன். அதுபோலவே, அதிகாலையில் எழுந்து ஜெபித்த எத்தனையோ காரியங்கள் எனக்கு வாய்க்க பெற்றன. அதிகாலையில் அதிகமாக தேவபிரசன்னத்தை உணர்ந்திருக்கிறேன். தேவன் என்னோடு அதிகமாக இடைப்பட்ட நேரங்களும், என் குற்றங்களை உணர்த்திய நேரங்களும் அதிகாலை நேரங்களே. மொத்தத்தில் அதிகாலையில் எழுந்து தேவனுடைய பாதத்தில் அமர்ந்த நேரங்கள் எனக்கு ஆசீர்வாதமான நேரங்களாகவே அமைந்தன' என்று ஒருவர் தனது ஜெப அனுபவத்தை சாட்சியாகப் பகிர்ந்துகொண்டார்.

"காலைதோறும் என்னை எழுப்புகிறார்" என்கிறார் ஏசாயா (50:4) சங்கீதக்காரரோ, "காலையில் என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகிக் காத்திருப்பேன்" என்கிறார். கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது, அதிகாலையில் இருட்டோடே வனாந்தரமான இடத்திற்குச் சென்று ஜெபம்பண்ணினார் என்று வாசிக்கிறோம். ஆம், அதிகாலை நேரமானது ஜெபத்திற்கும் தியானத்திற்கும் மிகப் பொருத்தமான ஒரு நேரம் என்றே சொல்லவேண்டும்.

காலையில் எவ்விதமான இடையூறுகளும் இல்லாமல் தேவனைத் தேடலாம். அந்த நாளுக்குரிய பிரச்சனைக்குள் நாம் பிரவேசிக்கும் முன்பதாக சகலவற்றையும் தேவனுடைய பாதத்தில் அர்ப்பணித்து அந்த நாளை வெற்றியோடு ஆரம்பிக்கலாம். தேவனுடைய நிறைவான ஆசீர்வாதமும் நம்மோடு தங்கும். அதிகாலை நேரத்தை ஜெபத்துக்கும் தியானத்துக்கும் ஒதுக்கிக் கொள்ளத் திண்டாடுகிறவர்கள் வேறு பொருத்தமான நேரத்தைத் தெரிவு செய்யலாம். ஆனால், காலைநேரத்தின், அதிலும் அதிகாலைநேரத்தின் அருமையையே இங்கு இந்த இடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அருமையானவர்களே! நாம் தேவனோடு உறவாட, தேவ வார்த்தைகளைத் தியானிக்க உங்கள் வாழ்க்கை ஓட்டத்திலும் ஒரு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். மார்த்தாளைப்போல பல வித காரியங்களால் களைத்துப்போய் இருக்கின்ற நீங்கள், மரியாளைப்போல தேவபாதத்தில் இன்றே அமர்ந்திருக்கப் பிரயாசப்படுங்கள்.

*வாசிப்பு:*
ஏசாயா 50:4-9

*ஜெபம்:*
அதிகாலையில் உம்
திருமுகம் தேடி
அர்ப்பணித்தேன்
என்னையே.
ஆராதனை துதி
ஸ்தோத்திரங்கள்
அப்பனே உமக்குத்
தந்தேன். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
11
வெள்ளி

# பிள்ளைகளுக்கான ஜெபம்

...பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக என்று வேண்டிக்கொண்டான்.
(நியாயாதிபதிகள் 13:8)

திருமணம் முடித்து சில வருடங்களாகியும் பிள்ளை இல்லாததால், ஒரு குழந்தைக்காக ஜெபித்த ஒரு தம்பதியினர், ஏற்றகாலத்தில் மனைவி கருவுற்றிருப்பதை அறிந்த நாள்முதல், கருவில் உருவாகிவரும் தங்கள் குழந்தைக்காக ஜெபிக்க ஆரம்பித்துவிட்டதாக அவர்கள் தமது அனுபவத்தை அனுபவித்து சொன்னார்கள். இவர்கள் சொன்ன காரியத்திலும் ஒரு உண்மை உண்டு. இன்று பிள்ளைகளுக்காக எத்தனை பெற்றோர் பொறுப்புடன் ஜெபித்து வருகிறார்கள்.

பிள்ளைகள் யாரிடமிருந்து ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள்? ஜெபம் என்றதும் அவர்களுக்கு ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்தான் ஞாபகத்திற்கு வருகிறதா? அப்படியென்றால், ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர் ஜெபிப்பதையே அப்பிள்ளைகள் கண்டிருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம். வீட்டில் பெற்றோர் ஜெபிப்பதைக் காணும்போது, பிள்ளைகளும் ஜெபிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களுக்கு ஜெபத்தில் தானாகவே நம்பிக்கை உண்டாகும். நம்பிக்கை விசுவாசம் என்பவற்றைக் குறித்துக் கற்றுக்கொடுக்கலாம்; ஆனால் உருவாக்கமுடியாது. அவைகள் ஒருவருக்குள் தானாகவே உருவாக வேண்டும். அவைகள் காண்பதிலும் கேட்பதிலுமே உருவாகும்.

இன்றைய தியானப்பகுதியில், பிறக்கப்போகும் பிள்ளைக்காக செய்ய வேண்டியதைத் தங்களுக்குக் கற்பிக்கும்படிக்கு ஒரு பெற்றோர் தேவனை நோக்கி மன்றாடுவதைக் காண்கிறோம். பிள்ளைகள் கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்படுகிறார்கள். அவர்களைப் பொறுப்போடு நல்வழியில் வளர்க்கும் பொறுப்பைத் தேவன் நம்மிடமே கொடுத்திருக்கிறார். எனவே, அதற்கான வழிநடத்துதலை நாம் அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள எமக்கு உதவுவது பிள்ளைகளுக்காக நாம் ஜெபிக்கும் ஜெப நேரமேயாகும்.

பிள்ளைகள் தேவபயத்தில் வளரவும், குடும்ப ஐக்கியம் கட்டப்படவும், குடும்பத்தில் தேவன் ஆளுகை செய்யவும் குடும்ப ஜெபம் வழிவகுக்கிறது. குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகளுக்கென வெவ்வேறு பொறுப்பு கடமைகள் இருந்தாலும், இவற்றிற்கும் மேலாக, குடும்பத்தில் தேவன் ஆளுகை செய்கிறார்; நாம் அனைவரும் அவருக்கு உண்மையுள்ளவர்களாக ஜீவிக்கிறோம் என்ற உன்னதமான மனநிலையையும் குடும்ப ஜெபமே உருவாக்குகிறது. இந்தக் காரியங்கள் நமது குடும்பங்களில் இல்லையானால், இன்றே நாமும் உடனடியாக குடும்ப ஜெபத்தை ஆரம்பிப்போமா!

*வாசிப்பு:*
நியாயாதிபதிகள் 13:8-14

*ஜெபம்:*
அன்பின் தேவனே, நாம் குடும்பமாய் சேர்ந்து உம்மை ஆராதிப்பதற்குரிய நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க உதவிசெய்யும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
**12**
சனி

# பரலோகில் சந்தோஷம்!

...மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது. (லூக்கா 15:10)

“எனது வாழ்விலே எத்தனையோ தீர்மானங்களை எடுத்திருக்கிறேன். ஆனால், எனது பதின்மூன்றாவது வயதில் ஆண்டவரை எனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட என் தீர்மானமே எல்லாவற்றிலும் உன்னதமான தீர்மானமாகும். காரணம், அன்றிலிருந்து இன்றுவரை நான் அவருடைய பிள்ளையாகவும், அவர் என் ஆண்டவராகவும் ஒரு உறவில் வாழக்கூடிய பாக்கியத்தைப் பெற்றுள்ளேன். இல்லாவிட்டால், ஆண்டவரின் உன்னத ஈவாகிய மீட்பைக் கண்டிருக்கமாட்டேன்” என்று ஒருவர் சாட்சி கூறினார்.

வாழ்க்கையில் மனிதர்கள் எத்தனையோ காரியங்களை தொலைப்பதும், மீண்டும் கண்டுபிடிப்பதும் சகஜம். ஆனால், காணாமற்போய், மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதைக் குறித்து ஒன்றல்ல, மூன்று உவமைகளை ஆண்டவர் கூறியிருப்பதை லூக்கா 15ம் அதிகாரத்தில் காணலாம். அதாவது, தேவ அன்பை விட்டு பாவத்தில் தொலைந்துபோகும் ஆத்துமாக்களும், அவை மீண்டும் கண்டுபிடிக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவமும், அதனால் உண்டாகும் சந்தோஷத்தையும் குறித்தே ஆண்டவர் பேசுகிறார்.

அதுமாத்திரமல்ல, மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் தேவதூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாகும் என்று ஆண்டவர் கூறியுள்ளார். அப்படியானால், ஒரு பாவி மனந்திரும்பும்போது, அதன் தாக்கம் பரலோகத்தில் தெரிகிறது எனலாம். நாமும் மனந்திரும்பியபோது, தேவ தூதர்கள் ஆர்ப்பரித்திருப்பார்கள் அல்லவா! அப்படியென்றால் பாவத்தில் இருந்து மீட்பைப் பெற்றுக்கொள்ளுதல் எவ்வளவு உன்னதமானது!

இந்த உன்னதமான மீட்பை உதாசீனம்செய்து, அதையிட்டு கரிசனையற்று இருப்போர் ஏராளம். மீட்பைக் குறித்துக் கேள்விப்படாமல் இருப்போரும் ஏராளம். இவர்களைக் குறித்து எமது பொறுப்பு என்ன? “ஆத்துமா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவா; வெறுங்கையனாக உம்மைக் கண்டுகொள்ளல் ஆகுமா” என்று ஒரு பக்தன் பாடி வைத்தான். முதலாவது, நாம் அந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர், அதைக் கேள்விப்படாத, அல்லது, அறிந்தும் அனுபவிக்காத பிறரும் அந்த இரட்சிப்பின் மகிழ்ச்சியைக் கண்டு கொள்ளும்படியாக நாம் உழைக்கவேண்டும். மீட்பின் செய்தியைச் சொல்லும் பொறுப்பும், அதை வாழ்ந்து காட்டும் பொறுப்பும் மீட்கப்பட்ட ஒவ்வொரு நபர்கள் கைகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பை நாம் நிறைவேற்றுகிறோமா? பரலோக மகிழ்ச்சி உண்டாக நாமும் உழைக்கலாமே!

*வாசிப்பு:*
லூக்கா 15:1-10

*ஜெபம்:*
பிதாவே, உமது மீட்பைப் பெற்றுக் கொண்ட நான், பிறரும் அதனைக் பெறத்தக்க ஒரு பாலமாய் வாழ என்னை வழி நடத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
**13**
ஞாயிறு

# தேவசித்தம் நிறைவேற...

'...ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.' (மத்தேயு 26:39)

"தேவசித்தம் இல்லாமல் என் வாழ்வில் எதுவுமே நடக்கக்கூடாது என்று எப்பொழுதும் நான் ஜெபிப்பதுண்டு. ஆகையால், எதிர்காலத்தைக் குறித்தோ, அல்லது, தற்போதுள்ள சூழ்நிலைகளைக் குறித்தோ நான் கலங்குவதில்லை. எல்லாம் ஆண்டவர் சித்தப்படி அவரது ஆளுகைக்குள்ளேயே இருக்கிறது என்ற திடநம்பிக்கை தினமும் என்னைக் கலங்காமல் காத்துக்கொள்கிறது." இது ஒருவருடைய அனுபவ சாட்சி.

மீட்பின் திட்டத்தை நிறைவேற்றவென்றே தம்மை ஒப்புக்கொடுத்து இவ்வுலகிற்கு வந்தவர் இயேசு. பாடுகளும் மரணமும் அவருக்கு முன்பாக வைக்கப்பட்டபோது மனுஷீகத்தில் அவர் கலங்கினார். 'இந்தப் பாத்திரம் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்; ஆயினும், என்னுடைய சித்தப்படியல்ல, உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது' என்று ஜெபித்தார். முழுமையாக பிதாவின் சித்தத்திற்கென்றே தம்மை ஒப்புக்கொடுத்த ஆண்டவர் காட்டிய மாதிரியில் இன்று நாம் வாழுகிறோமா?

மறுபக்கத்தில், தேவசித்தத்தைச் சாட்டாகக்கொண்டு தமது பிழைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைப்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு பயணத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டை மறந்துவிட்டுச் சென்ற ஒருவர் வழிமறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார். வழியில் அவரைக் கண்ட அவரது நண்பர், 'என்ன, பிரயாணம் போகவில்லையா' என்று கேட்டார். அதற்கு இவர், 'ஆண்டவருக்குச் சித்தமில்லைப்போலும், தடுத்துவிட்டார்' என்றார். இந்தப் பிரயாணத் தடைக்கு ஆண்டவரின் சித்தமின்மையா அல்லது இவருடைய மறதியா, எது காரணம்?

தேவசித்தம் என்பது உன்னதமானது. அதை விளையாட்டாகக் கொள்ளக்கூடாது. தேவசித்தத்திற்கு எம்மை ஒப்புக்கொடுத்து வாழுவது உன்னதமானதும் கடினமானதும்கூட. வாழ்வில் கஷ்டமான சூழ்நிலை வந்தாலும், அது தேவநாமத்துக்கு மகிமைகொண்டு வருமானால் அதையும் என் வாழ்வில் அனுமதியும் ஆண்டவரே, என்று சொல்லி வாழுவதே அவருக்குள் சரணடைந்து வாழும் வாழ்வாகும். அவ்வித மான வாழ்வு வாழ நாம் ஆயத்தமா? நமது ஆண்டவருக்கு முன்பாக இருந்த சிலுவை மரணம் கொடுமையானது என்பது அவருக்குத் தெரியும். அதுவே பிதாவின் சித்தம் என்று ஏற்றுக்கொண்டு, அக்கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டதால்தான் இன்று நாம் விடுதலை பெற்று வாழுகிறோம். நமது ஆண்டவரின் சித்தம் செய்ய இன்று நீர் ஆயத்தமா?

*வாசிப்பு:*
மத்தேயு 26:36-46

*ஜெபம்:*
உம் சித்தம்போல் என்னை என்றும், தற்பரனே நீர் நடத்தும். என் சித்தமோ ஒன்றும் வேண்டாம், என் பிரியனே என் இயேசுவே. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
**14**
திங்கள்

# திருமணம் தேவதிட்டம்

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாயிராது. (1கொரிந்தியர் 13:4)

திருமண வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்த ஒருவர் கூறியது இது: "திருமணம் முடிந்து சில தினங்களுக்குள்ளாகவே எம் இருவருக்குமிடையில் பெரிய பிரச்சனை ஏற்பட்டது. திருமண வாழ்வில் பத்து, பதினைந்து, இருபத்தைந்து வருடம் என்றெல்லாம் வாழுகிறார்களே; சில தினங்களுக்குள்ளாகவே பிரச்சனைப்படுகிற நாம், ஒரு வருடத்தையாகிலும் வாழ்ந்து முடிப்போமா என்று அப்போது நான் யோசித்ததுண்டு. ஆனால், தேவ கிருபையால் இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்துவிட்டோம்".

இன்று குறிப்பிடப்பட்டுள்ள வேதப்பகுதிகள் இரண்டுமே திருமண வைபவத்தில் அடிக்கடி வாசிக்கப்படுவதுண்டு. 128ம் சங்கீதம், கர்த்தருக்குப் பயந்து வாழும் ஒருவனின் குடுமபம், ஆசீர்வாதமான குடும்பமாக அமைவது எப்படி என்பதைக் காட்டுகிறது. அதுபோலவே 1கொரிந்தியர் 13ம் அதிகாரமும் அன்பின் தன்மைகளை எடுத்துக்காட்டுகிறது. திருமண வாழ்வென்பது எப்போதும் இனிப்பு சாப்பிடும் வாழ்வல்ல. பல சூழ்நிலைகளின் மத்தியில், பிரச்சனைகளின் மத்தியில், கருத்து வேறுபாடுகளின் மத்தியில், குணாதிசய வித்தியாசங்கள் மத்தியில் கட்டப்பட்டு எழுப்பப்படவேண்டிய ஒன்றாகும். திருமண வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு இருவருமே பிரயாசப்படவேண்டும்.

திருமணம் முடிப்பது, ஒன்றாக சேர்ந்து வாழுவதற்கே. அதுவே தேவனின் திட்டமும்கூட. அதைவிடுத்து திருமணம் முடிப்பதும், பிடிக்கவில்லை என்று முறிப்பதும் தேவன் நியமித்த திட்டமல்ல. திருமணம் என்பது ஒரு உடன்படிக்கை. அதில் தேவனும் சம்பந்தப்பட்டுள்ளார். ஒரு திருமணத்தில் கணவன் மனைவி இருவரும் தேவசமுகத்தில் தேவனோடு சேர்ந்து ஒரு உடன்படிக்கையைச் செய்கிறார்கள். அதை மறந்துவிட்டு, பிரச்சனை என்று வந்ததும் தேவனை விட்டு, தமது உடன்படிக்கையை மறந்து, உறவுகளை முறித்து தம்போக்கில் துணிந்து செல்லுவது தவறு.

எந்தவொரு காரியத்தையும் உடைப்பது இலகு; கட்டுவதோ கடினம். திருமணத்தைக் குறித்த தான கர்த்தரின் வார்த்தைகளும், கிறிஸ்து இயேசுவின் குணாதிசயங்களும், எமது திருமண உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு எமக்கு உதவிடும். எமது உறவுகள் மத்தியில் விரிசல்கள் ஏற்பட்டிருப்பின் காலதாமதமின்றி தேவ பெலனோடு அவற்றை மீண்டும் கட்டியெழுப்ப இன்றே பிரயாசப்படுவோம். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ அதைத் தன் கைகளால் இடித்துப் போடுகிறாள். இதில் நாம் யார்?

*வாசிப்பு:*
சங்கீதம் 128:1-6

*ஜெபம்:*
அன்பின் தேவனே,
எனது வாழ்வு, எனது
குடும்பம் யாவும் நீர்
எனக்குத் தந்தது.
உம்மோடு இணைந்து
அதைக் கட்டியெழுப்ப
உமதாவியின் அருள்
தந்திடும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
15
செவ்வாய்

# புடமிடப்படல்

...அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்.
(யோபு 23:10)

"மிகவும் கண்டிப்பான, நீதியற்ற ஒரு உயர் அதிகாரிக்குக் கீழாக வேலை செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது மிகவும் கஷ்டமாக இருந்தது. வேலைக்குப் போகவே வெறுப்பாக இருந்தது. குடும்ப சூழ்நிலையின் நிமித்தம் வேலையை விடவும் முடியவில்லை. ஆண்டவரை நோக்கி ஜெபிப்பதும், மனக்கஷ்டத்துடன் வேலைக்குச் செல்லுவதுமாக இருந்த எனக்கு ஒரு நாள் திடீரென பதவியுயர்வு கிடைத்தது. அத்துடன் அந்த அதிகாரியிடமிருந்து விடுதலையும் கிடைத்தது. ஆனாலும், இந்தக் கஷ்டமான சூழ்நிலைக்கூடாகக் கடந்துசென்றதால் நான் புடமிடப்பட்டிருப்பதை உணர்ந்தேன். அதிகமான பொறுமையையும், தாழ்மையையும், ஏற்றவேளையில் தேவன் உயர்த்தும் வரை அவரது பலத்த கைக்குள் அடங்கியிருக்கவும் கற்றுக்கொண்டதை உணர்ந்தேன்" என்று தனது அனுபவத்தை ஒருவர் சொன்னபோது, புடமிடப்படுதலின் மகிமையை உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

தேவனுடைய பார்வையில் உத்தமனும் சன்மார்க்கனுமாய் இருந்த யோபுவுக்கு திடீரென வந்த நெருக்கங்களால் அவர் அதிகமாய்ப் புடமிடப்பட்டார். "நான் போகும் பாதையை அவர் அறிவார். ஆனாலும், அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" என்று சொல்ல யோபுவால் எப்படி முடிந்தது! பொன்னானது அக்கினியில் புடமிடப்படும்போது இன்னும் அதிகமாக மிளிரும். எமது வாழ்விலும் நாம் புடமிடப்படும்போது எம்மிலுள்ள அசுத்தங்கள் அகன்று, தேவன் விரும்பும் காரியங்கள் அதிகமாக உருவாகும்.

சந்தோஷங்களைவிட, துன்ப துயரம் நிறைந்த அனுபவங்களே ஒரு மனிதனை சிறந்தவனாக உருவாக்கும் என்பது அநேகரும் தங்கள் அனுபவத்தில் கண்டுகொண்ட உண்மை. ஆகையால், எமது வாழ்விலும் பாடுகளும் துன்பங்களும் வரும்போது நாம் அதைக் குறித்துக் கவலைகொள்ளாமல், அதற்கூடாகவும் வெற்றியோடு கடந்துசெல்ல தேவனிடம் பெலனைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவோமாக. தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் எதுவுமே வீணுக்கு நேரிடுவதில்லை. ஆகவே, என்ன கஷ்ட துன்பம்நேரிட்டாலும், தேவபெலத்துடன் அவற்றிற்கு சந்தோஷமாக முகங்கொடுக்கக் கற்றுக்கொள்வோம். "துன்பத்திற்கூடாகக் கடந்துசெல்ல நேரிட்டாலும், அதன்மூலம் நமது வாழ்வில் தேவநாமம் மகிமைப்படுமாயின் அதற்கூடாகவும் கடந்துசெல்ல எமக்கு உதவிடும் ஆண்டவரே" என்று வேண்டிக்கொள்வது எம்மை தேவபாதத்தில் சமர்ப்பணம் செய்யும் ஒரு தூய ஜெபமாகும். நாம் புடமிடப்பட்ட பின்பு பொன்னாய் விளங்குவது உறுதி. ஆகவே, எதற்கும் அஞ்சாமல் முன்செல்வோமாக.

*வாசிப்பு:*
யோபு 23:1-17

*ஜெபம்:*
அன்பின் தேவனே,
உமது முகம் என்னில்
தெரியும்படி என்னைப்
புடமிட்டு, உமது
அன்பிலும்,
தூய்மையிலும்
அடியேன் மிளிரும்படி
செய்யும், ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ப நடனம்

'...கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.' (கொலோசெயர் 3:13)

ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் தழுவிப்பிடித்து நடனம் ஆடுவதைப் பார்த்திருப்பீர்கள். இதில் முக்கியமான ஒரு பகுதியுண்டு. அதாவது, இருவரதும் கால் அசைவுகளில் இருக்கவேண்டிய ஒருமைப்பாடு. சரியாக கால்களை வைத்து ஆடினால்தான் அது இனிமையான நடனம். கால்களைத் தாறுமாறாக வைத்தால் அதனால் ஒருவர் கால்களை மற்றவரின் கால்கள் தாக்கிப் புண்ணாக்கிவிடும் துயர நிலையும் உண்டாகலாம்.

திருமணவாழ்வும் ஒருவகையில் இந்த நடனம் போன்றதே என்று ஒருவர் எழுதுகிறார். ஆம், வித்தியாசமான சூழ்நிலையில் பிறந்து, வாழ்ந்து, உருவாக்கப்பட்ட இருவர், திருமணத்தில் ஒருவராக இணையும்போது பல வேறுபட்ட கருத்து வேறுபாடுகள், குணாம்ச வித்தியாசங்கள், பழக்கவழக்க வேறுபாடுகள் இப்படியாக பல விடயங்களில் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். அவற்றைச் சரியாக இனங்கண்டு ஒருவரையொருவர் புரிந்து, கால்களைச் சரியாக வைப்பதே வெற்றி வாழ்வின் அஸ்திபாரம்.

"ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறையுண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்று பவுல் கொலோசெயருக்கு எழுதியுள்ளார். "மனைவிகளே! கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்றும், "புருஷர்களும் தங்கள் மனைவிகளில்.... அன்புகூர வேண்டும்" என்றும் பவுல் எபேசு சபைக்கும் எழுதியுள்ளார் (எபே.5:21,28). இந்த ஆலோசனைகளைக் குடும்ப வாழ்வில் கடைப்பிடிப்போமானால், அது நமது திருமண வாழ்வை நிச்சயம் இன்பமாக்கும். அதைவிடுத்து, ஒருவர் செய்வதற்குப் பதில் செய்வதும், ஒருவரையொருவர் வெறுப்பேற்றுமாப்போல் நடந்துகொள்வதும், மன்னிக்கத் தயங்குவதும், நடனம் செய்கிறோம் என்று பிறருக்குக் காட்டிக்கொண்டே ஒருவர் கால்களை ஒருவர் அமுக்கிக் காயம் ஏற்படுத்திக் கொள்வதுபோலவும், ஒருவரையொருவர் உதைத்துத் தள்ளுவதைப் போலவுமே இருக்கும்.

*வாசிப்பு:*
கொலோசெயர் 3:12-19

இன்று நம் குடும்ப வாழ்வு எப்படிப்பட்டதாய் இருக்கிறது? கணவன் மனைவி இருவருமாகச் சேர்ந்து கிறிஸ்துவுக்குள் இன்ப நடனம் செய்கிறீர்களா? அல்லாவிட்டால் கால்களுக்குக் காயங்கட்டி வாழுகிறீர்களா? திருமணத்தை ஆரம்பித்து வைத்தவர் நமது ஆண்டவர். அவரது பாதத்தில் எமது திருமண வாழ்வை முதலாவது அர்ப்பணம் செய்வோம். அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம். மன்னிக்கவும், மன்னிப்புக் கேட்கவும் நாம் எப்பொழுதும் முன்நிற்போமாக.

*ஜெபம்:*
தேவனே, நீர் தந்த திருமண வாழ்வை உமக்கே ஒப்புவிக்கிறேன். உமக்குக் கீழ்ப்படிந்து, உமக்குள் இன்பமாய் வாழ அருள் தாரும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
17
வியாழன்

# கர்த்தரால் கிடைக்கும் பலன்

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். (சங்கீதம் 127:4)

"திருமணம் முடித்து பல வருடங்களாக குழந்தை இல்லாதிருந்தோம். தேவனை நோக்கி நம்பிக்கையோடே ஜெபித்தோம் தேவன் ஒரு குழந்தையைத் தந்தார்" என்று பலர் சாட்சி சொல்லக் கேட்டிருக்கிறோம். அதேசமயம், ஒரு குழந்தைக்காக பல வைத்திய முயற்சிகள் செய்தும் பலனற்றுப்போனவர்களும் உண்டு. பிள்ளைகள் இல்லாத பெற்றோர், வேறு பிள்ளைகளைத் தத்தெடுத்து சொந்தப் பிள்ளைகள்போல அர்ப்பணத்துடன் வளர்ப்பதையும் கண்டிருக்கிறோம். மொத்தத்தில் பிள்ளைகள் என்பவர்கள் ஒவ்வொருவருக்கும் தேவனால் கொடுக்கப்படும் பலன் என்பதை நாம் மறுக்கமுடியாது.

'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளிகள் விழித்திருப்பதும் விருதா' என்று 127ம் சங்கீதம் ஆரம்பிக்கிறது. கர்த்தர் நமக்குக் கொடுக்க நினைக்காத ஒன்றை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. அதேசமயம், அவர் எமக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கும் பிள்ளைகளை எமது சுதந்தரத்தின் பிரகாரம் இஷ்டத்துக்கு விட்டுவிடவும் முடியாது. பிள்ளைகளைக் குறித்ததான பொறுப்பு பெற்றோருடையது. பலருக்குக் கிடைக்காத பலனை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார் என்றால், அதைக் குறித்துக் கணக்கொப்புவிக்க வேண்டிய பொறுப்பும் உண்டு என்பதை நாம் உணரவேண்டும்.

இன்றைய நாட்களில் பிஞ்சுக் குழந்தைகள் அழுக்குத் தொட்டியிலும், மலசலகூடத்திலும் தேடுவாரற்று வீசப்பட்டிருப்பதைக் கேள்விப்படுகிறோம். இந்த உயிர்களுக்குப் பதில் கொடுப்பது யார்? அதேவேளை, பிள்ளைகள் தொலைக்காட்சி பெட்டிக்கு முன்பாகவும், கணனிக்கு முன்பாகவும் தம் இஷ்டப்படி நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பதும், அதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பைக் குறித்து பெற்றோரும் கவனமற்றிருப்பதும் வேதனைக்குரிய காரியம். கர்த்தர் எமது கையில் அன்பாகக் கொடுத்த சுதந்தரம் இன்று அநாதரவாக அழிந்துபோகிறதை நாம் அறியாமலில்லை.

தமது பிள்ளைகளைப் பொறுப்போடு பராமரித்து, நல்லது கெட்டது சொல்லிக்கொடுத்து, அவர்களை நல்வழிப்படுத்தவேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கட்டாய கடமை. பிள்ளைகள் தேவனைப்பற்றி அறியவும், அவரது வழியில் நடக்கவும் அவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருந்து வழிநடத்த வேண்டியதும் பெற்றோரின் முக்கிய பொறுப்பு. பெற்றோரைத்தான் பிள்ளைகள் முதலில் பார்க்கிறார்கள். அதை உணர்ந்து, கர்த்தர் தந்த பலனை அவருக்கென்று தத்தம்செய்வோமாக.

*வாசிப்பு:*
சங்கீதம் 127:1-6

*ஜெபம்:*
அன்பின் தந்தையே, நீர் தந்த எமது பிள்ளைகளுக்கு நாம் அன்பான பெற்றோராகவும், நல்ல வழிகாட்டிகளாகவும் இருக்கும்படி வழிநடத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
**18**
வெள்ளி

# சிறுவயதில் வேதஅறிவு

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். (நீதிமொழிகள் 22:6)

ஒரு குடும்பத்திலே இளைய மகள் மிகவும் சுட்டி. அதனால், அவளது பெற்றோர், இவளை சலவை இயந்திரத்தில் போட்டுத் துவைக்கவேண்டும் என்று அடிக்கடி விளையாட்டாகச் சொல்லிச் சிரிப்பார்களாம். இதை திரும்பத் திரும்பக் கேட்டு வந்த மூத்தவன், பெற்றோர் இல்லாத சமயத்தில் தன் தங்கையை சலவை இயந்திரத்தில் போட்டு இயந்திரத்தை இயக்கியதாக ஒரு உண்மைச் சம்பவம் சில காலத்துக்கு முன்பு பத்திரிகையில் வெளிவந்தது.

சிறுபிள்ளைகள், சரி பிழை நிதானிக்கத் தெரியாத அந்த வயதில் எதையும் வெகு இலகுவாக உள்வாங்கி விடுவார்கள். சிறுவர்கள் முன்பாகப் பேசும் காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். ஆகவே தான், தமது கட்டளைகளை பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, எப்பொழுதுமே அவைகளைக் குறித்துப் பேசி, அவற்றை ஞாபகக் குறியாக அவர்களுக்கு முன்பாக வைத்திருக்கும்படிக்கு தேவன் அறிவுறுத்தினார். ஆம், சிறுவயதிலிருந்தே வேதஅறிவும், தேவனைப்பற்றிய விடயங்களும் பிள்ளைகளுக்கு ஊட்டப்படவேண்டியது மிகவும் அவசியம்.

பிள்ளைகள் சிறியவர்கள், அவர்களுக்கு ஆண்டவரைப் பற்றிச் சொன்னால் புரியாது, எனவே அவர்களுக்கு விருப்பமான ஸ்பைடமேன் படங்களை பார்க்கட்டும், பின்னர் வளர்ந்தபின் தேவனைப்பற்றிச் சொல்லலாம் என்று சிலர் நினைப்பதுண்டு. அதனால் எந்தப் பலனும் கிடைக்காது. பிள்ளைக்கு நடக்கத் தெரியாத வயதில்தான் நாம் நடத்தவேண்டும். பிள்ளை தானாக நடக்கத் தொடங்கியதும் எமது உதவி தேவையில்லை. அதுபோல பிள்ளைக்கு சரி பிழை தெரியாத வேளையில்தான் நாம் தேவனின் உண்மைத் துவத்தையும், உண்மையாக எப்படி வாழவேண்டும் என்பதையும், தேவனைப் பற்றிய காரியங்களையும், அவரது வழிநடத்துதலை பற்றியும், அவர் எமக்கு தந்த இரட்சிப்பைப் பற்றியும் சொல்லிக் கொடுக்கவேண்டும். பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியில் அவனை நடத்தும்போது அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.

*வாசிப்பு:*
உபாகமம் 6:6-12

தங்கள் வாலிபப் பிள்ளைகளைக் குறித்து இன்று கண்ணீர் விடுகின்ற பெற்றோர் எத்தனைபேர்? சிறுவயது நடத்தப்படவேண்டிய வயது. வாலிப வயது தானாக நடக்கும்வயது. நடத்தப்படவேண்டிய வயதில் பிள்ளைகளை நடத்தாமல், அவர்களாக நடக்கத் தொடங்கிய பின்னர் எமது இஷ்டத்துக்கு நடத்த முடியுமா? ஆகவே, சிறுபிள்ளைகளை தேவ பயத்தில் நடத்த இன்றே ஆரம்பிப்போம்! அதைத் தவறவிட்டவர்கள் பிழையை உணர்ந்து, பிள்ளைகளின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

*ஜெபம்:*
அன்பின் தேவனே எனது பிள்ளைகள் நீர் எனக்கு தந்த பெரிய பொறுப்பு. அப்பொறுப்பை உமக்குள் நிறைவேற்ற கிருபை தாரும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
19
சனி

# உப்பாயிரு!

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? (மத்தேயு 5:13)

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி. மனைவி உணவில் அதிக உப்பைச் சேர்த்துவிட்டால், 'நான் எப்பொழுதும் உன்னை நினைத்துக்கொண்டேதான் இருக்கிறேன். வீணாக உணவில் உப்பைக் கொட்டாதே' என்று வேடிக்கையாகச் சொல்லுவானாம் கணவன். உப்பின் பயன் ஏராளம். உணவிற்குச் சுவையூட்டுகிறது; கெட்டுப்போகாமல் பதப்படுத்திப் பாதுகாக்கிறது. நோய் எதிர்ப்புக்கும் உதவுகிறது. ஆனால், உப்பின் சாரம் அற்றுப்போனால், அதைத் திரும்பவும் சாரமாக்கமுடியாது. அது வெளியில் கொட்டப்படுவதற்கே தகும். அதேசமயம், உப்பைத் தனியாக உண்ணவும் முடியாது. அதை உணவில் சேர்க்கும்போதுதான் உணவுக்கு அது சுவை கொடுக்கிறது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள்.

பாவத்தால் அசுசிப்பட்டு வெறுக்கப்பட்டவர்களாய் இருந்த எம்மைத் தமது தூய இரத்தத்தால் மீட்டு, தமது பிள்ளைகளாக்கிய ஆண்டவர் இந்தப் பூமிக்கு தன் அன்புச் சுவையைக் கொடுக்கும்படிக்கு எம்மை அழைக்கிறார். உப்பு, உணவு கெட்டுப்போகாமல் பாதுகாப்பதுபோல, பாவத்தால், அநீதியால், ஒழுக்கக்கேட்டால் கெட்டழிந்துபோகும் இந்தச் சமுதாயத்தை, நல்வழிப்படுத்திப் பாதுகாக்க தேவன் எம்மை அழைக்கிறார். ஆண்டவரை அறிந்துகொண்ட நாம் மற்றவர்களும் அவரை அறிந்து, பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, நித்திய வாழ்வைக் கண்டுகொள்ளும்படிக்கு நாம் அவர்களுக்கு உப்பாய் இருக்கவேண்டுமென்று ஆண்டவர் அழைக்கிறார்.

தொண்டையில் கிருமித் தாக்கம் ஏற்பட்டால் உப்புத் தண்ணீரினால் தொண்டையைக் கழுவுவார்கள். பலாப்பழம் போன்ற வயிற்றைக் குழப்பக் கூடிய உணவுகளை உட்கொண்டால், உப்பையும் மிளகையும் உட்கொண்டு வயிற்றைப் பாதுகாப்பார்கள். அதுபோலவே, பாவத்தை எதிர்த்து நீதிக்காகப் போராடி, தேவ சத்தியத்தை நிலைநாட்டி அனைவரும் இரட்சிப்பைக் கண்டடையும்படிக்குப் பிரயாசப்பட தேவன் நம்மை அழைக்கிறார்.

எமது நிலையென்ன? நாம் உப்பாக இந்தப் பூமியில் வாழுகிறோமா? அல்லது, இவ் உலகத்தின் அழுக்குகள் கலக்கப்பட்டவர்களாய், சாரமற்றுப் போய் ஒன்றுக்கும் உதவாதவர்களாய் ஏனோ தானோ என்று வாழுகிறோமா? இன்றே எமது நிலையில் இருந்து எழுந்திருப்போம். தேவனுக்காக உப்பாக வாழுவோம். உப்பு இருப்பது வெளியிலே தெரியாது; ஆனால், அதன் சுவை ருசிக்கும்போதுதான் தெரியும். பிறரும் எம்மில் இயேசுவை ருசிக்கத் தக்கதாக வாழ எம்மை ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
மத்தேயு 5:1-13

*ஜெபம்:*
இப் பூமியில் உப்பாக இருக்கும்படி என்னை அழைத்த ஆண்டவரே, நான் ஒருபோதும் சாரமற்றுப் போகாதபடிக்கு என்னைக் காத்தருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
20
ஞாயிறு

# வெளிச்சம் பிரகாசிக்கட்டும்!

...இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.
(எபேசியர் 5:8)

வீதி விளக்குகள் இல்லாததால் அந்த வீதி எப்பொழுதுமே இருளில் மூழ்கிக் கிடந்தது. அவ்வீதியில் வசிக்கும் ஒருவர் ஒருநாள் தனது வீட்டிற்கு முன்னால் ஒரு விளக்கினை வைத்தார். அவ்வழியால் சென்ற அயல்வீட்டுக் காரர் அந்த வெளிச்சத்தைக் கண்டு, தனது வீட்டிற்கு முன்னாலும் ஒரு விளக்கை வைத்தார். இப்படியாக ஒவ்வொருவரும் விளக்கு வைக்க, அவ் வீதி விளக்குகள் இருக்கும் வீதிகளைவிட அதிக பிரகாசமடைந்தது.

'நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்' என்றும், 'விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்' என்றும் சொன்னார் இயேசு. இங்கே இரு காரியத்தை ஆண்டவர் வலியுறுத்துகிறார். ஒன்று, நாம் வெளிச்சமாக இருக்கவேண்டும். அடுத்தது, நாம் பிறருக்கு வெளிச்சம் கொடுக்கும் வெளிச்சமாக இருக்கவேண்டும். பவுல் எபேசியருக்குப் புத்திசொல்லும்போது, 'ஒருகாலத்தில் நீங்கள் அந்தகாரத்தில் இருந்தீர்கள் இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்' என்கிறார்.

அந்தகாரத்தில் இருந்த எம்மைத் தமது ஆச்சரியமான ஒளிக்குள் அழைத்தவர் ஆண்டவர். அந்த ஆச்சரியமான ஒளியை இவ்வுலகில் பிரகாசிக்கச் செய்யும்படிக்கு ஒளியின் பிள்ளைகளாய் நடக்க ஆண்டவர் நம்மைத் தான் அழைக்கிறார். நாம் தேவனுக்காய் ஒளிவீச ஆயத்தமா? அழகான ஒரு பழைய பாடலின் வரிகள் என் ஞாபகத்துக்கு வருகிறது. "இயேசு கற்பித்தார் ஒளி வீசவே, சிறுதீபம்போல இருள் நீக்கவே, அந்தகார உலகில் ஒளிவீசுவோம் அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்." நாம் பிரகாசிக்கிறோமா?

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்தின் பிதாவை மகிமைப்படுத்தும்படிக்கு உங்கள்' வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." நாம் வெளிச்சம் கொடுப்பது மட்டுமல்ல, அந்த வெளிச்சம் பிரகாசிக்கும்போது பிதாவின் நாமம் மகிமைப்படும்படிக்கு அந்தப் பிரகாசம் இருக்கவேண்டியது முக்கியம். இன்று, தங்கள் பெருமைபேசி, தங்கள் நாமத்தை உயர்த்தும்படிக்கு பிரகாசிக்கும் போலியான வெளிச்சங்கள் நம் மத்தியில் உண்டு. நாம் எப்படியான வெளிச்சத்தைக் கொடுக்கிறோம்? நமது வெளிச்சம் பல்வேறுபட்ட காரியங்களால் மறைக்கப்பட்டு மங்கிப்போய் இருக்கிறதா? ஜீவ சுடர்களைப்போல தேவனுக்காக பிரகாசிக்க இன்றே நம்மை ஒப்புக்கொடுப்போமாக.

*வாசிப்பு:*
மத்தேயு 5:14-16

*ஜெபம்:*
அந்தகார இருளினின்று என்னை மீட்டெடுத்த ஆண்டவரே, இருள் நிறைந்த இந்த உலகில் உமக்காக ஒளிவீசி வாழ உதவிசெய்யும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
21
திங்கள்

# சகோதர அன்பு

...வசனத்தினாலும் நாவினாலுமல்ல. கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். (1யோவான் 3:18)

வேலையில் இடமாற்றம் பெற்று, ஒரு புதிய இடத்திற்குச் சென்ற ஒரு தம்பதியினருக்கு அங்கே எவரையும் தெரியாது. ஆலயத்துக்குச் சென்றாலும் அங்கும் எல்லாமே புதிய முகங்கள். ஆனால், ஒரு வாரத்துக்குள்ளாகவே பலரும் முன்வந்து அவர்களை வரவேற்று, பல நாட்கள் பழகியவர்களைப் போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்திவிட்டார்கள். இவர்கள் யார்? கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளேயாகும். அத்தம்பதியினர் தங்கள் சொந்தக் குடும்பத்தில் நெருங்கிய உறவுகளோடு வாழுவதுபோல உணர்ந்தனர்.

இவ்வதிகாரத்தில் சகோதர அன்பைக்குறித்தே யோவான் வலியுறுத்தி எழுதுகிறார். சகோதர அன்பென்பது வாயினால் பேசும் அன்பல்ல; அது கிரியைகளிலும், உண்மையிலும் காட்டப்படவேண்டிய ஒன்று. சமீபத்திலே கஷ்டத்தில் உள்ளவர்களுக்காக ஆடைகள் சேர்க்கப்பட்டபோது, அதில் மிகவும் அழுக்கான கிழிந்த ஒரு ஆடையும் கண்டெடுக்கப்பட்டு உடனடியாகவே குப்பைத் தொட்டியில் வீசியெறியப்பட்டதாக ஒருவர் பகிர்ந்துகொண்டார். அதைக் கொடுத்தவரின் மனநிலை, இந்த அழுக்கான ஆடையை விடவும் அழுக்கு நிறைந்ததோ என்றே எண்ணத்தோன்றியது.

எவ்வளவுதான் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டாலும், கொடுக்கும் மனப்பான்மை எமக்குள் இல்லாமற்போகுமானால், அதற்கு எமக்குள் இருக்கும் உலக ஆசைகளும், பேராசைகளுமே காரணம் எனலாம். இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கவேண்டும் என்றார் ஆண்டவர். நாமோ, அநேக அங்கிகளை வைத்துக்கொண்டும் ஒன்றைக்கூட கொடுக்கக் கஷ்டப்படுகிறோம்.

தேவன் தமது ஜீவனையே எமக்காகத் தந்து எம்மை இரட்சித்தார். என்றும் அழியாத நித்திய ஜீவனையும் தந்திருக்கிறார். அப்படியிருக்க, நாம் அழிந்துபோகும் உலகப்பொருட்களை தேவையோடிருக்கும் சகோதரருக்கு கொடுத்து உதவ நாம் தயங்குவது ஏன்? எமது கொடுக்கும் மனப்பான்மை எப்படிப்பட்டதாய் இருக்கிறது? சகோதர அன்பைக் குறித்துப் பேசுகின்ற நாம், எமது சகோதரர் மத்தியில் உள்ள குறைவுகளைக் குறித்துப் பாரப்படுகிறோமா? பெற்றுக்கொள்வதிலும்பார்க்க, கொடுப்பதே ஆசீர்வாதம். பெற்றுக்கொள்வதற்கு இரு கரங்களையும் நீட்டும் நாம், கொடுக்கவேண்டி வரும்போது மாத்திரம் எமது கைகளை முடக்கிப்போடுவது ஏன்? சகோதர அன்பு என்பது கிரியையில் வெளிப்பட வேண்டும். சிந்தித்துச் செயற்படுவோம்.

*வாசிப்பு:*
1யோவான் 3:14-19

*ஜெபம்:*
அன்பின் தேவனே, உம்மிடமிருந்து ஆசிகளைப் பெற்றுக்கொண்ட நான், பிறருக்கும் கொடுத்து அவர்களை நேசிக்க என்னைப் பக்குவப்படுத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
22
செவ்வாய்

# தன்னலமற்ற அன்பு

அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. (பிலிப்பியர் 2:4)

அது ஒரு கிறிஸ்மஸ் தினம். ஆராதனை முடிந்ததும், வெளியிலே போய் விசேஷமாகச் சாப்பிடலாம் என்று திட்டமிட்டிருந்தாள் மனைவி. நாட்டில் நிலவிய பிரச்சனைகள் காரணமாக வீட்டுக்குப் போகமுடியாமல் விடுதியில் தங்கியிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களை அழைத்துச் சாப்பாடு கொடுப்போம் என்றார் கணவர். அரைமனதுடன் சம்மதித்த மனைவி, மதியஉணவைக் கொடுத்து முடித்தார். பல வருடங்கள் கழித்து, விருந்துண்ட ஒரு மாணவரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர், 'எவ்விதமாக நீங்கள் உங்கள் வீட்டை எமக்காக திறந்துகொடுத்தீர்களோ அவ்விதமாக இப்போது நானும் செய்கிறேன்' என்றார். அரைமனமாகச் செய்த செயலிலேயே இவ்வளவு மகிமை இருக்குமானால் அதையே முழுமனதாகச் செய்திருந்தால் எவ்வளவு பெரிய தாக்கத்தை உருவாக்கியிருக்கும் என்று உணர்ந்த மனைவி அமைதியானாள்.

"ஒன்றையும் வாதினாலோ வீண்பெருமையினாலோ செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவராக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" என்று பவுல் எழுதியுள்ளார். எம்மை மாத்திரம் எப்போதும் நேசித்து, எமது காரியங்களுக்கு மட்டும் எப்போதும் முதலிடம் கொடுப்பதை நிறுத்திவிட்டு, தன்னலமற்ற அன்பினைக் காட்டும்பொருட்டு மற்றவரது நலனைக் குறித்துக் கரிசனை எடுப்பது நல்லது.

கிறிஸ்துவில் காணப்பட்டது தன்னலமற்ற அன்பு. தன்னைப் பிடிக்க வந்த போர்ச்சேவகனின் காது வெட்டப்பட்டு நிலத்தில் விழுந்தபோதுகூட, அதையெடுத்து அவனுக்கு ஒட்டி, அவனைச் சொஸ்தப்படுத்திய தன்னலமற்ற அன்பை யாரிடத்தில் காணமுடியும்! இன்று நமது வாழ்வு, நமது குடும்பம், நமது வேலை, நமது தேவன் என்று சுயநலத்துடனேயே வாழுகிறோம். சுயநலப்போக்கும், சுயநலமான ஜெபங்களும் மலிந்துவிட்டன. நமக்காக இயேசு தமது ஜீவனையே கொடுத்தார். நாம் ஜீவனைக் கொடுக்கவேண்டியதில்லை; ஆகக் குறைந்தது மாசற்ற அன்பையாவது வெளிப்படுத்தலாமே!

நம்மிலும் பார்க்க பிறரை மேலானவராக கருதும் மனப்பான்மையை தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக. அப்பொழுது, சுயநலமற்ற அன்புடன் பணியாற்றமுடியும். பிறரை நேசித்து, அவர்களையும் கிறிஸ்துவண்டை வழிநடத்த முடியும். அவ்வித பணியைச் செய்ய எம்மை ஒப்புக் கொடுப்போமா? தன்னலம் நோக்காமல் பிறர்நலம் காணபிக்கப் பிரயாசப்படுவோமாக.

*வாசிப்பு:*
பிலிப்பியர் 2:1-4

*ஜெபம்:*
அன்பின் தேவனே,
நீர் என்னில் அன்பு
கூர்ந்ததுபோல,
நானும் தன்னலமற்ற
அன்பைப் பிறருக்குக்
காட்டி, வாழ
என்னை நடத்தும்.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
23
புதன்

# பின்னிட்டுப் பாராதே!

'கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல.' (லூக்கா 9:62)

ஊழிய வாஞ்சையுள்ள ஒருவருக்கு சிறுபிள்ளைகளுக்குப் பாடல்கள் சொல்லிக்கொடுக்கும் பணி கிடைத்தது. அவரும் தனக்குத் தெரிந்த பாடல் களை சந்தோஷமாகச் சொல்லிக்கொடுத்து வந்தார். பின்னர் வேதவசனங் களை மனனம் செய்வித்தார். பின்னர் வேதத்தைப் படித்துக்கொடுத்தார். வேதாகமப் புதிர் போட்டிகளை நடத்தினார். இப்படியாக படிப்படியாக தேவனைப்பற்றிய அறிவில் அப் பிள்ளைகளை வளர்த்து வந்தார். பல எதிர்ப்புகள் எழுந்தபோதும், அவற்றைப் பொருட்படுத்தாது, தேவன் தந்த பணியை முழுமனதோடு செய்ததால் அவ்விடத்திலிருந்த அநேக பிள்ளைகள் இன்று கிறிஸ்துவுக்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக இவ்வுலகிற்கு வந்த கிறிஸ்து, தமக்கென்று எதையும் வைத்திருக்கவுமில்லை; அவருக்கென்று எதுவித பாதுகாப்பு இருந்ததுமில்லை. "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. ஆனால், மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" என்றார் இயேசு. இயேசுவைப் பின்பற்றுவது என்பது இலகுவானதோ சொகுசானதோ அல்ல. அது விலைமதிக்க முடியாத ஒன்று. பல இழப்புகளையும் சந்திக்க நேரிடும். அதனாலேதான், "கலப்பையில் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுடையவன் அல்ல" என்று இயேசு கற்பித்தார். தேவனுடைய பணியில் இறங்கிய எவரும் எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் கண்டு உடனே பின்வாங்கக் கூடாது; மாறாக, அவற்றைத் தாண்டி முன்செல்லவேண்டும்.

இவ்வுலகில் நாம் தலைசாய்த்துப்படுத்து சுகித்திருக்க இங்கே நமக்கு சொந்த இடம் ஏது? நாம் இங்கே வெறும் கூடாரவாசிகளே. எமக்காக ஒரு நிரந்தரமான ஸ்தலத்தை ஆயத்தம் செய்யவென்றே நமதாண்டவர் சென்றிருக் கிறார். எனவே, அவருடைய பணியைச் செவ்வனே செய்து, அவர் எமக்காக ஆயத்தம்பண்ணியுள்ள ஸ்தலத்திலே சென்று தலைசாய்ப்போம். இவ்வுலகில் நமக்கேற்படும் போராட்டங்களும், பிரச்சனைகளும் எம்மைத் தேவஊழியத்தில் பக்குவப்படுத்தவே தவிர, எம்மைப் பின்மாற்றம் அடையச்செய்வதற் கல்ல. தேவன் தந்துள்ள பணி பெரியதோ சிறியதோ அதை முழு மனதோடு செய்து முடிக்க நம்மை அர்ப்பணிப்போம். எமது காரியங்களை எல்லாம் நிறைவேற்றிவிட்டு, எமது பொறுப்புகளை எல்லாம் சரிசெய்துவிட்டு, பின்னர் தேவபணியைச் செய் வோமென்றால் அது ஒருகாலத்திலும் நடைபெறாது. நாம் இருக்கும் இந்த நிலையிலேயே தேவபணி செய்ய முன்வருவோம்.

*வாசிப்பு:*
லூக்கா 9:57-62

*ஜெபம்:*
அன்பின் தேவனே, சிறிதோ பெரிதோ உமது பணிசெய்து உம்மை மகிமைப் படுத்த என்றைக்கும் என் வாழ்வை ஒப்படைக்கிறேன். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
24
வியாழன்

# தேவ அன்பைக் கண்டேன்

'தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.' (1யோவான் 4:21)

"வேறு மொழி பேசுகிற ஒரு கிறிஸ்தவ சகோதரர், அந்தஸ்தில் உயர்ந்தவரும் செல்வந்தருமாக இருந்தபோதும், எப்போதும் என்னோடு அன்பாகவே பேசுவார், உபசரிப்பார். ஒருமுறை எனக்கு பெரியதொரு தேவை ஏற்பட்டபோது, அவர் எதையும் கருதாமல், தன்னால் இயலுமான சகல உதவிகளையும் மனமுவந்து செய்தார். அந்நேரத்தில் அவர் தனது அந்தஸ்தையோ, தனது உயர் நிலையையோ எண்ணிப் பார்க்கவில்லை. தேவையில் உள்ள ஒரு சகோதரனுக்கு உதவவேண்டும் என்ற ஒரே நினைப்பே அவரிடத்தில் காணப்பட்டது. மெய்யாகவே அவரிடத்தில் நான் தேவ அன்பைக் கண்டேன்" என்று ஒருவர் சாட்சியாகச் சொன்னார்.

"தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன் தான் காணாத சகோதரனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" தேவனிடத்தில் அன்புகூருகிறோம் என்று சொல்லிக்கொண்டு வாழுவது இலகு. ஆனால், அதைச் செய்கையில் காண்பிப்பது கடினம். எமது வார்த்தைகளையல்ல; செய்கைகளையே மெருகூட்டும்படிக்கு யோவான் ஆலோசனை கூறுகிறார். தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்கிற கற்பனையை நாம் கிறிஸ்துவாலே பெற்றிருக்கிறோம் என்கிறார்.

நாமும் தேவனிடத்தில் அன்புகூருகிறோம் என்று சொல்லுவோம்; தேவனுக்காய் பல காரியங்கள் செய்கிறோம் என்றும் சொல்லுவோம். ஆனால், அதற்கான சந்தர்ப்பம் வந்தும் பேசாமல் இருந்துவிடுவோம். இது வெறும் மாய்மாலமான வாழ்க்கை. தேவன் இதனை வெறுக்கிறார். எமது சகோதரரை நாம் நேசிக்கவேண்டும். அவர்களின் குறைச்சலில் அவர்களுக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும். நானும் என் தேவனும், என் குடும்பமும் என்று வாழ தேவன் நம்மை அழைக்கவில்லை. நாம் பெற்றுக்கொண்டதை இல்லாதவர்களுக்கும் பகிர்ந்து, பிறரையும் மகிழ்விக்கவுமே நாம் பிரயாசப்படவேண்டும்.

*வாசிப்பு:*
1யோவான் 4:11-21

நாம் பொய்யரா? அல்லது, உண்மையுள்ளவரா? நமது சகோதரரை நேசிப்பது கடினம் என்று எப்படிச் சொல்லுவது? கடினமான எதனையும் தேவன் நம்மிடத்தில் எதிர்ப்பதில்லையே! தேவ அன்பை நாம் ருசிபார்ப்பது உண்மையென்றால், சகோதரனில் அன்புகூருவது நமக்குக் கடினமாகவே இராது. நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து, நம்மைத் திருத்திக்கொள்வோமாக.

*ஜெபம்:*
அன்பின் தேவனே, உம்மில் அன்புகூருவதாகச் சொல்லும் நான் என் சகோதரனின் தேவைகளில் உதவிசெய்ய பெலன்தாரும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
25
வெள்ளி

## சுவிசேஷ பாரம்

நான் நட்டேன். அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார். (1கொரிந்தியர் 3:6)

எழுபத்தைந்து வயதுடைய ஒரு பெண்மணி, தனது கணவர் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இறையியல் கல்லூரிக்குப் படிக்கவரும் மாணவர்களின் மனைவியர் மத்தியில் ஒரு சிறிய ஊழியத்தைச் செய்து வந்தார்கள். ஊழியத்திலே மனைவிகளின் பங்களிப்பைக் குறித்து அநேக காரியங்களைச் சொல்லிக்கொடுத்தார்கள். மாத்திரமல்ல, விடுமுறைக்காக தனது சொந்த நாட்டிற்குப் போகும்போதும், திரும்பும்போதும் விமானத்தில் தனக்கு அருகில் இருப்பவருக்கு சுவிசேஷம் அறிவிப்பதாக அவர் சொன்னபோது, அவருக்குள் இருந்த ஊழிய வாஞ்சையையும் வேகத்தையும் உணரக்கூடியதாக இருந்தது.

இன்றைய தியானப்பகுதியிலே பவுல், கொரிந்தியருக்குள் இருந்த போட்டி, பொறாமை, வாக்குவாதம் போன்ற சிறுபிள்ளைத்தனத்தை கண்டித்து புத்திசொல்லுகிறதை வாசித்தோம். சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும் என்ற வாஞ்சையிலும் பார்க்க, யார் யார், யார் யாரைச் சேர்ந்தவர் என்று மாம்ச பிரகாரமாக போட்டி மனப்பான்மையில் நடந்து, ஆவிக்குரிய வாழ்வில் பெலனற்றவர்களாய் இருப்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

நாம் அனைவருமே தேவனுடைய உடன்வேலையாட்களாய் இருக்கிறோம். எமது சிந்தனை நோக்கம் முயற்சி எல்லாமே தேவனுக்குப் பணியாற்றுவதாய் மாத்திரமே இருக்கவேண்டும். எமது பணியை நாம் உண்மையாய் உத்தமமாய் செய்யும்போது அதன் பலனைக் கொடுப்பவர் தேவனே. இதைத்தான் பவுல், 'நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை; விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்' என்று விளக்குகிறார். எமக்குள் இருக்கும் பொறாமையும், போட்டி மனப்பான்மையும் தேவ ஊழியத்தைச் செம்மையாய்ச் செய்யமுடியாதபடிக்குத் தடைக்கற்களாய் அமைந்து விடுகின்றன. நாமோ அதனை உணர்ந்துகொள்வதில்லை.

மேற்குறிப்பிட்ட பெண்மணி, தனக்கென்று எந்தவொரு ஆதாயத்தையோ நற்பெயரையோ எதிர்பார்க்கவில்லை. விமானத்தில் பயணம் செய்யும் நேரத்தை விரயமாக்கவும் விரும்பவில்லை. அருகில் இருப்பவர் சுவிசேஷத்தை அறியவேண்டும், அந்த ஆத்துமா கிறிஸ்துவுக்காய் ஆதாயப்படுத்தப்பட வேண்டும், இதுதான் அவருடைய ஒரே நோக்கம். கிடைக்கும் சந்தர்ப்பத்தில் சுவிசேஷத்தைச் சொல்லிவிட்டால் தேவன் ஒருநாள் அவரை இரட்சித்துக்கொள்வார்; அது அவர் திட்டம் என்பதை மட்டும் நினைவிற்கொண்டு செயற்பட்டார்கள். எமக்குள் இந்த சுவிசேஷ பாரம் உண்டா?

*வாசிப்பு:*
1கொரிந்தியர் 3:1-10

*ஜெபம்:*
தேவனே, நான் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை மற்றவருக்கும் அறிவிக்க, கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த உதவிடும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி 26 சனி

# தேவனுக்கு உண்மையாயிரு

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான். (நீதிமொழிகள் 28:20)

"வெளியூரிலே படிப்பதற்காக குடும்பத்தோடு சென்றிருந்தபோது பணக்கஷ்டம் தலைதூக்கியது. ஒருநாள் வீதியால் சென்றுகொண்டிருந்தேன். அதிர்ஷ்டலாப சீட்டுக்களை ஒருவர் கொண்டுவந்து நீட்டினார் நானும் ஒருவித ஆசையில் ஒன்றை எடுத்தேன். எதிர்பாராமல் ஒரு பெரிய தொகைப் பணம் கிடைத்தது. ஆனால், அதை விற்றவர், உங்கள் அதிர்ஷ்டப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் இடத்திற்குச் சென்று, அதிக நாட்களாக நீங்கள் இந்த ஊரிலே இருப்பவர் என்றும், இங்கே ஊதியம் பெறுபவர் என்றும் கூறினால் இப் பரிசைப் பெற்றுக்கொள்ளலாம்' என்றார். நான் இங்கே ஒரு மாணவனாக இருக்கிறேன் என்றேன் நான். அதற்கு அவர், 'அதனாலென்ன, இந்தப் பெரிய தொகைக்காக ஒரு சிறிய பொய் கூறுங்களேன்' என்றார். நான் மறுத்துச் சென்றேன். சில நாட்களுக்குப் பின்பு, எனக்கு அறிமுகமில்லாத ஒரு கிறிஸ்தவ சகோதரர் எனக்கு ஒரு காசோலையை அன்புப் பரிசாகக் கொடுத்தார். அந்த நேரம் எனக்கு எவ்வளவு தேவைப்பட்டதோ அதைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு அந்தப்பணம் போதுமானதாய் இருந்தது" என்று ஒருவர் தனது அனுபவத்தைக் கூறியபோது, அவருடைய உண்மைத்துவத்திற்கு தேவன் கொடுத்த பரிசோ என்று எனக்கு எண்ணத்தோன்றியது.

ஐசுவரியம் பெருகுவதால் ஒருவன் தேவனை விட்டு விலகிப்போகும் சந்தர்ப்பம் உண்டு. அதேவேளை தரித்திரத்தின் மிகுதியாலும் ஒருவன் தேவனைத் திட்டித்தீர்த்து, அவரைவிட்டு விலகிவிடவும் ஏதுவுண்டு. அதனால் இவையிரண்டுமே எனக்கு வேண்டாம்; எனது படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும் என்று நீதிமொழிகளில் எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இது ஒரு அழகான வேண்டுதல்தான். ஆனால், நாம் எந்நிலையில் இருந்தாலும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பதே மிக முக்கியமானது. உண்மையுள்ளவனுக்கு தேவாசீர்வாதம் உண்டு.

ஆனால் இன்று, ஐசுவரியத்தைத் தீவிரமாகத் தேடுகிறவர்கள் ஏராளம். அவ்வளவிற்கு இன்று மனிதனுக்குப் பணம் அத்தியாவசியத் தேவையாகிவிட்டது. ஆகையால், எப்படிப் பணத்தைச் சம்பாதிக்கிறோம் என்பதில் அல்ல; எப்படியாகிலும் சம்பாதித்தால் போதும் என்ற நிலைக்கு இன்று மனிதன் தள்ளப்பட்டு விட்டான். இந்நிலையில் கிறிஸ்தவர்களாகிய எமது நிலை என்ன? நாமும் எப்படியாகிலும் பணத்தைச் சம்பாதிக்கின்ற நிலையில் இருக்கிறோமா? தேவனுடைய பணத்தையும் கொள்ளையடிக்கிறோமா? எல்லா நிலையிலும் உண்மைத்துவத்தோடு வாழ பிரயாசப்படுவோமாக!

*வாசிப்பு:*
நீதிமொழிகள் 30:7-9

*ஜெபம்:*
ஆண்டவரே, பொன்னும் பொருளும் உம்முடையவை. ஆகவே, எந்நிலையிலும் உமக்கே உண்மையுள்ளவனாக வாழ கிருபை செய்யும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
27
ஞாயிறு

# பதில் கொடுக்கும் தேவன்

'கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.'
(மத்தேயு 7:7)

திருமணமாகி ஒரு சில வருடங்களுக்குள்ளே பிரச்சனைப்பட்ட தம்பதியினர் இருவரும் குடும்ப ஆலோசகரை நாடினார்கள். அவர்களுக்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வந்தன. அதிலும் மேலாக, அவர்களுக்காக அநேகர் தொடர்ந்து ஜெபித்தார்கள். இன்று இருவரும் இணைந்து சந்தோஷமாக வாழுகிறார்கள். இன்னுமொரு குடும்பத்தில், மனஸ்தாபம் காரணமாக, பிரிந்திருந்த தனது பிள்ளைகள் மீண்டும் ஒன்று சேரவேண்டுமென ஒரு தாயார் தொடர்ந்து ஜெபித்து வந்தார்கள். அவர்கள் சேரமுடியுமா, இது நடக்கக் கூடியதா என்று தெரியாதவேளையிலும் அவர் ஜெபத்தை நிறுத்தவில்லை. இப்பொழுது பிள்ளைகள் ஒருவரோடொருவர் ஒப்புரவாகி பேசுவதைக்கண்டு மனம் பூரித்து தேவனுக்கு நன்றி சொன்னார்கள். ஆம், தேவன் பதிலளிக்கின்ற தேவன். நமது ஜெபங்களை அவர் புறக்கணிப்பதேயில்லை.

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்றார் ஆண்டவர். ஆம், நாம் கேட்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். ஆண்டவருக்கு எல்லாம் தெரியும்; நாம் ஏன் கேட்கவேண்டும், ஏன் ஜெபிக்கவேண்டும் என்று வீராப்பாய்ப் பேசுபவர்களும் உண்டு. உண்மை என்னவெனில், இவர்களுக்கு ஜெபிக்க நேரமுமில்லை; மனமுமில்லை, ஜெபத்தின் முக்கியத்துவமும் புரிவதில்லை. ஆண்டவர் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார் என்பது உண்மை. அது சில வேளை 'ஆம்' என்றும், 'இல்லை' என்றும் இருக்கும். எதுவாயினும் அது பதில்தான். ஆனால், கேட்டது கேட்டதுபோலக் கிடைக்காவிடில் ஆண்டவர் பதில் தரவில்லை என்று நாம்தான் சொல்கிறோம். உண்மை அதுவல்ல. ஆண்டவர் பதில் தந்துவிட்டார் என்று ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எமக்குத்தான் இல்லாமற் போகிறது. கேளுங்கள் தரப்படும் என்று சொன்ன ஆண்டவர், கேட்கும்போது பதில் தராதிருப்பாரா?

நமது ஜெபவாழ்வு எப்படி இருக்கிறது? ஜெபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? நம் ஜெபங்களுக்கு தேவன் பதில் தந்ததை உணர்ந்திருக்கிறோமா? "ஆயிரம் வழியுண்டு ஆண்டவர் பதில் தர; தேவையுள்ள நேரமதில் எம்மருகில் நிற்கின்றாரே. அன்பின் பிள்ளைகட்கு நன்மை குறைவதில்லை. ஆயிரமான வழியுண்டு இயேசு பதில்தர" இது ஒரு பல்லவி வரிகள். நாம் நினைப்பதுபோல அல்ல; அவர் பதில் தர ஆயிரம் வழிகளுண்டு. பதில் தருவார் என்று விசுவாசிப்பதே மேலானது.

*வாசிப்பு:*
மத்தேயு 7:7-11

*ஜெபம்:*
அன்பின் ஆண்டவரே, நீர் ஜெபம் கேட்டு பதில் தருகிறவர். இடைவிடாது உம்மை நோக்கி ஜெபிக்கும் ஜெப ஆவியை எனக்குள் ஊற்றியருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
28
திங்கள்

# என்னைக் காண்கிறவர்

...தன்னோடே பேசின கர்த்தருக்கு, நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள். (ஆதியாகமம் 16:13)

நாட்டுப் பிரச்சனையில் இடம்பெயர்ந்து சென்றபோது, ஒரு பெரிய வீட்டில் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு குடும்பமாகப் பத்துக் குடும்பங்கள் அங்கே இருந்தோம். அங்கிருந்த ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொருவித மான எண்ணங்கள். ஒவ்வொருவரும் எதையோ இழந்த நிலையில் இருந்தனர். இரவு நேரம் வந்ததும் அனைவரும் கூடி தேவனை ஆராதிப்போம். வெவ்வேறு குடும்பங்களாக, வித்தியாசமான மனநிலையுடன், வித்தியாசமான இழப்பு களுடன் இருந்தாலும், தேவனுடைய சமுகத்திற்கு வந்தபோது, தேவன் நம் ஒவ்வொருவரின் உள்ளங்களையும் பிரச்சனைகளையும் காண்கிற தேவனாய் இருக்கிறார் என்ற எண்ணம் நமக்குப் பெரியதொரு ஆறுதலும் தேறுதலுமாய் இருந்ததை உணரக்கூடியதாக இருந்தது.

அன்று ஆகார் தனது நாச்சியாரால் துரத்திவிடப்பட்டு வனாந்தரத்தில் ஆதரவற்ற நிலையில் இருந்தாள். அப்போது தன்னோடு பேசின கர்த்தருக்கு 'நீர் என்னைக் காண்கிற தேவன்' என்று பேரிட்டாள். தேவன் எப்போதும் எம்மைக் காண்கிற தேவனாகவே இருக்கிறார் என்பது எமக்கு எவ்வளவு ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருக்கிறது. அவர் எமது துக்கங்களையும் துயரங்களையும் மட்டும் காண்கிறவர் அல்ல; எமது உண்மைத்துவம், நாம் அவர்மீது வைத்திருக்கும் அன்பு, நமது வாழ்வில் நாம் அவருக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அனைத்தையுமே காண்கிறவராய் இருக்கிறார்.

ஒருவர் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற உணர்வு, நம்மை எப்போதும் உண்மையுள்ளவர்களாய் நடக்கத் தூண்டுவதாய் அமையும். தாவீது தன்து சங்கீதத்தில், "கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக் கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர்" என்று பாடியுள்ளார். அதாவது, தன்னை முழுவதுமாய் அறிந்திருக்கிற தேவன் இவரே என்ற நம்பிக்கை அவருக்குள் வேரூன்றியிருந்தது என்பது விளங்குகிறது. எமது உள்ளத்தில் விசாரங்கள் பெருகும்போதும், நிந்தைகள் தாக்கும் போதும், யார் நம்மைக் காண்பார் அல்லது எமக்கு ஆதரவளிக்க யாருண்டு என்று நினைக்கிறோம். அப்போதெல்லாம் எம்மை ஆற்றித்தேற்றும் ஒரு அன்பின் கரம் உண்டு என்பதை மறந்துபோக வேண்டாம். அதேசமயம், நமது இருதய சிந்தனை களையும் அவர் அறிகிறார் என்பதையும் மறக்கக் கூடாது. எப்போதும் எம்மோடு உறவாட விரும்பும் ஆண்டவருக்கு எமது வாழ்வை அர்ப்பணித்து, எந் நாளும் அவருக்கே உண்மையாய் நடக்க தூய ஆவியானவர் தாமே நம்மை வழிநடத்துவாராக.

*வாசிப்பு:*
சங்கீதம் 139:1-10

*ஜெபம்:*
பிதாவே, நீர் என்னைக் காண்கிற தேவன். உம்மையே நேசித்து உமக்கே உண்மையாய் வாழ என்னை முற்றிலுமாய் உமக்கே அர்ப்பணிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி 29 செவ்வாய்

# கர்த்தர் காப்பார்

கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்குங் காப்பார்.
(சங்கீதம் 121:8)

போக்குவரத்துச் செய்யமுடியாத யுத்தநாட்களில், குண்டுவீச்சுக்களும் ஷெல் அடிகளும் நடந்துகொண்டிருந்தவேளையிலே, ஒரு தாயார் மிகவும் சுகவீனப்பட்டு படுத்தபடுக்கையானார்கள். வீட்டிற்கு சமீபத்தில் இருந்த ஒரு வைத்தியர் வந்து பார்த்து சில மருந்து மாத்திரைகளை எழுதிக்கொடுத்து, உடனடியாக அதை வாங்கிக்கொடுக்காவிட்டால் வியாதி கடுமையாகி மரணிக்கவேண்டிய நிலை ஏற்படலாம் என்றார். கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. மருந்து வேண்டுவதானால் இராணுவமுகாமுக்குள் சென்று இராணுவ வைத்தியரையே கேட்கவேண்டிய நிலைமை. தனது தாயாரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மகன் வெள்ளைக் கொடியைப் பிடித்துக் கொண்டு இராணுவ முகாமுக்குள் செல்ல ஆயத்தமானார். இது மிகவும் ஆபத்தான காரியம்; தூரத்தில் யாரைக் கண்டாலும் சுட்டுவிடுவார்கள் என்று பலர் தடுத்தனர். கர்த்தரை நம்பியவராய் ஜெபத்தோடுகூடச் சென்ற மகனை அங்கிருந்த இராணுவ வைத்தியர் வரவேற்றார். தான் ஒரு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் என்று தன்னை அறிமுகமும் செய்தார். தேவையான மருந்துகளைக் கொடுத்து, மேலும் தேவை ஏற்பட்டால் தன்னைச் சந்திக்கும்படிக்கும் சொன்னார். தன்னைப்போலவே இன்னுமொரு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனைக் கண்டதில் தான் பெரும் மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார். அவர் அன்போடு கொடுத்த மருந்தில் அத்தாயார் சுகமடைந்தார்கள்.

"எனக்கொத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுப்பேன்". இனி ஒன்றுமே செய்யமுடியாத வேளையிலும் நாம் நோக்கிப் பார்க்கக்கூடிய ஒரே இடம் தேவசமுகமே. அவரிடத்திலிருந்து எமக்கு ஒத்தாசை வரும். உண்மையாகவே நாம் அவரை நம்பினால், அவரை நோக்கிப் பார்த்தால் அவர் எம்மை வழிநடத்த எம்மோடு வருவார். ஆனால், ஆபத்துவேளையில் மாத்திரம் நாம் அவரைத் தேடுவதும் மற்ற நாட்களில் ஏனோதானோ என்று வாழுவதும் நல்ல காரியமல்ல. தேவனோடு எமக்குள்ள உறவானது எப்போதும் எந்நேரமும் உயிருள்ளதாய் இருக்க வேண்டும்.

*வாசிப்பு:*
சங்கீதம் 121:1-8

வியாதிக்கு மாத்திரை போடுவதுபோல தேவைக்கேற்ப தேவனைப் பாவித்துவிட்டு, பின்னர் விட்டு விடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறான காரியம். தேவனோடுள்ள உறவில் எந்நாளும் நிலைத்திருக்க வேண்டும். எமக்கு ஒத்தாசை வரும் பர்வதத்திற்கு நேராக எம்முடைய கண்களை எப்போதும் ஏறெடுப்போம். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனிடத்தில் இருந்து எமக்கு நிச்சயம் ஒத்தாசை வரும்.

*ஜெபம்:*
அன்பின் தேவனே, எந்த சூழ்நிலையிலும் உம்மையே நம்பி, உம்மைப் பற்றிக் கொண்டு, உமக்கு உண்மையாய் வாழ என்னை வழிநடத்தும் ஐயா. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
30
புதன்

# தேவனே அடைக்கலம்

'எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்... வாதை உன் கூடாரத்தை அணுகாது.' (சங்கீதம் 91:9-10)

கணவருக்கு அன்று பிறந்தநாள். கொண்டாட்டம் முடிந்து உறவினர் அனைவரும் சென்றுவிட்டனர். அன்று இரவு திடீரென துப்பாக்கிப் பிரயோகம் வீட்டின்மீது நடத்தப்பட்டது. ஷெல் வந்து விழுந்தது. கணவரும் மனைவியுமாக ஒரு அறையினுள் முடங்கியவாறு ஜெபித்தனர். 'எனது பிறந்தநாளும் மரண நாளும் ஒன்றாக அமையப்போகிறதோ' என்று அந்தக் கணவர் கலங்கும் அளவுக்கு ஆபத்து நெருங்கியிருந்தது. இந்த நிலைமையில் அத்தம்பதியினர் தப்பிப் பிழைத்தனர். அந்த நேரத்தில் தேவனே தமக்கு அடைக்கலமாய் இருந்தார் என்றும், வேறு எந்தவொரு பாதுகாப்பும் இருக்கவில்லை என்றும் தங்கள் அனுபவத்தைக் கண்ணீரோடு பகிர்ந்துக் கொண்டார்கள்.

91ம் சங்கீதத்தை எழுதிய சங்கீதக்காரரும் இந்த சங்கீதத்தை அனுபவித்தே எழுதியிருக்கிறார் என்பதற்கு இந்த 9ம் 10ம் வசனங்கள் ஆதாரமாய் உள்ளன. 'எனக்கு அடைக்கலமாய் இருக்கிற உன்னதமான கர்த்தர்' என்று சொல்லும்போது, கர்த்தர் தனக்கு அடைக்கலமானவர் என்பதை தனது வாழ்வில் அவர் அனுபவித்திருக்கிறார் என்பது புலனாகிறது.

எமது வாழ்வில் கர்த்தரை நாம் எந்தளவுக்கு அனுபவித்திருக்கிறோம்? கர்த்தர் எனக்கு இப்படியாகச் செய்தார்; ஆகையால், அவர் உங்களுக்கும் அப்படியே செய்ய வல்லவராய் இருக்கிறார் என்று அனுபவத்தோடு சொல்லுமளவுக்கு தேவனை நெருங்கி நாம் வாழுகிறோமா? பிறருடைய சாட்சிகளை ருசித்து ரசிப்பது ஒன்று. ஆனால், தேவன் நமது வாழ்வில் செய்ததை அனுபவித்துச் சொல்லும்போது அந்த சாட்சிகள் நிச்சயமாக உயிரோட்டமுள்ளதாக, கேட்கிறவர்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப்.2:32) என்று பேதுரு கூறிய சாட்சி அன்று மூவாயிரம் பேர்களின் உள்ளத்தை அசைத்ததை நாம் மறக்கலாமா! தேவனோடு நெருங்கி வாழாத ஒருவன் அவருடைய பாதுகாப்பை அடைக்கலத்தை அனுபவிப்பது கடினம். அப்படி அனுபவிக்காதவனால் 'தேவன் உனக்கும் அடைக்கலமாயிருப்பார்' என்று சாட்சி சொல்லுவதும் கடினம். நாம் இன்று உயிருள்ள சாட்சிகளாக வாழுகிறோமா? அல்லது, பிறருடைய சாட்சியில் மறைந்து வாழுகிறோமா? உன்னதமானவரின் மறைவிலிருந்து சர்வவல்லவரின் நிழலில் தங்கும் நாம் மற்றவர்களும் அந்த நிழலில் வந்தடைய வழிவகுப்போமாக.

*வாசிப்பு:*
சங்கீதம் 91:1-16

*ஜெபம்:*
நேச பிதாவே, நீரே என் அடைக்கலம். பாதுகாப்பை பிறரும் உம்மில் கண்டடைந்து உம்மண்டை வர வழிநடத்தும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
31
வியாழன்

# இருதயத்தைப் பார்க்கிறார்

...மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். (1சாமுவேல் 16:7)

ஆராதனை முடிந்து அவசர அவசரமாகப் புறப்பட்டுக்கொண்டிருந்த வரைப் பார்த்து, 'எங்கே அவசரமாகப் புறப்பட்டுவிட்டீர்கள்' என்று கேட்டேன். 'வீட்டில் அவன் தனியே இருக்கிறான்' என்றார் அவர். பிள்ளையைத் தனியே விட்டு வந்திருக்கிறார் என்று நினைத்து புறப்படும்படி சொன்னேன். அப்போது அவர், 'அவனுக்கு நான் போய்த்தான் சாப்பாடு கொடுக்கவேண்டும்' என்றார். சாப்பாடும் கொடுக்காமல் வந்திருக்கிறார், யாரோ சிறுபிள்ளையாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணியபடி, சீக்கிரமாய் புறப்படும்படி சொன்னேன். அவரும் அவசரமாய்ப் புறபபட்டபடியே, 'அவன் இப்போதுதான் குரைக்கத் தொடங்கியுள்ளான்' என்றார். அப்போதுதான் அவர் இவ்வளவு நேரமும் தனது நாய்க்குட்டியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார் என்பது புரிந்தது.

வெளிப்பேச்சுக்களையும் வெளித்தோற்றத்தையும் பார்த்து பிறரை நாம் எடைபோடுவதுண்டு. பிறர் பேசுவதைக் கேட்டு, இவர் இதைத்தான் பேசுகிறார், இவர் இப்படிப்பட்டவர் என்று எமக்குள்ளேயே சில தப்புக்கணக்கு களையும் போடுவதும் உண்டு. ஆனால், தேவனோ வெளித்தோற்றத்தைப் பாரப்பவரல்ல; அவர் உள்ளத்தை ஆராய்ந்து அறிகிறவர். அவர் இருதயத் தைப் பார்க்கிறவர். எமது பேச்சுகளும், நடத்தைகளும் அவரைப் பிரியப்படுத்தி னால் போதாது, எமது இருதயம் அவருக்கு உகந்ததாய் இருக்கவேண்டு மென்றே அவர் விரும்புகிறார். உடலில் எத்தனையோ அவயவங்கள் இருந்தும் தேவன், "மகனே, உன் நெஞ்சை எனக்குத் தாராயோ" என்றே கேட்கிறார். காரணம், இருதயம் பரிசுத்தமாய் இருக்குமானால் அனைத்துமே பரிசுத்தமாயும் தேவனுக்கு உகந்ததாயும் இருக்கும்.

ஈசாயின் குமாரரின் வெளித்தோற்றத்தைப் பார்த்து, இவனைத்தான் தேவன் ராஜாவாகத் தெரிந்தெடுத்திருப்பார் என்று தப்புக்கணக்குப் போட்டார் சாமுவேல். ஆனால், தன்னை உண்மையாய் நம்பிய ஆட்டிடையன் தாவீதின் இருதயத்தையே தனக்கு உகந்ததாகக் கண்டார் தேவன். தனது ஆடுகளை மேய்ப்பதில் உண்மையாய் இருந்த தாவீதே, இஸ்ரவேலரை வழிநடத்தவும் உகந்தவன் என்பதை தேவன் அறிந்திருந்தார். ஆம், அவர் இருதயத்தைப் பார்க்கிற தேவன். வெளித்தோற்றத்தால் தேவனைப் பிரியப்படுத்தமுடியாது. நமது இருதயத்தைத் தேவ னுக்கு முன்பாக செம்மையானதாய் வைத்திருக்க ஆசிப்போமாக. பரிசுத்தம் எமது நடத்தையிலும் கிரியையிலும் மாத்திரமல்ல; அது நமது இருதயத்தி லிருந்து வெளிவரவேண்டும். தேவன் இருதயத்தின் உண்மைத்துவத்தையே விரும்புகிறார். நமது இருத யத்தை அவரிடமே ஒப்புக்கொடுத்துவிடுவோமா!

*வாசிப்பு:*
1சாமுவேல் 16:1-12

*ஜெபம்:*
அன்பின் ஆண்டவரே,
உமக்கு முன்பாக
என் இருதயத்தைப்
பரிசுத்தமாய்க்
காத்துக்கொள்ள
உண்மைத்துவத்தை
எனக்குள்
உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
1
வெள்ளி

# வாழ்வின் பெறுமதி என்ன?

"...என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். ....நான் கர்த்தராகிய இயேசுவிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்." (அப்.20:24)

கி.பி. முதலாம் நூற்றாண்டில், இன்றைய தொலைக்காட்சி கமராக்கள் இருந்திருந்தால், எபேசு பட்டணத்தில் கலகக்காரர் செய்த கலகத்தைப் படம் பிடித்துக் காட்டியிருப்பார்கள். தியானாளின் கோவிலைப்போல சிறிய கோவில்களை வெள்ளியினால் செய்து பெரிய ஆதாயத்தைத் தேடிக்கொண்டிருந்தவனே இந்தக் கலகத்தைத் தூண்டிவிட்டிருந்தான். கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல என்று பவுல் பிரசங்கித்ததின் நிமித்தம் மனந்திரும்பியவர்கள் அநேகர். இதனால் இந்த மனுஷன் ஆத்திரமடைந்தான். இந்தக் கலகக்காரர் பவுலின் தலையை உடைத்து நொருக்கத் தயாராயிருந்தனர்.

இப்படிப்பட்டதொரு நெருக்கம் நமக்குண்டானால் என்ன செய்வோம்? கடின இதயங்கொண்ட இக் கூட்டத்தாருக்கு, நாம் சுவிசேஷம் சொல்லத்தான் வேண்டுமா என்று கேட்கமாட்டோமா? பவுலோ இவர்களை கலகக்காரர் என்றோ, கொலைகாரர் என்றோ பார்க்கவில்லை. மாறாக, சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டியதொரு பணித்தளமாகவே அந்த இடம் பவுலின் கண்களுக்குத் தெரிந்தது. உண்மையில் அந்தக் கூட்டத்தினர் முன்பாகச் சென்று பேச பவுல் விருப்பமாயிருந்தார். ஆனால், அவருடைய நண்பர்கள் பவுலை அனுமதிக்கவில்லை (அப்.19:30,31).

பவுலைப் பொறுத்தளவில் தன் ஜீவிய ஓட்டம் முடிந்துவிடுமே என்ற கவலை அவருக்கு என்றுமே இருந்ததில்லை; மாறாக, அது எப்போ முடிந்தாலும் எங்கே முடிந்தாலும், முடியும்வரைக்கும், தான் எதற்காகப் பிடிக்கப்பட்டாரோ, தன்னை நம்பி தேவன் எந்தப் பொறுப்பை ஒப்புக்கொடுத்தாரோ, அதை சரியாகச் செய்துமுடிக்க வேண்டுமென்ற வைராக்கியம்தான் அவரை முன் நடத்திச் சென்றது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எல்லோரும் அறியவேண்டுமே என்ற ஒரே எண்ணம் தான் அவரை ஆட்கொண்டிருந்தது. அதற்காக அவர் தனது உயிரையும் கொடுக்கத் தயாராயிருந்தார். பவுல் தனது வாழ்வுக்குக் கணக்கிட்டிருந்த பெறுமதி இயேசு கிறிஸ்துதான்.

நமது வாழ்வுக்கு நாம் கணக்கிட்டிருக்கும் பெறுமதி என்ன? "என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்" என்று சொன்ன பவுல் எங்கே? நாம் எங்கே? நாம் பிராணனைக் கொடுக்கவேண்டாம்; குறைந்தபட்சம், தேவனுடைய வார்த்தையினிமித்தம், அவர் நம்மை இரட்சித்ததினிமித்தம், அவர் நம்மில் வைத்திருக்கும் சித்தத்தினிமித்தமாவது நாம் கிறிஸ்துவுக்காக வாழலாமே! தேவனுடைய வார்த்தையின் நிமித்தம் நாம் இதுவரைக்கும் எதையாவது இழந்திருக்கிறோமா? நமது வாழ்வின் பெறுமதி கிறிஸ்துவா? அல்லது, நமது சொந்த விருப்பங்களா? சிந்திப்போம்.

*வாசிப்பு:*
அப்போஸ்தலர் 19:23-31

*ஜெபம்:*
"பிதாவே, என் வாழ்வில் காணப்படும் சுயநேசத்தை உமது நாமத்தின் நிமித்தம் முற்றாய் அழித்துப்போட நீரே என்னை உமதாவியால் நிறைத்து வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
2
சனி

# வெட்கமா? எதைக்குறித்து?

'கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்.' (ரோமர் 1:16)

எவற்றைக்குறித்துப் பெருமைப்படுகிறோம்; எவற்றைக்குறித்து வெட்கப் படுகிறோம் என்று ஒரு பட்டியல் போட்டுபார்ப்போமா? இரண்டும் நமது அறிவுக்கு நன்கு தெரியும்; ஆனால், அதன்படி நமது பட்டியல் உண்மையாய் அமையுமா என்பதே கேள்வி. வெட்கப்படவேண்டியவற்றைக் குறித்து பெருமைப்படவும், பெருமைப்படவேண்டியதைக் குறித்து வெட்கப்படவும்தக்கதாக நமது மனநிலை மாறுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றம் பெற்றுவிடுகிறது. நமது மனநிலையில் மாற்றம் ஏற்பட, 'வெட்கம்' என்ற பண்பிலும் மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது.

பவுலுடைய வாழ்விலே "ஒரே மனம்" காணப்பட்டது. எந்த சூழ்நிலையும் தன்னைப் பாதிக்கவோ, தன் வைராக்கியத்தைக் குறித்து வெட்கப்படவோ அவர் இடமளிக்கவில்லை. அவருக்கிருந்த ஒரே நோக்கம் கிறிஸ்துவின் சுவிசேஷம் ஒன்றுதான். இதற்காக அவருக்கு மாலை மரியாதை கிடைக்கவில்லை. யூதரின் அதிருப்தி, வெறுப்பு, கோபம் என்பவையே அவருக்குக் கிடைத்த பரிசு. இதனால் தனக்கிருந்த நற்பெயர், அந்தஸ்து, பதவி யாவற்றையும் பவுல் இழந்தார். இவற்றை தராசின் ஒரு புறத்திலும், சுவிசேஷத்தை மறுபுறத்திலும் போட்டுப் பார்த்தபோது, சுவிசேஷத்தின் பெறுமதியைச் சமப்படுத்த எதுவுமே பவுலுக்குத் தகுதியாகத் தெரியவில்லை. ஏனெனில், அவருக்குள் இருந்த செய்தி, கிறிஸ்துவின் நற்செய்தி; அது மீட்பின் செய்தி; மனுஷனை தலைகீழாக மாற்றிப்போட வல்லமைமிக்க செய்தி; முழு மனுக்குலத்திற்குமுரிய செய்தி. பவுலையே மாற்றிவிட்ட அந்த செய்தியைக் குறித்து வெட்கப்படமுடியுமா? அடிகளும், சிறைவாசமும் எருசலேமில் உண்டு என்று தெரிந்தும், அங்கே போகும்படி ஒரே மனதாயிருந்த பவுலின் 'கிறிஸ்துவுக்கான ஒரே மனம்' நம்மிடம் உண்டா?

சுவிசேஷம் சொன்னாலென்ன, தேவவார்த்தையின்படி வாழ்ந்தாலென்ன, உலகம் நம்மைச் சும்மா விடாது; மனுஷரின் திருப்தி, நமது நற்பெயர், மரியாதை யாவையும் இழந்து, உலகத்தின் முன்பாக வெட்கப்பட நேரிடும். ஏனெனில், தேவனுடைய வழிகளை இந்த உலகம் ஏற்காது. அதற்காக, தேவன் நமது வாழ்வில் கொண்டிருக்கும் நோக்கத்தைவிட்டு, கிறிஸ்துவின் வழியை உதறிவிட்டு வாழமுடியுமா? கிறிஸ்துவுக்காக வாழ நாம் வெட்கப்படுவது ஏன்? நமக்கு திடமான ஒரே மனதுவேண்டும். வெட்கப்படவேண்டியவற்றைக் குறித்து இன்று நமக்கு வெட்கம் இல்லை. வெட்கப்படக்கூடாத சுவிசேஷத்தைக்குறித்து கிறிஸ்தவ வாழ்வின் தனித்துவத்தைக்குறித்து நமக்கு எவ்வளவு வெட்கம்! நமக்குக் கிறிஸ்துதான் மூச்சு என்றால், இந்த உலகத்தின் முன் வெட்கப்பட நாம் தயாரா என்ற கேள்விக்கு உண்மையுள்ள இருதயத்தோடு பதில் சொல்லுவோமாக.

*வாசிப்பு:*
ரோமர் 1:13-16

*ஜெபம்:*
"பிதாவே. அனலுமின்றி குளிருமின்றி குந்திக் குந்தி நடக்கிற என்னை மாற்றி ஒரே மனதாய் உம்மையே சேவிக்க என்னை பெலப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
3
ஞாயிறு

# நாம் கடனாளிகள்!

கிரேக்கருக்கும். மற்ற அந்நியர்களுக்கும்... நான் கடனாளியாயிருக்கிறேன். (ரோமர் 1:14)

"ஆபத்தில் உதவி செய்த என் மேலதிகாரி தந்த பணத்தைப்பார்க்கிலும், அவருடைய தயாள மனதுக்கு நான் என் வாழ்நாள் முழுவதும் கடனாளிதான்" என்றார் ஒருவர். பெற்ற கடனிலும் மேலாக, மேலதிகாரிக்குத் தான் கடமைப்பட்டிருப்பதையே இவர் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட மனதையுடைய ஒருவன் நன்றி உடையவனாகவே செயற்படுவான். இதுவே பவுலுடைய மனதாயுமிருந்தது.

தான் ஒரு கடனாளி என்று பாரப்படுவதற்கு, பவுலுக்குக் கடன்கொடுத்தவர் யார்? அல்லது, யாருக்குத் தான் கடமைப்பட்டிருப்பதாக பவுல் குறிப்பிடுகிறார்? ஆம், தமஸ்குவுக்குப் போகும் வழியில் தனக்குத் தரிசனமான கிறிஸ்துவுக்கு, தனது வாழ்வை முற்றிலுமாக மாற்றிப்போட்ட அதே கிறிஸ்துவுக்கு தான் எதுவாவது செய்யவேண்டும் என்பதுதான் பவுல் கொண்டிருந்த பாரம். இந்த இரட்சிப்பை கிறிஸ்து கடனாகவா கொடுத்தார்? இல்லை, ஆனால், பவுலின் முழு வாழ்வுமே தன்னை மாற்றிய கிறிஸ்துவுக்கு தான் கடனாளி என்ற உணர்வை கொடுத்திருந்தது. அதுவே கிறிஸ்துவுக்கு ஏதாவது செய்யவேண்டும் என பவுலை உந்தித்தள்ளியது. மாத்திரமல்ல, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை முழு உலகுக்கும் அறிவிக்கும்வரை தான் உலகத்திற்கும் கடனாளி என்கிறார். உலகமோ அவருக்குக் கடன் கொடுத்தது? இல்லை. ஆனால், கிரேக்கர்போன்ற அறிவாளிகளானாலென்ன, கிரேக்கரல்லாத அறிவிலிகளானாலென்ன; எல்லோருக்கும் இந்த நற்செய்தி அறிவிக்கப்படும்வரைக்கும் தான் கடனாளிதான் என்ற எண்ணம் பவுலின் மனதிலே மேலோங்கியிருந்தது. பவுலுக்கு யாரும் எதையும் கடன் கொடுக்கவில்லை. தான் பெற்றுக்கொண்டதன் பெறுமதியை அவர் உணர்ந்திருந்ததால், பெற்றதை அடுத்தவருக்குக் கொடுக்கும்வரைக்கும் ஒரு கடனாளியின் மனநிலைதான் அவருக்குள் இருந்தது என்பதே உண்மை.

இன்று, கொடுத்த கடனைக் கேட்டாலே, கடன் கொடுத்தவனுக்குத்தான் பிரச்சனை. அப்படியிருக்க, ஆபத்துக்கு உதவி செய்தவனிடம் நன்றியை எதிர்பார்ப்பது எப்படி? இப்படிப்பட்ட மனநிலையில், பெற்றுக்கொண்ட விடுதலையைக் குறித்து நாம் எப்படிப் பாரப்படப்போகிறோம்? நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் பெறுமதியை உண்மையாகவே உணர்ந்திருந்தால், நம்மால் அமைதியாக இருக்கவே முடியாது. கிறிஸ்து செய்த அளப்பரிய நன்மைக்கு ஈடாக நம்மால் எதுவும் கொடுக்க முடியாது என்பது உண்மை. ஆனால், அவர் நம்மில் காட்டிய அன்பை, தந்த மன்னிப்பை, ஒப்பற்ற விடுதலையை, பிறருடன் கொண்டுள்ள உறவில் காட்டியாவது நமது நன்றியை வெளிப்படுத்தலாமே! தமது சுவிசேஷத்தை அறிவிக்கும்படிக்கு கிறிஸ்துவே கட்டளையிட்டிருக்க, ஆகக் குறைந்தது நன்றியுள்ள இருதயமாவது நமக்கு வேண்டாமா?

*வாசிப்பு:*
மத்தேயு 28:16-20

*ஜெபம்:*
"ஆண்டவரே, உம்மிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட விடுதலையின் மகிழ்ச்சியை பிறரும் அனுபவிக்கச் செய்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 4 திங்கள்

# கடனாளியா? கடன் கொடுத்தவனா?

.....மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்.
(ரோமர் 13:8)

'கடன்' என்பது ஆயுசுக்கும் மனிதனை நிம்மதியாகவே வாழவிடாது. அதைத் திருப்பிச் செலுத்தும்வரைக்கும் இருதயம் அடித்துக்கொண்டே இருக்கும். அதுதான் உண்மையான உணர்வு. ஆனால் இன்று, கடன் பெற்றுக்கொள்வதில் காட்டுகின்ற அவசரமும், பெற்றுக்கொண்டதும் வெளிவரும் நன்றிகளும், திருப்பிச் செலுத்த வேண்டுமென்பதிலும், உதவி செய்தவருக்கு நன்றியாய் இருக்க வேண்டும் என்பதிலும் வெளிப்படுகிறதா என்பது சந்தேகமே!

கடமை, வரி, தீர்வு என்பவற்றைச் சரியாகச் செலுத்துவது குறித்தும், அடுத்தவனைக் கனப்படுத்துவதைக் குறித்தும் எழுதிவிட்டு, கடனைக்குறித்து பவுல் எழுதியுள்ளார். இதிலே, எதற்குக் கடனாளியாக இருக்கவேண்டும்; எதற்கு கடன்படாதிருக்கவேண்டும் என்று இரண்டு விடயங்களை பவுல் விளக்குகிறார். "...மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" என்றால், அன்புகூருகிற கடனைத்தவிர வேறு எதற்குமே கடன்படக்கூடாது என்பதுதானே அர்த்தம்! ஆனால், இன்று எத்தனை குடும்பங்கள் பணத்தையும் காணிப் பத்திரங்களையும் கடனாகப் பெற்றுவிட்டு, செய்வதறியாமல் திகைத்து நிற்கிறார்கள்? இதிலே இரண்டு பக்கம் உண்டு. ஒன்று, கடன் கொடுக்கிறவர்கள்; அடுத்தது, கடன் பெற்றவர்கள். "கைமாறு கருதாமல் கடன்கொடுங்கள்" (லூக்.6:35) என்றார் இயேசு. நமக்கு விருப்பமானவர்களுக்கு உதவி செய்வது இலகு; ஆனால், அன்பு என்பது எவரையும் பிரித்துப் பார்க்காது. கடன் என்பது, வட்டியுடன் திருப்பி வாங்குவதைக் குறியாக வைத்துக் கொடுக்கக்கூடாது என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. எதிர்பார்ப்பு இன்றி கடன் கொடுக்கப்படும்போது, தேவனுக்கே அதைக் கொடுக்கிறோம். அதேசமயம், கடன்பட்டவர்களுக்கும் ஒரு பொறுப்பு உண்டு. ஆபத்தில் உதவியவர்களின் பொருளையோ பணத்தையோ வேறெதையோ திருப்பிக் கொடுக்கவேண்டும் என்ற பொறுப்பு அவசியம்.

தேவனுடைய வார்த்தை நமக்கு ஒரு வாக்குக் கொடுத்திருக்கிறது. "நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை." (உபா.15:6) ஆனால், கர்த்தருக்குச் செவிகொடுத்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கே இந்த வாக்குப் பொருந்தும். தேவன் நமது வாழ்வுக்கு தேவையானதை நிறைவாகவே தருகிறார். நம்மிடம் உள்ளதில் வாழவும், உள்ளதில் திருப்தியாயிருக்கவும், உழைத்து உண்ணவும் நம்மால் கூடுமானால் நாம் ஏன் கடன்படவேண்டும்? அவசிய தேவைகள் ஏற்படும்போது, தேவனை நோக்கிப் பார்ப்போமானால் நிச்சயம் நமது தேவனைகளைச் சந்திக்கும் வாய்ப்புகளை தேவனே ஏற்படுத்திக் கொடுப்பார். இன்று நாம் கடனாளிகளா? கடன் கொடுத்தவர்களா?

*வாசிப்பு:*
லூக்கா 6:30-36

*ஜெபம்:*
"பிதாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் தவறுகளைச் சரி செய்ய இன்றே என்னைத் திடப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
5
செவ்வாய்

# கடனாளி

'ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல்......'
(ரோமர் 13:8)

"விபத்தொன்றிலே அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டதால் இரத்தமேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஓ நெகடிவ் இரத்தம் மிகவும் அபூர்வமானதால் வைத்தியர்களும் என் வீட்டாரும் அதிக கஷ்டத்திற்குள்ளானார்கள். அப்பொழுது, வெகுதூரத்தில் வசிக்கின்ற ஒருவர், தற்சமயமாக அங்கே வந்திருந்தார். விஷயத்தைக் கேட்ட அவர், தன்னுடைய இரத்தமும் இதே வகையைச் சேர்ந்தது என்று சொல்லி, உடனே இரத்தங்கொடுக்க முன்வந்தார். அன்று அவர் செய்த உதவி மிகவும் பெரிது. அவருக்கு நன்றி சொன்னபோது, அவர்: 'இது நான் செலுத்த வேண்டிய கடன்' என்றார். கேள்விக்குறியோடு அவரைப் பார்த்தபோது, 'உங்கள் நிலைமை எனக்கும் வராது என்றில்லை. எனக்குக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்போது உங்களுக்கு கொடுத்துவைத்தால், பின்னர் எனக்கும் யாராவது உதவுவார்கள் அல்லவா' என்றார் புன்சிரிப்புடன்." இதை என்னோடு பகிர்ந்துகொண்டவர், 'அவர் கொடுத்த இரத்தத்திலும் அவருடைய அன்பு என்னைக் கடனாளியாக்கிவிட்டது' என்றார்.

ஒருவரிடத்திலொருவர் அன்புகூருவதை கடன் என்று சொல்லலாமா? அப்படித்தான் பவுல் அப்போஸ்தலர் எழுதியுள்ளார். அது ஏன்? ஆம், கிறிஸ்து நம்மேல் ஊற்றிய அவருடைய தாராளமான அன்புக்கு, எல்லையற்ற அன்புக்கு நாம் என்றுமே கடனாளிகள்தான். இதைத் திருப்பிச் செலுத்தமுடியுமா? அது தீர்க்கமுடியாத கடன். ஆனாலும், நமக்கு அடுத்தவரில் நாம் உண்மையாகவே அன்பு செலுத்தும்போது, அந்தக் கடனுக்காக நாம் குறைந்தபட்சம் உழைக்க ஆரம்பிக்கிறோம் எனலாம். ஆனால் அதை இந்த வாழ்நாளிலே முடிக்க முடியாது. அதேசமயம் பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன், தனது முழுக் கடனும் மன்னிக்கப்பட்ட நிலையில், தன்னிடம் ஒரு நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டவனை மன்னிக்காமற்போனான் என்று இயேசு ஒரு உவமையை சொன்னார். அவனுக்கு நடந்தது என்ன? அவன் உபாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டான். மன்னிப்பளிப்பதும் அன்புகூருவதின் ஒரு செயற்பாடுதான்.

அன்புகூருவது என்பது நம் இருதயத்திலே தோன்றி செயலிலே வெளிப்படவேண்டும். அவ்வாறு வெளிப்படும்வரைக்கும் அதற்கு உயிர் இல்லை. நாம் நிர்க்கதியாய் நின்ற நாட்களையும், கர்த்தர் கிருபையாய் நமக்கு ஜீவன் தந்ததையும் ஒரு கணமேனும் நாம் மறப்போமானால், நாம் ஆண்டவருக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் கடனாளிகள் என்பதையும் மறந்துபோவோம். ஆண்டவர் நமக்குத் தந்ததை நாம் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிறோம்; அவ்வளவும்தான். இப்படியிருக்க, நாம் எப்படி வாழுகிறோம்?

*வாசிப்பு:*
மத்தேயு 18:21-35

*ஜெபம்:*
"என் நேச இயேசுவே,
நீர் அடியேனில்
காட்டிய ஒப்பற்ற
அன்பை, பிறரில்
நானும் எப்போதும்
செலுத்த என்னைத்
தாழ்த்துகிறேன். நீரே
நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
**6**
புதன்

# பெற்றதைக் கொடு!

'நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ....'
(மத்தேயு 18:33)

ஒரு பொருள் வாங்கினால், இலவசமாக வேறொன்று கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டல்லவா! அப்படியே எனக்கு ஒரு நவீன கையடக்கத் தொலைபேசி இலவசமாகவே கிடைத்தது. மிகவும் சந்தோஷம். ஆனால், 20 ஆண்டுகள் பழமை வாய்ந்த என்னுடைய ஒரு பொருளை உடைத்துவிட்டதால் நான் ஒருவருடன் சண்டையிட்டது அப்போது ஞாபகம் வந்தது. உடைந்தது ஒரு சாதாரண பொருள். கிடைத்ததோ சிறப்பு வாய்ந்த ஒரு பொருள். அந்த நிமிடமே சம்பந்தப்பட்டவரை அதே தொலைபேசி மூலமே அழைத்து, மன்னிப்புக் கேட்டு விட்டேன். இது சிறிய விடயம்தான்; ஆனால், சிந்திக்கவேண்டிய விடயம்.

பாவிகளாக, சத்துருக்களாக இருந்தபோதே நாம் மன்னிப்புப் பெற்றோம். இந்த மன்னிப்பு இலவசம்தான்; நாம் இதற்காக எதுவுமே செய்யவேயில்லை. அதற்கான கிரயத்தை நம்மால் செலுத்தவும் முடியாது. அதற்காக, அதன் பெறுமதி என்னவென்பதை நாம் நினையாமற்போகலாமா? அது இலவசமே தவிர மலிவானதல்ல. ராஜாவிடம் பதினாயிரம் தாலந்து கடன்பட்டவனும் தான் பெற்ற மன்னிப்பின் பெறுமதியை நினைத்துப் பார்க்க மறந்துவிட்டான். வாழ்நாள் முழுவதும் வேலை செய்தாலும், மனைவி பிள்ளைகளை விற்றாலும்கூட அந்தக் கடனை அவனால் கொடுத்துத் தீர்க்கவே முடியாது. தான் பெற்ற இந்த விடுதலையின் பெறுமதியை அவன் எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டான். இல்லையானால் தன்னிடம் வெறும் நூறு வெள்ளிக்காசு கடன்பட்ட, அதிலும் உடன் ஊழியனின் தொண்டையை நெரித்திருப்பானா?

ஆக்கினைத்தீர்ப்புக்கும், நித்திய நரக வேதனைக்கும் நம்மை தப்புவித்த தேவ அன்பும், தேவன் நமக்களித்த மன்னிப்பும் நமக்குக் கிருபையாகவும் இலவசமுமாகவேதான் கிடைத்தது. அதற்காக, அதை நாம் துச்சமாக எண்ணலாமா? அதன் பெறுமதியை மறக்கலாமா? நாம் அந்த மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது. அந்தப் பெறுமதியை உணர்ந்தால், நம்மைச் சாதாரணமாகத் துக்கப்படுத்துகிறவர்களை நாமும் பதிலுக்குத் துக்கப்படுத்தவேமாட்டோம். இன்னுமொரு விடயமும் உண்டு. மன்னிப்பைப் பெற்றுவிட்டதினால் நமக்கு எல்லாமே நிறைவாகவில்லை. அடுத்து நாம் என்ன செய்கிறோம் என்பதையும் ஆண்டவர் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார். ஆகவே, செய்வதை மனப்பூர்வமாய் செய்யக்கடவோம். நாம் பெற்ற இலவச இரட்சிப்பை, அதனாலுண்டாகும் விடுதலைகளை, மகிழ்ச்சியை நமக்குள் அடக்கிக்கொள்ளாமல் பிறருக்கும் பகிர்ந்தளிப்போமாக. இலவசமானதெல்லாம் மலிவானதல்ல. அதை அடுத்தவருக்கு கொடுக்கும்போது அதன் பெறுமதி இன்னும் அதிகரிக்கிறது.

*வாசிப்பு:*
மத்தேயு 18:21-35

*ஜெபம்:*
"பிதாவே, கிருபையாக நீர் அருளிய மன்னிப்பை துச்சமாக நினையாமல், என் சகோதரனையும் முழு மனதுடன் நேசிக்க என்னை ஒப்புவிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
7
வியாழன்

# மரணம்தான் நேர்ந்தாலும்...

"...நான் வெட்கப்படுகிறதில்லை. ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்..."
(2தீமோத்தேயு 1:12)

"அவருக்குச் சாப்பாடு கொடுத்தாயா?" இதுதான் எங்கள் அம்மா பேசிய இறுதி வார்த்தை. அப்போது, தகப்பனாரை பதினைந்து ஆண்டுகளாக பராமரிக்க வேண்டிவரும் என்று நான் அறிந்திருக்கவில்லை. ஆனால், என் தகப்பனாருக்குரிய பணியை அம்மா என் கைகளில் ஒப்புவித்திருந்தார் என்பதை நான் உணர்ந்தபோது, அவரது கடைசி வார்த்தை என்னை மிகவும் பெலப்படுத்தியது.

தீமோத்தேயுவுக்கு நிருபங்களை எழுதியபோது, பவுல் ரோம சிறையில் இருந்தார். இந்த இரண்டாம் நிருபத்தை எழுதிமுடிக்கும்போது, தனது ஓட்டம் முடிவடையப்போகிறது (4:6) என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இந்த நிருபத்தை எழுதி, ஓரிரு வருடங்கள் வெளியே நடமாடிய பவுல், திரும்பவும் சிறைப்பட்டு, நீரோ மன்னனால் சிரைச்சேதம் செய்யப்பட்டார். "நான் விசுவாசித்திருப்பவர் இன்னார் என்று அறிவேன்" என்று தன் கடைசி வார்த்தைகளை பவுல் எழுதியபோது, மாளிகையில் வாழவில்லை. உலகின் தலைசிறந்த தலைவனாக வலம்வரவுமில்லை. அல்லது, வியாதிப்பட்டு அதிதீவிர சிகிச்சைக்குட்பட்டிருக்கவுமில்லை; உற்றார் உறவினர் நண்பர்கள் அவரைச் சூழந்து நிற்கவுமில்லை. வாழ்வின் முடிவுக்கு வந்த அவர் சுகதேகியாகவே இருந்தார். கிறிஸ்துவை அறிவித்ததற்காக ரோம சிறையில் இருந்தார் பவுல். அனுமதிக்கப்பட்ட ஓரிரு நண்பர்களைத்தவிர, அவருடைய எழுத்துத்தான் அவருக்குத் துணையாக இருந்தது. இந்தப் பாடுகளின் மத்தியிலும், தன்னுடைய தலைவெட்டப்படும் என்பதைத் தெரிந்துகொண்ட நிலையிலும்தான், "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" என்று எழுதினார் பவுல். நம்மால் கூடுமா? இது பவுலின் கடைசி வார்த்தைகளில் ஒன்று. எல்லாவற்றையும் இழந்தபோதும், பவுல் நம் ஆண்டவர்மீது கொண்டிருந்த விசுவாசத்தை இழக்கவில்லை. சூழ்நிலைகளுக்கும் அப்பால் நின்று தேவன் தன்னை உபயோகிப்பார் என்று நம்பினார். அதை விட்டு, தான் விடுதலையாகவேண்டும் என்றோ, சிரைச்சேதத்திலிருந்து தப்ப வேண்டுமென்றோ பவுல் முறுமுறுக்கவில்லை. அவருடைய கடைசி வார்த்தை யாவும் தீமோத்தேயுவைப் பெலப்படுத்தின.

இயற்கை மரணத்தை எதிர்நோக்கும்போது கூட நம்மால் இப்படியான வார்த்தைகளைச் சொல்லக்கூடுமா என்பது சந்தேகம்தான். எந்த நிலையிலும், மரணநேரத்திலும் ஆண்டவருடைய பாதுகாப்பு நமக்குண்டு. ஒரு சிறு மனநோவையும் தாங்கமுடியாமல் கோபத்தில் குமுறும் நாம், எப்படி சாட்சியான வார்த்தைகளைப் பேசமுடியும்? எந்த சூழலிலும் நாம் விசுவாசித்திருக்கிறவரை முற்றிலும் நம்புவோமாக. அவர் நம்மையும், நமது விசுவாசத்தையும் முடிவுவரைக்கும் காத்துக்கொள்வார்.

*வாசிப்பு:*
2தீமோத்தேயு 1:7-12

*ஜெபம்:*
"என் நேச பிதாவே, எந்தப் பாடுகளிலும், மரணம்தான் நேர்ந்தாலும், உம்மீது கொண்டுள்ள விசுவாசத்தில் நான் பின்வாங்கிப் போகாதபடி காத்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
8
வெள்ளி

# வாய்க்காலா? நீர்த்தேக்கமா?

"பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் ....உங்களை நிரப்புவாராக." (ரோமர் 15:13)

"ஞானமுள்ள மனுஷன், தன் வாழ்வு ஒரு வாய்க்காலாக இல்லாமல், ஒரு நீர்த்தேக்கமாக இருக்கும்படி பார்த்துக்கொள்வான். வாய்க்காலுக்குள் வருகின்ற நீர், வெளியேறிக்கொண்டேத்தான் இருக்கும். ஆனால், நீர்த்தேக்கமோ முதலில் தண்ணீரைச் சேகரித்து, தான் நிரம்பிய பின்னர், நிரம்பிவழியும் நிலையில்தான் தண்ணீரை வெளிவிடும்". இது ஒரு அறிஞரின் கூற்று. தேவனுடைய பணியை பிறருக்கு வழங்கும்போது, பெற்றுக்கொள்வதை அப்படியே கடத்திவிடுகின்ற வெறும் வாய்க்கால்களாக செயற்படுகிறோமா? அல்லது, முதலில் நாம் நிரம்பி, பின்னர் நிரம்பிவழியும் அனுபவத்துடன் பிறரை அணுகுகிறோமா?

இந்த நிரம்பிவழியும் கிருபை பெருகவேண்டுமென்றே ரோம விசுவாசிகளுக்காகப் பவுல் ஜெபித்தார். முதலில் அவர்கள் நம்பிக்கையில் பெருகவேண்டுமென்று பவுல் ஆலோசனை கூறுகிறார். "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்..." (எபே.3:19) என்று பவுல் எபேசு சபைக்காக ஜெபித்ததும் இந்த நிரம்பிவழியும் அனுபவத்திற்காகத்தான். சாதாரண வாய்க்கால்களில் ஓடுகின்ற தண்ணீரையும், நிரம்பிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்படும்போது சீறிக்கொண்டு பாயும் தண்ணீரையும் கண்டிருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்காய் வல்லமையுள்ள, அதிர்வுநிறைந்த ஒரு வாழ்வு வாழவேண்டுமென்றால், கிறிஸ்து நமது வாழ்வில் வெளிப்படவேண்டுமென்றால், தேவஅன்பினால், எல்லாவித சந்தோஷ சமாதானத்தினால், பரிசுத்தாவியால் உண்டான நம்பிக்கையின் நிறைவினால் அப்பப்போ அல்ல; எப்போதும் நாம் நிரப்பப்பட்டிருக்கவேண்டும் என்றே பவுல் வலியுறுத்தியுள்ளார். இந்த இடத்திலே, "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத்.12:34) என்ற ஆண்டவரின் கூற்றையும் சிந்திக்கவேண்டும்.

இந்நாட்களில் ஏதோ சிலவற்றை அறிந்துகொண்டதுமே அதைக்குறித்து சிந்திக்காமல், வாழ்வில் அனுபவிக்காமல், உடனேயே பிறருக்குப் போதிக்கிறவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். பின்னர், சாட்சி கெட்டுப்போக அது காரணமாகிவிடும். தேவபிள்ளையே! நமது வாழ்வில் ஏன் சோர்வு? ஏன் நம்மால் தைரியமாக தேவனுக்காக நிற்க முடிகிறதில்லை? முதலில் நமது இருதயம் எதனால் நிரம்பியிருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம். தேவனுடைய அன்பு முதலில் நம்மை நிரப்பட்டும். ஆண்டவருடைய வார்த்தைகள் முதலில் நமது இருதயத்தை நிரப்பி, நமது சொந்த அனுபவமாகட்டும். பின்னர் அவை வழிந்து பிறரின் வாழ்வுகளை அணுகும்போது, நிச்சயம் பிறருக்கும் அது ஒரு ஆசீர்வாதமாகவே இருக்கும். ஏனெனில், அங்கே நாம் அல்ல, ஆண்டவரே காணப்படுவார். நாம் நீர்த்தேக்கங்களா? வாய்க்கால்களா? நம்மை நாமே சற்று நிதானித்து அறிந்துகொள்வோமாக.

*வாசிப்பு:*
எபேசியர் 3:14-21

*ஜெபம்:*
"பிதாவே, குறைவுள்ள பாத்திரமான என்னை உமதாவியின் அருளால் நிரம்பி, பிறருக்கு ஆசீர்வாதமாய் வழிந்தோட நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 9 சனி

# இவர் யார்?

...இதோ. உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. (யோவான் 1:29)

"ஒரு அவிசுவாசிக்கு நீங்கள் எப்படி இயேசுவை அறிவிப்பீர்கள்? அவரது தேவைகளைச் சந்திக்கும் ஒருவராகவா? அல்லது, சுகமான சந்தோஷமான வாழ்வு தந்து, பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்ற ஒருவராகவா?" சுவிசேஷப் பணி ஆசிரியர் மாணவர்களிடம் கேட்ட இக்கேள்விக்கு, "நீங்கள் கூறியபடி அறிவித்தால்தான் மக்கள் வருவார்கள்" என்று பதிலளித்தான் ஒரு மாணவன். இந்நாட்களில் நடப்பதையே அந்த மாணவன் பதிலாகக் கூறினான் போலும்.

யோவான் ஸ்நானகனிடம் வந்த பரிசேயர், நீர் யார் என்று கேட்டதற்கு, தான் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல; வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய வெறும் சத்தம் என்றே பதிலளித்தான் யோவான். இயேசுவை உலகுக்கு அறிவிக்கிறவனுடைய முதலாவது பண்பு இதுதான். உலகம் அவனை உயர்த்தினாலும், அவன் தன்னை உயர்த்தமாட்டான். அடுத்த தாக, இயேசு தன்னிடம் வருகிறதைக் கண்ட யோவான் ஸ்நானன், "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றே அறிமுகம் செய்தான். மனுக்குலத்தின் அவசரமான கட்டாயமான தேவை இன்னது என்றும், அதைத் தீர்க்கிறவரே இவர் என்றும் யோவான் சாட்சி சொன்னான். ஆம், மனிதனுடைய எல்லாப் பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் பாவம்; அவனது உடனடித் தேவை மீட்பு. இதையே யோவான் தயங்காமல் அறிவித்தான். இறுதியாக, "இவரே, தேவனுடைய குமாரன்" என்று சாட்சி பகர்ந்தான் இந்த யோவான். பரிசுத்தாவியானவர் வெளிப்படுத்திய அடையாளங்களின்படி யோவான் கண்டு சாட்சி பகர்ந்தான். இன்று நாமே அடையாளங்களும் சாட்சிகளாகவும் இருக்கிறோமே! பாவத்திலிருந்து மீட்புப் பெற்ற ஒவ்வொருவருமே அற்புத சாட்சிகள்தான். நமக்கு இன்னொரு சாட்சி எதற்கு? இயேசுவை அறிந்து கொண்ட யோவான், தனக்கு என்ன நேரிடும் என்றோ, தன்னைவிட்டு தன் சீஷரும் ஜனக்கூட்டமும் இயேசுவுக்குப் பின்சென்றுவிடும் என்றோ நினைக்கவில்லை. யோவான் தனது தாழ்மையான ஊழியத்தால், பயமின்றி, இயேசுவை இயேசுவாக உலகுக்குக் காட்டினான்.

இன்று, நாம் இயேசுவை உலகுக்கு எப்படிக் காட்டுகிறோம்? நமது வாழ்வில் இயேசு வெளிப்படுகிறாரா? மக்களின் உண்மையான தேவை சந்திக்கப் படுகிறதா? பாவத்தைப்பற்றிப் பேசினாலே கூட்டம் கூடாது, காணிக்கை சேராது, பகையைச் சம்பாதிக்க நேரிடும் என்று எண்ணி, இயேசுவை கேட்பதைச் செய்யும் வேலையாள் போல உலகுக்குக் காட்டுவதை இன்றே நிறுத்திவிடுவோமாக. இயேசு நம்மைப் பாவத்திலிருந்து மீட்டது மெய்யென்றால், இயேசுவை இயேசுவாகவே காட்டுவோமாக. செழிப்பு அல்ல, மீட்பு ஒன்றே நம்மை உயிர்ப்பிக்கும்.

*வாசிப்பு:*
யோவான் 1:19-34

*ஜெபம்:*
"என் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியானவரே, மக்கள் முன்பாக உமது இரட்சிப்பை அறிவிக்க என்னை உமதாவியால் நிரப்பும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 10 ஞாயிறு

# உடனடித் தேவை பூர்த்தி!

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. (1பேதுரு 1:19)

வீட்டிலே உப்பு முடிந்துபோயிருக்க, யாராவது தேன் கொண்டுவந்து தந்தால், தெவிட்டாத தேன் கிடைத்தது என்று சந்தோஷப்படுவீர்களா! அல்லது, தேவையான உப்பு இல்லையாம், இதை யார் கேட்டார்கள் என்று முறுமுறுப்பீர்களா? அந்நேரமே உங்கள் கணவர் வந்து, 'தேவையான உப்பை நேற்றே வாங்கி வைத்துவிட்டேனே' என்று சொன்னால் எப்படியிருக்கும்? இதுதான் நமது வாழ்வும். உடனடித்தேவையை உணராதவர்கள் பலர் என்றால், தேவைகள் சந்திக்கப்பட்டாயிற்று என்தை உணராதிருக்கிறவர்கள் ஏராளம்.

வரப்போகும் மேசியாவுக்காக அன்று மக்கள் காத்திருந்தனர். தங்கள் பாவங்களுக்காக மக்கள், காலையும் மாலையும் ஆட்டுக்குட்டிகளைப் பலி செலுத்திக்கொண்டு இருந்தனர். வரப்போகும் மேசியா, தேவனுடைய தாசன், இந்தப் பலியைத் தாமே நிறைவேற்றுவார் என்று ஏசாயா உரைத்திருந்தார் (ஏசா.53:7) பாவத்திலிருந்து மீட்பு ஒன்றே மக்களின் உடனடித் தேவை என்பதையே அன்று யோவான் ஸ்நானனும் உணர்த்தினார். பாவத்திற்குப் பரிகாரமாக தூய இரத்தம் சிந்தப்படவேண்டியிருக்க, தேவன் தாமே மனிதனாகி அந்தத் தண்டத்தைச் செலுத்தச் சித்தம்கொண்டார். இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தபோது, உலகத்தின் பாவத்திற்கான விலை இந்தப் பலியினால் நிறைவேற்றப்பட்டு முடிந்தது(1கொரி.5:7). "பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று..."(1யோவா.4:14) என்று வாசிக்கிறோம். எவன் தன் பாவத்தை உண்மையாய் அறிக்கையிட்டு மனந்திரும்புகிறானோ அவனுக்கு இந்த மீட்பு இன்றும் உண்டு. இதுதான் மனிதனுடைய உடனடித் தேவை. யோவான் பிரசங்கிக்கும்போது அந்தத் தேவை சந்திக்கப்படவில்லை. இன்று அது சந்திக்கப் பட்டாயிற்று. அதன்பின்னரும் நாம் மீட்பைத் தேடுகிறவர்கள்போல வாழுவது ஏன்? பாவத்தோடு இன்னமும் கைகோர்ப்பது ஏன்?

தேவபிள்ளையே, குற்றமற்ற, மாசற்ற தேவாட்டுக்குட்டி அடிக்கப்பட்டதும், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதும் யாருக்காக? நமக்காகத்தானே! இதை நாம் விசுவாசிப்பது மெய்யானால் நம்மில் பல மாற்றங்கள் தானாகவே நிகழும். எந்தவொரு சூழ்நிலையிலும், பாவ சோதனையிலும், எனக்காகவும் ஒருவர் இரத்தம் சிந்தினாரே என்பதை நினைவுகூருவோமானால், எல்லாமே பஞ்சாய் பறந்துவிடும். இன்று நமது மனதை அழுத்தும் காரியம் எதுவானாலும் மனம்திறந்து ஆண்டவரிடம் கூறிவிடுவோம். அவர் நமக்களித்த மீட்புக்காக, அதனை விசுவாசிக்கத் தந்த இருதயத்திற்காக எப்போதும் அவரை ஸ்தோத்தரித்துக்கொண்டே இருப்போம். எந்த நிலைமையிலும் நாம் வெற்றிபெற அது போதும்.

*வாசிப்பு:*
1பேதுரு 1:17-22

*ஜெபம்:*
"பிதாவே, என் தேவையை நீர் நிறைவேற்றினீர். நன்றி. நீர் தந்த மீட்பிற்குச் சாட்சியாக உண்மைத்துவத்துடன் வாழ வழிநடத்துவீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
**11**
திங்கள்

# தங்கியிரு!

அவர்: வந்து பாருங்கள் என்றார். ....அன்றையத்தினம் அவரிடம் தங்கினார்கள்... (யோவான் 1:39)

2010ம் ஆண்டின் முற்பகுதியில் யுத்தம் நடந்த பகுதிக்குள் செல்லும் வாய்ப்பு கிட்டியது. நமக்கு வழி திறந்து தந்த நண்பர் நமக்காக காத்து நின்றார். உடைவுகள் அழிவுகள் மத்தியில் நின்ற அவரிடம், "நீங்கள் எங்கே தங்கி இருக்கிறீர்கள்" என்று கேட்டோம். அவர், "வந்து பாருங்கள்" என்றார். அங்கே போன போது, இரண்டு கொட்டில்கள்தான் இருந்தன. அவருடைய குடும்பத்தோடு மூன்று நாய்க்குட்டிகளும் நின்றன. இந்தக் குட்டிகளும் நம்மைப்போலவேதான் என்றார் சிரித்துக்கொண்டு. அவர்கூடவே இராத்தங்கினோம். அங்கே எந்தவித வசதியும் இருக்கவில்லை. ஆனால், வாழ்வின் அர்த்தத்தை இன்னும் ஆழமாகப் புரிந்துகொண்டு மனரம்மியத்துடன் திரும்பினோம்.

யோவான் ஸ்நானன் சொன்னதைக் கேட்டு இயேசுவுக்குப் பின்னே சென்றனர் இரண்டு சீஷர்கள். தம்மையே பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த இவர்களை இயேசு கண்டு, "என்ன தேடுகிறீர்கள்" அதாவது என்ன வேண்டும் என்று கேட்டார். இப்படியொரு கேள்வியை இயேசுவானவர் நம்மிடம் கேட்டால் என்ன சொல்லுவோம்? நல்ல சுகம், ஒரு வேலை, ஊழியத்தின் பிரச்சனை நீங்க, அல்லது சந்தோஷமான திருமண வாழ்வு, இன்னும் அதிக பணம் என்று நமது தேவைகளை அடுக்கிக்கொண்டே போகமாட்டோமா? அப்படியல்ல என்று நாம் இன்று மறுத்தாலும், நமது ஜெபங்கள் அந்தவிதமாகத்தான் இருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. ஆனால், இந்த இரண்டு சீஷர்களும் விநோதமான காரியத்தை கேட்டார்கள். "நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" இயேசு இருக்கிற இடம் எப்படிப் பட்டது என்பதைப் பார்ப்பதற்காக அவர்கள் இக் கேள்வியைக் கேட்கவில்லை. அல்லது, தமக்காகவும் எதையும் கேட்கவில்லை. மாறாக, அவரோடு தங்கியிருப்பதையே அவர்கள் விரும்பினர்; அப்படியே அவரோடு தங்கினர். ஆண்டவருடன் தரித்திருப்பதையே நாடவேண்டும் என்பதற்கு இந்த இரண்டு சீஷர்களும் நமக்கு ஒரு முன்மாதிரி என்று சொல்லலாம்.

நாம் பல காரியங்களை இன்று தேடுகிறோம்; பல கடின ஊழியங்களில் கூட ஈடுபட்டிருக்கிறோம். நல்லது. ஆனால், இதன் நிமித்தம் தேவனோடு தங்கியிருக்கவேண்டிய முக்கிய தேவையை நாம் விட்டுவிடுகிறோம். "இயேசுவே! உம்மைத் தெளிவாக அறியவும், உம்மிடம் உண்மையாய் அன்புகூரவும், உம்மை நெருங்கிப் பின்பற்றவும் தினமும் என்னை நடத்தும்" என்று நம்மால் ஜெபிக்க முடியுமா? இவை யாவும் நடந்தேறவேண்டுமானால் நாம் அவரோடு தங்கியிருக்கவேண்டும். உலகத்து தேவைகளைக் கேட்பது தவறல்ல; ஆனால், நமது தேவைகளா? தேவைகளைச் சந்திப்பவரா? எது முக்கியம்? ஆசீர்வாதமா? ஆசீர்வதிக்கிறவரா? எது முக்கியம்? தேவபாதம் இப்போதே அமருவோமா!

*வாசிப்பு:*
யோவான் 1:35-40

*ஜெபம்:*
"ஆண்டவரே, என் வாழ்நாட்கள் முழுவதும் உமது பிரசன்னத்தில் தங்கியிருக்கின்ற மேன்மையான கிருபையை அடியேனுக்கு ஈந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
12
செவ்வாய்

# அந்திரேயாக்கள் எழும்பட்டும்!

'அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்.' (யோவான் 1:41)

முதன்முதலாக ஆண்டவரை நாம் ஏற்றுக்கொண்டபோது, அவரை எப்படிப்பட்டவராகக் கண்டோம்? கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்திருந்தாலும்கூட, மறுபிறப்பின் அனுபவம் நமக்குக் கிட்டும்போது நாம் இயேசுவை எப்படிப்பட்டவராக ஏற்றுக்கொண்டோம்? சுகமளிக்கும் வைத்தியனாகவா? கேட்டதைக் கொடுக்கும் வள்ளலாகவா? அல்லது, பாவநிலைமையிலிருந்து தூக்கியெடுத்த இரட்சகராகவா? நாம் என்ன பதில் சொன்னாலும், நமது வாழ்விலேற்படும் மாற்றங்கள் தான் இதற்கு மெய்யான பதில் சொல்லும். உலக வாழ்வில் எந்தவொரு காரியமும் திரும்பவும் நமக்கு ஏற்படாது என்பதற்கு நிச்சயமில்லை. ஆனால், பாவத்திலிருந்து மீட்பு என்பது நமது வாழ்வைத் தலைகீழாக மாற்றிப்போடுகிறது. அதை மறைக்கமுடியாது. அது உண்மையானால், கிறிஸ்துவை அடுத்தவருக்கு அறிவிக்காமல் நம்மால் இருக்கவே முடியாது. ஆக, இயேசுவைக்குறித்து யாருக்கு நாம் முதலில் அறிவித்தோம் என்பது ஞாபகம் இருக்கிறதா? இவை வாழ்வின் உண்மையான அனுபவங்கள். ஆண்டவரைக் கிட்டிச்சேருவது ஒரு ஆரம்பம் என்றால், அவரை நெருங்கி ஜீவிக்கும்போது, அவரை அதிகமதிகமாக அறிந்துகொள்கிறோம். அவரை அறிய அறிய பரிசுத்தாவியானவரின் கிருபையினால் அது நமது அனுபவமாகிறது. அனுபவத்தை மறைத்துவைக்க முடியுமா?

இதுதான் அன்று அந்திரேயா வாழ்விலும் நடந்தது. 'உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி' என்று யோவான் ஸ்நானன் இயேசுவை அறிமுகப்படுத்த, அவன் இயேசுவை 'ரபீ' என்று அழைக்க, அவரோடு அன்று தங்கியிருந்தபின் தன் சகோதரனிடம் வந்து, 'நான் மேசியாவைக் (கிறிஸ்துவை) கண்டேன்' என்று சொல்ல, பின்னும் இயேசுவை 'தேவனுடைய குமாரன்' என்றும், 'இஸ்ரவேலின் ராஜா' என்றும் படிப்படியாக இந்த சீஷர்கள் இயேசுவை ருசிக்க ஆரம்பித்தார்கள். அவரைக் கண்ட அந்திரேயாவுக்கும் பிலிப்புவுக்கும் தம்மை அடக்கிவைக்க முடியவில்லை. ஆனால், மூன்று ஆண்டுகளாக இயேசுவோடு நெருங்கி வாழ்ந்த இவர்களுக்கு அவரை உண்மையாகவே அனுபவிக்க முடியவில்லை. பின், தூயாவியானவர் துணையுடன் விசுவாசத்தை அனுபவமாக்கிக்கொண்டபோது, அவர்களால் அமைதியாக இருக்கவும் முடியவில்லை.

வெறும் சத்தங்களும் ஆரவாரங்களுமல்ல, இயேசுவோடு விசுவாசத்தில் வாழுகின்ற அனுபவம் நமக்கு வேண்டும். அப்போதுதான் இயேசுவே நமது ஆண்டவர் என்பதை நம்மால் உறுதியோடு அனுபவிக்கமுடியும். அதன்பின்னர் நம்மால் அமைதியாக இருக்கமுடியாது. நாம் அந்திரேயாக்களா? அல்லது, வெறும் கிறிஸ்தவர்கள் என்ற பெயருடன் வாழும் உலகத்தவர்களா? சிந்திப்போம்!

*வாசிப்பு:*
யோவான் 1:40-46

*ஜெபம்:*
"நேச இயேசுவே,
உம்மோடு
தங்கியிருக்கவும்,
உம்மோடு வாழ்ந்து
உம்மையே
அறிவிக்கவும்
பெலன் தாரும்.
ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
13
புதன்

# நாம் யார்?

...இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.
(யோவான் 1:47)

மறுபடியும் ஒரு லெந்து காலத்துக்குள் பிரவேசிக்கிறோம். வெளியான கிரியைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதிலும் அதிகமாக நமது உள்ளான மனுஷன் புதுப்பிக்கப்படவும் தேவ வார்த்தையில் வேரூன்றவும் நம்மைத் தேவகரத்தில் ஒப்புவிப்போமாக.

நம்மை ஒருவர் நல்லவர் என்று சொன்னால் சந்தோஷம்தான். ஆனால், அவர் நமது வெளிவாழ்வைத்தானே காண்கிறார். கர்த்தரோ நம்மை உள்ளும் புறமும் காண்கிறார். அவர் நம்மில் மகிழ்ச்சியாய் இருக்கிறாரா என்பது முக்கியம். நாத்தான்வேலை நினைக்கும்போது, 'இயேசுவிடமிருந்து எனக்கு வாழ்த்துரை கிடைக்குமா' என்றதொரு ஏக்கம் வருகிறது. நாசரேத்தூரானாகிய இயேசுவே தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டவர் என்று பிலிப்பு சொன்னபோது, நாசரேத்தைக்குறித்து அறிந்திருந்த நாத்தான்வேலுக்கு இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பிலிப்புவோ, "வந்து பார்" என்றார். இந்த இரண்டு சொல்லுக்கு மதிப்பளித்துச் சென்ற நாத்தான்வேலின் வாழ்வில் பெரியதொரு மாற்றம் உண்டானது. அவன் மாத்திரம் பெருமையுடன் மறுத்திருந்தால் பெரிய பாக்கியத்தை இழந்திருப்பான். நாத்தான்வேலுக்கு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே.... உன்னைக் கண்டேன்" என்றார் இயேசு. யூதரைப் பொறுத்தளவில் அத்திமரம் சமாதானத்திற்கான அடையாளம். அத்திமரத்தின் கீழ் ஒருவன் உட்கார்ந்திருந்தால், அவன் எதனாலும் குழப்பமடையாமல் சமாதானமாய் இருக்கிறான் என்று கருதுவார்கள். (மீகா 4:4) அடுத்தது, நிழல் கொடுக்கும் இம்மரத்தின் கீழ் இருந்து தியானம் செய்வதும் அவர்களது வழக்கம் என்று சொல்லப்படுகிறது. இங்கே, இயேசு தன்னை அத்திமரத்தின் கீழ் கண்டார் என்பதைப் பார்க்கிலும், தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலுள்ள சிந்தனைகளை ஒருவர் கண்டார் என்ற எண்ணமே நாத்தான்வேலை அதிகமதிகமாக ஆச்சரியப்பட வைத்தது.

இன்று ஆண்டவர் நம்மைக் குறித்து என்ன சொல்லுவார்? அல்லது, இப்படி ஒரு சம்பவம் நமக்கு நடக்கவே கூடாது என்று நினைப்போமா? உண்மையுள்ள மனுஷன் தன்னை அறிந்த இயேசுவைச் சந்திக்கப் பயப்பட மாட்டான். உண்மையற்றவனோ அந்த சந்திப்பை விரும்பவே மாட்டான். இதில் நாம் யார்? இயேசுவிடம் வருவதற்கு முன்னரே அவர் நம்மை அறிந்திருக்கிறார் என்ற சிந்தனை நமது இருதயத்திற்கு ஆறுதல் தருகிறதா? குழப்பத்தைத் தருகிறதா? "எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறானோ அவன் பாக்கியவான்." (சங்.32:2) நமது உள்வாழ்விலும் நற்சாட்சி பெற இந் நாட்களில் விசேஷமாக நம்மைத் தேவகரத்தில் இன்றே ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 1:44-50

*ஜெபம்:*
"என் இயேசுவே, இன்று என்னைக் குறித்து நீர் சொல்லப்போவது என்ன? என் இருதயத்தைக் காண்கிறவரே உமக்கேற்ற பிள்ளையாய் என்னை வனையும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
14
வியாழன்

# ஒளியில் நடப்போம்!

...நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான். (யோவான் 8:12)

இருட்டாகியும் சிறுவர்களைக் காணாத தாயார் பரபரப்படைந்தார். சகல மின்சார பல்புகளையும் எரியவிட்டு வீடு முழுவதும் தேடினார். அவர்களோ வீட்டின் பின்புறத்திலே இருட்டிலே இருந்து அம்மாவுக்குத் தெரியாமல் ஐஸ்கிறீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பின்னர் கேட்கவேண்டுமா! தவறு செய்கிறவன் வெளிச்சத்திலே செய்யமாட்டான். அவன் வெளிச்சத்தை விரும்புவதுமில்லை. நேர்மையுள்ள ஒருவன் வெளிச்சத்திற்குப் பயப்படுவதுமில்லை.

கிறிஸ்துவே நமது வாழ்வின் படைப்பாளி. அவருக்குள் இருந்த ஒளியே மனுஷருக்குள் பிரகாசித்தது (யோவான் 1:4,5). வெளிச்சம் பிரகாசிக்கும்போது, இருள் விலகிச்செல்லும். தீமையின் இருள் எவ்விதத்திலும் ஒளியை மேற்கொள்ள முடியாது. வெளிச்சத்திலே எந்தவொரு தீமையும் மறைவாயிருக்கவும் முடியாது. கிறிஸ்துவின் ஒளியானது நாம் இருக்கிறபடியே நம்மைத் தெளிவாகக் காட்டும். நமது பாவநிலையானது அந்த ஒளிக்கு மறைக்கப்படமுடியாது. அந்த ஒளியில் நாம் நடப்போமானால், நமது குருட்டாட்டங்கள் ஒழிந்துபோம். அவர் நமக்கு முன்னேயுள்ள பாதையை வெளிச்சமாக்குவார். நாம் பயமின்றி நடக்கலாம். நம்மிலுள்ள பாவ இருளை கிறிஸ்துவின் ஒளியானது அகற்றிப்போடுகிறது.

அப்படியிருக்க, இவ்வுலக வாழ்வில் உண்மைத்துவத்துடன் வாழுவது கடினமா இலகுவா என்ற கேள்வி எழும்பியபோது, 'கடினம்' என்ற பதில் உடனே வந்தது. இதுதான் இன்று நமது நிலைமை. நமக்குக் கடினமானதொன்றை தேவன் நம்மிடம் திணிப்பாரா, எதிர்பார்ப்பாரா? உண்மைத்துவத்துடன் வாழும் போது இருளின் ஆதிக்கத்தில் இருக்கின்ற இந்த உலகம் ஏற்றுக்கொள்ளாது என்பது உண்மைதான். அதற்காக நாம் ஆண்டவரின் பிள்ளை என்று சொல்லிக் கொண்டு, ஒளிக்கு ஒளிக்கலாமா? நம்மிடத்தில் கறை இல்லையானால் நாம் யாருக்கு ஏன் பயப்படவேண்டும்? உண்மையாய் இருக்கும்போது இன்று அது கடினமாகத்தான் தெரியும். ஆனால், முடிவு தேவனுடைய கரங்களில்தான் இருக் கிறது. "உத்தமனுக்குக் கர்த்தர் துணை" (2நாளா.19:11) நாம் தேவனுடைய பிள்ளைகளானால் நாம் அவருடைய ஒளியிலேதான் நடக்கவேண்டும். அப்போது, எப்படி நமது சகோதர ருக்கு எதிராகச் செயற்படமுடியும்? பிரிவினை கோபம், தர்க்கம், வெறுப்பு, புறங்கூறுதல் போன்ற காரியங்கள் நம்மிலிருந்து புறப்படுவது எப்படி? நமது நிலையை நிதானித்துப் பார்ப்போம். நாம் இன்னமும் இருளின் கிரியைகளுடன் போராடவேண்டிய அவசியமில்லை. இப்போதே தேவனிடம் திரும்புவோம். கர்த்தர் தாமே நமது வாழ்விலுள்ள இருளை நீக்கி, தமது ஒளியைப் பிரகாசிப்பிக்கப் பண்ணுவாராக. அவருடைய முகம் நம்மில் ஒளிவீசட்டும்.

*வாசிப்பு:*
யோவான் 1:1-10

*ஜெபம்:*
"ஆண்டவரே, உமது பிள்ளை என்று சொல்லிக்கொண்டு இன்னமும் பாவத்தில் சிக்கித் தவிக்காதபடி, உமது ஒளியில் என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
15
வெள்ளி

# சுத்தமான மனநோக்கு

'...அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி....' (யோவான் 8:7)

"டீச்சர், மற்றவரின் தவறை உங்களுக்குச் சொன்னால் என்னை நம்பு வீர்களா?" தன்னை நல்லவள் என்று காட்டுவதற்காக தனியாக டீச்சரிடம் போய் பேச்சை ஆரம்பித்தாள் ஒரு மாணவி. அவளுடைய வஞ்சகத்திற்குப் பலியானது டீச்சரிடம் நற்பெயர் எடுத்த அவளுடைய தோழிதான். பாடசாலையில் நடந்த இந்த சம்பவத்திலே, தோழி கண்டிக்கப்பட்டபோது அமைதியாக இருந்துவிட்ட இவளுக்கும் இந்தத் தவறிலே பங்கிருந்தது பின்னர்தான் தெரியவந்தது. இவள் தன்னைத் தப்புவித்தாளா? அல்லது டீச்சரைச் சோதித்துப் பார்த்தாளா?

இந்தவிதமான மனநிலையில்தான் அன்று விபசாரத்தில் அகப்பட்ட ஒரு பெண்ணை இயேசுவுக்கு முன் கொண்டுவந்து நிறுத்தின பரிசேயரும் வேதபாரகரும் இருந்தனர். அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, அவர் தேவாலயத்திலே ஜனங்களுக்குப் போதகம் பண்ணிக்கொண்டிருந்தார். ஆகவே, ஜனங்களின் முன்பாக அந்தப் பெண்ணை இழுத்து வந்த யூதரின் மனப்பாங்கு எப்படிப்பட்டது என்பதைச் சிந்திக்கவேண்டும். அடுத்தது, நியாயப்பிரமாணம் மீறப்பட்டது என்ற கோபத்தில் அந்தப் பெண்ணை இழுத்துவந்தார்களா என்பது கேள்விக்குறி. ஏனெனில், அவர்களே நியாயப்பிரமாணத்தை மீறிவிட்டிருந்தார்கள். ஏனெனில், அந்த ஸ்திரீயோடேகூட பாவம் செய்த ஆணையும் பிடித்து வந்திருக்கவேண்டும். (லேவி.20:10) இதிலிருந்து, அவர்கள் உண்மையாக நியாயப்பிரமாணத்திற்கு மதிப்பளித்து வரவில்லை என்பதும், இயேசுவில் குற்றம்பிடிக்கும்படிக்காகவே இதனைச் செய்தார்கள் என்பதும் தெளிவு. இயேசு கல்லெறியும்படி சொன்னாலும், எறியாதே என்று சொன்னாலும் அவரைக் குற்றப்படுத்த அவர்களிடம் பதில் இருந்தது. இயேசுவோ, இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்து, ஒருவன் பிறனைக் குற்றப்படுத்த முன்னர் தன்னைத் தானே ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்றும், நியாயாதிபதி தேவன் ஒருவரே என்றும், மனவுருக்கமும் மன்னிப்பும் மனிதனுக்கு அவசியம் என்பதையும் உணர்த்தினார். குற்றஞ்சாட்டிய கூட்டத்தில் சிறியோரும் இருந்தார்கள் என்பது சிந்திக்கப்படவேண்டிய விடயம்.

பிறர் குற்றம் செய்யும்போது கண்டிக்கவும், திருத்தவும், குற்றஞ் செய்தவனை உரியவிதத்தில் நடத்தவும் வேதம் நமக்குப் போதிக்கிறது. அதே சமயம், குற்றத்தை மறைப்பதோ, அதை நியாயப்படுத்துவதோ தவறு. இங்கே முக்கியம் நமது மனநோக்கு. அந்த மாணவிக்கும் அன்றைய பரிசேயருக்கும் வித்தியாசம் இல்லை. தமது தவறுகளை மறைப்பதற்காக பிறர் குற்றங்களை வெளிக்காட்டுவதும் மிகத் தவறு. இவையெல்லாம் குற்றஞ்சாட்டுகிறவனுக்கே பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும். தேவனுடைய நியாயஸ்தலத்தின் முன் நமது இருதயத்தை அதன் சிந்தனைகளை மறைக்கவே முடியாது.

*வாசிப்பு:*
யோவான் 8:1-9

*ஜெபம்:*
"கர்த்தாவே, என் இருதயத்தைச் சுத்தப் படுத்தும். அதிலும் பிறரைக் குறித்த என் மனநோக்கு உமக்கு முன்பாக என்றும் சுத்தமாக இருப்பதாக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
**16**
சனி

# இன்னொரு தருணம்

...இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ. இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.' (யோவான் 8:11)

கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டவளையே இயேசு தப்புவித்திருக்க, நிரூபிக்கப்படாத குற்றங்களைப் பெரிதுபடுத்தி அடுத்தவரைக் குற்றப்படுத்துவது எப்படி என்றதொரு கேள்வியை அநேகர் எழுப்புவதுண்டு. அதிலும் குற்றப் படுத்தப்பட்டவர் நாமாகவோ அல்லது நம்மவராகவோ இருந்தால் இந்தச் சம்பவத்தையே குறிப்பிட்டு தர்க்கத்தை உருவாக்கவும் நாம் தயங்கவதுமில்லை.

இங்கே முதலாவது, இயேசு, அப்பெண்ணை கொண்டுவந்தவர்களின் உள்நோக்கை அறிந்து செயற்பட்டார். அடுத்தது, 'பரவாயில்லை, கவலைப் படாதே, நீ போ. நானும் உன்னைக் கல்லெறியமாட்டேன்' என்றும் இயேசு சொல்லவில்லை. 'நீ போ, இனிப் பாவம் செய்யாதே' என்று தான் சொன்னார். இதுவே இயேசு அவள்மீது காட்டிய மனதுருக்கம். அடுத்தது, அவள் தன்னில் சாட்டப்பட்ட குற்றத்தை மறுத்துப் பேசவில்லை, அவளுடன் பாவம்செய்த ஆண் பிடிபடாததால், சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்குரிய நிரூபணமும் கேட்கவில்லை. 'ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா' என்று இயேசு கேட்டதற்கு, 'இல்லை, ஆண்டவரே' என்றாள். பாவமில்லாத இயேசு ஏன் கல்லெறியவில்லை? ஆம், அவர்தான் இயேசு. கல்லெறிந்து கொல்லப்படுவது இறுதி தீர்ப்பு. இயேசு அதை வழங்காமல், அவள் தன் வாழ்வை உணர்ந்து மனந்திரும்ப, ஒரு புதிய ஆரம்பத்துக்குள் வர ஒரு தருணம் அளித்தார். அவள் திரும்பாமற்போனால், இறுதியில் அதற்குரிய நித்திய தண்டனையுண்டு. ஆகவே, இந்தச் சம்பவத்தின் முடிவு நமக்குத் தெரியாது. அவள் போய்விட்டாள், அவ்வள வும்தான். ஆனால், ஆண்டவர் அவளுக்கு ஒரு சவால் விடுத்திருப்பது தெளிவு. 'இனிப் பாவஞ்செய்யாதே' என்று வழியைக் காட்டினாலும், தெரிவு அவளுடைய தாயிருந்தது. தன் பழைய வாழ்வைவிட்டு வெளிவருவதும், வெளிவராமல் இறுதி ஆக்கினைத் தீர்ப்புக்கு ஆளாவதும் அவளது தெரிவு.

நமது வாழ்விலும் வெளிக்கு வராத பாவங்களும் உண்டு; வெளிவந்த பாவங்களும் உண்டு. குற்றஞ்சாட்டுகிறவன் ஒருபுறம் என்றால், குற்றஞ்சாட்டப் படுகின்ற நாம் என்ன செய்கிறோம்? குற்றங்களை ஒப்புக்கொண்டு, ஆண்டவர் தருகின்ற தருணங்களை வீணாக்காமல், மனந்திரும்புவோமா? அல்லது, நாம் நீதிமான்கள் என்று வாதிடுவோமா? இவ்வுலக வழக்கப்படியான தண்டனைகளை, தண்டனையாகவோ, தலைகுனிவாகவோ எண்ணாமல், அடுத்தவரைக் குற்றப்படுத்தி நம்மை நியாயப்படுத்தாமல், தேவன் நம்மை அறிவார் என்ற நிச்சயத்தோடு, தேவனுக்கு முன்பாக வாழ்விலும் மனந்திரும்புதலிலும் உண்மையுள்ளவராக வாழுவோமாக. உலகத்தின் நியாயத் தீர்ப்பு முடிவல்ல. தேவனே நியாயாதிபதி.

*வாசிப்பு:*
யோவான் 8:9-11

*ஜெபம்:*
"பிதாவே, ஒவ்வொரு நாளும் நீர் எனக்குத் தருணமாகத் தருகிறீர் என்பதை உணர்ந்து, உமக்கு முன்பாக உத்தமமாக வாழ என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
17
ஞாயிறு

# உதாசீனம் வேண்டாம்.

'அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன். ....மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை' (வெளிப்படுத்தல் 2:21)

பல நற்காரியங்கள் செய்து, நற்பெயர் எடுத்திருந்தாலும், ஒரு தடவை ஒரு தவறு செய்துவிட்டால் போதும்; நாம் செய்த நற்காரியங்கள் யாவும் மறக்கப் பட்டு விடுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், 'நான் செய்த எல்லாவற்றையும் மறந்து இந்த ஒன்றை மாத்திரம் பேசுகிறார்களே' என்று நாம் மனங்கோணுவது முண்டு. ஆனால், நமது நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருக்க வேண்டும் என்றே ஆண்டவர் விரும்புகிறார் (1பேதுரு 1:15).

தியத்தீரா சபைக்கும் நடந்தது இதுதான். அன்பு, ஊழியம், விசுவாசம், பொறுமை, புதிய புதிய செயற்பாடுகள் எல்லாமே காணப்பட்டன. ஆனால், ஒரு விடயத்தில் அவர்கள் பாராமுகமாய் இருந்துவிட்டார்கள். தன்னைத்தானே தீர்க்க தரிசி என்று சொல்லிக்கொண்ட ஒரு பெண், கர்த்தருடைய ஊழியர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் போதித்து, தவறான வழியில் நடத்துவதற்கு இந்தச் சபை அவளுக்கு இடமளித்திருந்தது. வேசித்தனம் என்பது தேவனுக்கும், பிறருக்கும், அதைச் செய்கிறவன் தனக்கும் விரோதமாகச் செய்யும் பயங்கர பாவம் என்பதை வேதம் தெளிவாகப் போதித்தி ருக்கிறது. அந்நாட்களில் விக்கிரக கோயில்களில் மிஞ்சுகிற இறைச்சியை கடை களிலே விற்பதுண்டு. கடையிலே வாங்கிச் சாப்பிடுவது அல்ல காரியம்; ஒரு விசுவாசி தன்னும் அதனால் குழப்பமடைய நாம் இடமளிக்கக்கூடாது என்பதை யும் வேதம் தெளிவுபடுத்தியுள்ளது (1கொரி.8:). அப்படியிருக்க இந்தப் பெண், தனது விருப்பம், தனது சந்தோஷம் என்று மாத்திரமல்லாமல், தவறான போதனைகளினால் மற்றவர்களையும் தடுக்கி விழப்பண்ணினாள். ஆனாலும், தேவன் அவளுக்கும் தனது ஊழியருக்கும் மனந்திரும்ப தருணம் கொடுத்திருந் தார். ஆனால், அவர்களுக்கோ மனந்திரும்ப மனதிருக்கவில்லை.

நாம் எவ்வளவு நற்காரியங்கள் ஊழியங்கள் செய்கிறோம் என்பதல்ல; தேவவார்த்தைக்கு உண்மையாய் இருக்கிறோமா என்பதே காரியம். காலத்துக்கு ஏற்றதான தவறான உபதேசங்களும், தவறான வழிநடத்துதல்களும் சபைகளுக் குள்ளும், தனிப்பட்ட வாழ்விலும் புகுந்துவிட்டன. இன்னமும் தேவன் நமக்குத் தருணம் கொடுத்திருக்கி றார். உண்மையாய் மனந்திரும்புகிறவனை மன்னித்து அவனை ஏற்றுக்கொள்ளவும் ஆயத்தமாய் இருக்கி றார். ஆனால், நாம் உண்மையாய் மனந்திரும்ப வேண்டுமே! தர்க்கங்களும், ஞானஅறிவும், மனுஷ நியாயங்களும் இன்று தேவனுடைய வார்த்தையைத் தலைகீழாக்கிப் போடுகின்றன. தேவன் தந்திருக்கிற தருணங்களை உதாசீனம் செய்யாமல், தவறான உபதேசங்களைப் பகுத்தறியத்தக்க கிருபையைப் பெற்று, தேவனிடம் மனந்திரும்புவோமாக. அவர் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்வார்.

*வாசிப்பு:*
வெளிப்படுத்தல் 2:18-21

*ஜெபம்:*
"பிதாவே, நீர் வெறுக்கி றவற்றை வெறுக்கவும், தவறான வழியில் இழு வுண்டு போகாதபடிக் கும், உம்மிலே உறுதியாய் தரித்திருக் கவும் என்மேல் இரக்க மாயிரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
18
திங்கள்

# ஆவிக்குரிய போஜனம்

...நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)

ஏறத்தாழ 22 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாடொன்றில் வேலை செய்தபோது நடந்த ஒரு சிறு சம்பாஷணை இன்றும் என் மனதில் இருக்கிறது. "இன்று காலையில் என்ன போஜனம் கிடைத்தது" என்று பாஸ்டர் அம்மா கேட்டார்கள். நானும் பதிலளித்தேன். அதற்கு அவர், "அதைக் கேட்கவில்லை; ஆவிக்குரிய போஜனத்தையே கேட்டேன்" என்றபோது வெட்கமாகிவிட்டது.

சமாரியப் பெண்ணுடன் சம்பாஷித்துவிட்டு உட்கார்ந்திருந்த இயேசுவை உணவு உண்ணும்படி சீஷர்கள் கேட்டார்கள். இயேசுவோ, தமக்குப் போஜனம் உண்டு என்று சொன்னதும், அதற்கிடையில் யார் இவருக்கு உணவு கொடுத்தார்கள் என்று சீஷர்கள் குழம்பிவிட்டனர். இயேசு தமது ஆவிக்குரிய உணவைக் குறித்துப் பேசினார் என்பதை அன்று சீஷர்கள் அறிந்திருக்கவில்லை. நாம் உண்ணும் உணவு உள்ளே போய், நமக்குப் போஷாக்குத் தருகிறது. ஆனால், இதையும்விட, தேவனுக்கென்று செய்வது கொடுப்பது எல்லாமே நமக்கு அழியாத போஷாக்கைத் தருகிறது என்பதையே இயேசு உணர்த்தினார். இந்தச் சத்துணவு, நாம் தவறாமல் செல்லும் வேதப்படிப்பிலும் மேலானது. ஜெபக் கூட்டங்களிலும் மேலானது. ஆலய காரியங்கள், வல்லமையான பிரசங்கங்கள், சமூகப்பணிகள், தானதருமங்கள் எல்லாவற்றிலும் மேலானது. ஆவிக்குரிய போஷாக்கு என்பது, தேவனுடைய வார்த்தையைக் கேட்பதில் அல்ல; அதை அறிந்து தேவனுடைய சித்தத்தின்படி வாழுவதிலும், அவருடைய கிரியையாகிய சுவிசேஷத்தின் பணியை நிறைவேற்றுவதிலுமே நமக்குக் கிடைக்கிறது. தேவ சித்தப்படி வாழாமலே சமூகப்பணியும் செய்யலாம், பிரசங்கமும் செய்யலாம். ஆனால், அது தேவனுக்குப் பிரியமாயிராது; அது நமக்குப் போஷாக்கையும் தராது. இயேசுவானவர் தமது நீண்ட ஜெபத்திலே, "நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" என்று ஜெபித்தார் (யோவா.17:4). பவுலடியார், "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்றார் (2தீமோ.4:7).

இன்று நம்மாலும் இப்படிக் கூறமுடியுமா? தேவனுடைய வார்த்தைக்கு, அவர் நம்மீது வைத்திருக்கும் சித்தத்திற்கு நாம் இசைந்து நடக்கிறோமா? சரீரத்தில் எவ்வளவுதான் பெலமுள்ளவராக இருந்தாலும், ஆவிக்குரிய பெலன் குன்றிப்போனால் பலன் என்ன? இன்றைய காலகட்டத்தில் தேவசித்தம் செய்வது நமக்குப் பெரிய சவாலாகவே இருக்கிறதா? சிறுபிள்ளைகள்போல தேவனுடைய வார்த்தையை பற்றிக்கொண்டு, நம்மை நம்பிக்கொடுத்த சுவிசேஷ பொறுப்பை நிறைவேற்ற நம்மை முழுமையாகவே இன்றே அர்ப்பணிப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 4:30-38

*ஜெபம்:*
"பிதாவே, வேதத்தைத் தியானித்து, நீர் எனக்குத் தந்த சுவிசேஷ பொறுப்பை நேர்த்தியாகச் செய்ய என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
19
செவ்வாய்

# வேறுபட்ட காலங்கள்

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. (பிரசங்கி 3:1)

இயற்கையின் பருவகாலங்கள், சமூகத்தில் நடைபெறும் பண்டிகைக் காலங்கள் என்று பலவிதங்களில் 'காலங்கள்' என்ற சொல் குறிப்பிடப்படுகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பஸ்கா பண்டிகை உட்பட மூன்று முக்கிய பண்டிகைகளை வெவ்வேறு காலங்களில் இஸ்ரவேலர் கொண்டாடினார்கள். இன்று கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் என்பன நினைவுகூரப்பட்டு, அவைகளே பண்டிகைக் காலங்களாகக் கொண்டாடப்படுகிறது.

இவற்றைவிட, வேதாமத்திலுள்ள 'பிரசங்கி' புத்தகத்தை எழுதிய சாலொமோன் ராஜா, அதன் மூன்றாம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் 'ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு' என்று மனிதன் கடந்து செல்லும் பலவேறுபட்ட நன்மை தீமையான சூழ்நிலைகளைக் காலங்களாகக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அதே அதிகாரம் 11ம் வசனத்தில் "அவர் (தேவன்) சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" என்றும் குறிப்பிட்டு எழுதியுள்ளார். சாலொமோன் ராஜாவின் இவ் வார்த்தைகளுக்கூடாக நாம் அறிந்துகொள்ளும் ஒரு முக்கிய காரியம் என்னவெனில், இயற்கையின் காலங்களோ, பண்டிகைக் காலங்களோ, மனித வாழ்வின் பல்வேறுபட்ட சூழ்நிலையின் காலங்களோ, எந்தக் காலங்களானாலும், எல்லாக் காலங்களிலும் தேவனுடைய செயற்பாடு எப்போதும் மாறாததும் நேர்த்தியானதுமாகவே இருக்கும் என்பதேயாகும்.

உலகம் எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, எல்லோருமே அறிந்திருக்கிற ஒரு விசேஷித்த பண்டிகையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் காலம் இது. அதாவது, "இயேசு உயிர்த்தெழுந்த" நாளை நினைவுகூரும் பண்டிகை. இதற்கு முன்னர், கிறிஸ்தவர்கள், இயேசுவின் பாடுகள் மரணத்தைக் குறித்து தியானிப்பதற்கூடாக, தேவசமுகத்தில் தம்மை ஆராய்ந்து பார்க்க ஏதுவாக, இந்த நாட்களை 'லெந்து காலமாக' பயன்படுத்துகிறோம். அந்தப்படி, இந்த லெந்து காலத்தை நாம் எப்படிப் பயன்படுத்தப்போகிறோம்?

காலங்கள் மாறினாலும், மாறாதவராகிய கிறிஸ்து நம்முடன் இருப்பதால், நமக்கு முன்னே இருக்கிற காலங்களைப் பயன்படுத்திக் கொள்வோமாக. அதை விட்டுவிட்டு, காலங்களுடன் நாமும் சேர்ந்து மாறிவிடாதபடி, என்றும் தேவனுக்குள் உறுதியாக நிற்கப் பிரயாசப்படுவோமாக. "என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது" (சங்.31:15) என்று தாவீது கூறியதுபோல, நமது வாழ்வையும், கடந்துசெல்லும் பலவகையான காலங்களின் சூழ்நிலைகளையும் தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுத்து, இந்த லெந்து நாட்களைப் பயன்படுத்திக்கொள்வோமாக.

*வாசிப்பு:*
பிரசங்கி 3:1-11

*ஜெபம்:*
"தேவனே! என் வாழ்க்கையில் நான் கடந்துசெல்லும் அனைத்துச் சூழ்நிலைகளையும் உமது கரத்தில் ஒப்புக் கொடுக்கின்றேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
20
புதன்

# லெந்து காலம்

"தேவனே. என்னை ஆராய்ந்து... இருதயத்தைச் ...சோதித்து... சிந்தனைகளை அறிந்து... நித்திய வழியிலே என்னை நடத்தும்"
(சங்கீதம் 139:23-24)

சாம்பல் புதன் என்றழைக்கப்படும் நாள் தொடங்கி, ஞாயிறு தினங்கள் தவிர, கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளுக்கு முதல் நாள் அடங்கலான காலப் பகுதியே 'லெந்து காலம்' எனப்படுகிறது. முதல் மூன்று நூற்றாண்டு கிறிஸ்த வர்களினால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த பண்டிகை நாளுக்கு முன்பு மூன்று நாட்களாகவே இந்த லெந்து காலம் அனுசரிக்கப்பட்டு வந்தது. கி.மு. 140-202ம் *ஆண்டளவில் வாழ்ந்த* இரேனியஸ் என்ற இறையியல் பேராசிரியர், "இயேசு கிறிஸ்துவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் எடுக்கும் முன்பாகத் தம்மை ஆராய்ந்து, தமது பாவங்களை அறிக்கையிட்டு, தம்மை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பதற்காக இந்நாட்களை ஏற்படுத்திக்கொண்ட னர். ஆனால், அதின் பிற்பாடு இந்த லெந்து நாட்கள் "நைசீன்" என்று அழைக் கப்பட்ட மன்ற உறுப்பினரால் கி.மு.325ம் ஆண்டளவில் நாற்பது நாட்களாக அதிகரிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார். பின்னர், இதுவே திருச்சபைகளில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கிறிஸ்தவ வாழ்வு என்பது, ஒருமுறை பாவத்தை அறிக்கைசெய்து, ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதோடு நிறைவுபெறுவதில்லை. இதுவரை பாவத் திற்கு அடிமையாயிருந்தவன், இப்போ கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஆரம்பத்துக் குள் வருகிறான்; அதாவது, அவன் ஒரு புதிய சிருஷ்டியாகிறான். அதற்காக, அவன் வேறு உலகில் வாழமுடியாது; பாவம் நிறைந்த இந்த உலகில்தான் தொடர்ந்தும் வாழவேண்டும். அதனால், பாவசோதனைகளை அவன் சந்தித்துத் தான் ஆகவேண்டும். விட்டுவந்த பாவமான வாழ்வில் திரும்பவும் விழுந்துவிடாத படி கிறிஸ்துவுக்குள் உறுதியாய் வளரவேண்டுமாயின், அவன் நித்தமும் தன்னை ஆராய்ந்து, கிறிஸ்துவுக்குள் தன் நிலைமையைச் சோதித்தறிந்து, தினமும் தன்னை தேவசமுகத்தில் சுத்திகரித்துக்கொள்ள வேண்டியதவசியம். அப்போது, அவனுடைய உள்ளான மனுஷன் கிறிஸ்துவுக்குள் தினமும் புதுப்பிக்கப்பட்டு, அவன் தன் ஆவிக்குரிய வாழ்விலே வளர்ச்சியடைகிறான்.

இந்த வளர்ச்சிக்கு இந்த லெந்து காலம் நமக்கு மிகவும் உதவுகிறது. நமக்குள்ளான ஒரு கட்டுப்பாட்டில் வளரவும், உள்ளான மனுஷன் பெலப் படவும், இந்த லெந்து காலத்தில் நாம் செய்யும் ஜெபம், தியானம், உபவாசம் யாவும் நமக்கு பெரிதும் உதவுகின்றன. சிலுவையைத் தியானிக்கத் தியானிக்க நம் உள்ளம் உண்மையாகவே உடைகிறது என்பதை நாம் அனுபவித்திருக்கிறோம். ஆகவே, இந்நாட்களில் நமது முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மெய்யான கீழ்ப்படிவோடும் தேவனைத் தேட நம்மை ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
சங்கீதம் 139:1-24

*ஜெபம்:*
"தேவனே! என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உமக்குள் ஆராய்ந்து, சீர்ப்படுத்தி, பெலனடைய கிருபை ஈந்து என்னை வழிநடத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
21
வியாழன்

# நாற்பது நாட்கள்

'அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பது நாள் கர்த்தரோடே இருந்தான்.' (யாத்திராகமம் 34:28)

வேதத்தில் அநேக இடங்களில் நாற்பது நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நோவாவின் காலத்தில் நாற்பது நாட்கள் இரவும் பகலும் பூமியின்மேல் மழை பெய்தது (ஆதி. 7:4). கானான் தேசத்திற்குள் இஸ்ரவேலர் பிரவேசிக்கும் முன்பாக, வேவுகாரர் தேசத்தை நாற்பது நாட்களாக வேவு பார்த்தார்கள் (எண்.13:25). எலியா தீர்க்கதரிசி நாற்பது நாட்களாக நடந்து ஓரேப் பர்வதத்தைச் சென்றடைந்தான் (1இரா.18:8). மோசே நாற்பது நாட்கள் இரவும் பகலும் சீனாய் மலையில் இருந்து தேவனிடத்திலிருந்து பத்துக் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டான். இயேசு நாற்பது நாட்கள் வானாந்தரத்தில் உபவாசத்திலிருந்து பிசாசின் சோதனைகளைத் தோற்கடித்தார் (மத்.4:2). இயேசு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாக நாற்பது நாட்கள் தமது சீஷருக்குத் தரிசனமாகி, அவர்களைப் பெலப்படுத்தி, உலகிற்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கட்டளை கொடுத்தார் (அப்.1:3).

கிறிஸ்தவ வாழ்வு என்பது நாளுக்குநாள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடையவேண்டிய வாழ்வு; நாளுக்கு நாள் பரிசுத்தமாக்கப்படவேண்டிய வாழ்வு. இந்த ஆவிக்குரிய வளர்ச்சியும், பரிசுத்தமாக்கப்படுகின்ற வாழ்வையும் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த 40 நாட்களை நாம் பலவழிகளில் அனுசரிக்கலாம். சிலர் 40 நாட்களும் உபவாசிப்பார்கள். சிலர் தமக்கு பிரியமான உலக வாழ்க்கையின் பொழுதுபோக்குகளை தவிர்க்கலாம். சிலர் இந்நாட்களில் ஆலயத்தில் நடைபெறும் ஆராதனைகளில் தவறாது கலந்துகொள்வார்கள். இன்னும் சிலர் தானதருமங்களைச் செய்வார்கள். அனைத்தும் நல்லது. ஆனால், அவை யாவற்றுக்கும் மேலாக நாம் செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு. அது இல்லையானால் இவை எல்லாமே வீண்தான். அது என்ன? ஆம், நாம் தேவபாதத்தில் அமர்ந்திருக்கவேண்டும். மோசே அதைத்தான் செய்தார்; நாற்பது நாட்களாக புசியாமல் குடியாமல் தேவனோடு அமர்ந்திருந்தார்.

நம்மிடம் இந்த அமர்வுநிலை உண்டா? கிறிஸ்துவின் பரிசுத்தத்திலும், ஆவிக்குரிய ரீதியிலும் நாம் மேலும் வளரவேண்டும் என்றால், மோசேயைப்போல இந்த நாட்களைத் தேவ பாதத்தில் செலவிட தீர்மானிப்போமாக. சத்தியமாகிய வார்த்தைக்கூடாக, நமது வாழ்க்கையை ஆராய்ந்து, நமக்குள் இருக்கின்ற அழுக்குகளை நீக்கும்படி ஜெபத்தில் தரித்திருப்போமாக. இதற்கு இந்த நாற்பது நாட்களும் நமக்கு உதவியாக இருக்கட்டும். தேவ பாதத்தில் அமர்ந்திருந்து, அவருடைய வார்த்தையைத் தியானிக்காத ஒருவனால் வாழ்வில் வளரவே முடியாது. ஏனெனில் தேவவார்த்தை தானே நமக்கு ஜீவன். தேவ வார்த்தையே நமது பெலன்.

*வாசிப்பு:*
யாத்திராகமம் 34:27-31

*ஜெபம்:*
"பிதாவே, உம்முடைய வார்த்தைகளுக்கூடாக என்னை ஆராய்ந்து, உமக்குள் பெலனடைந்து, ஆவியில் வளர, இந் நாட்களில் என்னை நடத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
22
வெள்ளி

# தேவ கட்டளையின் இருப்பிடம்

'அவன் பத்துக் கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான்.' (யாத்திராகமம் 34:28)

தேவகட்டளையானது, முதன்முதலில், முதல் மனிதன் ஆதாமுக்குத் தேவனால் அன்பாய்க் கொடுக்கப்பட்டது. ஆதாமோ தன் மனைவியோடிணைந்து அக்கட்டளையில் நிலைத்திராமற்போனதால் முழு உலகமுமே பாவத்திற்குட்பட்டு விட்டது. ஆனாலும், மனிதன் பாவத்திலேயே மாண்டுபோவதை விரும்பாத தேவன், அவன் தமக்குச் சாட்சியாக நல்வாழ்வு வாழவென்று தொடர்ந்தும் பல கட்டளைகளைக் கொடுத்தார். அவற்றில் முக்கியமானது "பத்துக் கற்பனைகள்". இவற்றைக் கற்பலகையிலே எழுதி, தமது ஜனங்கள் என்றும் கடைப்பிடிக்க வேண்டுமென மோசேயிடம் கொடுத்தார். தொடர்ந்தும், "இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலும் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளை குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக: அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டின் நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக" (உபா.6:5-9) என இஸ்ரவேலுக்குக் கூறும்படி மோசேயிடம் தேவன் கட்டளையிட்டார்.

தேவகட்டளைகள், நமது வாழ்வுக்கு ஒரு பரிசுத்த ஒழுங்கை வகுத்து தருகிறது. தேவஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க அவை நம்மை நடத்துகிறது. அன்று அவற்றை வீட்டின் நிலைகளிலும், வாசல்களிலும் தொங்கவிடும்படி இஸ்ரவேலுக்குத் தேவன் கட்டளையிட்டது, அடிமைத்தனத்திலிருந்து வெளிவந்த மக்களுக்கு வாழ்வைக் கற்றுக்கொடுப்பதற்காகவே. ஆனால், அவை நாளை அழிந்துபோய்விடும். ஆகவேதான், புதிய உடன்படிக்கையிலே அவற்றை நமது இருதயத்திலே எழுதுவேன் என்றார் தேவன் (எரே.31:33).

ஆம், தேவனுடைய கட்டளைகளின் இருப்பிடம் நமது 'இருதயமே'. அக்கட்டளைகளை நமது இருதயத்திலும் சிந்தனையிலும் பதித்து, அவற்றின்படியே வாழ முயற்சி செய்யவேண்டும். தேவனுடைய இந்த எதிர்பார்ப்பை நாம் நிறைவேற்றுகிறோமா? தாவீது தேவ வார்த்தைகளை இருதயத்திலே வைத்து வைத்தேன் என்கிறார். இன்று இருதயத்தை நாம் எதனால் நிறைத்திருக்கிறோம் என்பதைச் சிந்திப்போம். நமது வாழ்வு தேவஆசீர்வாதத்தால் நிறைந்திருக்கிறதா, பிரச்சனைகளாலும் கறைகளாலும் நிறைந்திருக்கின்றதா? தமது கட்டளைகளுக்கு இருப்பிடமாக நமது இருதயம் இருக்கவேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். அப்படியே நமது இருதயத்தை தேவனுடைய கட்டளைகளாலும், அன்பின் வார்த்தைகளாலும் நிரப்பி, தேவனுக்குள் மகிழ்ச்சியாக வாழுவோமாக.

*வாசிப்பு:*
யாத்திராகமம் 20:1-17

*ஜெபம்:*
"தேவனே! உமது கற்பனைகளை இந் நாட்களில் நினைவு கூர்ந்து அவற்றை என் இருதயத்திலும் சிநதனையிலும் பதித்து செயற்பட என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
**23**
சனி

# கற்பனைகள்

போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். (மத்தேயு 22:36)

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ள மறுத்த பெருங்கூட்ட மக்கள் இருந்தனர். அவர்களில் நியாயசாஸ்திரியாயிருந்த ஒருவன் இயேசுவைச் சோதிக்கும்படி வந்து, "போதகரே, நியாயப் பிரமாணத்தில் எந்தக் கற்பனை பிரதானமானது" என்று கேட்டான். இயேசு அதற்குப் பதிலாக, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" என்றார். தொடர்ந்தும், "இவ்விரண்டு கற்பனைகளிலும், நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" என்று கூறினார். இயேசு கூறிய இவ்விரு கற்பனைகளையும் உற்றுநோக்கினால், இவ் இரு கற்பனைகளுக்குள்ளும் இருக்கிற மையக்கருவாக "அன்பு" என்ற சொல் இருப்பதை நாம் அவதானிக்கிறோம்.

ஒரு கட்டிடம் உறுதியாய் நிற்கவேண்டுமானால், அதன் கற்கள் ஒன்றோடொன்று இணைந்து பெலமாக இருக்கவேண்டுமானால் கட்டிடத்தின் அஸ்திபாரம் உறுதியாயிருக்கவேண்டும். எமது வாழ்க்கையும் அப்படியே! நாம் தனித்து நிற்கமுடியாது. நமது வாழ்வு தேவனோடும் மனிதரோடும் உள்ள உறவில் இணைக்கப்பட்டு கட்டப்பட்டு எழுப்பப்படவேண்டியதொன்றாகும். இவ்விரு உறவுகளும் நம்முடன் உறுதியாய் இணைக்கப்பட்டிருக்க வேண்டுமாகில், இயேசு கிறிஸ்து கூறியதுபோன்று, தேவனுடைய கற்பனைகளை இணைத்துநிற்கும் ஒரே பாலமாக, மையக்கருவாக அமைந்துள்ள "அன்பு" நம் வாழ்வில் ஆட்கொள்ள வேண்டியது அவசியம். இப்படியான வாழ்க்கையையே தமது சீஷர்களிடமும் இயேசு எதிர்பார்த்தார். இதனையே, "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பில் நிலைத்திருங்கள்" என்றும், "..நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்றும் இயேசு கூறினார் (யோவா.15:9,12). இந்த "அன்பு"தான் பரிசுத்த வேதாகமம் முழுமையும் வியாபித்திருக்கிறது.

சகோதரனே! சகோதரியே! இந்த லெந்து காலத்தில் நம்மை ஆராய்ந்து பார்ப்போமாக. தேவன் எதிர்பார்க்கும் அந்த "அன்பு" நமக்குள் எந்தளவில் உள்ளது? நாம் கிறிஸ்துவுக்குள்ளும் நம்மைச் சுற்றியுள்ளவர்களோடும் அன்பில் இணைக்கப்பட்டு நமது வாழ்வு பெலப்படுத்தப்படவேண்டுமானால், கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரே அஸ்திபாரமான, "அன்பின்" கற்பனையை தினமும் நினைவுகூர்ந்து, தியானித்து, அதன்படி வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.

*வாசிப்பு:*
மத்தேயு 22:34-40

*ஜெபம்:*
"பிதாவே, உம்மோடும், சுற்றியுள்ள அனைவரோடுமுள்ள அன்பின் உறவைச் சீர்செய்து, அதில் வளர்ந்து, உமக்குப் பிரியமாய் வாழ உம் கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
24
ஞாயிறு

# அன்பு

இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம் மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது.
(1கொரிந்தியர் 13:13)

1கொரிந்தியர் 13ம் அதிகாரமானது 12ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாகும். கொரிந்து சபையினருக்கு ஆவியின் வரங்களைக்குறித்து தெளிவாக்கிய பவுல் அப்போஸ்தலன், "முக்கியமான வரங்களை நாடுங்கள். இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" (1கொரி.12:31) என கூறியபின், அதின் தொடர்ச்சியாக "அன்பின்" முக்கியத்துவத்தைக் குறித்து 13ம் அதிகாரத்தில் எழுதுகிறார். பின்னர், 14ம் அதிகாரத்தில் வரங்களையும் அவற்றின் செயற்பாட்டைக் குறித்தும் கூற வரும்போதும், அதன் ஆரம்பமாக, "அன்பை நாடுங்கள்" என்று "அன்பை" வலியுறுத்திக் கூறுவதை நாம் வாசிக்கிறோம்.

"அன்பு" என்பது பல பகுதிகள் ஒன்றிணைந்து செயற்படும் ஒரு செயற்பாட்டின் "கூட்டமைப்பாகும்." இதை 1கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் பவுல் கூறிய அன்பின் தன்மைகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். இத்தகைய அன்பையே தேவன் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கின்றார். இதிலிருந்து வழுவிப்போன எபேசு சபையின் தூதனுக்கு எழுதும்படி தேவன் யோவானுக்கு வெளிப்படுத்தியதும் இந்த அன்பைக் குறித்த செய்திதான். எபேசு சபையில் பல நற்காரியங்கள் நிறைந்திருந்தன. "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும், நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்படுகிறதையும் அறிந்திருக்கிறேன்" என்றார் கர்த்தர். இத்தனை நற்காரியங்கள் இருந்தபோதும் அவர்களிடம் இருந்த முக்கிய குறையையும் தேவன் சுட்டிக்காட்டத் தவறவில்லை. "ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு" (வெளி.2:4). மட்டுமல்ல, அத்தனை நன்மைகள் இருந்தும், இந்த விடயத்தில் மனந்திரும்பாதபட்சத்தில், "...உன் விளக்குத்தண்டை அதனிடத்திலிருந்து நீக்கிவிடுவேன்" என்றும் தேவன் எச்சரித்தார்.

ஆண்டவரை நாம் ஏற்றுக்கொண்ட நாட்களில் எமக்குள் ஊற்றெடுத்த அந்த அன்பு இன்றும் நம்மிடம் உண்டா? மாறுபட்ட போதனைகளும், தீர்க்கதரிசனங்களும் உருவாகி, தேவனிடத்திலுள்ள அன்பைவிட்டு திருச்சபை வழுவிப்போகும்படி செய்கிறது என்பதையும் நாம் மறுக்கமுடியாது. இந்நிலையில் நமது ஆதி அன்புக்குத் திரும்புவது மாத்திரமல்ல, பிறரையும் கிறிஸ்துவுடனும் சபையுடனும் இணைக்கின்றதான அன்பின் பாலமாக, பிறரிலும் அன்புகாட்டும்படி நம்மை இன்றே ஒப்புவிப்போமா!

*வாசிப்பு:* 1கொரிந்தியர் 13:1-13

*ஜெபம்:*
"தேவனே! எந்த நிலையிலும் உமது அன்பில் நிலைபெறவும், பிறரை உம்முடனும் சபையுடனும் இணைக்கும்படி அன்பில் நிரப்பப்பட்டு செயற்படவும் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
25
திங்கள்

# அன்பில் நிலைகொண்டிரு!

...அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை' (1கொரிந்தியர் 13:3)

பலவித வரங்களை உடையவர்களாயும், அன்னதானம் அதாவது ஏழை விதவை, திக்கற்ற பிள்ளை என எல்லோரையும் ஆதரித்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றவர்களாயும் பலர் உலகெங்கும் இருக்கிறார்கள். இதனால் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும் ஜனங்களும் ஆயிரமாயிரம். தேவையோடு இருக்கிறவர்களின் தேவைகளைச் சந்திப்பது மிகவும் ஆசீர்வாதம்தான். ஆனால், நாம் என்ன மனநிலையோடு உதவி செய்கின்றோம் என்பது தான் முக்கியம். இந்த மனநிலையை ஆராய்ந்து பார்க்க பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதிய ஒரு காரியத்தை நினைவுபடுத்திக்கொள்வது நல்லது. "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்" (ரோம.12:9) என்பதே.

அத்துடன், கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டிருக்கும் ஒருவன் எப்படியாக ஜீவிக்கவேண்டும் என்று பவுலடியார் வலியுறுத்துவதையும் இன்றைய வாசிப்புப் பகுதியில் நாம் வாசித்தோம். அதாவது, தீமையை வெறுத்து நன்மை செய்வது, சகோதர சிநேகத்தைக் காத்துக்கொள்வது, பரிசுத்தவான்களின் குறைவில் அவர்களுக்கு உதவி செய்வது, நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிப்பது, ஏக சிந்தையுடையவர்களாக இருப்பது, மேட்டிமையானவைகளைச் சிந்தியாது தாழ்மையானவர்களுக்கு இணங்குவது, தீமைக்குத் தீமை செய்யாதிருப்பது, சமாதானமாயிருப்பது, தீமையைத் தீமையினால் வெல்லாது தீமையை நன்மையினால் வெல்லுவது, ஆவிக்குரிய வாழ்க்கையில் அசதியாய் இராது ஜாக்கிரதையாய் இருப்பது, நம்மையே புத்திமானாய் எண்ணாதிருப்பது போன்றவற்றையே பவுல் அன்பின் வெளிப்பாடுகளாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகோதரனே, சகோதரியே! இன்று நாமும் பலவித வரங்களால் நிரப்பப்பட்ட ஒருவராக இருக்கலாம். அல்லது, ஏழை எளியவர்களில் இரக்கமுள்ளவராக பெரிய சேவைகளில் ஈடுபட்டிருக்கலாம். இவை மிகவும் நல்லதும் அவசியமும் கூட. இவை அனைத்திற்கூடாகவும் மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமான பாத்திரங்களாகவும் இருக்கலாம். ஆனால், இவை நமது சுயநலத்தில் வெளிப்படாமல், அன்பின் ஊற்றுக்களாக நமது இருதயத்திலிருந்து வெளிவரவேண்டும். இல்லாவிட்டால் நாம் பிறரில் காண்பிக்கும் அன்பு மாயமானதும், பிரயோஜனமற்றதாகவுமே இருக்கும். ஆகவே, இன்றே கிறிஸ்துவுக்கு முன்பாக நமது இருதயத்தை ஆராய்வோமாக. சிலுவையண்டை நம்மை அர்ப்பணிப்போமாக. கிறிஸ்து நம்மில் கொண்டிருக்கின்ற அந்த பரிசுத்த அன்பு நம்மிலும் பாய்ந்தோடும்படி, நம்மை இந்த நாளிலே கிறிஸ்துவின் கரத்தில் ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
ரோமர் 12:9-21

*ஜெபம்:*
"தேவனே! போலியான அன்பைக் களைந்து, உமது திவ்ய அன்பின் சுபாவத்தைத் தரித்து, அன்பின் ஊற்றாய் பிறருக்குப் பிரயோஜனமாய் வாழ என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
26
செவ்வாய்

# ஒற்றுமை

...நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கின்றேன் (யோவான் 17:21)

'ஒற்றுமை அல்லது ஐக்கியம்', இதனை வீட்டிலே, சபையிலே, சமுதாயத்திலே, நாட்டிலே இன்று காணக்கூடுமோ என்ற கேள்வி எழும்பத்தான் செய்கிறது. ஆதித் திருச்சபைகளில்கூட இந்தக் கேள்வி இருந்தது. கொரிந்து சபையிலே, குடி, பாலியல் பாவங்கள் மாத்திரமல்ல, தேவனுடைய கிருபையைக் கூறிக்கொண்டு உலகப் பிரகாரமான வாழ்க்கையை சிலர் வாழ்ந்துகொண்டும் இருந்ததால் சபை தீட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. சபையின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட போட்டியால் அது நான்காகப் பிளவுபட்டிருந்தது (1கொரி.1:12). அத்துடன், தேவனை மகிமைப்படுத்தாமல், சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு இடையூறாகவும் இருந்தது. ஆவியின் வரங்கள், ஆராதனை முறைமைகள், தலைமைத்துவம் போன்ற அநேக காரியங்களில் பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்களும், போட்டியும் பொறாமையும்கூடக் காணப்பட்டது. இதனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தினார்கள் என்று பவுல் அறிந்து கொரிந்து சபைக்கு எழுதிய கடிதங்களையே நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

நமது தேவன் பிரிவினையின் தேவன் அல்ல. தமது பிள்ளைகள் ஒருமனம் ஒற்றுமையாக வாழுவதையே விரும்புகிறார். ஒரே கட்டாக, சாட்சியாக விளங்குவதே தேவனுக்குப் பிரியம். அதிலும், இயேசு, தமக்கும் பிதாவுக்கும் உள்ள ஐக்கியத்தைப்போல, தமது சீஷரும் தம்மோடும் பிதாவோடும் ஐக்கியமாயிருப்பதையே வாஞ்சித்தார். அதற்காகவே ஜெபித்தார். திராட்சைச்செடியில் பல கிளைகள் உண்டு. ஒவ்வொன்றும் செடியோடு மாத்திரமல்ல, ஒவ்வொன்றும் ஒரே செடியோடு இணைந்திருப்பதால் அவை ஒன்றாகவே கனிகொடுக்கிறது. அப்படிப்பட்ட ஒற்றுமையையே ஆண்டவர் நமக்குள்ளும் எதிர்பார்க்கிறார்.

அப்படியிருக்க, இன்று ஏன் நமக்குள் பிரிவினைகள்? கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்துவோடும், பிறரோடும் இணைக்கப்பட்ட ஒற்றுமையான வாழ்வு. இந்த ஒற்றுமைக்கு வந்த தடைகள் என்ன? தலைமைத்துவப் போட்டிகளா? பெற்றுக்கொண்ட வரங்களா? இரகசிய பாவங்களா? எரிச்சல், பொறாமை, பிறரை மறைமுகமாக குற்றப்படுத்துவதும் இழிவாகப் பேசுவதும் போன்ற குணாதிசங்களா? இவை யாவுமே சுவிசேஷம் பரம்புவதற்குத் தடையாகவும், பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துவதுமாக இருக்கும். ஒருவன் தேவனோடு நல்லுறவில் ஐக்கியமாய் இருப்பானேயாகில், அடுத்தவரோடு ஒற்றுமையாய் இருப்பது அவனுக்குக் கடினமாகவே இருக்காது. ஆகவே முதலாவது தேவனோடுள்ள நமது உறவை சரிப்படுத்துவோமாக. நம்மை நாமே ஆராய்ந்து மனந்திரும்பும்போது, கிறிஸ்து நம்மில் எதிர்பார்க்கின்ற பிறருடனான ஒற்றுமை நிச்சயம் வெளிப்படும்.

*வாசிப்பு:*
யோவான் 17:1-26

*ஜெபம்:*
"தேவனே! கூடியவரை அனைவரோடும் ஒற்றுமையாக இருக்கவும், உமது சுவிசேஷம் அறிவிக்க தடையாக இல்லாதிருக்கவும் உதவிசெய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
27
புதன்

# பரிசுத்தம்

நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. (1பேதுரு 1:16)

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டதின் பின்னர், அவர்கள் வாழவேண்டிய முறைமைகளை மோசேக்கூடாகத் தேவன் வெளிப்படுத்தினார். அப்போது, பரிசுத்தத்தைக் குறித்து தேவன் பலதடவைகள் வலியுறுத்தியதை மோசேயின் ஆகமங்களில் வாசிக்கிறோம். ஓய்வுநாளை ஆசரிப்பதில் பரிசுத்தம் (யாத்.16:23), ஆசாரியர்களின் பரிசுத்தம் (யாத்.19:22, 40:13-15) என்று பல. சீனாய் மலையடிவாரத்துக்குப் போகுமுன்னர் மக்களின் பரிசுத்தம், தேவனுக்கென்று கட்டப்பட்ட ஆலயத்தில் உபயோகிக்கப்பட்ட எல்லாப் பாத்திரங்களினதும் பொருட்களினதும், அங்கு பணிசெய்த ஆசாரியர்களின் பரிசுத்தத்தைக்கூட தேவன் மோசேக்கு விளக்கினார். மோசே அப்படியே செய்தார். இவற்றைத் தவிர யோபு தன் குமாரரைப் பரிசுத்தப்படுத்தினான் (யோபு 1:5) என்றும் வாசிக்கிறோம். நியாயாதிபதிகள், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் அனைவரும் தேவனுக்குள்ளான பரிசுத்தத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர்.

'பரிசுத்தம்' என்பது என்ன? நாம் நினைக்கிறபடி தூய்மையாக வாழுவது என்பது அல்ல, பரிசுத்தம். அது நம்மால் முடியுமா? மேலும், பரிசுத்தம் என்ற சொல் தேவனோடு சம்மந்தப்பட்டது. அப்படியானால், தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? ஆம், பரிசுத்தம் என்பதன் அர்த்தம், வேறுபிரிக்கப்பட்ட, தனித்துவமான வாழ்வு. தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட நாம் உலகத்தோடு ஒத்து ஓடமுடியாது. தேவனுடைய வார்த்தைக்கேற்ப நாம் வித்தியாசமானவர்களாக, தேவனையே பிரதிபலிக்கிறவர்களாக வாழவேண்டும். அதற்காகவே தேவன் இஸ்ரவேலைப் பிரித்தெடுத்தார்; இன்று நம்மை அழைத்திருக்கிறார். இதைத்தான், "நீங்கள் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" என்றும், "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல; பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (1தெச.4:3,7) என்றும் பவுல் எழுதியுள்ளார். "பரிசுத்தத்தை அசட்டைபண்ணுகிறவன் மனுஷரையல்ல, தமது பரிசுத்த ஆவியைத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்" (1தெச.4:8) என்றும் கூறினார்.

இப்படியிருக்க, பரிசுத்தத்தை அசட்டை செய்வது எப்படி? எப்போதும், எல்லாவற்றிலும் "பரிசுத்தராயிருக்க" நாடுவோமாக. தேவன் வெறுக்கின்ற அனைத்தையும் விட்டுவிடவேண்டும் என்ற வாஞ்சையோடு தேவசமுகத்தை நாடுவோமானால், தவறான சிந்தை, இருதயத்தின் திருக்கான நினைவுகள், தீய வார்த்தை, தூய்மையற்ற நடத்தை, யாவையும் தேவ ஆவியானவர் நமக்கு உணர்த்துவார். அவற்றை விட்டுவிடத் தீர்மானிக்கும்போது தேவாவியானவர் நமக்கு உதவிசெய்வார். பரிசுத்தராகிய அவரே நம்மை பரிசுத்தத்தில் வழிநடத்தமுடியும்.

*வாசிப்பு:*
1பேதுரு 1:13-16

*ஜெபம்:*
"தேவனே! நீர் பரிசுத்தராயிருக்கிறதுபோல என் நடக்கைகளில் பரிசுத்தமாயிருக்கவும், உமக்கு அசுத்தமாகத் தோன்றும் யாவையும் விட்டுவிடவும் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
28
வியாழன்

# சத்தியமே பரிசுத்தமாக்கும்!

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம். (யோவான் 17:17)

கடவுளைத் தேடவும், அவரைக் கிட்டிச் சேரவும், அதற்காகத் தன்னைச் சுத்திகரிக்கவும் மனிதன் பல வழிகளைத் தேடுகிறான். பலர் பாவ நிவிர்த்திக்காக தங்கள் சரீரத்தைப் பல வழிகளிலும் ஒடுக்குகிறார்கள். மேலும், விரதங்கள், நோன்புகள், யாகங்கள், நேர்த்திகள் என்றும் பல. இந்தக் காலப்பகுதியில் சிந்தனையை ஒருமுகப்படுத்தும்படிக்கு தியானங்கள், யோகா போன்ற அப்பியாசங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுக் கடைபிடிக்கப்படுகின்றன. இவற்றால் மனிதன் பரிசுத்த வாழ்வு வாழ முடியுமா என்பது கேள்விக்குறிதான்.

பரிசுத்த தேவனை அண்டிச்சேர நமக்குப் பரிசுத்தம் அவசியம். அந்தப் பரிசுத்தத்தை மனிதனுக்கு அருளக்கூடிய ஒன்றே ஒன்று தேவனுடைய வசனம் என்றும், அந்தச் சுத்திகரிப்பைத் தமது சீஷருக்கு அருளும்படிக்கும் இயேசுவானவர் ஜெபித்த ஜெபத்தின் ஒரு பகுதியைத்தான் இன்று நாம் வாசித்தோம். யோவான் எழுதிய சுவிசேஷத்தில், "ஆதியிலே 'வார்த்தை' இருந்தது, அந்த 'வார்த்தை' தேவனிடத்திலிருந்தது, அந்த 'வார்த்தை' தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்" என்று ஆரம்பித்து, "அந்த 'வார்த்தை' மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவா.1:14) என்று தொடர்ந்து எழுதியுள்ளார். ஆம், வார்த்தையாகிய கிறிஸ்து நம் மத்தியிலே வாசம்பண்ணினார். இயேசுவின் சீஷர்களில் ஒருவனான தோமாவின் கேள்விக்கு இயேசு பதிலளித்தபோது, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்று கூறியதையும் யோவான் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இயேசு செய்த ஜெபத்திலிருந்து, ஒரு மனிதன் பரிசுத்தமாக்கப்படக்கூடிய ஒரேயொரு வழி சத்தியமும், வார்த்தையுமாய் நமக்குள் வாசம்பண்ண இவ்வுலகிற்கு வந்த இயேசு கிறிஸ்துவே என்பது தெளிவாகின்றது.

அந்த சத்தியத்தை அறிந்திருக்கிற நமது வாழ்விலே, சத்தியம் தரும் 'பரிசுத்தம்' காணப்படுகிறதா, என்பதை இந்த லெந்து காலத்தில் ஆராய்ந்து பார்ப்போமாக. அதற்கு முதலில், நமக்குள் தேவ வார்த்தை இருக்கவேண்டுமே! கிறிஸ்து நமக்குள் வாசம்பண்ணுகிறார், நமது இருதயமே அவருக்கு ஆலயம் என்பதெல்லாம் நமது வாழ்வில் உண்மையென்றால், முதலாவதாக, நம்மில் கிறிஸ்துவின் மாதிரி காணப்படவேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் விழிப்படையவேண்டும். தேவன் விரும்பும் பரிசுத்த வாழ்வு வாழ தினமும் முயற்சிப்போமாக. தேவ வார்த்தையைத் தினமும் உட்கொள்ளவும், அந்த சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்படவும், நம்மை தேவகரத்தில் தருவோமாக.

*வாசிப்பு:*
யோவான் 17:6-19.

*ஜெபம்:*
"பிதாவே, சத்தியமும், வார்த்தையுமாய் என்னில் வாசம்பண்ணும் கிறிஸ்துவுக்குள் தினமும் பரிசுத்தப்படுத்தப்பட்டு உம்மண்டை கிட்டிச் சேர என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 1 வெள்ளி

# கிறிஸ்துவின் மாதிரி

"...நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்."
(1பேதுரு 2:21)

பேதுரு, இயேசு கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன். கிறிஸ்துவே மேசியா என்று அறிக்கைபண்ணினவனும் இவனே; பின்னர், இவரை நான் அறியேன் என்று கிறிஸ்துவை மறுதலித்தவனும் இவனே. ஆனாலும், உயிர்த்தெழுந்த இயேசு தாம் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாக, தமது ஜனத்தை வழி நடத்தும் மேய்ப்பனாக அழைத்ததும் இந்தப் பேதுருவையே. பெந்தெகோஸ்தே நாளிலே பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டபின் கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சியாக விளங்கியதும் இதே பேதுருதான். இந்தப் பேதுரு பின்னர் கிறிஸ்துவுக்குச் சாட்சி யாக எழுதிய நிருபங்களைத்தான் வேதாகமத்தில் வாசிக்கிறோம். இவற்றுள் முதலாம் நிருபத்தை பேதுரு இரு நோக்கங்களோடு எழுதினார் என்று வேத அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளார்கள். அவையாவன, ஒன்று, விசுவாசிகள் இந்த உலகத்தை ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். இரண்டா வது, விசுவாசிகள் தமது வேலைஸ்தலங்களில் எவ்விதமாக கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி, குற்றமற்றவர்களாய் நீதியோடும் உத்தமத்தோடும் நடக்க வேண்டும் என்பதேயாகும்.

கிறிஸ்து எந்த வேலைஸ்தலத்தில் வேலை செய்தார்? இந்த உலகமே அவருடைய வேலைஸ்தலம். உலக மக்களுக்கு இரட்சிப்பைப் பெற்றுக்கொடுக்க வந்திருந்தாலும், இவ்வுலகின் அதிகாரிகளையும் இயேசு சந்திக்க நேர்ந்தது. குறிப்பாக, எந்தக் குற்றமுமே செய்யாதபோதும், குற்றஞ்சாட்டப்பட்டவராக அதிகாரிகள் முன் நின்றபோது, அவர் எப்படிப்பட்ட மாதிரியை நமக்கு வைத்தார் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். அவர் எதிர்த்துப் போசாதிருந்தார். இயேசு பல பாடுகளுக்கூடாகக் கடந்துசென்றபோதும், அவர் தாம்வந்த நோக்கத்தை நிறைவு செய்யும்படி அமைதியாகவே சகலத்தையும் ஏற்றுக்கொண்டார். இதற்கூடாக கிறிஸ்து நமக்குக் காட்டிய மாதிரி, கீழ்ப்படிவும், தாழ்மையுமே.

இந்தக் கீழ்ப்படிவும் தாழ்மையும் நமது வாழ்வில் உண்டா? அநியாய மாக நாம் குற்றப்படுத்தப்படும்போது, நாம் எப்படி பதிலளிக்கிறோம்? கிறிஸ்து வின் பிள்ளைகளாக பல்வேறு வேலை ஸ்தலங்களில் நாம் வேலைசெய்யும்போது அதிகாரிகள் கொடுக்கும் அழுத்தம், சகஊழியர்களின் எதிர்ப்பு, எரிச்சல், பொறாமை, உதவியற்ற நிலைமை போன்றவற்றுக்கு நாம் முகங்கொடுத்து பல பாடுகளுக்கூடாகக் கடந்து செல்கிறோமா? இப்படியான சூழ்நிலைகளில், கிறிஸ் துவின் மாதிரியைப் பின்பற்ற தேவன் நமக்கு நல்ல தருணம் கொடுத்திருக்கிறார் என்று விசுவாசித்து, கிறிஸ்துவின் மாதிரிக்கு நாம் சாட்சியாக விளங்க லாமே. அதற்கான தேவபெலம் வேண்டி இந்நாளிலே நம்மை ஒப்புவிப்போமா!

*வாசிப்பு:*
1பேதுரு 2:12-25

*ஜெபம்:*
"தேவனே! எந்நிலையி லும், எவ்விடத்திலும் கிறிஸ்துவின் அடிச்சுவடு களைப் பின்பற்றி உமக்குப் பிரியமாய் வாழ என்னை வழிநடத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
2
சனி

# கீழ்ப்படிவு

"...இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." (1பேதுரு 1:14-15)

ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட விளைவிலிருந்து மனுஷ வாழ்வில், 'கீழ்ப்படிவு' எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நமக்கு விளங்கவேண்டும். கீழ்ப்படியாமையால் அவர்கள் ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டார்கள். ஆதாம் வியர்வை சிந்தி உழைக்க நேர்ந்தது. ஏவாளின் பிள்ளைப்பேறு வேதனை மிக்கதானது. மனிதனுக்குள் பாவமும் பாடுகளும் தொடர்ந்து வந்தது. ஆனால், இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிவால் மனுஷன் பாவத்திலிருந்து மீட்பைப் பெற்றான். என்றாலும், இவ்வுலகில் வாழும் வரைக்கும் மனிதனுக்குள் இருக்கும் பாவசுபாவம் திரும்பவும் திரும்பவும் அவனைக் கீழ்ப்படியாமைக்குள் வீழ்த்தத்தான் செய்கிறது. ஆனாலும், தேவன் மனிதனைக் கைவிடவில்லை. கிறிஸ்துவின் மாதிரியும், அவர் அளித்த போதனைகளும் இன்று நமக்கு உண்டு. வாழவேண்டிய வழியையும், பரிசுத்தாவியானவரின் துணையையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

இப்படியிருக்க இன்னமும் நாம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாய் இருப்பது எப்படி? முன்னே அறியாமையினாலே இச்சைகளுக்கு உடன்பட்டு நடந்து விட்டோம். இப்போது சத்தியத்தை அறிந்த பின்பும் மாம்ச இச்சைக்கு நாம் இடமளிக்கக்கூடாது. இதைத்தான் சிதறடிக்கப்பட்டிருந்த விசுவாசிகளுக்கு பேதுரு தனது முதலாவது நிருபத்திலே ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். அந்த எச்சரிப்பு இன்று நமக்கும் வருகிறது. ஏனெனில், நாம் பரிசுத்த தேவனைப் பிரதிபலிக்க அழைக்கப்பட்டவர்கள். மனைவி கணவனுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும், வேலையாட்கள் எஜமானுக்கும் இளைஞர்கள் மூப்பருக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பது தேவசித்தம். நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும் போது பிறருக்குக் கீழ்ப்படிவது நமக்குக் கடினமாயிராது.

கிறிஸ்து மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தார் என்று பவுல் தெளிவாக எழுதியுள்ளார் (பிலி.2:8). கிறிஸ்தவ வாழ்க்கை மரணபரியந்தமும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி வாழவேண்டிய வாழ்க்கை. அவருடைய குணாதிசயங்களை தரித்துக்கொண்டு, இறுதிவரை அவருக்கே சாட்சியாக வாழவேண்டிய வாழ்க்கை. குடும்பத்திலும் சபையிலும் சமுதாய வாழ்விலும்கூட கிறிஸ்து எப்படி வாழ்ந்தாரோ அப்படி நாமும் வாழுவதே தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை. இப்படியிருக்க, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழுவதில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ன? அவற்றை அடையாளங்கண்டு தேவ கரத்தில் ஒப்புவிப்போமாக. நம்மை தேவனின் வழியில் நடத்தவென்று பரிசுத்தாவியானவர் நமக்கு இருக்கிறாரே! தேவன், நம்மிடம் எதிர்பார்ப்பது எல்லாம் இந்தக் 'கீழ்ப்படிவு' ஒன்றைத்தான்.

*வாசிப்பு:*
1பேதுரு 1:13-22

*ஜெபம்:*
"பிதாவே, கிறிஸ்து உமக்கு மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தது போல, உமது வார்த்தைக்கு நானும் கீழ்ப்படிந்து வாழ பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
3
ஞாயிறு

# தாழ்மை

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலிப்பியர் 2:8)

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ ஒருவன் தன்னை அர்ப்பணிப்பானாகில், 'தாழ்மை'யின் சிந்தையை வெளிப்படுத்துவது அவனுக்குக் கடினமாயிராது. பெருமையும் மேட்டிமையும் பெருக்கெடுத்திருக்கும் இந்நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நம்மிலே கிறிஸ்துவின் உன்னத குணாதிசயங்களில் ஒன்றாகிய 'தாழ்மை' காணப்படுகிறதா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

'தாழ்மை' என்பது ஏதோ கௌரவக் குறைவோ, அல்லது எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்துவிட்டு வெறுமையாய் இருப்பது என்றோ அர்த்தமல்ல. எல்லாமே நிறைவாக இருந்தும், எல்லா மரியாதையும் கௌரவமும் இருந்தும், பெருமை மேட்டிமை அணுகாமல் வாழுவதே தாழ்மையின் அடையாளம். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்" (மத்.11:29) என்றார் இயேசு. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தம்மைக் கடவுளாக ஒருபோதும் உயர்த்தியதில்லை. அவரே ஐசுவரிய சம்பன்னராய் இருந்தும், ஒன்றுமே இல்லாதவராகத் தம்மை வெறுமையாக்கினார். இயேசு சகல அதிகாரத்தையும் உடையவராய் இருந்தும், அடிமையைப்போல எந்த உரிமையும் இல்லாதவராகப் புறக்கணிக்கப்பட தம்மை அர்ப்பணித்தார். அவரே நியாயாதிபதியாய் இருந்தும், அவருடைய நியாயங்கள் எடுபட்டுப்போயின. அப்போதும் அவர் அமைதியாகவே இருந்தார். எந்தப் பாவமும் அறியாத இயேசு இறுதியில் இழிவான சிலுவை மரணத்தைத் தழுவ நேரிட்டபோதும், அவர் கீழ்ப்படிந்திருந்தார். இப்படியாக, இயேசு உலகில் வாழ்ந்திருந்தபோது அவர் தமது பெலத்தில் அல்ல; முற்றிலும் பிதாவையே சார்ந்திருந்தார். அதுதான் அவருக்கு வெற்றியைக் கொடுத்தது. இதுதான் தாழ்மை; கிறிஸ்துவே அதற்கு மாதிரி.

தாழ்மை என்பது பிறர் காண்பதற்காக செய்கிற காரியமும் அல்ல. மத்.6:16-18ல் பிறர் காணும்படி எதையும் செய்யவேண்டாம் என்று இயேசு கற்பித்தார். மெய்யான தாழ்மையை தேவன் காணவேண்டும். மேலும், நாம் தேவ சாயலில் உருவாக்கப்பட்டதால், தேவனுடைய பிள்ளைகளானதால், நமக்கு எல்லாவித மேன்மையும் உண்டு. இருந்தும் இதனால் பெருமைகொள்ளாமல், நாம் ஒன்றுமில்லை என்று உணர்ந்து, சகலத்திலும் தேவனையே சார்ந்து ஜீவிப்போமாக. அதுதான் தாழ்மையின் சிந்தை.

சுயதேவைக்கும், சமுதாயத்தில், சபையில் நல்லவன் என்று பெயரெடுப்பதற்கும் தாழ்மை உள்ளவனைப்போல நடிப்பது போலித்தனமாகும். அதனைத் தேவன் வெறுக்கிறார். "தாழ்ந்த சிந்தையுடையவர்களிடத்தில் ஞானம் உண்டு" (நீதி:11:2). நமது காரியம் எப்படி? சிந்திப்போம்.

*வாசிப்பு:*
பிலிப்பியர் 2:1-11

*ஜெபம்:*
"தேவனே! நான் எங்கும் எவ்விடத்திலும் கிறிஸ்துவைப் போன்று மாயமற்ற மனத் தாழ்மையோடு வாழ உம் கிருபையைத் தந்து என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
4
திங்கள்

# ஞானம்

'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.'
(நீதிமொழிகள் 1:7)

வீதியோரத்திலே விழுந்து கிடந்தவரைக் கண்டும் எல்லோரும் விலகிச் சென்றனர். நமக்கோ நல்ல சமாரியன் உவமை ஞாபகத்திற்கு வந்ததால், அந்த மனிதனுக்கு உதவாவிட்டால் தவறோ என்று ஒரு மனஉறுத்தல். ஆனாலும், விலகிச் சென்றுவிட்டோம். சில மணிநேரத்தின் பின்னர் அதே வழியாக திரும்பிய போது, அந்த மனிதன் எழும்பியிருந்து குடித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு உதவாமல் விட்டது ஞானமான செயல் என்று உணர்ந்தோம்.

அறிவும், புரிந்துகொள்ளுதலும் மனிதனுக்கு அவசியம் என்றால், தான் அறிந்துகொண்டதையும் விளங்கிக்கொண்டதையும் சரியாக நிதானித்து, தகுந்த நேரத்தில் சரியாகச் செயற்படுத்துவது அதைவிட முக்கியம். அதுதான் ஞானம். செயற்பாடு தவறும்போது பெற்றுக்கொண்ட அறிவும் வீணாகிவிடும். ஆக, அறிவு என்பது மூளையைப் பொறுத்தது என்றால், ஞானம் என்பது செயற்பாட்டைப் பொறுத்தது. அது இருதயத்திலிருந்து வெளிப்படுகிறது. தேவையிலுள்ளவனுக்கு உதவவேண்டும் என்று நமது அறிவுக்குத் தெரியும். அந்தத் தேவையை உணர்ந்து, சரியாகச் செயற்படுத்த ஞானம் தேவை. அந்த ஞானத்தைத்தான் சாலொமோன் ராஜா தேவனிடம் கேட்டார். "நீ விரும்புகிற காரியத்தை என்னிடத்தில் கேள்" என்று கர்த்தர் கேட்டபோது, எதுவித தயக்கமுமின்றி, "உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" என்றார் சாலொமோன். அப்படியே கர்த்தர் கொடுத்தார். இந்த ஞானத்தைக் கொண்டு சாலொமோன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான் என்று வாசிக்கிறோம் (1ராஜா.4:32). அதில் ஒரு தொகைதான் நீதிமொழிகள் புஸ்தகத்தில் உள்ளது. ஆனால், இந்த ஞானம் சாலொமோனின் வாழ்வில் தவறிவிட்டது. அவர் எழுதிய பிரசங்க வாக்கியங்களின் இறுதியில், "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்" என்றே எழுதிமுடித்தார்.

நமக்கு தீமை செய்தவனுக்குப் பதிலாக, தீமை செய் என்று சொல்லும் உலக ஞானம். ஆனால், தேவனருளிய ஞானமோ, உன் எதிராளியையும் நேசி என்றுதான் சொல்லுகிறது. ஆக, தேவனருளிய ஞானமும் தேவனுக்குள் செயற்படவேண்டும் என்பது விளங்குகிறது. அதற்கு தேவபயம் நமக்கு அவசியம். உலக ஞானம் நம்மை தவறான பாதைக்கு இட்டுச் சென்றுவிடும். தேவ கட்டளையை சாலொமோன் மீறியபோது அவனது ஞானம் உலகத்தோடு இணைந்துசெயற்பட ஆரம்பித்துவிட்டிருந்தது. தேவனுக்குப் பயப்படும் பயமே ஞானமாய் வாழ நமக்கு வழி வகுக்கும். அந்த ஞானத்தை நாமும் நாடுவோமாக.

*வாசிப்பு:*
1இராஜாக்கள் 3:1-15

*ஜெபம்:*
"தேவனே! இந்த உலக ஞானத்தின்படி நடக்காது, உமது திவ்ய ஞானத்தின்படி ஜீவிக்க தினமும் உம் கிருபை தந்து அடியேனை வழி நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
5
செவ்வாய்

# நிலைத்திரு!

'என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.' (யோவான் 15:4)

'நிலைத்திருத்தல்' என்பது இணைந்திருத்தல், இசைந்திருத்தல், அண்டியிருத்தல், எல்லாவற்றுக்கும் மேலானது. நீடித்து, நிலைத்து, உறுதியாக, எந்த சூழ்நிலையிலும் விட்டுவிலகாது ஒன்றோடு இணைந்து வாழுவதே நிலைத்திருத்தலாகும். இதனையே இயேசு, திராட்சைச்செடியையும் அதன் கொடிகளையும் வைத்து உவமையாக விளக்கிவைத்தார். பலன் கொடாத கொடியினால் பலனும் இல்லை; செடியில் நிலைத்திராத கொடியினால் பலன் கொடுக்கவும் முடியாது. இந்த லெந்து நாட்களிலே, கிறிஸ்துவில் நிலைத்திருந்து பலன் கொடுக்கும் கொடிகளாக நாம் இருக்கிறோமா, அல்லது, அவரைவிட்டு விலகி பலனற்றிருக்கிறோமா என்பதைச் சிந்தித்துப்பார்ப்பது நல்லது.

கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒருவன் ஆரம்பம் முதல் முடிவுவரை கிறிஸ்துவிலே நிலைத்து வாழவேண்டியவன் என்பதையே இயேசு சொன்ன உவமை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன், இந்த வாழ்வில் அவன் எதிர்நோக்கவேண்டிய, அல்லது நிறைவேற்றவேண்டிய சில முக்கிய விடயங்களையும் இந்த உவமை நமக்கு விளக்குகிறது. முதலாவது, தான் பிதாவிலும், பிதா தன்னிலும் நிலைத்திருப்பதுபோல தம்முடைய பிள்ளைகளும் தன்னில் நிலைத்திருக்கவேண்டும் என்றார் இயேசு. இரண்டாவது, அவர்கள் அதிக கனி கொடுக்கவேண்டும் என்றார். மூன்றாவது, தன்னுடைய வார்த்தையில் நிலைத்திருக்கவேண்டும் என்றார். நான்காவது, தமது அன்பிலே நிலைத்திருக்கவேண்டும் என்றார். ஐந்தாவது, தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்றார். ஆறாவது, தாம் தமது பிள்ளைகளில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களும் மற்றவர்களில் அன்பாய் இருக்கவேண்டும் என்றார். அவை மட்டுமன்றி, தோட்டக்காரனாகிய பிதா, கனி கொடுக்காத கொடிகளை வெட்டியெறிந்துபோடுவார் என்று எச்சரிப்பும் கொடுத்தார்.

மேற்குறிப்பிட்ட காரியங்கள் நமது வாழ்வில் காணப்படுகிறதா? இந்த நிலைதிருக்கும் வாழ்வு வாழ நமக்கிருக்கும் தடைகள் என்ன? அதிகமான வேலையா? வாழ்க்கையின் பாடுகளா? தன்னலமான வாழ்க்கையா? உலக சிநேகிதமும், உலக சிற்றின்பமுமா? நம்மை ஆராய்ந்து பார்ப்போம். கனிகொடாத செடிகள் மரங்கள் யாவும் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை. ஆகவே, இந்த நாட்களில் விசேஷமாக நம்மை தேவசமுகத்தில் ஒப்புவித்து, உணர்த்தப்படும் காரியங்களை அறிக்கைசெய்து, மனந்திரும்பி, திரும்பவும் கிறிஸ்துவிலே நிலைத்திருக்க நம்மைத் தாழ்த்துவோமாக. நமக்கு ஜீவனே இயேசு கிறிஸ்துதானே. வெட்டப்பட்டு எறியப்பட்டால் நமது நிலை என்ன?

*வாசிப்பு:*
யோவான் 15:1-17

*ஜெபம்:*
"தேவனே! கிறிஸ்துவில் நிலைத்திருக்கத் தடையாக உள்ளவற்றை அகற்றி, தினமும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் கிருபை தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
6
புதன்

# உள்ளத்தில் உண்மை

"(தேவனே) இதோ. உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்..."
(சங்கீதம் 51:6)

வெளிப்புறக் காரியங்களை நல்லதாகவும், நல்லதுபோலவும் காண்பிப்பதும் வைத்திருப்பதும் இலகு. ஆனால், வெளியிலே தெரியாத, யாரும் அறிய முடியாத உள்மனதின் காரியங்களைத் தூய்மையாக வைத்திருப்பது அவ்வளவு சுலபம் அல்ல. ஆனால், தேவன் அந்த உள்மனதின் தூய்மையையே நம்மிடம் எதிர்பார்க்கிறார், காண்கிறார்.

தேவனுக்குப் பிரியமான தாவீது ராஜா, பத்சேபாளின் விஷயத்தில் மறைவிலே செயற்பட்டார். வெளி உலகுக்கு அவளை ஒரு விதவைபோலக் காட்டி, ஒரு விதவைக்கு வாழ்வளிக்கின்ற வள்ளலாகத் தன்னைக் காட்டிக்கொண்டார். ஆனால், கர்த்தரோ அந்த மறைவான பாவத்தைக் கண்டு, நாத்தான் தீர்க்கதரிசியை அனுப்பினார். தாவீதின் பாவம் உணர்த்தப்பட்டபோது, தன்னுடைய உள்ளம் கறைப்பட்டிருப்பதை அவர் உணர்ந்தார். மனமுடைந்து, "இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்" என்று கதறினார். "சுத்த இருதயத்தை எனக்குத் தாரும்" என்று விண்ணப்பித்து, மன்னிப்பையும் பெற்றுக்கொண்டார்.

"...நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள், உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருகிகறீர்கள்" (மத்.23:28) என்று இயேசுவானவர் பரிசேயரைக் கடிந்துகொண்டதை வாசிக்கிறோம். மாத்திரமல்ல, மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியங்களைக் குறித்துக் கூறிய இயேசு, "பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்"(மாற்கு 7:23) என்றும் கூறினார். நமது உள்ளத்தின் உண்மையையே தேவன் விரும்புகிறார். தேவன் உள்ளிந்திரியங்களைச் சோதித்து அறிகிறவர்(சங்.7:9). "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்ககும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும், உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவருமாய் இருக்கிறேன் (எரே.17:10) என்றார் கர்த்தர்.

கிறிஸ்துவின் சமுகத்தில் நம்மை ஆராய்ந்து பார்ப்போம். நமது உள்ளத்தில் உண்மையாகவே உண்மைத்துவம் உண்டா? அல்லது, வெளிப்புற வாழ்வில் நல்ல கிறிஸ்தவனாகவும், மறைமுகமாக யாரும் என்னைக் காணவில்லையே என்ற நினைவில் பாவத்தோடும் வாழுகிறோமா? உள்ளத்தில் உண்மை இல்லையானால் அதன் காரணங்களை உணர்ந்து, அதிலிருந்து விடுபடும்படி மனப்பூர்வமாய் விரும்பி, அறிக்கைசெய்து, தேவகரங்களில் நம்மை ஒப்புவிப்போமாக. கர்த்தர் நமது இருதயத்தைத் தூய்மைப் படுத்தட்டும். அதுவே தேவனைப் பிரியப்படுத்தும்.

*வாசிப்பு:*
சங்கீதம் 51:1-19

*ஜெபம்:*
"தேவனே! உமக்குப் பிரியமாய் வாழும்படிக்கு என் இரகசிய பாவங்களை இப்போதே அறிக்கைசெய்கிறேன். என் பாவங்களை மன்னித்து என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
**7**
வியாழன்

# மேட்டிமை

"ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன மேட்டிமையான கண்..." (நீதிமொழிகள் 6:16.17)

தேவன் அன்பானவர்; இரக்கமும், தயவும், மனதுருக்கமும் நிறைந்தவர். தமது பிள்ளைகள் எப்பொழுதும் தம்மோடு நெருங்கி வாழவேண்டுமென்று விரும்புகிறவர். ஆகையால், தேவன் வெறுக்கும் காரியங்களை நம்மைவிட்டு அகற்றிப் போட பரிசுத்தாவியானவர் நமக்குத் துணைசெய்வாராக. கர்த்தர் வெறுக்கின்ற காரியங்களைக் குறித்து சாலொமோன் ராஜா எழுதியபோது, "மேட்டிமையான கண்" என்பதையே முதலாவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதனைக் கர்வம் என்றும் பெருமை என்றும் கூறலாம்.

கர்த்தரே நம்மை ஆசீர்வதிக்கிறவர். அழகையும் செல்வத்தையும் தருகிறவர். வெற்றியையும் மேன்மையையும் கிருபையாய் அளிக்கிறவர். அப்படியிருக்க, இவை யாவையும் கொடுத்த கர்த்தரை மறந்து, சகலதும் நம்முடையவை என்பதுபோல சிந்திக்கும்போதுதான் இந்த மேட்டிமை நமக்குள் துளிர்விட ஆரம்பிக்கிறது. ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு நடந்தது இதுதான். அவன் இஸரவேலன் அல்லாதிருந்தும், "இதோ, என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார்...." என்று கர்த்தர் எரேமியாமூலம் சொன்னதைக் காண்கிறோம் (எரே.43:10) இதே நேபுகாத்நேச்சார் பின்னர், அரமனைமேல் உலாவிக்கொண்டிருந்தபோது, 'இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ...நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா' என்று சொன்னான். அவன் சொல்லி முடிக்கமுன்பே அவன் தள்ளப்பட்டான். மாடுகளைப்போல புல்லை மேய்ந்தான் என்று வாசிக்கிறோம் (தானி.4:30-33). உசியா ராஜாவுக்கு நடந்ததும் இதுதான். இவன் ஆரம்பத்தில் தேவனைத் தேடி ஆசீர்வாதமாக இருந்தான். ஆனால், பின்னர், "அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும் அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து..."(2நாளா.26:16). இதன் விளைவாக அவன் குஷ்டரோகியானான். பவுல் அப்போஸ்தலனும், "நீ விசுவாசத்திலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு" (ரோமர் 11:20) என்று கிறிஸ்துவில் ஒட்டப்பட்ட யூதரல்லாத புறவின விசுவாசிகளுக்கு எழுதியுள்ளார்.

பதவி, அந்தஸ்து, சொத்து, பணம், அழகு, தாலந்துகள், வரங்கள் அனைத்தும் தேவன் அருளும் ஈவுகள். இவற்றைக் குறித்து நாம் மனமேட்டிமை கொள்வது எப்படி? "மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்" (நீதி.16:5). "விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி.16:18). ஆகையால், இன்றே நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நமது இருதயத்திலுள்ள மேட்டிமையான எந்த எண்ணத்தையும் அகற்றி, கர்த்தருக்குப் பிரியமாக வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.

*வாசிப்பு:*
நீதிமொழிகள் 6:16-19

*ஜெபம்:*
"தேவனே! எனக்குள் இருக்கின்ற மேட்டிமை நினைவுகளை உமது சமுகத்தில் அறிக்கைசெய்கிறேன். உமக்குப் பிரியமாய் வாழ என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 8 வெள்ளி

# நாவடக்கம்

நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. (யாக்கோபு 3:8)

யாக்கோபு நிருபம், இயேசுவின் ஒரு சகோதரனான யாக்கோபுவினால் எழுதப்பட்டது. இவர் எருசலேம் தேவாலயத்தில் தலைமைத்துவத்தில் இருந்த ஒருவன் என்று தெரிகிறது. இவன் சிதறியிருந்த பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் பல புத்தமதிகளை எழுதினான் (யாக்.1:1) என்றும் தெரிகிறது. யாக்கோபு கூறிய புத்திமதிகளில் "நாவை" அடக்கி வார்த்தையில் ஜாக்கிரதையாயிருப்பது எத்தனை முக்கியம் என்பதை பல உதாரணங்களோடு எடுத்துக் காட்டியுள்ளார். அவற்றில் ஒன்று, குதிரைகளைக் கீழ்ப்படுத்தும்படிக்கு அவற்றிற்குக் கடிவாளம் போட்டு அவைகளுடைய முழுச்சரீரத்தையும் கட்டுப்படுத்துவதைக் குறித்ததாகும். அடுத்தது, கப்பல் பெரிதாய் இருந்தாலும், கடுங்காற்றில் அலசடிப்படும் போது, ஒரு சிறிய சுக்கானினால் கப்பலோட்டி எப்படியாகக் கப்பலை ஜாக்கிரதையாகத் திருப்புகிறான் என்றும் யாக்கோபு எழுதியுள்ளார். மேலும், சிறிய நெருப்பு எவ்வண்ணம் பெரிய காட்டுத்தீயை ஏற்படுத்தும் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். ஆம், நமது நாவை அடக்கிப் பேசுவதினால் முழுச் சரீரத்தையும் பாவத்திற்கு விலக்கிக் காத்துக்கொள்கிறோம். புயல்போன்ற பிரச்சினைகள் வந்தாலும் ஒரு சிறு சுக்கானைப்போன்று ஒரு வார்த்தைக்கூடாகப் போய்ச்சேரவேண்டிய இடத்தைப் போய்ச்சேர நம்மால் முடியும். அதேவேளை, ஒரு பெரிய அழிவை ஏற்படுத்த நமது நாவில் பிறக்கும் ஒரு சொல் போதும் என்பதை உணர்ந்து, நமது பேச்சைக் கட்டுப்படுத்துவது நல்லது.

நமது பேச்சுக்கூடாக நமது வாழ்வில் எவ்வளவுதூரம் பாவம் உட்பிரவேசிக்கின்றது என்று யாக்கோபு நமக்கு விளக்கியுள்ளார். ஆகையால், நமது பேச்சில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். யாக்கோபின் இந்தப் புத்திமதிகள் ஆதித்திருச்சபைக் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் எழுதப்பட்டதல்ல; கிறிஸ்துவோடு நெருங்கி வாழவேண்டும் என்ற வாஞ்சையுள்ள சகலருக்கும் இந்த அறிவுரை தேவை. "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுவதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" (யாக்.1:19) என்ற போதனையை எப்போதும் மனதிற்கொண்டு நமது நாவை அடக்கி, ஞானமான வார்த்தைகளைப் பேசுவோமாக.

நமது நாவில் புறப்படும் சொற்கள், பிறருக்கு நல்லது செய்யாவிட்டாலும், பிறரை வேதனைப்படுத்தாமலும் தூற்றாதபடிக்கும் பார்த்துக்கொள்வோமாக. துதியும் தூற்றுதலும் ஒரே நாவிலிருந்து பிறக்கலாகாது என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது (யாக்.3:10). நம்மால் அடக்கக் கடினமானது என்றால் அது நமது நாவுதான். பேச்சிலும் சரி, உணவுக்காக நீளுவதிலும் சரி. நாவைக் கட்டுப்படுத்த ஆவியானவர் நமக்குத் துணைசெய்வாராக.

*வாசிப்பு:*
யாக்கோபு 3:1-12

*ஜெபம்:*
"தேவனே! என் வாயின் வார்த்தைகளில் அதிக ஜாக்கிரதையாயிருந்து அன்பின் வார்த்தைகளைப் பேசி, பிறருக்குப் பயனுள்ள வாழ்வு வாழ கிருபை செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
9
சனி

# யோவானின் சாட்சி

'அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்.' (யோவான் 1:14)

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கூறி அறிவித்திருக் கிறோமா? இன்று தங்களைத் தாங்களே உயர்த்துகிற சாட்சிகள்தான் அநேகம். ஆனால், இயேசுவின் சீஷனான யோவான் அளித்துள்ள சாட்சியோ வித்தியாச மானது. அவர் எழுதிய சுவிசேஷ வார்த்தைகளில் எங்கேயும் யோவான் தன்னை உயர்த்திக் காட்டவேயில்லை. "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்று அவர் எழுதியதிலிருந்து உண்மையாகவே யோவான் இயேசுவை அனுபவித்து எழுதியிருப்பது விளங்குகிறது. இதனை வாசிக்கிறவர்கள், இயேவின் வாழ்க் கையை அறிவதிலும் மேலாக, அவர் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்த வந்தவர் என்ற சத்தியத்தையே யோவான் வலியுறுத்தியுள்ளார்.

உலக சிருஷ்டிப்பில் தேவனோடு வார்த்தையாக இருந்தவர் கிறிஸ்து தான் என்று யோவான் தன் சுவிசேஷத்தை ஆரம்பிக்கிறார். இந்த வார்த்தை யாகிய இயேசு கிறிஸ்து, இவ்வுலகை பாவத்திலிருந்து மீட்கும்பொருட்டு மனுஷ னுடைய சித்தத்தில் பிறவாமல், பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடம் மனிதனாய் வந்து பிறந்தார். இவ்விதமாய் மாம்சத்தில் வந்து பிறந்த இயேசு, கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய் தொடர்ந்தும் வார்த்தையாகவே நம் மத்தியில் வாசம்பண்ணினார் என்றும் யோவான் குறிப்பிட்டுள்ளார். இப்படியாக யோவான் இயேசுவை "தேவ குமாரன்" என்று வெளிப்படுத்தியதன் இரகசியம், "அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்ற வார்த்தையில் அடங்குகிறது. இதிலிருந்து யோவானின் சாட்சி வெறும் உணர்ச்சி வேகத்தில் உண்டானதல்ல என்றும், அவர் இயேசுவின் வார்த்தையையும், வாழ்க்கையையும் உற்று நோக்கி, அவற்றை அனுபவித்து, உண்மையாகவே கிறிஸ்துவே தேவகுமாரன் என்பதை உணர்ந்து வெளிப்பட்ட சாட்சி என்பது விளங்குகிறது.

இந்த இயேசுவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாம் இன்று எப்படி சாட்சி கூறுவோம்! அவர் வெறுமனே தேவைகளைச் சந்திக்கிற இயந்திரம் என்று சொல்லுவோமா; அல்லது, அவரே தேவகுமாரனும், நமது வாழ்வை மாற்றிப்போட்டவ ரும் என்று அனுபவித்துச் சொல்லுவோமா! இயேசு வின் அன்பை, மன்னிப்பை அனுபவிக்காதவனால் அவரை இரட்சகராக பிறருக்கு அறிமுகப்படுத்த முடி யாது. அதேசமயம் அந்த இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டு வாழுகிறவனால் அந்த விடுதலையை பிற னுக்குக் கூறி அறிவிக்காமல் இருக்கவும் முடியாது. நம்மை விடுதலையாக்கிய அந்த வார்த்தையை நாமும் ருசித்து, பிறருக்கும் தைரியமாகச் சொல்ல நம்மை இன்று ஒப்புவிப்போமா!

*வாசிப்பு:*
யோவான் 1:1-18

*ஜெபம்:*
"தேவனே! இயேசுவே தேவகுமாரனும் இரட்சகரும் என்பதை ருசித்து அனுபவிக்கிற நான், அதைப் பிறருக்கும் கூறி அறிவிக்க என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
10
ஞாயிறு

# இயேசு மனுஷகுமாரன்

'இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.' (யோவான் 2:2)

நம்மை யாரோடு அடையாளப்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்? உயர் நிலையில் உள்ளவர்களுடனா? அல்லது, சாதாரண மக்களுடனா? பெயர் பெற்ற சபைகளின் அங்கத்தவர்களுடனா? அல்லது, உலகமே அறியாத சாதாரண மான, கர்த்தருக்குள் உண்மையாகவே பக்தியாக இருக்கும் பிள்ளைகளுடனா? ஆண்டவராகிய இயேசு தம்மை எப்படி, யாருடன் அடையாளப்படுத்தினார் என்பதை யோவான் விளக்குகிறார்.

இயேசு கிறிஸ்துவே 'தேவகுமாரன்' என்பதை சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் வெளிப்படுத்தின யோவான், இரண்டாம் அதிகாரத்தில் நேரடியா கவே, இயேசு எப்படித் தம்மை "மனுஷகுமாரன்" என்று அடையாளப்படுத்தி ஜீவித்தார் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். தாம் தேவனிடமிருந்து வந்தவர் என்றாலும், உலக வாழ்விலே இயேசு தம்மைக் கடவுளாக அல்ல, ஒரு முழு மனிதனாகவே அடையாளப்படுத்த வெட்கப்படவில்லை. இயேசு செய்த முதல் அற்புதம் கானாவூர்க் கலியாணத்தில் இடம்பெற்றது. அழைப்புப் பெற்ற இயேசு கலியானவீட்டுக்குப் போயிருந்தார். அங்கு திராட்சரசம் குறைவுபட்டது. அவரது தாயார் அவரை அணுகி, அக் குறைபாட்டைத் தெரிவித்தபோது, இயேசு தன் வேளை இன்னும் வரவில்லை என்று சொன்னார். ஆனாலும், அந்த மணவாளன் வெட்கப்பட்டுப் போகாதபடிக்கு, வெறுமையான சாடிகளை நிரப்பிய தண்ணீரை அவர் திராட்சைரசமாக மாற்றியதை நாம் வாசிக்கிறோம். ஆம், தேவகுமாரனான இயேசுவை "மனுஷ குமாரனாக" யோவான் இங்கே வெளிப்படுத்தினார். அதாவது, இயேசு தாம் தேவகுமாரன் என்ற உயர்ந்த எண்ணத்தோடு, சமுதா யத்தை விட்டுவிலகி வாழாது, தன்னைத் தாழ்த்தி சமுதாயத்தின் சாதாரண வைபங்களிலும் மற்றவர்களைப்போலவே கலந்துகொண்டு, தன்னை மக்களோடு மக்களாக அடையாளப்படுத்தினார் என்பதையே யோவான் விளக்குகிறார்.

இப்படியிருக்க, 'நாம் கிறிஸ்துவின் பிள்ளைகள்' என்று சொல்லிக்கொள் ளுகின்ற நாம் இன்று யாருடன் நம்மை அடையாளப்படுத்துகிறோம்? நம்மை மேன்மையுள்ளவர்களாக அடையாளப்படுத்த நம்மி டத்தில் என்னதான் இருக்கிறது? நமக்கிருக்கும் ஆசி கள், மேன்மை, தேவனுடைய பிள்ளை என்ற உரிமை எல்லாமே கிறிஸ்து நமக்குச் சம்பாதித்துக் கொடுத் தது. அதிலும், அவர் தம்மைப் பாவிகளோடு பெற்றுக் கொடுத்தது. அப்படியிருக்க, நம்மை நாமே எப்படி உயர் இடத்தில் வைத்து உலகுக்குக் காண்பிக்க முடியும்? நாம் கிறிஸ்து நடந்த பாதையில் நடக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவனுக்குப் பிள் ளைகள்தான்; ஆனால், இவ்வுலகில் மனுஷர் மத்தி யில் வாழுகிறோம் என்பதை மறவாதிருப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 2:1-11

*ஜெபம்:*
"பிதாவே, நான் உமது பிள்ளை என்ற கிருபையை ஈந்தவர் நீரே என்றுணர்ந்து, உம் வழியில் வாழ என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 11 திங்கள்

# இயேசு ஒரு போதகர்

...நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? (யோவான் 3:10)

தேவகுமாரனாகிய கிறிஸ்து, மனுஷகுமாரனாகிய கிறிஸ்து என்று இயேசுவைச் சுட்டிக்காட்டிய யோவான், மூன்றாம் அதிகாரத்திலே அவரை ஒரு போதகராக வெளிப்படுத்தியுள்ளார்.

நிக்கொதேமு என்பவன், யூதர்களுக்குள்ளே ஒரு அதிகாரியும், ஒரு பரிசேயனும், இஸ்ரவேலில் போதகனுமாயிருந்தான். பரிசேயர் இயேசுவையும் அவருடைய போதனைகளையும் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆனால், இந்த மனுஷனோ அவற்றைக் குறித்துத் தானே நேரிலே வந்து கேட்டறிய விரும்பினான். ஆனாலும், பரிசேயருக்குப் பயந்து, தன்னை வெளிக்காட்ட விரும்பாமல், இரவிலே இயேசுவிடம் வந்தான். போதகனாயிருந்த அவனே, இயேசுவை, "ரபீ" என்று அழைத்து, இயேசு செய்த அற்புதங்களின் நிமித்தம் அவரை நோக்கி, "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்" என்று கூறினான். கடவுளின் ராஜ்யம் யூதருக்கே என்பதுதான் நிக்கொதேமுவின் அறிவு. ஆகையால், தேவனுடைய ராஜ்யம் முழு மனிதருக்கும் உரியது என்றும், அதில் பிரவேசிக்கவேண்டுமென்றால் ஒருவன், நிக்கொதேமுகூட, மறுபடியும் பிறக்க வேண்டும் என்றும் இயேசு அவனுக்குப் போதித்தார். போதகனாகிய நிக்கொதேமுவுக்குக் கற்றுக்கொடுத்தார் போதகராகிய இயேசு கிறிஸ்து.

ஜோன் வெஸ்லி ஐயர் அவர்கள் இரட்சிக்கப்படும்போது, ஏற்கனவே அவர் ஒரு போதகராகவே இருந்தார் என்பதை அறிவோம். மறுபடியும் பிறந்த அந்த மெய்யான அனுபவத்தைப் பெற்ற பின்னர் அவருடைய வாழ்விலே எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதை அவருடைய வாழ்க்கைச் சரிதையை வாசித்தால் புரியும். ஆனால், நிக்கொதேமுவைப்போல இன்றும் எத்தனை நிக்கொதேமுக்கள் நம் மத்தியில் வாழ்கிறார்கள்? அவர்களில் நாங்களும் ஒருவரா? நாம் வேதத்தை வல்லமையாகப் போதிக்கலாம்; வல்லமையான பிரசங்கி என்று பெயர் பெற்றிருக்கலாம். அருமையான கூட்டங்களை நடத்தலாம். கிறிஸ்தவ தலைவராகக்கூட இருக்கலாம். இயேசுவை அற்புதம் செய்கிறவராகவும் அறிந்து, அனுபவித்தும் இருக்கலாம். ஆனால், ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்பதுவே இயேசு போதித்த சத்தியம். இந்தப் போதனையை நாம் அலட்சியம் செய்தால், நாம் ஒன்றுமே இல்லை.

எந்த உயர் நிலையில் இருந்தாலும், வேதம் போதிக்கிறவர்களாக இருந்தாலும், நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோமா என்பதைக் குறித்த தெளிவு அவசியம். போதகராகிய ஆண்டவரின் போதனையைத் தள்ளாமல், அவரண்டை சேருவோமா!

*வாசிப்பு:*
யோவான் 3:1-13

*ஜெபம்:*
"தேவனே! முதலாவது என் வாழ்க்கையில் வேத வசனத்தை நடைமுறைப்படுத்தவும், அதன் பின்பு பிறருக்குச் சொல்லவும் நீரே உமதாவியால் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
12
செவ்வாய்

# ஆத்தும ஆதாயம்

நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார். அவரை வந்து பாருங்கள். அவர் கிறிஸ்துதானோ என்றாள். (யோவான் 4:29)

கிறிஸ்துவின் பெயரைக்கொண்டு ஏழை எளியவர்கள், விதவைகள், அநாதைகள் போன்றவர்களினதும், போரினால், இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களினதும் தேவைகளைச் சந்தித்து வருகிறவர்கள் இன்று அநேகர். குறைவிலுள்ளவர்களின் குறைகளை நிவிர்த்திசெய்ய முயற்சிப்பது மிகவும் முக்கியமான ஒன்று. ஆனால், இதனை யாரும் செய்யலாம். இதற்கும் மேலாக முக்கியமான தேவை ஒன்றுண்டு. அதுவே மக்களுடைய ஆத்துமாவின் தேவை. அதனைச் சந்திக்க கிறிஸ்துவின் பிள்ளைகள் நம்மாலேதான் முடியும்.

இயேசு கிறிஸ்து உலகில் வாழ்ந்த காலத்தில் ஜனங்களின் குறைகளை நிவிர்த்திசெய்தவர்தான். ஆயினும், தான் வந்ததன் முக்கிய நோக்கத்தைப் பல வழிகளிலும் வெளிப்படுத்திக்கொண்டேயிருந்தார். யோவான் தன் சுவிசேஷத்தில் எழுதிய நான்காவது குறிப்பு அவற்றில் ஒன்று. ஆம், கிறிஸ்து "ஆத்துமாவை ஆதாயப்படுத்துகிறவர்". இயேசுவுக்கும் யூதர் சேர்த்துக்கொள்ளாத சமாரியரைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் இடையே நடந்த சம்பாஷணையை உதாரணம் காட்டி யோவான் இதனை விளக்கியுள்ளார்.

சமாரியரிடம் யூதர்கள் எதையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், இயேசுவோ தண்ணீர்மொண்டுகொள்ள வந்த ஒரு சமாரியப் பெண்ணிடம் தன் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டார். அப் பெண், இயேசு ஒரு யூதன் என்பதை அறிந்து, அவரது வேண்டுகோளை நிராகரித்தாள். அப்போது இயேசுதாமே அப் பெண்ணின் வாழ்க்கையை வெளிப்படுத்தியதோடு மட்டும் நின்றுவிடாது, தாமே "ஜீவ தண்ணீர்" என்று கூறி, அவர் தரும் அந்தத் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதின் நிறைவையும் அவளுக்கு வெளிப்படுத்தினார். இதன் விளைவாக அப் பெண் இயேசுவை மேசியாவாகக் கண்டாள். மாத்திரமல்ல, சமாரியருக்குள் இயேசுவை அறிவித்ததினிமித்தம் அவளே முதல் சுவிசேஷகியுமானாள்.

கிறிஸ்து, சுவிசேஷத்தின் மையக்கரு என்றால், கிறிஸ்துவண்டை ஒருவன் வழிநடத்தப்படுவது அவனுடைய ஆத்துமாவுக்குக் கிடைக்கும் ஒப்பற்ற கிருபை. ஆத்துமாவுக்கு மீட்பளிக்க வல்லவரான கிறிஸ்துவினிடம் ஒருவனை வழிநடத்துகின்ற அந்த ஆதாயப் பணியை இன்று ஆண்டவர் நம்மிடம்தான் தந்திருக்கிறார். ஆகவே, பிறரின் தேவைகளைச் சந்திக்கத் தருணம் கிடைக்கும்போதெல்லாம், அதிமுக்கியமான ஆத்தும ஆதாயத்தை மறந்துவிடாதிருப்போமாக. அழிந்துபோகும் இந்த சரீரத்தின் தேவைகள் சந்திக்கப்படவேண்டியது அவசியம் என்றால், என்றும் அழியாத ஆத்துமாவின் தேவை சந்திக்கப்படுவது அதிமுக்கியமல்லவா!

*வாசிப்பு:*
யோவான் 4:1-42

*ஜெபம்:*
"பிதாவே, கிறிஸ்துவின் நாமத்தில் பிறரின் சரீர தேவைகளைச் சந்திக்கவும் அவர்களது ஆத்துமாவை ஆதாயம் செய்யவும் உதவி செய்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
13
புதன்

# பரம வைத்தியன்

"இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, ...நடந்துபோனான்." (யோவான் 5:8-9)

விஞ்ஞான ஆராய்ச்சிகளும், வைத்தியத் துறையும், புதிய புதிய கண்டு பிடிப்புகளும் எவ்வளவுதான் முன்னேறிக்கொண்டிருந்தாலும், 'வியாதி' என்பது மனிதனுக்கு ஒரு சவாலாகவே இருந்துவருகிறது. வைத்தியத்துறை அதி தீவிர மாக பல கண்டுபிடிப்புகளைச் செய்தாலும், இன்னும் அநேக நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது உண்மை. சிலசமயங்களில், நோய்க் கான காரணத்தைக் கண்டுபிடித்து, அதற்குரிய சரியான வைத்தியத்தையும் மருந்தையும் கொடுத்தாலும், நோய் குணப்படுகிறதில்லை. இவை மட்டுமல் லாது, சில நோயாளிகளினால் உரிய வைத்தியத்தைச் செய்யவோ மருந்தை வாங்கவோ முடியாதபடிக்கு அதன் செலவுகள் மிக அதிகமாக இருக்கிறது. இவ்விதம், மனிதன் சரீர வியாதியானால் மிகுந்த அவஸ்தைக்குள்ளாகிறான் என்பதை நாமும் அனுபவித்திருக்கலாம்.

இயேசு வாழ்ந்த நாட்களில் விஞ்ஞான வளர்ச்சி இவ்வளவாக இல்லாதி ருந்தாலும், அநேகர் வியாதிப்பட்டிருந்தார்கள் என்றும், அதிலிருந்து விடுபட பல முயற்சிகள் செய்தார்கள் என்பதையும் சுவிசேஷங்களுக்கூடாகக் காண்கிறோம். இவற்றுள் ஒரு சம்பவமாகவே யோவான் பெதஸ்தா குளத்தைக் குறித்துக் குறிப்பிட்டுள்ளார். அக் குளத்தருகே படுத்திருக்கும் வியாதிக்காரர், தண்ணீர் எப்போ கலங்கும் என்று பார்த்திருப்பர். ஒரு தேவதூதன் அக்குளத்தைக் கலக்கு வான்; தண்ணீர் கலங்கியதும், யார் முந்தி அதில் இறங்குகிறானோ அவன் குணமடைவான் என்பது அவர்களது நம்பிக்கை. இந்த சுகத்திற்காக முப்பத் தெட்டு வருடங்களாக ஒரு வியாதிக்காரன் அக் குளத்தருகே காத்திருந்தான். அவனை இயேசு கண்டு குணப்படுத்தினார். மாத்திரமல்ல, பின்னர் இயேசு அவனைக் கண்டபோது, 'இதோ நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே' என்றார் என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். இதனால்தான் நாம் இயேசுவை வெறும் வைத்தியன் என்று சொல்லாமல், 'பரம வைத்தியன்' என்று சொல்லுகிறோம்.

நோயினால் அவஸ்தைப்படும் அன்பு சகோத ரனே, சகோதரியே, நமக்கு வெறும் வைத்தியன் அல்ல, பரம வைத்தியன் இருக்கிறார். அவரால் முடி யாதது எதுவுமே இல்லை. எவருமே தொடமுடியாத நமது ஆத்துமாவுக்கே சொஸ்தம் தந்து, புதுவாழ்வு கொடுக்க ஆண்டவரால் முடியும் என்றால், நமது சரீரம் அவருக்கு எம்மாத்திரம். அவர் கொடுத்த சரீரத்தை அவரிடமே ஒப்புவித்துவிடுவோம். சரீர சுகம் அவசியம்; அதிலும் மேலாக, தேவன் தங்கி வாழும் நமது இருதயத்தின் சுகம் மிகவும் முக்கியம். அதைத் தரவல்ல ஆண்டவரிடமே செல்லுவோமா!

*வாசிப்பு:*
யோவான் 5:1-15

*ஜெபம்:*
"பரம வைத்தியரான இயேசுவே, என் நோயைக் குணமாக்கி, என் ஆத்துமாவைப் பலப்படுத்தி, என்மேல் கிருபையாயிரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
14
வியாழன்

# ஜீவ அப்பம்

'இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்....' (யோவான் 6:35)

பலவிதங்களில் இயேசுவை வெளிப்படுத்தி எழுதிவந்த யோவான், இந்த 6ம் அதிகாரத்தில், "ஜீவ அப்பம் நானே" என்று இயேசு தம்மைத் தாமே வெளிப் படுத்தியதைக் குறிப்பிட்டு எழுதியிருப்பதை வாசிக்கிறோம். இப்படியாக இயேசு தம்மை "ஜீவ அப்பம்" என்று வெளிப்படுத்தியதன் காரணம் என்ன?

அற்புத அடையாளங்களை நாடி ஓடுகிறவர்கள் இன்று மாத்திரமல்ல, இயேசு வாழ்ந்த காலத்தில்கூட இருந்தார்கள். இங்கே ஒரு கூட்டம் மக்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல; அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே இயேசுவைத் தேடிச்சென்றார்கள் (யோவா.6:26). நடந்த சம்பவம் இதுதான். திரளான ஜனங்கள் தம்மிடம் வந்திருந்ததைக் கண்ட இயேசு மனதுருகினார். பின்னர், ஒரு பையன் வைத்திருந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களை யும்கொண்டு அத்தனைபேரையும் இயேசு திருப்தியாய் போஷித்தார். அங்கே புருஷர்கள் மாத்திரம் ஐயாயிரம் பேர்கள் இருந்தனர். பெரிய ஆச்சரியமல்லவா! இதைக் கண்ட ஜனங்கள் இயேசுவையே தேடித் தேடிப் பின்தொடர்ந்து சென்றார் கள். அப்பொழுது இயேசு,: "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல; நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" என்றும், அந்தக் கிரியையை நடப்பிக்க, "பிதா அனுப்பினவரை விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியை" என்றும் சொன்னார். ஜனங்களோ அடையாளத்தைக் கேட்டனர். அப்போதுதான் இயேசு, "ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிற வன் ஒருக்காலும் பசியடையான்" என்று தம்மை வெளிப்படுத்தினார். சரீர தேவையிலும் பார்க்க ஆத்துமாவின் தேவை மிக முக்கியம். அதன் தாகம் தீர்க்கும் ஜீவதண்ணீர் தம்மிடமே உண்டு என்று ஆண்டவர் புரியவைத்தார்.

பசியைத் தீர்க்கவும், சரீரத்தில் நாம் வாழவும் நாம் அப்பம் சாப்பிடு கிறோம். அது அவசியம். ஆனாலும், இந்த சரீரம் ஒருநாள் இல்லாமற் போய்விடும். அழியாத நமது ஆத்துமா என்றும் வாழவேண்டுமானால் அதற்கும் ஆகாரம் தேவை. அந்த ஆவிக்குரிய பசியையும், நிலையான ஆவிக்குரிய வாழ்வு வாழவும் ஒரே வழி, கர்த்தராகிய இயேசுவுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்வதுதான். தம்மை அப்பம் என்று இயேசு சொன்னது ஆச்சரியமல்ல. ஆவிக்குரிய வாழ்வில் நாம் வளரவும், முன்செல்ல வும் வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தை களை நாம் அன்றாடம் புசித்தேயாகவேண்டும். நமது ஆத்துமாவின் ஊட்டச்சத்தே தேவனுடைய வார்த்தை தான். அதுவே நமக்குப் பெலன், வழிகாட்டி, ஆலோ சனை, எல்லாமே அதுதான். அதைத் தினமும் உட் கொண்டு நமது ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படு வோமாக.

*வாசிப்பு:*
யோவான் 6:1-40

*ஜெபம்:*
"தேவனே! தினமும் உமது வார்த்தைகளால் நிரப்பப்படவும், என் ஆத்துமாவில் பெலனடைந்து உமக்கென்று வாழவும் வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
15
வெள்ளி

# தாகம் தீர்ப்பவர்

...இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்....
(யோவான் 7:37)

இயேசு பண்டிகை நாட்களைப் பயன்படுத்தி தமது போதனைகளைச் செய்ய அவர் தவறியதேயில்லை. ஏனெனில், பண்டிகைகளுக்கு எல்லா யூதரும் வருவார்கள். யூதரின் கூடாரப்பண்டிகை, விசேஷித்த பண்டிகைகளில் ஒன்று. யூதர்கள் தம்மைக் கொலைசெய்ய வகைதேடுவதை அறிந்தும் இயேசு அந்தப் பண்டிகைக்குப் போனார். "நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள்" (லேவி.23:42,43). இதுதான் இந்தக் கூடாரப்பண்டிகையின் நோக்கம். இந்தப் பண்டிகை ஏழு நாட்களாகக் கொண்டாடப்படும். இந்தப் பண்டிகைக்கு அந்தரங்கமாகப் போன இயேசு, பாதிப்பண்டிகையின்போது தேவாலயத்துக்குப் போய் உபதேசம்பண்ணத் தொடங்கினார். பரிசேயரும் பிரதான ஆசாரியரும் அவரைப் பிடிப்பதிலேயே கண்ணாயிருந்தார்கள். ஆனால், இயேசுவோ பயப்படாமல், தமது மரணத்தைக் குறித்தும் மறைமுகமாகப் பேசினார். பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு, மக்களுக்கு அழைப்பு விடுத்தார். "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்". தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்ற வாக்கையும் கொடுத்தார் இயேசு. சமாரியப் பெண்ணிடம் நித்திய வாழ்வைக் குறிப்பிட்டு 'ஜீவதண்ணீரைக்' குறித்துப் பேசிய ஆண்டவர், இங்கே, பரிசுத்தாவியானவரைக் குறிப்பிட்டு, தாகம் தீர்க்கத் தம்மிடம் வந்து பருகும்படி அழைப்பு விடுத்தார். பரிசுத்தாவியானவர் ஆட்கொள்ள நாம் இடமளிக்கும்போது, நமக்குள்ளிருந்து ஜீவஊற்றுப் புறப்பட்டு, பிறருக்கும் நாம் பயனுள்ளவர்களாக வாழுகிறோம்.

"...என்னிடத்தில் வந்து பானம்பண்ணுங்கள்" என்று ஆண்டவர் இன்று நம்மையும் அழைக்கிறார். "நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வீர்கள்" (ஏசா.12:3) என்று ஏசாயா குறிப்பிட்டது வாழ்வு தரும் இந்த மேசியாவைத்தான். தம்மை விசுவாசிக்கிறவன் யாராயிருந்தாலும் தம்முடைய பரிசுத்த ஆவியை அருள ஆண்டவர் ஆயத்தமாயிருக்கிறார்; தாகமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமா! பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்தாவியானவர் அருளப்பட்டிருக்கிறார். ஆனால், வற்றாத நதியாக அவர் நமக்குள் இன்று இருக்கிறாரா? நமக்குள்ளிருந்து புறப்படுகிறவைகள் அவரைப் பிரதிபலிக்கிறதா? இல்லையானால் இன்றே ஆண்டவரிடம் நம்மை ஒப்புவிப்போமாக. பரிசுத்தாவியானவர் நம்மை நிறைத்து வழிநடத்துவாராக.

*வாசிப்பு:*
யோவான் 7:37-42

*ஜெபம்:*
"பிதாவே, இதோ உமதாவியினால் என்னை உமக்குச் சாட்சியாகவும் பிறருக்குப் பயனுள்ளவனாகவும் வாழ வழி நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
16
சனி

# அன்பான அணுகுமுறை

'இயேசு அவளை நோக்கி, நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ. இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.' (யோவான் 8:11)

நம்மைச் சூழ இருக்கும் பலதரப்பட்ட மக்களுடன் நமது அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பதைச் சிந்தித்துப்பார்ப்பது நல்லது. ஒருமுறை இயேசு தேவாலயத்தில் உட்கார்ந்து போதித்துக்கொண்டிருந்தார். அப்போது, சில வேத பாரகரும் பரிசேயரும் விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயைப் பிடித்து வந்து, நடுவே நிறுத்தினர். எல்லோருக்கும் நடுவே அவள் நிர்க்கதியாக நின்றாள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி இவள் கல்லெறிந்து கொல்லப் படவேண்டும் என்று சொல்லி, 'நீர் என்ன சொல்லுகிறீர்' என்று இயேசுவைச் சோதிக்கும்படி பரிசேயர் ஒரு கேள்வியைக் கேட்டனர். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகின்ற உத்தம மனம் அவர்களிடம் இல்லை என்பதையும், தம்மில் குற்றம்பிடிப்பதற்காக இந்தப் பெண்ணைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும் அறிந்த ஆண்டவரோ, "உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் கல் எறியக் கடவன்" என்று கூறி, குனிந்து தரையில் எழுதிக்கொண்டிருந்தார். வந்தவர்களோ தாங்களே தங்கள் மனச்சாட்சியில் குத்துண்டு போய்விட்டார்கள். இயேசு அப் பெண்ணிடமும், "இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறி அனுப்பிவிட்டார்.

இயேசுவிடம் காணப்பட்ட அணுகுமுறை, உலகிற்கு அவர் வந்த நோக்கம், பாவியில் அவர் கொண்டிருக்கிற கரிசனை என்பவற்றை யோவான் இந்த இடத்தில் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். இயேசு ஒருபுறம்; குற்றம் சாட்டுகின்ற ஒரு கூட்டமும், நியாயப்பிரமாணமும் இன்னொருபுறம். இவற்றின் நடுவில் குற்றவாளியான ஒரு பெண். இயேசு மோசேயின் சட்டத்தில் பிழைகூறவில்லை. பரிசேயரிலும் குற்றம் சாட்டவில்லை. பரிசேயரின் உள்நோக்கை அறிந்தவர், தாங்களே தங்களை உணரும்படி ஒரு சோதனை வைத்தார். குற்றம் சுமத்தியவர்களோ திரும்பிப் போய்விட்டார்கள். குற்றவாளியான ஸ்திரீயையும் குற்றமற்றவளாக விடுவிக்கவில்லை. அவளை மன்னித்து, 'இனிப் பாவம் செய்யாதே' என்று சொல்லித்தான் இயேசு அனுப்பினார். இயேசுவின் இந்த அணுகுமுறை எவருக்கும் தீங்கு செய்யவில்லை. ஒவ்வொருவரும் தாங்களே தங்களை உணருவதற்கு உதவியது. இந்தச் சம்பவம் இயேசுவே இரட்சகர் என்றும், பாவத்தை வெறுத்து, பெலவீன பாவிகளை நேசிக்கிறவர் என்றும் காட்டுகிறது.

*வாசிப்பு:* யோவான் 8:1-11

ஒரு குற்றவாளியைப் பார்க்கும்போது நமது அணுகுமுறை என்ன? நாம் குற்றமற்றவர்கள்போலவும், அவர்களே குற்றவாளிகள்போலவும் பார்க்கிறோமா? பாவமே இல்லாத இயேசுவே பாவியான ஸ்திரீக்கு நல்வழி காட்டினார் என்றால், நாம் என்ன செய்யவேண்டும்? இயேசுவைப்போன்ற அணுகுமுறையில் நாம் இயேசுவின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறோமா? அல்லது, நாமும் பரிசேயரா?

*ஜெபம்:*
"பிதாவே, பிறரைக் குற்றப்படுத்தும் மனதை என்னைவிட்டு அகற்றி, இயேசுவின் சுபாவத்தைத் தரித்து, பெலவீனரையும் தாங்கும்படி என்னைப் பெலப்படுத்தும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
17
ஞாயிறு

# உலகத்தின் ஒளி

'நான் உலகத்திலிருக்கையில் உலகிற்கு ஒளியாயிருக்கிறேன்...'
(யோவான் 9:5)

கண்ணில் ஒரு சிறு உறுத்தல் என்றாலே உடனே வைத்தியரிடம் ஓடுகிறோம். சரீரக் கண்களின் அவசியத்தை உணருகிற நாம், நமது ஆவிக்குரிய கண்களைக் குறித்துக் கரிசனையற்றிருப்பது ஏன்? சரீரக் கண்கள் குருடாயிருந்தால் இந்த உலகத்தைத்தான் பார்க்கமுடியாது. ஆனால், நமது ஆவிக்குரிய கண்கள் குருடாய்ப்போனால் நித்தியத்தையே பார்க்கமுடியாது.

அன்றைய பரிசேயருக்கும் கண்கள் இருந்தும் குருடரைப்போலவே காணப்பட்டனர். இயேசு, ஒரு பிறவிக் குருடனைக் கண்டு, தரையிலே துப்பி, சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களில் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அவன் அப்படியே செய்து பார்வையடைந்தான். நடந்தது இதுதான். பரிசேயருக்கோ, அவனுடைய கண்கள் திறக்கப்பட்டது ஒரு பொருட்டல்ல; அது ஒரு ஓய்வுநாள் என்பதே பெரிய பிரச்சனையாயிருந்தது. அதனால், இயேசு தேவனிடத்திலிருந்து வந்தவரல்ல என்றனர். அந்த மனிதனோ அவரே குணப்படுத்தினார், "அவர் தீர்க்கதரிசி" என்று உறுதியாகச் சொன்னான். அவன் தான் பெற்றுக்கொண்ட புதிய வாழ்வை அனுபவிக்க அனுபவிக்க, தன்னைக் குணப்படுத்தியவரிடம் அவன் உறுதியான நம்பிக்கைகொள்ளத் தொடங்கியிருந்தான். அந்த நம்பிக்கை உறுதிப்பட உறுதிப்பட அவனுடைய சரீரக் கண்கள் மாத்திரமல்ல, "அவர் தீர்க்கதரிசி" (யோவா. 9:17) என்று சொன்னபோதே அவனுடைய ஆவிக்குரிய கண்களும் திறவுண்டன. இதனால் அவன் பரிசேயருக்குப் பயப்படவுமில்லை. தாய் தகப்பன்மார் பின்வாங்கியதைக் குறித்தோ, ஜெபஆலயத்திலிருந்து தள்ளப்பட்டதைக் குறித்தோ கவலைப்படவுமில்லை. அவனை இயேசு கண்டார். அவன் "ஆண்டவரே" என்று சொல்லிப் பணிந்துகொண்டான்.

இவனுடைய சரீரக் கண்களுடன், ஆவிக்குரிய கண்களும் ஒளிபெற்றதால் இயேசுவை ஆண்டவரகக் கண்டான். ஆனால், சரீரக் கண்களில் குருடில்லாத பரிசேயரோ இயேசு செய்தவற்றைக் கண்டும், மதவைராக்கியத்தாலும், பெருமையாலும் அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் குருடாக்கபபட்டிருந்ததால், இயேசுவை ஆண்டவராக அவர்களால் பார்க்கமுடியவில்லை. அந்தக் மனிதன் பெற்றுக்கொண்ட உண்மையான ஒளியைத் தரவல்லவர் இயேசு ஒருவரே. இன்று நாமும் பரிசேயரைப்போல கண்களிருந்தும் குருடராயிருக்கிறோமா? அல்லது, நமது ஆவிக்குரிய கண்களும் ஒளி பெற்றிருக்கின்றதா? "உலகத்திலே வந்து, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாகிய..." (யோவா.1:9) இயேசு தாமே நமது ஆத்துமாவையும் ஒளியடையச் செய்யும்படி நம்மை ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 9:26-41

*ஜெபம்:*
"தேவனே!
இருளடைந்திருக்கும்
என் ஆவிக்குரிய
கண்களை ஒளியாகிய
இயேசுவின்
வார்த்தைகளுக்கூடாக
ஒளியடையச் செய்யும்.
ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
18
திங்கள்

# நல்ல மேய்ப்பன்

'நானே நல்ல மேய்ப்பன்.. நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்.'
(யோவான் 10:14.15)

இந்த நவீன காலத்தில் நமது வேலைகளை இலகுவாக்கும்படி நாளுக்கு நாள் பலதரப்பட்ட நவீன கருவிகள் உருவாக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இந்த ரீதியில் ஆட்டு மந்தைகளை வைத்திருப்பவர்களும்கூட தமது ஆடுகளை அறிந்துகொள்ளவும், தொலைவிலுள்ள ஆடுகளைத் தம்மிடம் வரவழைக்கவும் தொலைவிற்குச் செல்லக்கூடிய ஒலி உபகரணங்கள் போன்றவற்றைப் பிரயோகிப்பதைத் தொலைக்காட்சியில் காண்கிறோம். தமது மந்தையைக் காவல் காக்கவும், அவற்றைத் திரும்பவும் தொழுவத்திற்கு இட்டுச் செல்லவும் நாய்கள் பழக்குவிக்கப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

ஆனால், உண்மையான ஒரு மேய்ப்பனுக்கும் அவனுடைய ஆடுகளுக்கும் உள்ள உறவு வித்தியாசமானது. மேய்ப்பர்கள் தாமே தமது மந்தையை மேய்ப்பார்கள். ஆடுகளும் தமது மேய்ப்பர்களின் சத்தத்தை அறிந்து, தமது மேய்ப்பரைப் பின்தொடர்ந்து செல்லுவது ஒரு அற்புத காட்சி. இரவிலும் வயல் வெளியில் தங்கி தமது மந்தையைக் காக்கிறவர்களும் உண்டு. இது மேய்ப்பர்களுக்கும் அவர்களுடைய ஆடுகளுக்கும் இடையிலுள்ள நெருக்கமான தொடர்பை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன், ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளில் எத்தனை கரிசனையுடையவன் என்றும், ஆடுகள் தம் மேய்ப்பனில் எவ்வளவு தூரம் தங்கி வாழுகின்றன என்பதையும்கூட இது எடுத்துக்காட்டுகின்றது.

தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான தொடர்பும் இப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதாகவே, இயேசு தம்மை ஒரு நல்ல மேய்ப்பனாகவும், நம்மை அவருடைய மந்தையின் ஆடுகளாகவும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். நல்ல மேய்ப்பனை ஆடுகள் எப்படி அறிந்திருக்கிறதோ, அப்படியே நமது மேய்ப்பராகிய கிறிஸ்துவை நாமும் அறியவேண்டும் என்றும், தமது பிள்ளைகள் தம்மை அறிவார்கள் என்றும் தெளிவுபடுத்தினார்.

நல்ல மேய்ப்பனான இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நம்மை அவர் நன்கு அறிவார். ஆனால் அவரை நாம் முழுமையாக அறிந்திருக்கிறோமா! அதற்காக, அவரது சத்தத்தைக்கேட்டு, அதற்குக் கீழ்ப்படிந்து வாழும்படிக்கு தினமும் அவர் பாதம் அமர்ந்திருக்கிறோமா? அவர் சத்தத்தை எப்படிக் கேட்க முடியும்? பரிசுத்த வேதமே அவர் சத்தம். தினமும் நாம் வேதத்தை வாசிக்கும்போது வேத வார்த்தைகளுக்கூடாக நல்ல மேய்ப்பனான இயேசு நம்மை வழிநடத்துவதை நம்மால் உணரமுடியும். அதற்குக் கீழ்ப்படியும்போது, ஆடுகளுக்கும் மந்தைக்கும் உள்ள உறிவிலும் மேலான உறவை நம்மால் அனுபவிக்கமுடியும்.

*வாசிப்பு:*
யோவான் 10:1-18

*ஜெபம்:*
"தேவனே! நல்ல மேய்ப்பனான இயேசுவின் சத்தத்தை வேதத்திற்கூடாகத் தினமும் கேட்டு கீழ்ப்படிந்து நடக்க என்னை அர்ப்பணிக்கின்றேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
19
செவ்வாய்

# இவரே நல்ல மேய்ப்பன்

'உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால். ....ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?' (லூக்கா 15:4)

ஒரு நல்ல மேய்ப்பன், தன் ஆடுகளைத் திருப்தியாகப் போஷிக்கிறான்; முன்சென்று, பாதையைக் காண்பித்து, வழிநடத்துகிறான். துஷ்ட மிருகங்களிடமிருந்து மந்தையைப் பாதுகாக்கிறான். இவை அவனுடைய முக்கிய கடமைகள். இன்னுமொரு முக்கிய பொறுப்பும் மேய்ப்பனுக்கு உண்டு என்பதை இயேசு கூறிய காணாமற்போன ஆட்டின் உவமையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்.

இயேசு பாவிகளுடனும், ஆயக்காரருடனும் சாப்பிட்டு, அவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறார் என்று பரிசேயர் முறுமுறுத்தபோது, இயேசு இந்த உவமையைச் சொன்னார். அதாவது, நூறு ஆடுகளை உடைய ஒரு மேய்ப்பன், அவற்றில் ஒன்று தொலைந்துபோனாலும், ஏனைய ஆடுகளை விட்டுவிட்டு, தொலைந்துபோன அந்த ஒரு ஆட்டைத் தேடித்திரிவான். அதைக் கண்டுபிடித்த பின்பு, தன் சிநேகிதர்கள் அயலார்களையும் அழைத்து, கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டினிமித்தம் சந்தோஷப்படுவான் என்றார் இயேசு. போஷிப்பது மாத்திரமல்ல, தொலைந்துபோனதைத் தேடி மறுபடியும் மந்தையில் சேர்ப்பதும் ஒரு நல்ல மேய்ப்பனின் கடமை. ஆம், மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப்பார்க்கிலும், மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று இயேசு இந்த உவமையை விளக்கினார். தொலைந்துபோன தமது பிள்ளைகளைத் தேடித் தம் மந்தையில் சேர்க்கின்ற ஒரு நல்ல மேய்ப்பனாக இயேசுவை நாம் இங்கே காண்கிறோம்.

நீங்கள் ஒரு சபையின் மேய்ப்பனாகவோ, அல்லது ஒரு ஊழியத்தின் தலைமத்துவத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவராகவோ இருக்கலாம். அல்லது, ஒரு ஸ்தாபனத்தை நடத்துகிறவராகவோ, ஒரு குடும்பத் தலைவராகக்கூட இருக்கலாம். உங்களில் நல்ல மேய்ப்பன் இயேசுவின் சிந்தை உண்டா? உங்கள் பொறுப்பிலுள்ள மந்தைகள் நலமாக உள்ளனவா என்பதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குரியது. ஆனால், குடும்ப வட்டத்துக்குள்ளேயே இன்று பல ஆடுகள் தொலைந்துபோயிருக்கலாம். அவர்களை நீங்கள் ஏன் தேடிக் கண்டுபிடிக்கக்கூடாது! குடும்பத்தை, தொழிலாளரைப் போஷிப்பது நல்லதுதான். சபை மக்களுக்குத் தேவையான காரியங்களைக் கவனிப்பதும் அவசியம். அத்துடன் நமது பொறுப்பு நின்றுவிடவில்லை. தொலைந்துபோன, மனதிலே காயப்பட்டிருக்கிற நமது பொறுப்பிலுள்ளவர்களையும் தேடிக் கண்டுபிடித்து அன்புடன் சேர்த்துக்கொள்வதும் நமது கடமைதான். அதனாலுண்டாகும் சந்தோஷம் மிகப் பெரிது. இந்த லெந்து நாட்களில் தொலைந்துபோன ஆத்துமாக்களைத் தேடிக் கண்டுபிடிப்போமா! ஆண்டவரும் நம்மில் மகிழ்ந்திருப்பார்!

*வாசிப்பு:*
லூக்கா 15:1-7

*ஜெபம்:*
"தேவனே!
தொலைந்துபோன
எனது பொறுப்பிலுள்ளவர்களைத் தேடிக்
கண்டுபிடித்து மறுபடியும்
உமது மந்தையில்
சேர்க்க என்னை நீரே
நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
20
புதன்

# ஜெப ஜீவியம்

இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து. பிதாவே வேளை வந்தது...
(யோவான் 17:1-2)

இயேசு கிறிஸ்துவையும், அவர் வைத்துச்சென்ற மாதிரிகளையும் யோவான் தன் சுவிசேஷத்தில் பல கோணங்களில் விளக்கியுள்ளார். அவற்றில் மிக முக்கியமானது, நமது ஜெபஜீவியத்திற்கும் ஆண்டவர் ஒரு மாதிரியை வைத்துப்போனார் என்பதே. 17ம் அதிகாரத்தில் யோவான் குறிப்பிட்டு எழுதியுள்ள இயேசுவின் இந்த ஜெபத்தை வேறு சுவிசேஷங்களில் காணமுடியாது.

தாம் மரிக்கும் வேளை மிகவும் நெருங்கிவிட்டது என்பதை அறிந்த இயேசு, தமது மரணத்திற்கு முன்பு, அந்நாட்களிலும் பின்வரும் காலங்களிலும் நடக்கப்போகும் காரியங்களையும், அறிகுறிகளையும் சீஷர்களுக்கு விளக்கினார். பின்பு தமது கண்களை வானத்திற்கு நேராக ஏறெடுத்து, தன் பிதாவை நோக்கி ஜெபித்தார். இயேசுவின் இந்த ஜெபத்தில் மூன்று பகுதிகளைக் காண்கிறோம். ஒன்று, தமக்காக, பின்னர் தமது சீஷர்களுக்காக, அடுத்தது, தம்மை விசுவாசித்த அனைவருக்காகவுமாக இயேசு ஜெபித்தை யோவான் எழுதிவைத்துள்ளார். ஆண்டவர் அன்று மாத்திரமல்ல, இன்றும் என்றும் தம்முடைய பிள்ளைகள் அனைவருக்காகவும் பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து ஜெபித்துக்கொண்டேயிருக்கிறார் (ரோமர் 8:34).

இயேசு செய்த இந்த உருக்கமான ஜெபத்தோடு இன்று நாம் செய்கின்ற ஜெபங்களை ஒப்பிட்டுப்பார்ப்போமா! அதிகமாக நமக்காகவும் நமது குடும்பத்திற்காகவுமே நாம் ஜெபிப்பதுண்டு. நமக்காக ஜெபிக்கத்தான் வேண்டும். ஆனால், நமக்காக மட்டும் ஜெபிக்கக்கூடாது. இயேசு காட்டிய மாதிரியைப் பின்பற்றி, மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இது ஒவ்வொரு கிறிஸ்தவனினதும் கட்டாய பொறுப்பு. இதைத்தான் பவுல் அப்போஸ்தலனும், "எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்" (1தீமோ.2:1) என்று தீமோத்தேயுவுக்குக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

விசேஷமாக, இந்த லெந்து நாட்களில் நமது ஜெப ஜீவியத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமாக. இந்த ஜெபநேரங்கள் நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கும், வளர்ச்சிக்கும், சொந்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் ஏற்றதாய் மாத்திரம் இருக்கிறதா? அது போதாது. தேவ பாதம் அமர்ந்திருந்து, தேவனுக்கடுத்த காரியங்களைச் சிந்தித்து, பிறருக்காக ஜெபித்தும், இயேசுவின் மாதிரியைப் பின்பற்றியும் நமது ஜெப ஜீவியத்தைக் கட்டி எழுப்புவோமாக. தேவாவியானவர் நமக்கு நிச்சயம் துணைசெய்வார்.

*வாசிப்பு:*
யோவான் 17:1-26

*ஜெபம்:*
"பிதாவே, இயேசுவின் ஜெப ஜீவியத்தையும் அவரது மாதிரியையும் பற்றிக்கொண்டு, ஜெபத்தில் என்றும் நிலைத்திருக்க கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
21
வியாழன்

# உபத்திரவத்திலும் நம்பிக்கை

...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். (யோவான் 16:33)

கிறிஸ்துவின் பிள்ளைகள் உபத்திரவப்படவேண்டுமா என்ற கேள்வி பலருக்கும் எழுவதுண்டு. அது கூடாது என்று வாதிடுவோரும் உண்டு. ஒரு கிறிஸ்தவன் உபத்திரவங்களுக்கூடாகக் கடந்து சென்றால், அவன் ஏதோ பாவம் செய்திருக்கிறான் என்றுகூடக் கூறுவோரும் உண்டு. ஆனால் இப்பாடுகளைக் குறித்து இயேசு என்ன கூறினார், அவர் எப்படி நமக்கு மாதிரியை வைத்துப் போனார் என்று யோவான் கூறுகிறார் என்று சிந்திப்போம்.

ஏற்கனவே தாம் சீஷருக்குச் சொன்ன பல விடயங்களை இயேசு ஒன்று திரட்டிக் கூறியதை இன்றைய வாசிப்புப் பகுதியில் நாம் அவதானிக்கலாம். தமக்கு சீஷனாயிருப்பவனுக்கு இவ்வுலகில் உபத்திரவம் வருவதைத் தவிர்க்க முடியாது என்றும், சோர்ந்துபோகாமல் முகங்கொடுக்கும்படிக்கும் இயேசு தமது சீஷரை உற்சாகப்படுத்துவதையே இங்கே காண்கிறோம். எந்த உபத்திரவத்திலும் அவர்கள் தனித்து நிற்கப்போவதில்லை என்றும், தாம் அவர்களைக் கைவிடுவதில்லை என்றும் இயேசு உறுதியளிப்பதையும் காண்கிறோம்.

மாத்திரமல்ல, தமக்கு வந்த உபத்திரவங்களில் இயேசு நமக்கு ஒரு மாதிரியையும் வைத்துள்ளார். அவர் தேவகுமாரனாயினும், மனுஷனாய் இவ்வுலகிற்கு வந்ததினிமித்தம் பல உபத்திரவங்களைச் சந்தித்தார். பரிசேயர், வேதபாரகர், சபையின் மூப்பர்கள் யாவரினதும் எதிர்ப்புகளையும் பொய்க் குற்றச்சாட்டுக்களையும் தமது ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை இயேசு எதிர்கொண்டார். மரணவேளையிலும் தமது சரீரத்தில் எத்தனையாய் உபத்திரவப்பட்டு மரணத்தைத் தழுவிக்கொண்டார்! அவர் தமது ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றிலும் உபத்திரவப்பட்டார். ஆனாலும், பிதா அவரைக் கைவிடவில்லை. உபத்திரவம் முடிவல்ல; இயேசு மரணத்தை ஜெயமாக்கி உயிரோடு எழுந்தாரே!

இன்றும் தேவஊழியர்கள் பலர் பல நாடுகளிலும் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பல உபத்திரவங்களுக்கூடாகக் கடந்துசெல்லுகிறார்கள். சில குறிப்பிட்ட நாடுகளில் தேவபிள்ளைகள் மிகவும் துன்புறுத்தப்படுவதை மறுக்கமுடியாது. ஆனாலும், ஆண்டவர் ஒரு திடநம்பிக்கையைத் தந்துபோயுள்ளார். "...திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" என்றார் இயேசு. ஆம், இயேசு உலகத்தை ஜெயித்துவிட்டார். எந்த சூழ்நிலையிலும் இந்த வெற்றியை நினைவுகூருவோமாகில், கிறிஸ்துவினிமித்தம் எவ்வளவுதான் உபத்திரவம் நேரிட்டாலும் நமது இருதயத்தின் சமாதானத்தை எதுவுமே அசைத்துவிட முடியாது. ஏனெனில், ஆண்ட வர் நம்மோடுகூடவே இருக்கிறார். இதுவே நமது விசுவாசம்.

*வாசிப்பு:*
யோவான் 16:31-33

*ஜெபம்:*
"தேவனே! எந்த உபத்திரவத்திலும் கிறிஸ்துவின் வார்த்தைகளால் என்னைப் பலப்படுத்தி முன்செல்ல உம் கிருபை தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
22
வெள்ளி

# மறுதலிப்பு வேதனை தரும்!

...சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோவான் 13:38)

தெரிந்த ஒருவரைத் தெரியாது என்று கூறுவது எப்படி? இது வேதனையான ஒரு விடயம். பேதுரு இயேசுவுக்கு மிகவும் நெருங்கிய சீஷன். "நீர் கிறிஸ்து" (மாற்.8:29) என்று தயக்கமின்றி அறிக்கை செய்தவன் இந்தப் பேதுருதான். ஆனால், இயேசு பிடிக்கப்பட்ட அந்த இராத்திரியில் பிரதான ஆசாரியனின் அரண்மனையில் குளிர்காய்ந்து கொண்டிருந்தவேளையில், இயேசுவோடுகூட இருந்த சீஷர்களில் அவனும் ஒருவன் என்று அடையாளம் காணப்பட்டபோது, "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்று கூறிய இந்தப் பேதுரு, "நான் அவரை அறியேன்" என்று மூன்று தடவைகளாக மறுதலித்தான் (யோவா.18:15-27). அப்போது, சேவல் கூவிற்று. பேதுரு தம்மை மறுதலிப்பான் என்று இயேசு முன்னரே கூறியிருந்ததால், அவர் சொன்ன அடையாளமாகவே சேவலும் கூவ, இயேசு சொன்னதை நினைத்து பேதுரு மனம் கசந்து அழுதான் என்று யோவான் குறிப்பிட்டுள்ளார். எத்தனை வேதனையான காரியம்!

பேதுரு தன் சுயத்தில் அதிகம் நம்பிக்கை வைத்திருந்தான். அதனால் தான், "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்றான். மற்றவர் களைவிட தன்னால் எந்த சூழ்நிலையையும் எதிர்நோக்கமுடியும் என்றதொரு நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. அவன் சொன்ன வார்த்தையே பேதுருவுக்குச் சோதனையாக அமைந்தது. ஜீவனைக் கொடுப்பேன் என்றவன், தன் ஜீவனைக் காக்கும்படி இயேசுவை மறுதலித்துவிட்டான். அவனுக்குள் உண்டான பயம், இயேசுவோடிருந்த நெருங்கிய உறவையும் மறக்கச் செய்தது.

அன்றுமட்டுமல்ல, இன்றும்கூட பேதுருவைப்போன்று எத்தனைபேர் தமது சுயபெலத்தில் தங்கி வாழுகிறார்கள்! அதனால், தருணத்தில் தமது சாட்சியை இழந்துபோகிறார்கள். கிறிஸ்துவை அதிகம் நேசிப்பதாகவும், அவருக்காக எதையும் செய்வதாகவும் கூறுவார்கள். ஆனால், கிறிஸ்தவன் என்பதால் சமுதாயத்தில் தமக்குரிய இடத்தை இழக்கநேரிடும் அபாயம் ஏற்படும்போது, அச்சோதனையை எதிர்கொள்ளமுடியாமல், பயத்தின் நிமித்தம் கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். இப்படியிருக்க, நமது காரியம் என்ன? அவசரப்பட்டு வார்த்தைகளை உளறிவிட்டு, பின்னர் அதைச் செய்யமுடியாமல் திண்டாடக்கூடாது. தருணத்தில் நாமும் ஆண்டவரை மறுதலிப்போமானால், அது நமக்கும் ஆண்டவருக்கும் வேதனையைத்தான் கொண்டுவரும். எந்த சூழலிலும் ஆண்டவரைப் பற்றிக்கொண்டிருக்கும்படி தேவபெலத்தை நாடி நம்மை ஒப்புவிப்போமாக. பேதுருவைப்போல மறுதலித்து, பின்னர் மனமடிவுக்குள்ளாகாதபடி, எந்த நிலையிலும் ஆண்டவருக்குச் சாட்சியாக வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 13:31-38

*ஜெபம்:*
"தேவனே! இயேசுவை மறுதலிக்கக்கூடிய சோதனைகள் வந்தாலும், அதை மேற்கொண்டு, என்றும் உமக்கே சாட்சியாக வாழ என்னைப் பெலப்படுத்தும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
23
சனி

# உள்ளுணர்வு உணர்வடையட்டும்!

...மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ...இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் (யோவான் 12:3)

பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாட்களுக்கு முன்னே, ஒரு இராவிருந்திலே இயேசு இருந்தார். பெத்தானியா மரியாள், விலையேறப்பெற்ற தைலத்தை அவருடைய பாதங்களில் பூசி, தன் தலைமயிரினால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் என்று வாசிக்கிறோம். இச் சம்பவத்திலிருந்து, மரியாளின் பூரண ஒப்புக்கொடுத்தல், இயேசுவில் அவளுக்கிருந்த அன்பு, பக்தி எல்லாமே தெரிகிறது. ஆனால், இந்த சம்பவத்தில் இன்னுமோரு முக்கிய விடயத்தை நாம் புரிந்துகொள்வது அவசியம். இந்தச் செய்கையால், பணம் விரயமாகிறது என்று யூதாஸ் முறுமுறுத்தபோது, மரியாள் எதுவும் பேசவில்லை. ஆனால் இயேசு பேசினார். "என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" என்றார். இந்தப் பஸ்கா பண்டிகையின்பின் இயேசு சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார். அப்படியானால் இயேசுவின் மரணம் சமீபித்துவிட்டது என்று மரியாளுக்கு எப்படித் தெரியும்? அவள் அதற்காகத்தான் இதனைச் செய்தாள் என்று இயேசு அவளுக்காகச் சாட்சி பகர்ந்தது எப்படி?

இயேசு பல தடவைகள் தமது மரணத்தைக் குறித்தும், உயிர்த்தெழுதலைக் குறித்தும் சொன்னபோதும், சீஷர்கள் அதனை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. வேதாகமத்திலே நாம் மூன்று இடங்களில் இந்த பெத்தானியா மரியாளைச் சந்திக்கிறோம்.(லூக்.10:39; யோவா.11:32; 12:3) அந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் மரியாள் இயேசுவின் பாதத்தில்தான் இருந்தாள் என்பதைக் கவனிக்கவேண்டும். அவள் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டாள், விசுவாசித்தாள், உணர்ந்தாள். அவளுடைய உள்ளுணர்வு இயேசுவின் உள்ளத்துடன் இணைந்திருந்தது. இயேசுவும் அவளுடைய உள்மனதை அறிந்திருந்தார். இதுதான் அவளை இந்தக் காரியத்தைச் செய்ய உந்தித் தள்ளியது. அவளும் தான் செய்யக் கூடியதை சரியான நேரத்தில் செய்தாள்.

இன்று நாமும் தேவபாதம் அமர்ந்து வேதத்தைப் படிக்கிறோம், தியானிக்கிறோம். நல்லது. ஆனால், எதற்காகக் கற்றுக்கொள்கிறோம்? பட்டப்படிப்புக்காகவா, அறிவுக்காகவா, பிறருக்குப் போதிப்பதற்கும், வேதத்தைக் கற்றுக்கொடுப்பதற்குமா? இதுவும் நல்லதுதான். ஆனால், இது நமது மூளை அறிவை வளர்க்குமே அல்லாமல், தேவனுடைய உள்ளத்தை நமக்கு உணர்த்தாது. நமது உள்ளுணர்வு தேவனுடைய இருதய பாரத்தை உணருமளவுக்கு, தேவனுடைய வார்த்தை நமது வாழ்வில் கிரியை செய்ய நாம் இடமளிக்காவிட்டால் பலன் என்ன? ஆகவே, தேவபாதத்தில் அமர்ந்திருந்து உள்ளான இருதயத்தோடு தேவவார்த்தையைத் தேவனிடமிருந்தே கற்று, அவருக்கேற்ற கிரியையை நடப்பிப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 12:1-11

*ஜெபம்:*
"தேவனே! வேதத்தை வாசிக்கும்போது, உமது இருதயத்தின் பாரத்தை உணர என் உள் உணர்வை விழிப்படையச் செய்து உம் கிருபையினால் தாங்கும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
**24**
ஞாயிறு

# குருத்தோலை பிடிக்க ஆயத்தமா?

குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு..... ஓசன்னா. கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள். (யோவா 12:13)

அந்நாட்களில், ஒருவனின் நற்குணத்தையும், வெற்றியையும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு அடையாளமாக நாணயங்களிலும், சில முக்கியமான கட்டிடங்களிலும்கூட குருத்தோலைகளின் தோற்றத்தைப் பொறித்துகொள்வதுண்டு. சாலொமோன் ராஜா, ஆலயத்தின் சுவர்களில் பேரீந்து மரங்களின் சித்திரங்களைச் செதுக்கி வைத்தார் என்றும் வாசிக்கிறோம். (1ராஜா.6:29).

இயேசு, தமது கடைசிப் பஸ்காவை ஆசரிப்பதற்காக எருசலேமுக்குள் சென்றபோது, அதுவே தமது கடைசிப் பயணம் என்றுணர்ந்து, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படிக்கு ஒரு கழுதைக்குட்டியின்மேல் ஏறிச் சென்றார். அப்போது, ஜனங்கள் கேள்விப்பட்டு, "குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு "ஓசன்னா! கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று கூறி ஆர்ப்பரித்தார்கள் என்று யோவான் எழுதியுள்ளார். திரும்பவுமாக, யோவான், பரிசுத்தவான்களைக் குறித்துத் தான் கண்ட தரிசனங்களை விபரித்து எழுதிய போது, "இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன் (வெளி.7:9) என்றும் எழுதியுள்ளார்.

இன்று "குருத்தோலை ஞாயிறு"! இது நற்குணம் நிறைந்த இயேசுவை மக்கள் வெற்றிப்பவனியில் எருசலேமிற்குள் அழைத்துச்சென்றார்கள் என்பதை நினைவுகூரும் நாள். அன்றைய யூதரைப்போலவே, இன்று கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து ஆர்ப்பரிக்கின்ற நாமும், இன்றும் இயேசுவைச் சிலுவையில் அறைகிறோமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. என்றாலும், மரணத்தை வென்ற ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பதாக, கடைசி நாளிலே நிற்கும்படிக்கு ஆண்டவர் நமக்குக் கிருபை செய்திருக்கிறார். அந்த நாளிலே அந்தப் பெருந்திரள் கூட்டத்திலே நாமும் சேர்ந்து, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாகக்கடவது" என்று ஆர்ப்பரிப்போமா என்பதைச் சிந்திப்போமாக. நடந்தவற்றை நினைவு கூருவது நல்லது, பண்டிகைகளும் அவசியம். ஆனால், இவை வெறும் பண்டிகைகளாக மாத்திரம் முடிந்துவிடக்கூடாது. ஆகவே, இன்று நமது கைகளில் இருக்கும் இந்தக் குருத்தோலைகள் நமக்கு அர்த்தம் நிறைந்ததாக இருக்கிறதா என்பதைச் சிந்தித்து, வரப்போகிற அந்த நாளை நினைத்து நம்மை தேவபாதம் ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
யோவான் 12:12-19

*ஜெபம்:*
"பிதாவே, குருத்தோலையைப் பிடித்துச்செல்லும் என் கைகள், என்றும் உமது சமுகத்தில் உம்மை உயர்த்தும்படி என்றும் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
**25**
திங்கள்

# இருதயத்தைக் காண்கிறவர்

'இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.'
(லூக்கா 21:3)

ஆண்டவர் சகலத்தையும் காண்கிறவர். நமது செய்கைகள் சிறிதோ பெரிதோ அனைத்தையும் காண்பார்; நமது மனதையும் காண்பார். எருசலேமுக்குள் சென்ற இயேசு, தாம் மரிக்கப்போவதை அறிந்திருந்தும், தமது ஊழியத்தை நிறுத்தவில்லை. அந்தக் கடைசி வாரத்தில் எருசலேமிலே அநேக சம்பவங்கள் நிகழ்ந்தன. அதில் ஒன்றுதான் காணிக்கைப் பெட்டியருகே நடந்த சம்பவம். பெரிய பணக்காரர்கள் காணிக்கைப் பெட்டியில் காணிக்கை போட்டதைக் கண்ட இயேசு, ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டார். அவள் போட்டதோ இரண்டு காசுதான்; ஆனால் இயேசுவோ, "இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள்" என்று சொல்லி, அவளுடைய செய்கையை மெச்சினார் என்று லூக்கா எழுதியுள்ளார்.

இந்தச் சம்பவத்திலே நாம் முக்கியமாக மூன்று விடயங்களைக் கவனிக்கலாம். ஒன்று, காணிக்கையின் முக்கியத்துவம், அடுத்தது, ஒறுத்துக் கொடுக்கும் காணிக்கை, மற்றது, விசுவாசத்தோடு கொடுக்கும் காணிக்கை. உள்ளதிலிருந்து எடுத்து காணிக்கை போடுவது ஒன்று; குறைவிலிருந்தும் மனப்பூர்வமாகக் கொடுப்பது இன்னொன்று. இந்த விதவைப் பெண்ணோ தன் வறுமையிலிருந்து தனது ஜீவியத்துக்கு இருந்ததெல்லாவற்றையும் போட்டுவிட்டாள். அடுத்த வேளை உணவுக்கு அவளிடம் பணம் இருந்திருக்கும் என்பது சந்தேகமே. இயேசு அவள் போட்டது எவ்வளவு என்பதிலும்பார்க்க, அதைப் போட்ட அவளுடைய இருதயத்தைக் கண்டார். அவளுடைய பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், இந்தச் சம்பவம் வேதாகமத்தில் இடம்பெற்றிருப்பது பெரிய விடயம் அல்லவா! இன்றும் நாம் அவளைக் குறித்துப் பேசுகிறோமே.

'காணிக்கை' என்பதைக் குறித்து நமது மனப்பான்மை என்ன? அதைக் கடமை என்கிறோமா, அல்லது, கடன் என்கிறோமா? புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நாம் மனப்பூர்வமாகவும் மனரம்மியமாகவும், குறைவிலிருந்தும் தேவஊழியத்திற்கென்று கொடுக்கவேண்டியவர்கள். அப்படியிருக்க, குறைந்தது நமது உழைப்பில் பத்திலொன்றாவது தேவஊழியத்திற்கென்று கொடுக்கிறோமா? நாம் அள்ளிக் கொடுக்கிறவர்களாக இருக்கலாம், குறைவிலிருந்து கொடுக்கிறவர்களாகவும் இருக்கலாம். அதுவல்ல, நமது மனப்பான்மையே முக்கியம். முறுமுறுப்போடு அள்ளிக் கொடுப்பதிலும், கடமை தீர்க்க குறைவிலும் கொடுப்பதிலும் பலன் இல்லை. நமக்குள்ளதெல்லாம் தேவனுடையது. நமக்கென்று என்ன இருக்கிறது? ஆகவே, விசுவாசத்துடனும் மனப்பூர்வமாகவும் கொடுப்போம். தேவன் மிகுதியைப் பார்த்துக் கொள்வார். அந்த நம்பிக்கை ஒன்றே போதும்.

*வாசிப்பு:*
லூக்கா 21:1-4

*ஜெபம்:*
"தேவனே! குறைவோ நிறைவோ, மனப்பூர்வமாகவும் முழு இதயத்துடனும் உமது ஊழியத்திற்குக் கொடுப்பேன் என்று என்னை அர்ப்பணிக்கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
26
செவ்வாய்

# ஆலயம்

"என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.
(மத்தேயு 21:13)

"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் ...கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை" என்றார் பவுல் (அப்.17:24). கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது விரும்பியபோது, "எனக்கு ஒரு ஆலயத்தை ஏன் கட்டவில்லை என்று கேட்டேனோ" என்று கேட்டார் கர்த்தர் (2சாமு.7:7). ஆனால், ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, "கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று" (1ராஜா.8:11). ஆலயம் என்பது கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்டாலும், அது தேவபிள்ளைகள் ஒன்றுகூடி தேவனை ஆராதிக்கும் இடம். அதற்குப் பங்கம் விளைவிக்கும் எதனையும் கர்த்தர் விரும்பமாட்டார்.

எருசலேமுக்குள் ராஜரீக பவனியாகச் சென்று உட்பிரவேசித்த ஆண்டவர், தேவாலயத்தில் பிரவேசித்தார். புறவினத்தார் ஆலயத்தினுள் பிரவேசிக்கக் கூடாததால், அவர்கள் வந்து கூடி தேவனை ஆராதிக்க வெளிப்பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்தது. வியாபாரிகளும், காசு மாற்றிகளும் இந்த இடத்திலேதான் தங்கள் வியாபாரத்தை நடத்தினார்கள். இதனால் புறவின மக்கள் பின்தள்ளப்பட்டனர். மாத்திரமல்ல, இந்த வியாபாரிகள் பலிக்கான ஆடுகளையும் புறாக்களையும் அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதித்தனர். இதனால் சந்தடி அதிகமானது. ஆலயத்தில் காணப்படவேண்டிய அமைதியையும், ஜனங்களில் காணப்படவேண்டிய தேவபக்தியையும் காணமுடியவில்லை. ஆலயம் வியாபார ஸ்தலமாக மாறிவிட்டிருந்ததைக் கண்ட இயேசு கோபமாகச் செயற்பட்டார். எல்லோரையும் துரத்தி, எல்லாவற்றையும் கவிழ்த்துப்போட்டு, ஜெபவீட்டை, கள்ளர் குகையாக்கினீர்கள் என்று கடிந்துகொண்டார்.

இன்று நாம் ஆராதிக்கச் செல்லும் ஆலயங்கள், ஆராதனை ஸ்தலங்களாக இருக்கின்றனவா? அல்லது, வியாபார ஸ்தலங்களாக இருக்கின்றனவா? அன்றுபோல இன்று இல்லையென்றாலும், மறைமுகமான வியாபாரங்களினாலும், தேவனுக்குப் பிரியமற்ற இரகசிய ஆலோசனைகளினாலும், சதித்திட்டங்களினாலும், தவறான ஈடுபாடுகளினாலும் ஆண்டவர் சொன்னதுபோல இன்றும் பல ஆலயங்கள் கள்வர் குகையாக மாறிக்கொண்டிருப்பதை மறுக்கமுடியாது. தேவனுடைய பிள்ளைகள் ஒன்றுகூடி ஒரு சபையாக தேவனை ஆராதிக்கின்ற நமது ஆலயங்களை தேவனுக்கென்று பரிசுத்தமாக, தனித்துவமானவையாகப் பாதுகாப்போமாக. கண்ணுக்குத் தெரிகின்ற ஆலயத்தில் கலப்பு இருக்குமானால், நமது சரீரமாகிய ஆலயத்தை நாம் எப்படி தேவனுக்கென்ற பரிசுத்தமாகப் பாதுகாக்கமுடியும்?

*வாசிப்பு:*
மத்தேயு 21:12-17

*ஜெபம்:*
"தேவனே, நாம் ஒன்றுகூடி உம்மை ஆராதிக்கும் உமது ஆலயம் எப்பொழுதும் உமது மகிமையினால் நிறைந்து விளங்க உமதருள் தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
27
புதன்

# இயேசுவைச் சந்திக்க ஆயத்தமா?

'ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.' (மத்தேயு 25:10)

கைவிடப்பட்டநிலையில் அழுகின்ற குழந்தைகளைக் கண்டிருக்கிறீர்களா? 'கைவிடப்படுதல்' என்பது இருதயத்தைக் கிழித்துப்போடுகிற ஒரு விடயம். என்றாலும், உலக வாழ்விலே ஏற்படுகின்ற இந்தப் பிரிவின் துயர், சில சமயம் மாற்றத்திற்குள்ளாகி, திரும்பவும் ஒன்றுசேரும் வாய்ப்பு ஏற்படலாம். ஆனால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கைவிடப்படுவோமானால், பின்னர் அதைச் சரிப்படுத்திக்கொள்ளவே முடியாது. இயேசு எருசலேமில் இருந்த கடைசி வாரத்தில் அநேக காரியங்களைக் குறித்து சீஷரோடும் ஜனங்களோடும் பேசினார். அப்போது, தமது இரண்டாம் வருகைக்குரிய அடையாளங்களைக் குறித்தும், அதற்கு ஆயத்தமாயிருப்பது குறித்தும் விளக்கத் தவறவேயில்லை. அவற்றைக் குறித்து அறிந்திருக்கிற நாம், இன்று அவரைச் சந்திக்க ஆயத்தமா?

பரலோக ராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் என்றார் இயேசு. மணவாளனை எதிர்கொண்டு, அவரோடு திருமண ஊர்வலத்தில் சேர்ந்து வீட்டினுள் செல்லுவதற்குத்தான் தாங்கள் வந்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். இல்லையானால் அவர்கள் வழக்கப்படி தீவட்டிகளை எடுத்துச் சென்றிருக்கமுடியாது. நடந்தது என்ன? மணவாளன் வந்தார்; ஆனால், அவர்கள் நினைத்திருந்த நேரத்தில் வரவில்லை, வருகை தாமதமானது. அங்கேதான் பிரச்சனையே ஆரம்பமானது. எல்லோரும்தான் தூங்கினார்கள். ஆனால், திடீரென மணவாளன் தனது வேளையில் வந்தபோது, எந்த நேரத்திலும் மணவாளனை எதிர்கொள்ள ஏதுவாக, விளக்கு அணைந்துவிடாதிருக்க மேலதிக எண்ணெய் கொண்டுவந்தவர்கள் மணவாளனுடன் வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். எண்ணெய் ஆயத்தமாய் இல்லாதவர்களால் உள்ளேபோக முடியவில்லை. எண்ணெய் வைத்திருந்தவர்கள் இவர்களுக்குக் கொஞ்சமாவது கொடுத்திருக்கலாமே என்று நாம் நினைக்கலாம். அவர்கள் சொன்னது என்ன? "எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி...".

இங்கே இரண்டு முக்கிய விடயங்களைக் காணலாம். ஒன்று, நமது ஆத்துமாவுக்கு நாமேதான் பொறுப்பாளிகள். நாம் இயேசுவை வானிலே சந்திக்க வேண்டுமானால் நாமேதான் ஆயத்தமாகவேண்டும். அடுத்தது, ஆவிக்குரிய ஜீவியத்துக்கும், ஆண்டவரைச் சந்திப்பதற்குமான ஆயத்தங்களை கடையில் வாங்கவும் முடியாது, பிறருடன் பங்குபோடவோ, பங்கு கேட்கவோ முடியாது. மணவாளனின் வருகை நிச்சயமம் என்றால், ஆயத்தமாயிருக்கவேண்டியது நாமேதான். இன்று கிறிஸ்து வானில் தோன்றுவாரானால் நமது காரியம் என்ன?

*வாசிப்பு:*
மத்தேயு 25:1-13

*ஜெபம்:*
"தேவனே! இயேசுவின் இரண்டாம் வருகையை எப்போதும் நினைவிற்கொண்டு, அவரைச் சந்திக்க தினமும் ஆயத்தமாயிருக்கும்படி உமதாவியால் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
28
வியாழன்

# நினைவுகூரும்படி...

...என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்....'
(லூக்கா 22:19)

'நினைவுகூருதல்' என்பது, தெரியாத ஒரு விடயத்தை அல்ல; நினைவிலே இருப்பதை மறுபடியும் மீட்டு, நினைந்துகொள்வது. உணர்வுள்ள மனுஷனால் தான் தெரிந்துவைத்திருக்கிற எதனையும் இலகுவில் மறந்துவிட முடியாது. ஆனால், அதனை அலட்சியம் செய்து, மறந்துவிட்டதுபோல, அதன் தாற்பரியத்தை மறுதலித்து அவனால் வாழமுடியும். ஆகவேதான், இயேசு இவ் உலகில் தமது சீஷருடன் பங்குபற்றிய கடைசிப் பஸ்கா விருந்திலே, அப்பத்தையும் பானத்தையும் கொடுத்து, 'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்றார். இன்று கிழமைதோறும், மாதந்தோறும் திருவிருந்திலே பங்குபற்றுகின்ற நமது மனநிலை என்ன? முக்கியமாக, இயேசுவின் கடைசி இராப்போஜனப் பந்தியை நினைவுகூருகின்ற இன்று நாம் எதனை நினைவுகூருகிறோம்? அவர் ஒரு பரிகாரி என்றா? அல்லது, நமது தேவைகளைச் சந்திப்பவர், ஜெபத்தைக் கேட்கிறவர் என்றா? அல்லது, திருவிருந்துப் பந்தியிலும் நமக்கு விருப்பமற்றவர்களை எப்படித் தவிர்த்து பந்தியில் பங்குபற்றுவது என்றா?

என் இயேசு எனக்காக, என் பாவத்திற்குரிய தண்டனைக்காக, தமது சரீரம் கிழிக்கப்படுவதற்கும், தமது இரத்தம் சிந்தப்படுவதற்கும் தம்மையே கொடுத்தாரே; இதன்மூலம் அவர் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி, நம்மையும் பிதாவையும் ஒப்புரவாக்கினாரே! இதைத் தவிர வேறு எதை நாம் நினைவுகூரப்போகிறோம்? அல்லது, நினைவுகூரும்படி இயேசு நம்மைக் கேட்டுக் கொண்டார்? மாத்திரமல்ல, இந்தக் கடைசிப் பந்தியில் அவர் அமரும்போது, தமது சீஷரில் ஒருவனே தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று அறிந்திருந்தார்; ஒருவன் மறுதலிப்பான் என்றும் அறிந்திருந்தார். ஆனாலும், அந்த சீஷருக்கு முன்பாகவே தம்மைப் பணிவிடைக்காரனாய் தாழ்த்தி, அவர்களுடன்தான் இந்தப் பந்தியைப் பகிர்ந்துகொண்டார் என்பதை நாம் உணரவேண்டும்.

இன்று இந்தக் கடைசி இராப்போஜனப் பந்தியை நினைவுகூருகின்ற நாம் என்ன மனதோடே பந்தி அமரப்போகிறோம்? இயேசுவின் சிந்தை நம்மில் காணப்படுகிறதா? நமது தவறுகளை உணர்ந்து, நம்மை அர்ப்பணித்து, உண்மையான மனந்திரும்புதலுடன் இந்தப் பந்தியில் அமருவோமானால் நம் வாழ்வில் எத்தனை காரியங்கள் மாற்றமடையும்; சபையில் எவ்வளவாய் எழுப்புதல் உண்டாகும்! நாமோ, துணிகரமாய் இப் பந்திக்குச் செல்லுகிறோம். தேவனுடைய பந்தியை நாம் துச்சமாய் எண்ணுவது, தேவனையே துச்சமாய் எண்ணுவதுபோல என்பதை நாம் உணரவேண்டும். இயேசு எனக்காகவே மரித்தார் என்பதைத்தவிர வேறு எண்ணங்கள் நம்மை ஆட்கொள்ள விடாதிருப்போமாக.

*வாசிப்பு:*
லூக்கா 22:14-22

*ஜெபம்:*
"பிதாவே, எனக்காவே இயேசுவைப் பலியாகத் தந்தீர். பாவங்களை நான் அறிக்கைசெய்து இந்தப் பந்தியில் சேர என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
**29**
வெள்ளி

# சிலுவை தந்த மீட்பு

என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.
(மத்தேயு 10:22)

மறுபடியும் ஒரு பெரிய வெள்ளி தினத்தை நாம் சந்தித்திருக்கிறோம். இயேசு நமக்காக சிலுவை மரணத்தைத் தாமாகவே மனமுவந்து ஏற்றுக்கொண்டதை நினைவுகூருகின்ற இந்த நாளிலே, வேறு பல விடயங்களையும் நாம் தியானிப்பதுண்டு. அதிலே முக்கியமானது, சிலுவையில் அவர் கூறிய ஏழு வார்த்தைகள். அநேகமாக இந்த நாளிலே ஆலய ஆராதனைகளில் இந்த ஏழு வார்த்தைகளையும் நாம் தியானிப்பதுண்டு. அது நல்லது. ஆனால், வருடந்தோறும் நாம் தியானிக்கின்ற இந்த ஏழு வார்த்தைகளும் நமது வாழ்வைப் புதுப்பிக்க, அல்லது சீராக்க நாம் எவ்வளவுதூரம் விட்டுக்கொடுக்கிறோம் என்பது பெரிய கேள்வி. மறுபக்கத்தில், இன்று வெறுமையாகக் காட்சியளிக்கின்ற சிலுவையை நோக்கிப் பார்க்கின்ற நாம் சிந்திக்கவேண்டிய முக்கியமான காரியம் தான் என்ன? ஏழு வார்த்தைகளைக் கூறிமுடித்து தமது ஆவியை விட்டாரே இயேசு, அந்த மரணத்தையா? அல்லது அவருடைய மரணத்திற்கூடாக நாம் பெற்றுக்கொண்ட விலைமதிக்கக்கூடாத இரட்சிப்பையா?

இந்நாட்களில் இரட்சிப்பைக் குறித்துப் பல வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகிறது. சிலர், ஒருமுறை தன் பாவங்களை அறிக்கைசெய்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவன் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதால், அவன் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான் என்பர். இன்னும் சிலர், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன் தொடர்ந்தும் நன்மைகளைச் செய்து வாழ்ந்தால் போதும் என்பர். ஆனால், ஆண்டவரோ, "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" என்றார். இந்த வார்த்தையில் நாம் ஒரு காரியத்தைக் கவனிக்கவேண்டும். முடிவுபரியந்தம் உறுதியாய் நிற்பதுதான் இரட்சிப்பின் வழி அல்ல; மாறாக, ஒருவன் உண்மையாகவே ஆண்டவருக்குத் தன்னை அர்ப்பணித்திருப்பதன் சாட்சி கடைசிவரைக்கும் அவனில் வெளிப்படவேண்டும். அதுவே காரியம். உறுதியாய் நிற்பது என்பது இரட்சிப்பைச் சம்பாதிக்கின்ற, அல்லது தக்கவைக்கின்ற வழி அல்ல. மாறாக, நம்மை முழுமையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்ததன் அடையாளம். இதுவே சிலுவை தருகின்ற செய்தி.

*வாசிப்பு:*
எபிரெயர் 2:1-4

நமக்காக சிலுவையில் தமது ஜீவனைத் தந்த கிறிஸ்துவை ஆராதிக்கின்ற இந்த நாளிலே, அவர் நம் வாழ்விலே இருப்பதன் அடையாளம், அந்த அர்ப்பணிப்பின் உறுதி நம்மில் காணப்படுகிறதா என்பதைச் சிந்திப்பதே உகந்தது. மனந்திரும்புவோம்; வெறுமனே கிறிஸ்தவர்களாக இருந்தது போதும். கிருபையாய் நாம் பெற்ற இரட்சிப்பின் சாட்சி, நமது நாளாந்த வாழ்வில் வெளிப்பட தேவாவியானவர் தாமே நம்மைப் பெலப்படுத்தி நடத்துவாராக.

*ஜெபம்:*

"பிதாவே, உமது குமாரனின் சிலுவை மரணத்தினூடாக நீர் கிருபையாய் அளித்த இரட்சிப்பை முடிவுவரை காத்துக்கொள்ள என்மேல் கிருபையாய் இரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
30
சனி

# அலைமோதும் சிந்தனைகள்

ஆண்டவனே. அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது. மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது... (மத்தேயு 27:63)

இயேசு மரித்தபின் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, பிலாத்துவின் அனுமதி பெற்று, இயேசுவின் சரீரத்தைத் தான் புதிதாக வெட்டிய கல்லறையிலே அடக்கம்பண்ணினான். மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடம் வந்து, இயேசு தான் மூன்று நாளைக்குப்பின் உயிர்த்தெழுவதாகச் சொன்னது தமக்கு ஞாபகமாக இருக்கிறது என்றும், ஆகையால் சீஷர்கள் அவருடைய சரீரத்தைத் திருடிக்கொண்டுபோய், அவர் உயிரோடு எழுந்தார் என்று சொல்லாதபடிக்கும் கல்லறைக்குக் காவல் வைக்கவேண்டும் என்று கூறி அனுமதி பெற்று அப்படியே செய்தும்விட்டார்கள்.

இயேசுவின் மரணம் எல்லோருக்குள்ளும் வேறுபட்ட சிந்தனைகளை உருவாக்கியிருந்தது. ஜனங்கள் என்னதான் நினைத்திருந்தாலும், இயேசுவோடிருந்த பெண்கள் துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். சீஷர்களோ, தலைவன் போய்விட்டதால் பயந்து கலங்கி ஒடுங்கிப்போய்விட்டார்கள். மூன்றாம் நாள் உயிர்த்தெழுவதாக இயேசு சொன்னது அவர்களது ஞாபகத்திலேயே இல்லை. பிலாத்துவோ, தனது காரியம் முடிந்தது என்று அமைதியானான். ஆனால், பிரதான ஆசாரியரும், பரிசேயருமோ இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பயந்தார்கள். அவர்கள் அதனை நம்பவில்லை என்றாலும், சீஷர்கள் தந்திரமாக அந்தக் காரியத்தை அரங்கேற்றிவிடுவார்களோ என்று சந்தேகப்பட்டுப் பயந்தார்கள். அப்படியே நடந்தால், இதுவரை இயேசு மக்களை ஏமாற்றியதைப்பார்க்கிலும், இந்தக் காரியம் மிகக் கொடிதாக இருக்கும் என்று பயந்தனர். மூன்று நாள் கணக்கு இயேசு சொல்லியிருந்ததால், மூன்று நாளைக்குக் கல்லறையைப் பாதுகாக்க உத்தரவு கேட்டனர். உண்மையில் பார்க்கப்போனால், இயேசு கூறிய காரியங்கள் அவர்களை மெய்யாகவே கலங்கடித்துவிட்டது.

இன்று, இயேசு கல்லறையில் இல்லை. அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். அதனால்தான் இன்று நாம் ஜீவன் பெற்றிருக்கிறோம். அந்தப் பாக்கியத்தைக் கிருபையாய் பெற்று அனுபவிக்கின்ற நாம், இன்னமும் அந்த பிரதான ஆசாரியர் பரிசேயரின் மனநிலையில் வாழுவது எப்படி? ஆண்டவர் நமக்கு எல்லாவற்றையும் போதித்தும், மாதிரியாக ஜீவித்துக்காட்டியும் விட்டார். அப்படியிருக்க, இன்னமும் இயேசு கல்லறையில் இருப்பதுபோல நமது வாழ்வு இருப்பது ஏன்? சந்தேகமும், பயமும், தேவனுடைய வார்த்தைகளை நம்புவதற்குத் தயக்கமும் ஏன்? இயேசு சொன்னபடியே நடந்தது. அதனை விசுவாசிக்கின்ற நாம், தேவையற்ற பயம் சந்தேகம் யாவையும் அழித்துப்போட்டு, நமது விசுவாச வாழ்வில் வேரூன்றி, மேலே கனிகொடுத்து, தேவனை மகிமைப்படுத்துவோமாக.

*வாசிப்பு:*
மத்தேயு 27:62-66

*ஜெபம்:*
"பிதாவே, சந்தேகம் பயத்தினால் அலைமோதும் என் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி, விசுவாசத்தோடு முன்செல்ல என்மேல் கிருபையாய் இரும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச்
31
ஞாயிறு

# இயேசு உயிர்த்தெழுந்தார்!

அவர் இங்கேயில்லை. இதோ. அவரை வைத்த இடம்.
(மாற்கு 16:6)

சாவை வென்று உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், 'அனுதினமும் தேவனுடன்' வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். பாவத்தின் சம்பளம் செலுத்தப்பட்டு, மரணத்தின் கூர் ஒடிக்கப்பட்ட இந்த நாள் மனுக்குலத்துக்கே மகிழ்ச்சி நிறைந்த நாள். நித்திய நரகத்துக்கு நியமிக்கப்பட்ட நம்மை கிறிஸ்து மீட்டுக்கொண்ட இந்த நாள் கொண்டாடப்படவேண்டிய நாள். ஆகவே, அந்த மனநிறைவுடனும், உண்மையுள்ள உள்ளத்துடனும் ஒருவரையொருவர் வாழ்த்துவோமாக.

இயேசுவின் சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிடும்படிக்கு, வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் கல்லறைக்குச் சென்ற பெண்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. திறந்திருந்த கல்லறைக்குள் வெள்ளையங்கி தரித்திருந்த ஒரு வாலிபன் இருந்தான். பயந்துபோன இவர்களைப் பார்த்து, "இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார்" என்று அவன் சொன்ன செய்தி அவர்களை மேலும் திகிலடையச் செய்தது. இறந்துவிட்டார் என்று கலங்கியிருந்தவர்கள் இந்தச் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைந்திருக்கவேண்டும். ஆனால், இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்தச் செய்தியைக் கேட்ட அவர்கள் நடுக்கமும் திகிலுமடைந்தனர். கல்லறைத் தோட்டத்தில் இயேசுவைத் தரிசித்த மகதலேனா மரியாள் சொன்ன போதும், சீஷர்கள் நம்பவில்லை. எம்மாவூர் சென்ற சீஷரும் தாம் கண்டதாகச் சொல்லியும் அவர்கள் நம்பவில்லை. பின்னர் இயேசுதாமே தமது சீஷருக்குத் தரிசனமாகி, அவர்களுடைய அவிசுவாசத்தைக் கடிந்துகொண்டார் என்று காண்கிறோம். ஆனாலும், இயேசு அவர்களைத் திடப்படுத்தி, தமது சுவிசேஷப் பணியை அவர்களிடமே கையளித்தார்.

உயிர்த்தெழுந்த செய்தியை நம்புவதற்கு முதலில் பயந்தாலும், பின்னர் இதே சீஷர்கள்தான், அந்த உயிர்த்தெழுந்த செய்தியை, அதனாலுண்டான நித்திய ஜீவனைக்குறித்த செய்தியை அதிகாரத்தோடும், பயமின்றியும் மக்களுக்குப் பிரசங்கித்தார்கள். அதற்குச் சாட்சியாக ஜீவித்தார்கள். இது எப்படி ஆனது? உயிர்த்தெழுந்த செய்தி முதலில் அவர்களுக்கும் ஒரு செய்தியாகவே இருந்தது. ஆனால், பின்னர் அதுவே அவர்கள் அனுபவமானபோது அவர்களால் அடக்கிவைக்க முடியவில்லை. இயேசுவை அறிவது ஒன்று; அவரை அறிந்து, அனுபவிப்பது இன்னொன்று. இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது உலகம் அறியும். ஆனால், அந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிக்கின்ற நாம், உயிர்த்த இயேசுவை என்ன செய்கிறோம்? இயேசு உயிரோடிருக்கிறார் என்பதை நமது வாழ்வு உலகுக்குச் சாட்சிபகர நம்மை ஒப்புவிப்போமாக.

*வாசிப்பு:*
மாற்கு 16:1-14

*ஜெபம்:*
"தேவனே! என் வாழ்வு முழுவதும் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கூறி அறிவிக்கவும், அவருக்கே சாட்சியாக வாழவும் என்னைப் பெலப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
1
திங்கள்

# கைதட்டி ஆர்ப்பரி

அப்பொழுது மோசே தன் ஊழியக்காரனாகிய யோசுவாவோடே எழுந்துபோனான். (யாத்திராகமம் 24:13)

சிறுவன் ஜாமி ஸ்காட், பள்ளியில் நடக்கப்போகும் நாடகத்தில் தானும் பங்கெடுக்க விரும்பினான். அதை அறிந்திருந்த அம்மா, ஒருவேளை தெரிந்தெடுக்கப்படாமல் போனாலோ என்று வருந்தினார். அன்று நடிகர்களை தெரிந்து எடுக்கும் நாள். மாலையில் மகனை அழைத்துவரப் பள்ளிக்குச் சென்ற அம்மா, மகன் மகிழ்ச்சியுடன் துள்ளிக்குதித்து வந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். "என்ன நடந்தது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று அம்மாவிடம் கேட்டான். "அம்மா நாடகத்தில் எனக்கும் ஒரு பங்கு உண்டு. ஒரு இடத்தில் கைதட்டி, ஆர்ப்பரித்து, மகிழ்ச்சி ஆரவாரம் செய்யவேண்டும்" என்றான் அவன்.

தேவன் நம்மில் பலரை முன்னணியில் நிற்கத் தெரிந்தெடுக்கிறார். சிலரை சிறு பாத்திரங்களாக, கைதட்டி ஆரவாரம் செய்கிறவர்களாகக்கூடத் தெரிந்தெடுக்கலாம். யோசுவா, இந்த இரண்டாம் வேலையைச் செய்யும்படிதான் அழைக்கப்பட்டார். இவர் இஸ்ரவேலரின் தலைவனாவதற்கு 40 வருடங்கள் ஆயின. அக் காலப்பகுதியில் மோசேக்கு உதவியாளனாக இருந்து, அந்தப் பணியை நன்றாகவே செய்தார். அமலேக்கியரோடு யுத்தம் செய்தபோது யோசுவா நன்கு செயற்பட்டார் (யாத்.17:10). தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேக்கு உண்மையுள்ள ஊழியனாக இருந்து நல் ஊக்கம் அளித்தார்.

தலைவர்களாக செயற்படும்படி தேவன் தெரிந்துகொள்ளும் நபர்கள் அநேக சவால்களைச் சந்திக்க நேரிடும். கனமான பொறுப்புக்களையும், ஆவிக்குரிய பாரங்களையும் சுமக்கவேண்டியும் வரும். மக்கள் கூட்டத்தின் பொறாமையான பேச்சுக்கும், நேரடியான தாக்குதல்களுக்கும் ஆளாகவேண்டி வரும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களை உற்சாகப்படுத்தி சோர்வை நீக்கக் "கைதட்டி ஆரவாரம் செய்து" ஊக்கப்படுத்தும் பல விசுவாசிகள் தேவை. இப்படிப்பட்ட ஊக்குவிப்பு எவ்வளவு பெரிய ஆசீர்வாதமாயிருக்கும்.

தேவஊழியர்களை உற்சாகப்படுத்துகிறீர்களா? உங்கள் போதகரையும் அவருடைய மனைவியையும் உற்சாகப்படுத்துவது யார்? உங்கள் வேதாகமப் பள்ளி ஆசிரியரை உற்சாகப்படுத்துவது யார்? அநாதை ஆசிரமத்தில் வேலை செய்கிறவர்களை ஊக்குவிப்பது யார்? அவர்களது சுமைகளைக் குறைத்து, ஆறுதல்படுத்தி, சந்தோஷப்படுத்துவது யார்? பலருக்கு இப்படிப்பட்டவர்களைக் குறைகூறுவதே வேலை. தேவன் உங்களுக்கு ஒரு பங்கு வைத்திருக்கலாம். அதை ஏற்று, ஆர்ப்பரித்து, நடிக்கும் நாடகத்தின் வெற்றிக்கும் பெருமைக்கும் காரணமாக இருக்கலாமே! கைகொட்டி, ஆர்ப்பரித்து உற்சாகப்படுத்துகிறவனாக இரு. குறை கூறி ஏளனம் செய்து குற்றம் சுமத்துபவனாக இராதே.

*வாசிப்பு:*
யாத்திராகமம் 24:9-18

*ஜெபம்:*
"பிதாவே, நீர் அடியேனுக்கு எந்தப் பாத்திரத்தைக் கொடுத்தாலும் மனரம்மியத்தோடு அதைச் செய்து முடிக்க உமது பெலன் தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
2
செவ்வாய்

# சத்தத்தைக் கேட்டு ஏமாற்றமடைதல்

"...அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல. அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது"
(யாத்திராகமம் 32:18)

ஒரு அடர்ந்த காட்டில் வழிதவறிவிட்ட ஒருவன், சரியான வழியைக் கண்டுபிடித்து தப்பிச்செல்ல தன்னாலானமட்டும் முயற்சித்தான். பயம், தாகம், பசி, களைப்பு எல்லாம் சேர்ந்து அவனைப் பெலவீனப்படுத்தியது. திடீரென்று தூரத்தில் ஒரு மணியோசை கேட்டது. அதனால், நவீன நாகரீக உலகமருகில் இருப்பது உறுதி என்று நம்பி, அந்த மணியோசை வந்த திசையை நோக்கி தீவிரமாக முன்னேறினான். அவனால் அந்த ஓசையைக் கிட்டிச்சேர முடியவில்லை. கடைசியில் மனம்சோர்ந்து, உடல் களைத்து, ஒரு அடிகூட நடக்க முடியாத நிலையில் கீழே விழுந்து மரித்துப்போனான். அமெரிக்காவில் ஒரு அற்புத பறவை உண்டு. அதன் குரல் மணியோசைபோலவே இருக்கும். மணி அடித்தபின் அதன் ஓசை வெகுநேரம் ரீங்காரித்துக் கொண்டிருப்பதுபோல அப் பறவையின் குரலும் இருக்கும். அந்த மனிதன் அந்தப் பறவையின் குரலைத் தான் கேட்டு ஏமாந்தான். அந்தக் குரல் அவனைக் காப்பதற்குப் பதிலாக அவனை மரணத்திற்கு வழிநடத்திவிட்டது.

யோசுவாவும் இதுபோன்ற ஒரு தவறைச் செய்தான். பாளயத்திலிருந்து எழுந்த இரைச்சல் சத்தத்தைக் கேட்டதும், அவன் ஒரு போர்த்தளபதியாக இருந்தபடியால், யுத்தத்தின் சத்தம் கேட்கிறதாக நினைத்துவிட்டான். ஆனால், மனிதரின் மனஇயல்புகளை நன்கறிந்த மோசே, அந்தச் சத்தம் மிக மோசமான சூழ்நிலையைக் குறித்தது என்று உணர்ந்தான். சண்டையிட்டு உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து வருவிக்கும் சத்தம் என்று யோசுவா கருதினான். மோசேயோ, அது ஒழுக்கக்கேட்டைக் காட்டும் அறிகுறி என்று உணர்ந்தான். அது யுத்த சத்தமல்ல, சிற்றின்ப ஒழுக்கக்கேட்டைக் காட்டும் குரல் என்றான்.

இப்படியாக குரல்களை எழுப்புவதில் சாத்தான் வல்லவன். பாவத்தின் உண்மைத் தன்மையை, வஞ்சகமான ஏமாற்றும் குரல்களால் மூடி மறைத்து வெளிப்படுத்துவான். தீமையான வழிகளை, கண்ணியமான, உயர்வான பேச்சுகளால் ஏமாற்றிவிடுவான். தன்னுடைய பொய்களையும் வஞ்சகங்களையும் கரகரப்பான சிரிப்பு, உருக்கமான விண்ணப்பங்கள், உண்மையாயிருக்கக்கூடிய தோற்றம் ஆகியவற்றைக் காட்டி மறைத்து விடுகிறான். இதன் விளைவு, ஆவிக்குரிய வீழ்ச்சி அல்லது மரணமாகக்கூட இருக்கலாம். சத்தத்தைக் கேட்டு முட்டாளாகவேண்டாம். கேட்கும் சத்தங்களை வேதாகமத்தில் இருக்கும் தேவனுடைய சத்தத்துக்கு எடுத்துச்செல்லுங்கள். நீங்கள் நம்பும் வேதவசனங்களுக்கு நீங்கள் கேட்கும் வார்த்தைகள் ஒத்திருக்கிறதா என்று சோதித்து பாருங்கள். இல்லையானால், கேட்கும் சத்தம் எவ்வளவு இனிமையாகத் தொனித்தாலும், அதைக் கவனிக்கவேண்டாம்.

*வாசிப்பு:*
யாத்திராகமம் 32:15-20

*ஜெபம்:*
"பிதாவே, இந்த உலக சத்தங்களின் நடுவில், உமது சத்தத்தை உணர்ந்துகொள்ள உமது வார்த்தைக்கூடாக எனக்கு உதவி செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
3
புதன்

# எதற்காக வைராக்கியம்?

...நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? ...
(எண்ணாகமம் 11:29)

நமது வைராக்கியத்தை தவறான இடத்தில் காட்டுவது வெகு இலகு. கி.பி 1420ல் ஸ்காட்லாந்தில் கோல்ப் விளையாட்டு பிரபல்யமாகியது. இங்கிலாந்துடன் நடாத்த இருந்த யுத்தத்துக்கான ஆயத்தத்தை மறந்து, அம்பு எய்கின்ற பயிற்சியை மறந்து, கோல்ப் பந்தை அடிப்பதிலும், தூர விழுகின்ற பந்தை தேடிக் கண்டுபிடிப்பதிலும் மக்கள் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தனர். இதனால், இரண்டாம் ஜேம்ஸ் அரசன் பாராளுமன்றத்தைத் தூண்டி, ஸ்காட்லாந்து நாட்டில் எவரும் கோல்ப் விளையாடக்கூடாது என்று சட்டம் இயற்றும்படி கூறினார். இங்கே மக்கள் தங்கள் வைராக்கியத்தை நடக்கப்போகும் யுத்தத்தில் காட்டாமல் கோல்ப் விளையாட்டில் காட்டினார்கள்.

யோசுவாவினிடத்திலும் இப்படியான தவறான வைராக்கியம் இருந்தது. மோசேயின் உதவியாளன் என்ற நிலையில், மோசேயின் வல்லமை, செல்வாக்கு எதுவும் எந்தவகையிலும் பயமுறுத்தப்படக்கூடாது என்று கவனித்துக்கொள்வது தனது பொறுப்பு என்று உணர்ந்திருந்தான். தேவன் நேரடியாக மோசேயிடம் பேசினார் என்ற உண்மையிலிருந்து மோசேயின் அதிகாரமும், வல்லமையும் வெளிப்பட்டது. எனவே எல்தாதும், மேதாதும் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள் என்றதும், யோசுவாவினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் மோசேயின் செல்வாக்கு குறைகிறது என்று யோசுவா நினைத்தான். தன்னுடைய எஜமானின் பதவியைப் பாதுகாக்கும் முனைப்பில், தேவனுடைய வார்த்தை வேறு இரண்டு பேருடைய வாயிலிருந்து வெளிவருவதைத் தடுக்க விரும்பினான்.

பல நூற்றாண்டுகளாக, தேவன் தமது வார்த்தைகளை மக்களுக்குத் தெரிவிக்க, பல கருவிகளைப் பயன்படுத்திவந்தார். தேவன் பயன்படுத்திய இப்படிப்பட்ட கருவிகளுக்கு பல்வேறு நோக்கங்கள் இருந்தன. பவுல் இதற்குத் தகுந்த விளக்கம் தருகிறார் (பிலி.1:16). "சிலர்... சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்." பவுலின் முடிவு என்ன? (வச.18) "இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன்..." நம்முடைய வைராக்கியம் அறிவிப்பவரில் இருக்கக்கூடாது. அறிவிக்கப்படும் தேவ செய்தியில்தான் இருக்கவேண்டும். தேவவசனம் உண்மையாகப் பிரசங்கிக்கப்படுமானால், சந்தோஷப் படுவோம். சிலவேளைகளில் தேவன் தம் செய்தியை அறிவிக்க தகுதியில்லாதவர்களையும் தெரிந்துகொள்கிறார். உண்மையற்ற ஊழியர்களை தேவன் பார்த்துகொள்வார். தேவனுடைய செய்தியைக் குறித்து நாம் வைராக்கியம் கொள்ளுவோம். செய்தி அறிவிப்பவனை தேவன் தாமே நியாயம் விசாரிப்பார்.

*வாசிப்பு:*
எண்ணாகமம் 11:23-30

*ஜெபம்:*
"பிதாவே, வீணான காரியங்களில் வைராக்கியம் கொள்ளாமல், உமது வார்த்தையைக் குறித்த வைராக்கியத்தில் உறுதிகொள்ள வழி நடத்தும். ஆமென்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
4
வியாழன்

# நமது பொறுப்புகளை நிறைவேற்றல்

நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு...
(எண்ணாகமம் 13:2)

பிரிட்டிஷ் கடற்படைத் தளபதியான லார்டு நெல்சன் பொறுப்புமிக்கவர். பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளுடனான சண்டைகளில் தனது நாட்டுக்காக மனப்பூர்வமாக உழைத்தவர். டிரபால்கர் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் நெல்சன் பயங்கரமாய் காயமடைந்தார். அவரது உயிர் பிரிவதற்குமுன், "என்னுடைய கடமைகளைச் செய்துமுடித்துவிட்டேன். கடவுளுக்கு நன்றி" என்று கூறினார்.

யோசுவாவுக்கும் முக்கியமான பொறுப்புகள் இருந்தன. அவனுடைய கோத்திரத்திற்கு அவனே தலைவன். கானான் தேசத்தை வேவுபார்க்கப் போகும்படி தெரிந்தெடுக்கப்பட்ட 12பேரில் இவனும் ஒருவன். இஸ்ரவேலரின் பகைவர்களோடு போரிடச் சென்றபோது மோசேயின் முக்கிய உதவியாளனாயிருந்தான். மோசே அவனுக்கு "தன் ஜனங்களை இரட்சிப்பவன்" என்ற அர்த்தம்கொண்ட "யோசுவா" என்று ஒரு பட்டப்பேரைக் கொடுத்தான். இந்தப் பொறுப்பு மிகவும் பெரியதாயிருந்தது. எனினும் தேவனுடைய துணையுடன் யோசுவா கடைசிவரை தன்னுடைய பொறுப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்றி வந்தான்.

நிறைவேற்றவேண்டிய பல பொறுப்புகள் நமக்குண்டு. பிள்ளைகளின் கல்வி, திருமணம், எதிர்காலம், வருமானத்துக்காக ஒரு வேலை, கொடுத்து தீர்க்கவேண்டிய பணம், சபைப் பொறுப்பு என்று இன்னும் பல. இந்த நிலையில் தேவன் நம்மைத் தலைவராகவும் இருக்கும்படி தெரிந்தெடுத்தால், அப் பதவியில் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகளும் சேர்ந்துவிடும். சிலசமயம் வேலைகளை முடிக்கமுடியாமல் திணறநேரிடும்.

இப்படிப்பட்ட நேரங்களில் மனம் சோரக்கூடாது. தேவனுடைய துணையுடன், நமது பொறுப்புக்களைச் செய்து முடிக்கமுடியும். நீங்கள் சோர்வடைந்து போனால், சற்று இளைப்பாறுங்கள். தனியான ஓரிடத்தில் தேவனுடன் உறவாடிக் கொண்டிருங்கள். ஊக்கம் பெற வேதாகமத்தை வாசியுங்கள். அதனால் பலப்படுத்தப்படுவீர்கள். கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும்படி வேண்டுங்கள். உங்கள் முன் தரப்பட்டிருக்கும் எல்லாப் பணிகளையும் செய்துமுடிக்க ஞானம் தரும்படி வேண்டுங்கள். உங்கள் கடமைகளில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள். உங்கள் கடமைகளைச் செய்துமுடித்துவிட்டதற்கான திருப்தி உண்டாகுமானால், அதுவே நாம் பெறக்கூடிய பெரிய அனுபவம். எந்தப் பொறுப்பென்றாலும் மனப்பூர்வமாய் நிறைவேற்றுங்கள். தேவனுக்குமுன்பாகப் பொறுப்பு உள்ளவராய் இருப்பது என்பது, தேவன் கூறும் அனைத்துக்கும் நாம் கீழ்ப்படிவதற்கு ஒப்பாகும். அது நமக்கு நிறைந்த மகிழ்வைத் தரும்.

*வாசிப்பு:*
எண்ணாகமம் 13:1-16

*ஜெபம்:*
"பிதாவே, நீர் என்னை நம்பிக் கொடுக்கும் பொறுப்புகளை உத்தமத்தோடு நிறைவேற்ற நீரே பெலன் தாரும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
5
வெள்ளி

# உண்மைத்துவம்

"...நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்..."
(எண்ணாகமம் 14:28)

இங்கிலாந்தில் பர்மிங்ஹாமில் ஒரு இரவு பயங்கரமாகப் புயல் வீசியது. ஹட்சன் டெய்லர் அவர்கள், செவர்ன் தெருவில் உள்ள பள்ளிக்கூடத்தில் ஒரு செய்தி கொடுக்கவேண்டியிருந்தது. அவரை வரவேற்று உபசரிக்கும் பெண்மணி, இப்படிப்பட்ட புயலில் ஒருவரும் கூட்டத்திற்கு வரமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறினார். ஆனால், டெய்லர் தான் கட்டாயம் கூட்டத்துக்குப் போவதாகக் கூறினார். "அங்கே வாசல் காவலாளிதவிர வேறு ஒருவரும் இல்லாவிட்டாலும், நான் போவேன்" என்றார். ஒரு டஜனுக்குக் குறைவானவர்களே கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஆனால், அசாதாரணமாக அந்தக் கூட்டத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமை அதிகமாக வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. அங்கு வந்திருந்தவர்களில் பாதிப்பேர் மிஷனரிகளாகப் போவதாக ஒப்புக்கொடுத்தனர். சிலர் தம் பிள்ளைகளை மிஷனரியாக அனுப்பத் தீர்மானித்தனர். கூட்டத்தில் மீதிப்பேர் சீனாவில் நடைபெற்று வந்த நற்செய்திப் பணிக்கு தொடர்ந்து பல வருடங்களாக ஆதரவு அளித்து உதவி செய்பவர்களாக மாறினர். ஹட்சன் டெய்லர் தன் பணியில் உண்மையுள்ளவராக இருந்தார். தேவன் அவரது ஊழியத்தை ஆசீர்வதித்தார்.

உண்மை ஊழியத்திற்கு எப்போதும் பரலோகத்திலும், பூலோகத்திலும் ஆசீர்வாதங்கள் உண்டு. தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு யோசுவா உண்மையுள்ளவனாயிருந்தான். கானான் தேசத்தை வேவுபார்க்கச் சென்றவர்களில் பத்துப்பேர் கானான் தேசத்தைக் குறித்து பாதகமான அறிக்கை கொண்டு வந்தனர். யோசுவாவும் காலேபும், வெற்றியைக் குறித்து தேவன் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டனர். மக்கள் கல்லெறிவதாகப் பயமுறுத்தியபோதும் அவர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. இறுதியில் கானானுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு இந்தக் காலேபுக்கும், யோசுவாவுக்கும் மட்டுமே கிடைத்தது. மற்ற அனைவரும் வனாந்தரத்தில் மரிக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டார்கள் என்பது ஆச்சரியமான விஷயமல்லவா!

உண்மையுள்ளவனாய் இருத்தல், கர்த்தருடைய வார்த்தையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருத்தல் என்பன மற்றவர்களின் ஏளனத்துக்கு நம்மை ஆளாக்கும். நம் கொள்கையில் உறுதியாய் இருப்பதால் பிறர் நம்மை குறுகின புத்தி உள்ளவர், சமுதாயத்திற்கு ஒத்துப் போகாதவர் என்றும் நினைக்கச் செய்துவிடும். நம்மைக் குறித்துப் பிறர் பேசுவது எதையும் பொருட்படுத்தாதிருப்போம். தேவ வார்த்தைக்கும், தேவபணியிலும் உண்மையுள்ளவர்களாய் இருங்கள். எல்லாவற்றையும் வாய்க்கச் செய்வதாக தேவன் வாக்களித்துள்ளார். செய்முறைதான் உண்மைத்தன்மை; தேவாசீர்வாதம் தான் இறுதிப்பலன்.

*வாசிப்பு:*
எண்ணாகமம் 14:26-35

*ஜெபம்:*
"பிதாவே, எந்த நிலையிலும் உமது வார்த்தையைப் பற்றிக்கொண்டு, உமக்கு முன்பாக உண்மைத்துவமாய் வாழ கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
6
சனி

# முழுமையான அர்ப்பணிப்பு

உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும். நூனின் குமாரன் யோசுவாவும் தவிர...
(எண்ணாகமம் 32:11)

சில வருஷங்களுக்குமுன், சான் பிரான்சிஸ்கோ தேவாலயத்தில் பெரிய மனிதரெல்லாம் கலந்துகொண்ட ஒரு திருமண ஆராதனையிலே, மணமகனும், மணமகளும் வாக்குறுதிகள் செய்யும் நேரம் வந்தது. போதகர் கேட்கும் கேள்விகளுக்கு அவர்கள், "ஆம், நான் அப்படியே செய்வேன்" என்று பதிலளிக்க வேண்டும். அந்தவகையில் மணமகளிடம் கேள்வி கேட்டபோது, "என்னால் தீர்மானம் செய்ய முடியவில்லை" என்றாள். போதகர் ஒரு நிமிடம் காத்திருந்தார். மணப்பெண் அமைதியாய் நின்றாள். உடனே போதகர், "இந்த திருமணம் நடைபெறாது" என்று அறிவித்தார். அதிர்ச்சியுடன் அனைவரும் கலைந்து சென்றனர். எவ்வளவு பெரிய இழப்பு! ஒருவாரம் கழித்து மணப்பெண் தன் திருமணத்தை நடத்தலாம் என்றாள். முதல் திருமண நாளன்று அவள் நிச்சயமற்று இருந்ததற்கு காரணம் "பயம்" என்றாள்.

அதிஷ்டவசமாக காலேபுக்கும் யோசுவாவுக்கும் இப்படிப்பட்ட நிச்சயமற்ற நேரங்கள் இருந்ததில்லை. யோசுவா "கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினான்" என்று 14ம் அதிகாரத்தில் மட்டும் மூன்று இடங்களில் (வச.8,9,14) கூறப்பட்டுள்ளது. தேவனைப் பின்பற்றுவதில் அவனுக்கு எந்தத் திகைப்பும் தயக்கமும் இருந்ததில்லை. அவன் எதையெல்லாம் செய்யவேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அவற்றை நிறைவேற்றுவதில் காலம் கடத்தவுமில்லை, செய்யாமல் விட்டதுமில்லை; அவற்றுக்காக அவன் தன்னையே அர்ப்பணித்திருந்தான். யோசுவாவின் உள்ளம், தேவனை எப்பொழுதும் உத்தமமாய் பின்பற்றவேண்டும் என்ற உறுதியான தீர்மானம் எடுத்திருந்தது.

ஆண்டவருக்காக தெளிவான சாட்சி கொடுக்கவேண்டிய ஒரு நிலை வரும்போது, கிறிஸ்தவர்கள் தயங்கிப் பயந்து பின்வாங்கி விடுகிறார்கள். தங்கள் உள்ளத்தை ஒருமுகப்படுத்தி ஒரு தீர்மானம் எடுக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். 'அமெரிக்கத் திருச்சபை வாழ்க்கை' பற்றிய ஆராய்ச்சி செய்யும் ஜார்ஸ் காலப் அவர்கள், "பெயரளவில் விசுவாசிகளாயிருக்கும் மக்களைக் கொண்டது அமெரிக்க தேசம். திருச்சபையில் அநேகர் உறுப்பினராயிருப்பார்கள். ஆனால், ஆலயத்திற்கு வருபவர்கள் ஒரு சிலரே. ஆண்டவருக்காக ஊழியம் செய்வோம் என்று ஒரு தீர்மானம்செய்ய அவர்களால் முடியவில்லை" என்றார். அப்படி நாம் இருக்கக்கூடாது. ஆண்டவருக்காக ஊழியம்செய்ய சாட்சிகூற உத்தமமான விசுவாசிகள் கூட்டத்தில் பயமின்றி ஐக்கியப்பட நாம் பின்நிற்கத் தேவையில்லை. ஆண்டவருக்காக நம்மை முழுமையாக அர்ப்பணிப்போமாக. முழுமையாக அர்ப்பணம் செய்த இருதயத்திலிருந்து, பரிசுத்தமான பதிலுரை வரும். அது நம்மிடமிருந்து வருமா!

*வாசிப்பு:*
யோசுவா 14:6-15

*ஜெபம்:*
"ஆண்டவரே,
மனதிலே எந்தவித
தயக்கமுமின்றி
உமக்காகவே
என்னை
அர்ப்பணிக்கிறேன்.
ஏற்று என்றும் வழி
நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
7
ஞாயிறு

# ஊக்குவிப்போம்!

உனக்கு முன்பாக நிற்கிற நூனின் குமாரனாகிய யோசுவா அதில் பிரவேசிப்பான்; அவனைத் திடப்படுத்து.... (உபாகமம் 1:38)

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிராங்காயிஸ் அராகோ என்பவர், பிரான்ஸ் தேசத்தின் வானியல் அறிஞர் ஆவார். ஒரு புத்தக அட்டையில் காணப்பட்ட வசனங்களே தனது வெற்றிக்குக் காரணம் என்றார் அவர். ஒரு தடவை அவர் சோர்வுற்றிருந்தபோது, பிரான்ஸ் தேசத்தின் புகழ்பெற்ற கணித மேதையும், தத்துவ ஞானியுமான ஜீன்.டி.ஆலம்பர்ட் என்பவர் எழுதிய அந்த வாசகத்தை வாசித்தாராம். அது இதுதான். "முன்னேறிச் செல்லுங்கள் ஐயா, முன்னேறுங்கள். முன்னேறிச் செல்லும்போது, நீங்கள் சந்திக்கும் சிக்கல்களெல்லாம் தானாகவே தீர்ந்துவிடும். முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் பாதையில் பிரகாசமான வெளிச்சம் பரவும்". இதனை வாசித்து, சிந்தித்து, முன்னேறி, தன் காலத்தில் தலைசிறந்ததொரு வானியல் கணித மேதையானார் இவர்.

யோசுவாவுக்கும் ஊக்குவிக்கும் வார்த்தைகள் தேவை என்று தேவன் அறிந்திருந்தார். இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பினால் வெறுப்படைந்த மோசே, கர்த்தரின் வார்த்தையை மீறி, தண்ணீருக்காக கன்மலையிடம் பேசாமல், தன் கோலால் அடித்ததினால் தேவகோபத்துக்கு ஆளாகி, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை இழந்திருந்தான் (எண்.20:8-20). எனவே, மோசேயின் உதவியாளனாக இருந்த யோசுவாவே மோசேயின் பணியை முன்னெடுத்து, இஸ்ரவேலை கானானுக்குள் அழைத்துசெல்லவேண்டுமென கர்த்தர் சொன்னார். அதற்காக, யோசுவாவைத் திடப்படுத்தி, வார்த்தைகளினாலும் செயல்களினாலும் அவனை ஊக்குவிக்கவேண்டும் என்றார் கர்த்தர்.

நீங்களும் நானும் இவர்களைப் போன்றவர்கள்தான். நமக்கும் ஊக்கு விப்பு தேவை. நாம் ஒரு தலைவனாயிருந்தாலும், தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களாயிருந்தாலும் நமக்கும் ஊக்குவிப்பு வேண்டும். ஜார்ஜ் ஆடம்ஸ் அவர்கள், "ஊக்குவிப்பு என்பது ஆத்துமாவுக்குப் பிராணவாயு போன்றது" என்றார். நாம் உயிர் வாழ்வதற்கு பிராணவாயு தேவை. நாம் தேவனுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்யவேண்டுமானால் நமக்கு ஊக்குவிப்பு தேவை.

ஊக்குவிக்கும் வரம் உங்களுக்குண்டா? ஊக்கம் கொடுக்கக்கூடிய ஒரு சிறிய வார்த்தை போதும், அது பெருமளவு ஊக்கம் கொடுக்கும். உங்களைச் சூழ எத்தனை தளர்ந்த ஆத்துமாக்கள் இருக்கிறார்கள். அவர்களைத் திடப்படுத்தி, ஊக்கு வித்து, எழுப்பிவிடுவதை இலட்சியமாகக்கொண்டு செயற்படுங்கள். அதனால் அவர்கள் ஆண்டவருக்கு அதிக ஊக்கமாக ஊழியம் செய்யமுடியும் அல்லவா! நீங்கள் ஊக்குவிக்கப்படவேண்டுமானால், முதலில் நீங்கள் மற்றவர்களை ஊக்குவியுங்கள். ஊக்குவிப்பதும் ஒரு மதிப்புமிக்க ஊழியமே!

*வாசிப்பு:*
உபாகமம் 1:32-38

*ஜெபம்:*
"பிதாவே, சோர்வுற்ற பிள்ளைகளுக்கு ஊக்கம் கொடுத்து, உம்மைச் சேவிக்கும் படி அவர்களையும் முன்னேற்றிவிட என்னை பயன்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
8
திங்கள்

# பரத்திலிருந்து வரும் ஞானம்

மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்... (உபாகமம் 34:9)

நமது வாழ்வு, ஆபத்துக்கள் சிக்கல்கள் நிறைந்தது. இவற்றிலிருந்து விடுபட நமக்கு ஞானம் தேவை. ஒருதடவை இரண்டுபேர் நீண்டதூர நடைப் பயணம் சென்றுகொண்டிருந்தனர். வழியில் ஒரு இடத்தில் ஒரு காட்டுச் சிங்கம் இவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டனர். ஒருவன் சத்த மின்றி சுருண்டு படுத்துவிட்டான். அடுத்தவன், நடப்பதற்குப் போட்டிருந்த தன் காலணியை மாற்றி, ஓடுவதற்கு அணியும் சப்பாத்தை வேகமாக அணிந்தான். அவன் இவனிடம், "நாம் சிங்கத்தை முந்திக்கொண்டு ஓடிவிடமுடியாது" என்றான். அதற்கு இவனோ "நான் உன்னை முந்தி ஓடினால் போதும்" என்றான்.

இந்த மனிதன் சொன்னதில் கொஞ்சம் ஞானம் இருந்தது. ஆனால் இத்தகைய உலக ஞானம் தேவனுடைய காரியங்களை நிறைவேற்றபோதுமான தல்ல. தேவன் விரும்பிய தலைவனாக யோசுவா இருக்கவேண்டுமானால், இப்படிப்பட்ட சாதாரணமான அறிவைவிடச் சிறந்த ஞானம் தேவை. எனவே, மோசே யோசுவாவின் தலையின்மேல் கைவைத்து ஜெபித்தார். யோசுவாவின் மேல் பரிசுத்த ஆவியின் மூலமாக தேவன் தெய்வீக ஞானத்தை நிரப்பினார்.

இன்றும் தேவன் இப்படிப்பட்ட ஞானத்தைத் தந்துகொண்டிருக்கிறார். "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக். 1:5). ஆனால், இது சாதாரணமானதல்ல; இது தெய்வீக ஞானம். இதனை யாக்கோபு, "பரத்திலிருந்து வருகிற ஞானம்" (யாக்.3:17) என்கிறார். எல்லா நன்மையான வரங்களையும், ஆசீர்வாதங்களையும் நமக்குத் தருவதில் மகிழ்ச்சி யடைகிற தேவன், உண்மையாய்ப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு, தெய்வீக ஞானத்தை நிச்சயம் தருவார். நம் அனைவருக்கும் இது தேவை. நாம் அதைப் பெற்றுக்கொள்ள உண்மையாக விரும்புகிறோமா?

உண்மையான தெய்வீக ஞானம் தேவைப் படும் ஒரு சந்தர்ப்பத்தில், வெறும் உலக ஞானத்தால் திருப்தியடைந்துவிடக்கூடாது. உண்மையான ஞானம் நமக்கு வைக்கப்பட்டிருக்கிறது. பரத்திலிருந்து வரும் ஞானம் அருளப்படும்படி ஆண்டவரிடம் வேண்டுதல் செய்வோம். தெய்வீக ஞானத்தால் மட்டுமே தேவனு டைய எதிர்பார்ப்புகளை நம்மால் செய்துமுடிக்க முடியும். அது ஒன்றே தேவனுக்குப் பிரியமாகவும் இருக்கும். மாறாக, உலக ஞானம் நம்மை ஏமாற்றி வீழ்த்திப்போடும். தேவனுடைய பணியைச் செய்ய தெய்வீக ஞானமே தேவை.

*வாசிப்பு:*
யாக்கோபு 3:13-18

*ஜெபம்:*
"பிதாவே, சுத்தமும் மாயமற்றதும், பரத்திலிருந்து கொடுக்கப்படுகிறது மான தெய்வீக ஞானத்தால் அடியேனையும் நிரப்பும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
9
செவ்வாய்

# ஒருபோதும் கைவிடுவதில்லை

...நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. (யோசுவா 1:5)

1970ல் அரிசோனாவில் வாழ்ந்த ரசல் ரீ. டான்ஸி என்ற வழக்கறிஞர் கடவுளுக்கு எதிராக ஒரு இலட்சம் டாலர் நஷ்டஈடு கோரி ஒரு வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கு டான்ஸியின் செயலர் பெற்றி பென்ரோஸ் என்பவர் பெயரில் பதிவுசெய்யப்பட்டது. வழக்கு இதுதான். ஒரு மோசமான காலநிலையில், பெற்றியின் வீட்டை ஒரு இடி தாக்கியது. வல்லமைமிக்க கடவுள் இந்தக் காலநிலையைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டார். வீடு மின்னலால் தாக்கப்பட்டது. பிரதிவாதி கடவுள் நீதிமன்றத்தில் ஒரு விசாரணைக்கும் ஆஜராகாததால் நஷ்டஈடு பெற்றிக்கு வழங்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பெற்றி பென்ரோஸ் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டாரா என்று தெரியவில்லை.

சோதனைகள், இடர்கள் தாக்கும்போது தேவன் கவலையீனமாக இருப்பதாக நினைத்துக் குறைகூறுவது நமது இயல்பு. நம்மால் விளக்கம் கூற முடியாத ஒன்று நடைபெறும்போது, தேவன் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று நினைப்போம். அது உண்மையல்ல என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. கர்த்தர் யோசுவாவிடம், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று உறுதியளிக்கிறார். இந்த வார்த்தையின் அமைப்பு வலியுறுத்தும் கருத்து என்னவென்றால், யோசுவாவின் சூழ்நிலைகள் எவ்வளவு இக்கட்டாக இருந்தாலும், தேவன் அவனைவிட்டு விலகவும் மாட்டார்; கைவிடவும் மாட்டார். கர்த்தர் மோசேயோடு பற்றுதலாக இருந்ததுபோலவே யோசுவாவோடும் இருப்பார். இதே மாதிரியான உறுதியை தேவனிடமிருந்து இன்று நாம் பெற முடியுமா? நாம் பெற்றுக்கொள்ளலாம். எபி.13:5ஐ வாசித்துப் பாருங்கள்.

தேவபிரசன்னம் இருக்கிறது என்பதால் எல்லாமே சீராய் நடந்துவிடும் என்று இல்லை. நம்மைச் சுற்றிலும் விசேஷ பாதுகாப்பு இல்லை. நமக்கு புற்றுநோய் வருகிறது. துக்கமும், வேதனையும் வருகிறது; இருதய வேதனையும் வருகிறது. செய்யும் தொழிலிலும் தோல்வி ஏற்படும். தேவனுடைய வாக்குத்தத்தம் என்னவெனில், அவர் எப்போதும் நம்மோடு தொடர்ந்து வருவார் என்பதே. நம்முடைய துக்கங்களிலும், தோல்விகளிலும் அவர் உண்மையுள்ளவராயிருப்பார். அவர் நம்மோடிருப்பது நம்மால் புரிந்துகொள்ள முடியாத ஆறுதலைத் தரும். "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:7). எந்தத் துன்பத்தையும் நாம் தனியாகச் சந்திக்கத் தேவையில்லை. ஆண்டவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். தேவன் மாத்திரமே, "ஒருபோதும் கைவிடமாட்டேன்" என்று கூறமுடியும். அவர் அப்படியே செய்வார். இதுவே அவர் நமக்குத் தரும் வாக்குத்தத்தம்.

*வாசிப்பு:*
யோசுவா 1:1-5

*ஜெபம்:*
"பிதாவே, எந்த சூழ்நிலையிலும் என்னைக் கைவிடாதிருப்பதாக நீர் அளித்த வாக்குக்காக நன்றி. நான் என்றும் உமக்குள் திடமாயிருக்க அருள் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
10
புதன்

# நல்ல வெற்றிக்குத் திறவுகோல்

...இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக;
அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய்...
(யோசுவா 1:8)

ஒரு செய்தித்தாளில் வெளியான செய்தி இது. நெப்ராஸ்காவில் வடக்கு பிளாட்பாரத்திலிருந்து புறப்படும் யூனியன் பசிபிக் ரயிலில் ஒரு தம்பதியர் ஓடி வந்து ஏற முயற்சித்தனர். அவர்கள் வீதிச்சட்டத்தை மீறிய குற்றத்துக்காகப் போலீசாரால் பிடிக்கப்பட்டு டாஸன் கவுண்டி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் போக விரும்பிய இடம் ஓமாஹா. அவர்கள் போலீசாரால் பிடிக்கப்படாமல் அந்த ரயிலில் ஏறிச்சென்றிருந்தாலும்கூட அவர்களால் ஓமாஹாவுக்குச் சென்றிருக்க முடியாது. ஏனென்றால், அது கான்சாஸ் என்ற வேறொரு நகரத்துக்குச் செல்லுகின்ற ரயில் என்பதை அவர்கள் அறியவில்லை.

வெற்றிக்கு நேராகத் தங்கள் ரயில் போய்க்கொண்டிருக்கிறது என்று நினைக்கின்ற அநேகர், உண்மையில் அதற்கு எதிர்த்திசை ரயிலிலேயே சென்று கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் எண்ணற்ற ஆண்களும், பெண்களும் ஒரு வகையான வெற்றியைக் கண்டடைந்தார்கள். ஆனால், பின்னர் அந்த வெற்றிக்காக மனம் வருந்தினார்கள் என்று காண்கிறோம். இது வேதாகமம் கூறுகிற "நல்ல வெற்றி" அல்ல. லார்டு பைரன், புகழ்பெற்ற கவிஞர். இவர் தனது 35வது வயதில் இப்படி எழுதினார். "என்னுடைய நாட்கள் விழப்போகும் பழுத்த மஞ்சள் இலையில் எழுதப்பட்டுள்ளன. வசந்த மலர்களும், அன்புக் கனிகளும் மறைந்து விட்டன. புழுக்களும், அரிப்பு உண்டாக்கும் சொறியும், நோய், துக்கம், வேதனை என்பன எனக்கு மட்டுமே உள்ளன".

தேவனுடைய வெற்றி, அல்லது, தேவன் நமக்களிக்கும் வெற்றி என்பது மிகவும் வித்தியாசமானது. அது எப்போதும் சரியான திசையிலேயே செல்லும். யோசுவா, தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிறவைகளின்படி வாழ்ந்தால், வெற்றி பெறுவான் என்று அவனுக்கு உறுதியளிக்கப்பட்டது. அது ஏதோ வொரு சாதாரண வெற்றி அல்ல. தேவன் யோசுவாவுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நமக்கும் பொருத்தமானது. அதன்படி, நாம் வேதாகமத்தில் எழுதியிருக்கிறபடி வாழ்ந்தால், நாம் "நல்ல வெற்றி"யை நிச்சயம் கண்டடைவோம். இந்த "நல்ல வெற்றியை" நாம் அடைவதற்குரிய திறவுகோல், தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாகும். நமது வாழ்வை முற்றிலுமாக தேவ சித்தத்துக்கு ஒப்படைத்துவிட்டால் அவரது வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருகிறபடி, நாம் ஆசீர்வாதமான வெற்றியைப் பெற்று அனுபவிக்கலாம். எதுவும் ஒரு பாரமாய் இருக்காது. அதை விட்டு, தவறாகவோ, அல்லது தெரிந்துகோண்டோ எதிர்த் திசையில் ஓடிப் போய் நாம் ஏன் தோல்வியைத் தழுவவேண்டும்? கடவுள்தான் நமக்கு நல்ல வெற்றியைத் தர முடியும்.

*வாசிப்பு:*
யோசுவா 1:6-9

*ஜெபம்:*
"அருமைப் பிதாவே, உமது வார்த்தையின் படி வாழ்ந்து, நீர் தரும் வெற்றியைப் பெற்று உம்மை மகிமைப்படுத்த என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
11
வியாழன்

# பலங்கொண்டு, திடமனதாயிரு

...பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே. நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். (யோசுவா 1:9)

பேய்வீடு என்று கருதப்பட்ட ஒரு வீட்டை ஒரு சிறுவன் தினமும் மாலையில் கடந்து செல்லவேண்டியிருந்தது. அவன் பயப்பட்டான். அவனது பயத்தைப் போக்கப் பலர் பல யோசனைகள் சொன்னார்கள். ஒருவன் மந்திரித்த தாயத்தை கையில் கட்டிவிட்டான். வேறொருவன் வீட்டின் அருகில் ஒரு விளக்கை வைத்தான். இன்னொருவன், "பயம் பாவம். கடவுளை நம்பு" என்றான். இது நல்ல ஆலோசனைதான். ஆனால் சிறுவனுக்கு இது பயன்படவில்லை. கடைசியாக ஒருவன் வந்து, 'பயம் என்றால் என்னவென்று எனக்குத் தெரியும். நீ வா. அந்த வீட்டை நீ கடக்கும்வரை உனக்குத் துணையாக உன்னுடன் வருகிறேன்' என்றான். இதைக் கேட்டதும் அந்தச் சிறுவனின் பயம் முற்றிலும் நீங்கிவிட்டது.

தேவன் யோசுவாவுக்கு இதைத்தான் செய்தார். யோசுவா நாடோடிகள் போன்ற, போர் பயிற்சி இல்லாத ஒரு கூட்டத்தினரை அழைத்துக்கொண்டு, போர் பயிற்சி பெற்ற வீரர்கள் அடங்கிய சுற்றிலுமுள்ள இராணுவங்களை எதிர்த்து யுத்தத்துக்குப் போகவேண்டியிருந்தது. இது எந்த வீரனையும் நடுங்கச் செய்யும். ஆனால், தேவன் பெரிய காரியங்களைச் செய்தார். யோசுவாவுக்கு ஒரு போர்த் திட்டம் வழங்கினார். "நீ போகுமிடமெல்லாம் நான் உன்னோடு இருப்பேன்" என்று தைரியம் கூறியிருந்தார். பயங்கரமான சூழ்நிலைகளில் போகவிட மாட்டேன் என்று தேவன் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை.

குடும்பத்தையும், நண்பர்களையும்விட்டு வெகு தூரமான இடத்தில் ஊழியம் செய்ய தேவன் நம்மை அழைத்து அனுப்பலாம். நம்மில் பலருக்கு இந்த அறைகூவல் பயத்தை ஏற்படுத்தலாம். அல்லது, பள்ளியின் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தையோ, நகரத்தின் ஆலோசனைக் கூட்டத்தையோ எதிர்த்து நிற்கும் சந்தர்ப்பங்களைத் தேவன் நமக்கு அனுமதிக்கலாம். நமது முழங்கால் தள்ளாடலாம். குரல் தடுமாறலாம். ஆனால், நமது பயத்துக்குரிய பரிகாரத்தைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அதுதான் தேவன் தம்மையே உங்களுக்குத் தந்திருக்கிறாரே!

இயேசு கிறிஸ்துவுக்குள் நமது பலவீனங்களுக்கு பலமும், பயங்களுக்குத் தைரியமும் உண்டு. "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (சங்.23:4) என்றார் தாவீது. இங்கு 'மரண இருளின் பள்ளத்தாக்கு' என்பது, வாழ்க்கையின் நெருக்கடி நேரங்களைக் குறிக்கிறது. எவ்வித பயங்கரமாயினும், நமது பயம் விலகும்படி தேவ பிரசன்னம் நம்மோடிருப்பதை உணரலாம். "தைரியம்" என்ற சொல்லுக்கு "கிறிஸ்து" என்ற நாமத்தைச் சமமாக எடுத்துக்கொள்ளலாம்.

*வாசிப்பு:*
சங்கீதம் 23

*ஜெபம்:*
பிதாவே, வாழ்வின் எந்த நிலையிலும் நீர் என்னோடே இருப்பதால் நான் பயமின்றி முன்சென்று உம்மாலே வெற்றி பெறுவேன். நன்றி ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
12
வெள்ளி

# வாக்குறுதியைக் காத்துக்கொள்!

'உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை இளைப்பாறப் பண்ணி, இந்த தேசத்தை உங்களுக்குக் கொடுத்தாரே.'
(யோசுவா 1:13)

புக்கர் ரீ. வாஷிங்டன் என்பவர் தான் எழுதிய 'அடிமைத்தனத்திலிருந்து' என்ற புத்தகத்தில், வேர்ஜினியாவில் அடிமையாயிருந்து விடுதலைபெற்ற ஒரு நபரைப்பற்றி இப்படி எழுதியிருக்கிறார்: ஒரு அடிமை தன்னுடைய எஜமானோடு ஒரு ஒப்பந்தம் செய்தான். அவன் தன் விடுதலைக்கான பணத்தைச் சம்பாதித்து எஜமானுக்குக் கொடுத்துக்கொண்டே வருவான். பணம் கொடுத்து முடிந்ததும் அவன் விடுதலை பெற்றுவிடலாம். இது அமெரிக்காவில் அடிமைத்தன ஒழிப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் நடந்தது. அந்த அடிமை உண்மையுடன் தன் பணத்தைச் செலுத்திக்கொண்டிருந்ததால், அவன் எங்கே வேலைக்கு போக விரும்பினாலும் எஜமான் அனுப்பிவிடுவான். ஓஹியோவில் அதிக சம்பளம் கிடைக்கும் என்று அறிந்து அங்கு வேலைக்குச் சென்றான். ஆபிரகாம் லிங்கன் அடிமைகள் அனைவருக்கும் சுதந்திரம் அறிவித்தபோதும், இவன் தன் எஜமானுக்கு இன்னும் 300 டாலர் கொடுக்கவேண்டியிருந்தது. சட்டப்படி அவன் விடுதலை பெற்றிருந்தாலும் இவன் ஓஹியோவிலிருந்து தன்னுடைய எஜமானன் இருந்த வேர்ஜினியாவுக்கு நடந்து சென்றான். தன்னுடைய பழைய எஜமானைச் சந்தித்து தன் ஒப்பந்தத்தின்படி தான் செலுத்தவேண்டிய 300 டாலரையும் வட்டியோடு திரும்பச் செலுத்திவிட்டு, விடுதலைபெற்றுச் சென்றான். அவன் கூறியது, "நான் என்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றாமல் பூரண விடுதலையை அனுபவிக்க முடியாது" என்பதே.

ரூபனியர்களையும் காத்தியர்களையும், மனாசேயின் பாதி கோத்திரத்தாரும் மோசேயின் காலத்தில் செய்திருந்த ஒரு ஒப்பந்தத்தை யோசுவா நினைவுபடுத்தினான். அதாவது, யோர்தானுக்குக் கிழக்கே சுதந்திரமாகப் பெற்று குடியிருப்பதற்கு முன்னர், அவர்கள் தங்கள் சகோதரருடன் சென்று யோர்தானுக்கு மேற்குப்புறம் குடியிருந்தவர்களோடு யுத்தம் செய்து துரத்தியடிப்பதற்கு உதவி செய்யவேண்டும். அதனை நிறைவேற்றவேண்டிய நேரம் வந்துவிட்டிருந்தது.

நாம் செய்யும் ஒப்பந்தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கிறார். "உத்தமனாய் நடந்து... ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்" (சங்.15:2,4). நாம் நிறைவேற்றவேண்டிய ஒப்பந்தம் ஏதாவது உண்டா? நாம் செய்த ஒப்பந்தங்களுக்கும், வாக்குறுதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அதை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுப்போம். நாம் ஒருவேளை மோசமான நிலையிலிருந்தாலும், உத்தமமாய் நடக்கிறவர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். மீறப்பட்ட ஒப்பந்தம், ஒருபோதும் முடிக்கப்படாத பொறுப்புக்குச் சமம்.

*வாசிப்பு:*
எண்ணாகமம் 32:16-32

*ஜெபம்:*
"பிதாவே, நீர் வாக்குமாறாதவர். உடன்படிக்கையின் தேவன். என் வாழ்வில் நீர் பிரதிபலிக்கும்படி என்னை நீரே வழி நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
13
சனி

# காலதாமதம் வேண்டாம்!

அதிகாலமே யோசுவா எழுந்திருந்த பின்பு...
(யோசுவா 3:1)

அமெரிக்க புரட்சி நடந்துகொண்டிருந்தது. பிரிட்டிஷ் ராணுவ தலைமை தளபதியான கர்னல் ரால் ஒரு இடத்தில் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது, ஜெனரல் ஜார்ஜ் வாஷிங்டன், தன் இராணுவத்துடன் வந்து கொண்டி ருக்கிறார் என்று ஒரு அவசர செய்தி வந்தது. கர்னல் ரால் அந்தக் கடிதத்தைப் படிக்கவில்லை. விளையாட்டு முடிந்தபின் கடிதத்தை எடுத்துப் படித்தார். அதிர்ச்சி யடைந்த அவர், சூழ்நிலையின் ஆபத்தை உணர்ந்து இராணுவத்தினரைத் திரட்டிக்கொண்டு தாக்குதலை எதிர்க்கும்படி விரைந்து சென்றார். ஆனால், அதிக காலதாமதமாகிவிட்டது. அந்த யுத்தத்தில் அவருடைய படையில் பலரும் கொல்லப்பட்டனர். மீதியானவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

யோசுவா, அந்த கவலையீனமான தளபதி போன்றவன் அல்ல. எந்த நெருக்கடியான நேரத்திலும் உடனடியாக நடவடிக்கை எடுப்பவன். அவனுக்கு இருந்த பொறுப்பும், கடமையும் மிகப் பெரியது. வெள்ளம் பெருக்கெடுத்தோடும் யோர்தான் நதியைக் கடக்கவேண்டும். பின்பு கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். இலட்சக்கணக்கான இஸ்ரவேலரை இவன் வழிநடத்திச் செல்ல வேண்டும். சவக்கடலுக்கு நேராகக் கரை புரண்டோடும் யோர்தான் நதியின் நீரோட்டமும், சுழற்சியும் மிகவும் பயங்கரமாயிருந்தது. லீபனோன் மலைகளில் பனிக்கட்டி உருகி வழிந்தோடும் தண்ணீர் வருடத்தின் இந்த காலத்தில் யோர்தானை கரைபுரண்டு ஓடச்செய்தது. யோசுவாவின் முன் இருந்த வேலை நடுங்கச் செய்வதாயிருந்தது. எவ்வளவு காலம் மக்களைத் தங்கியிருக்கச் செய்யமுடியுமோ, அவ்வளவு காலம் காத்திருந்தான். ஆனால், மேலும் கால தாமதம் செய்யாமல் ஒருநாள் "அதிகாலையில்" எழுந்து மக்களைத் தட்டி யெழுப்பி, அவர்கள் செல்லவிருந்த பயணத்துக்கு ஆயத்தப்படுத்தினான்.

பயமுறுத்துகின்ற அல்லது சம்மதமில்லாத வேலைகள் வரும்போது, அநேகர் அவற்றைத் தாமதப்படுத்துவதுண்டு. மோசமான விளைவுகளைத் தவிர்க்கப் பல சாட்டுப்போக்குகள் சொல்லுவதுண்டு. அல்லது, மிகக் கடினமான தீர்மானங்களைச் செய்வார்கள். ஆனால், பலவேளை களிலும் இது காரியத்தை இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளிவிடும். இப்படியாக சிக்கலான, அறைகூவலான சூழ்நிலையைச் சந்திக்கும்போது நாம் காலதாமதம் செய்யவேண்டாம். கர்த்தருடைய பலத்தை நம்புவோம். அவருடைய ஞானத்தின்மேல் நம்பிக்கை வைப்போம். நம்மோடிருப்பதாக அவர் அளித்த வாக்குத்தத்தங்களை நினைவுகூருவோம். பின்னர் "அதிகாலையில்" விழித்தெழுந்து நம்பிக்கை யுடன் வேலையை ஆரம்பிப்போம். நாளின் முடிவில் நிச்சயம் சந்தோஷம் காத்திருக்கும். தொடங்காத வேலை ஒருபோதும் முடிக்கப்படுவதில்லை.

*வாசிப்பு:*
யோசுவா 3:1-4

*ஜெபம்:*
பிதாவே, நீரே அழைக்கிறவர், நீரே நடத்துகிறவர். ஆகவே, எந்த சூழ்நிலையிலும் உமக்கு கீழ்ப்படிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
**14**
ஞாயிறு

# தேவனால் உயர்த்தப்படு!

...நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு. இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன். (யோசு.3:7)

மனிதனால் கொடுக்கப்படும் மேன்மை எவ்வளவு சீக்கிரம் வாடிப் போகிறது! நெப்போலியன் போனபார்ட் ரஷ்யாவைத் தாக்குவதற்குமுன் உலகமே தன் காலடியில் இருப்பதாக நினைத்தான். ஆனால், ரஷ்யப் படையெடுப்பு அவனுக்கு மாபெரும் தோல்வியாக முடிந்தது. நெப்போலியன் தன்னுடைய பெயருக்கும், புகழுக்கும், பதவிக்கும் ஆபத்து வந்தது என்று பயந்து பிரெஞ்சுப் படையை விட்டுப் பிரிந்து, பிரான்ஸை நோக்கி தனியாக ஓடினான். வழியில் ஒரு நதியைக் கடக்கவேண்டியிருந்தது. அங்கிருந்த படகோட்டியிடம், யுத்தத்திலிருந்து பின்வாங்கி இந்த வழியாக பலர் வந்தார்களா என்று விசாரித்தான். அவனே புகழ் பெற்ற மாவீரனான நெப்போலியன் என்று அடையாளம் கண்டுகொள்ளாத படகோட்டி, "இல்லை. நீங்கள்தான் முதல் ஆள்" என்றான்.

நீர்க்குமிழியைப்போல நிலையற்று மறைந்துபோகும் புகழ் தேவனிடத்தில் இல்லை. மனிதரில் எவராலும் கொடுக்கமுடியாத ஈவை, தேவன் யோசுவாவுக்குக் கொடுத்தார். கர்த்தருடைய வார்த்தைக்கு யோசுவா முற்றிலும் கீழ்ப்படிந்து நடந்ததால், தேவன் அவனை உயர்த்துவதாக வாக்களித்தார். தேவன் மோசேக்கு கனமும், புகழும் வரப்பண்ணினதுபோல, யோசுவாவுக்கும் கனமும், புகழும் வரப்பண்ணுவார். இந்த மகிமைக்காக மனிதன் பண்ணும் முயற்சியல்ல. இது தேவனிடத்திலிருந்து கிடைக்கும் ஒரு கிருபையின் வரம்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவன் இதைக் கொடுக்கிறார். நம் வாழ்க்கையில் கிறிஸ்துவை மையமாக நாம் வைத்துக்கொள்வது போலவும், நாம் பேசுவதும், செய்வதும் எல்லாம் கர்த்தருடைய வசனத்தின்படி இருப்பது போலவும், ஆண்டவர் நமக்கு ஒரு மகிமையைத் தருவார். அது எந்த மனிதனும் தரக்கூடிய கனத்தையும்விட அதிகமாக நீடித்து நிலைத்து நிற்கும். இந்த உலகத்தைக் குலுக்கி, அசைத்துக் கொண்டிருக்கிறவர்களால், நம்மை அடையாளம் கண்டுகொள்ளமுடியாது. "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1பேதுரு 1:7) என்று வேதாகமம் நமக்கு உறுதியளிக்கிறது.

புகழப்படுவதை விரும்பாத மனிதர் இருக்க முடியாது. புகழ்ச்சி மனதுக்கு இதத்தைக் கொடுக்கும். ஆனால், எங்கிருந்து புகழ்ச்சி வருகிறது என்பது மிக முக்கியம். நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்கள் நம்மைப் புகழாவிட்டால் கவலைப்படாதிருப்போம். ஆண்டவரிடமிருந்து வரும் கனத்தையும், மகிமையையும் பெற நாடுவோம். அது என்றென்றும் நிலைத்திருக்கும். "நித்திய கடவுளிடமிருந்துதான் நித்திய மேன்மை கிடைக்கும்" அது வேறெங்கும் கிடைக்காது.

*வாசிப்பு:*
யோசுவா 3:5-8

*ஜெபம்:*
"கர்த்தாவே, நீரன்றி எனக்கு எதுவும் வேண்டாம். உம்மிடமன்றி எந்தப் புகழும் வேண்டாம். நான் என்றும் உமது பிள்ளை. என்னை ஏற்றருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
15
திங்கள்

# பாதங்கள் தண்ணீரில் பட்டதும்

'சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில்...' (யோசுவா 3:13)

பல வருடங்களுக்கு முன் நாணயம் செய்யும் தொழிற்சாலை ஒன்றில் பார்வையாளர்கள் வந்து குவிந்தனர். அங்கிருந்த ஒரு வழிகாட்டி, "உங்கள் கையைத் தண்ணீருக்குள் போட்டெடுத்து நீட்டினால், உங்கள் உள்ளங்கையில் உருக்கிய உலோகத்தை வைக்கலாம். அது கையை ஒன்றும் செய்யாது" என்றான். அங்கே ஒரு தம்பதியர் இருந்தனர். வழிகாட்டி கணவரைப் பார்த்து, "நீங்கள் முயற்சிக்கிறீர்களா?" என்று கேட்டான். "ஐயோ! நான் மாட்டேன்" என்று அவர் பின்வாங்கிவிட்டார். பின் வழிகாட்டி மனைவியிடம், "நீங்கள் ஆயத்தமா?" என்றார். அவள், "நிச்சயமாக வருகிறேன்" என்றாள். அவள் தன் கையை ஒரு வாளியிலிருந்த தண்ணீரில் மூழ்கச்செய்து வெளியே எடுத்து, கையைச் சாதாரணமாக நீட்டினாள். உருகிய உலோகம் அவள் கையில் ஊற்றப்பட்டது. கைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதனை அந்தக் கணவரும் நம்பினார். ஆனால், சோதித்துப் பார்க்க முன்வரவில்லை. மனைவியோ, அதை வித்தியாசமான கோணத்தில் நம்பினாள்; அந்த சோதனைக்கு ஒத்துக்கொண்டாள்.

யோசுவாவும், இஸ்ரவேலரும் ஒரு பெரிய ஆபத்தை எதிர்கொண்டனர். வெள்ளம் பெருக்கெடுத்தோடும் வேகமும், சுழற்சியும், அபாயமும் உள்ள யோர்தான் நதியை அவர்கள் கடந்து செல்லவேண்டும். செங்கடலை இஸ்ரவேலர் கடக்கவேண்டிய அவசியம் வந்தபோது, தேவன் செங்கடலை இரண்டாகப் பிளக்கச்செய்து, நடுவே வெட்டாந்தரையில் இஸ்ரவேலர் நடந்துவரச் செய்திருந்தார். இங்கே ஆசாரியர்கள் யோர்தான் நதியின் தண்ணீரில் இறங்கவேண்டியிருந்தது. அவர்கள் கால் வைத்தபின்பு, தேவன் வழிதிறப்பார் என்று நம்பினார்கள். ஆசாரியர்கள் யோர்தான் நதியின் தண்ணீரில் கால் வைத்ததும், அவர்களுடைய விசுவாசத்தைத் தேவன் கனப்படுத்துவார்; அப்படியே செய்தார்.

ஆபத்துக்களைச் சந்திக்க அநேக கிறிஸ்தவர்களுக்கு விருப்பமில்லை. ஊழியம் செய்யப் புறப்படும்போது எப்போதும் வாசல்கள் திறக்கப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்புவதுண்டு. அந்த விருப்பத்தைத் தேவன் நிறைவேற்றுவார். ஆனால், பல சமயங்களில் உரிய நேரத்தில் நமது விசுவாசத்தைத் தேவன் கனப்படுத்துவார் என்ற முழுமையான நம்பிக்கையுடன் நாம் காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கவேண்டியிருக்கும். அங்கேதான் நம் விசுவாசம் சோதனைக்குட்படுகிறது. இன்று நமது வாசல் எங்கேயாவது அடைக்கப்பட்டிருப்பதுபோல தோன்றினால், விசுவாசத்தோடு முன் செல்லுங்கள். உங்கள் கால்களைத் தண்ணீரிலே நனைய விடுங்கள். அதன்பின் தேவனுடைய நடத்துதலுக்குக் காத்திருங்கள். தேவன் குளிர்ந்த பாதங்களையல்ல, நனைந்த பாதங்களையே கனப்படுத்துவார்.

*வாசிப்பு:*
யோசுவா 3:9-17

*ஜெபம்:*
பிதாவே, உமது வார்த்தையே என் மூச்சு. அதை நம்பி என் கால்களை முன்னேயுள்ள போராட்டத்தில் நனைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
16
செவ்வாய்

# நினைவூட்டும் குடும்ப அடையாளம்

...யோர்தானின் நடுவிலே ஆசாரியர்களின் கால்கள் நிலையாய் நின்ற இடத்திலே பன்னிரண்டு கற்களை எடுத்து. அவைகளை உங்களோடேகூட அக்கரைக்குக் கொண்டுபோய்... (யோசுவா 4:3)

ஒரு சாதாரண மனித மனதின் நினைவாற்றல் ஆச்சரியமானது. ஒரு வேளை நமக்குத் தொழில்நுட்ப புள்ளி விபரங்களை நினைவில் வைத்திருக்க முடியாதிருக்கலாம். ஆனால், எத்தனை பேருடைய முகங்கள், பெயர்கள், எத்தனை பழைய காலத்து, இளமைக் காலத்து நிகழ்வுகள், எத்தனை சொற்கள் அவற்றின் எழுத்துக்கள் என்று எத்தனை காரியங்கள் நமது ஞாபகத்தில் உண்டு. ஒருவருடைய வாழ்நாள் காலத்தில் மனிதமூளையில் ஒரு மில்லியன் பில்லியன் தகவல் துணுக்குகளைச் சேமித்து வைக்கமுடியும் என்று ஒருவர் கணக்கிட்டுள் ளார். அப்படி இருந்தபோதிலும், தேவன் நமக்குச் செய்த நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் எவ்வளவு சுலபமாக மறந்துவிடுகிறோம்!

இக்காரணத்தால்தான், ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவர் வீதம் தெரிந்தெடுத்து, யோர்தான் நதியில் ஆசாரியர்கள் நின்ற இடத்திலிருந்து 12 கற்களை எடுத்துக்கொண்டு வந்து, அவர்கள் தங்கும் இடத்தில் வைத்துக்கொள் ளும்படி அவர்களிடம் சொல்லவேண்டும் என்று தேவன் யோசுவாவுக்குக் கட்டளையிட்டார். யோர்தான் நதியைக் கடக்க தேவன் செய்த அற்புதத்தை நினைப்பூட்டும்படிக்கே இந்தக் கற்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை கில்காலில் நாட்டப்பட்டன. அவை நினைவூட்டும் குடும்ப அடையாளம் ஆயின. இஸ்ரவேல் புத்திரர் பிற்காலத்தில் இந்தக் கற்கள் ஏன் இப்படி நாட்டப்பட்டிருக்கின்றன என்று விசாரிக்கும்போது, இலட்சக்கணக்கான இஸ்ரவேல் மக்கள் கரைபுரண்டோடும் யோர்தான் நதியைக் கடந்துசெல்ல தேவன் செய்த அற்புதத்துக்கு அடையாளம் என்று விளக்கம் கூறவேண்டும் (யோசுவா 4:21,22).

ஒவ்வொரு குடும்பத்திலும் தேவன் அவர்களுக்குச் செய்த அற்புதங்க ளுக்கு ஒரு நினைவுச் சின்னம் இருக்கவேண்டும். நமது வாழ்க்கையில் தேவன் செய்த நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் ஒரு பட்டியலாக எழுதிவைக்க லாம். பின்னால் பலரும் படிக்கத்தக்கதாக அழகான ஒரு பத்திரிகைபோல தயாரிக்கலாம். தேவன் செய்த நன்மைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகள் அடங்கிய நிழற்படங்களைச் சேகரித்து வைக்கலாம். இப்படியாக ஏதாவதுமுறையில் தேவன் நமது குடும்பத்துக்குச் செய்த நன்மைகளை நினைவூட்டும் ஒரு குடும்ப அடையாளத்தைத் தயார்படுத்துவோம். பின்னால் நம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர் அதைக் கண்டு, படித்து, கர்த்தரின் மகத்துவச் செயல்களை நினைவுகூர்ந்து அவரைத் துதிக்கட்டும். இதற்காக உங்கள் பின் சந்ததியார் உங்களுக்கு நன்றிகூறு வார்கள். ஆண்டவரை நினைவுகூரும் ஒரு குடும்பம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படும். அந்த ஆசீர்வாதம் நமது குடும்பத்துக்கும் உரித்தாகட்டும்.

*வாசிப்பு:*
யோசுவா 4:1-7

*ஜெபம்:*
"பிதாவே, எங்கள் குடும்பத்தில் நீர் செய்த நன்மைகள் ஏராளம். அவற்றைப் பின் சந்ததியும் கேட்டு, அறிந்து உம்மைத் துதிப்பார்க ளாக. ஆமென்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
17
புதன்

# புரட்டிப்போட்டேன்!

இன்று எகிப்தின் நிந்தையை உங்கள்மேல் இராதபடிக்கு புரட்டிப் போட்டேன் என்றார். அதனால் அந்த ஸ்தலம் இந்நாள்வரைக்கும் கில்கால் என்னப்படுகிறது. (யோசுவா 5:9)

அமெரிக்கர்கள் ஒரு வருடத்துக்கு 50 மில்லியன் டாலர்கள் செலவிட்டு சிறப்புச் செய்தி ஒலிநாடாக்கள் தயாரித்து வெளியிடுகின்றனர். அவை நன்கு பயன்படுத்தப்பட்டால் மக்களின் வாழ்க்கையே மாறிவிடும் என்று நம்பப்படுகிறது. ஒருவனுடைய சுய சாயலை மாற்றுவது முதல், அந்நிய மொழி ஒன்றைக் கற்றுக் கொள்ளுதல் என்பதுவரை பல்வேறு துறைகளில், பல்வேறு படிப்புக்களுக்கும், பயிற்சிகளுக்கும் பயன்படக்கூடிய செய்திகளாக அவை வெளியிடப்படுகின்றன. ஆனால், அவை எதிர்ப்பார்த்த பலனைத் தரவில்லை. மனிதனை மாற்றவில்லை.

இஸ்ரவேலர் கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமானபோது, தேவனோடு செய்திருந்த உடன்படிக்கையைப் புதுப்பிக்கவேண்டியிருந்தது. இந்த உறவுக்கு அடையாளமாக விருத்தசேதனம் செய்வது அவசியமாயிற்று. எகிப்தில் இருந்து புறப்பட்ட வயது வந்தவர்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்திருந்தனர். இவர்கள் அனைவரும் வனாந்தரத்தில் மரித்துப்போனார்கள். 40 வருடங்களாக வனாந்தரத்தில் அலைந்தபோது பிறந்த பிள்ளைகள் வளர்ந்து வாலிபர்களானார்கள். இவர்கள் விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள். இப்போது இவர்கள் அனைவருக்கும் விருத்தசேதனம் செய்யவேண்டியதாயிற்று. இப்படிச் செய்வதன் மூலம் எகிப்தின் நிந்தை இவர்களிடமிருந்து புரட்டிப்போடப்படுகின்றது.

தேவனோடு உடன்படிக்கை உறவு வைத்திருப்பவர்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பது இப்போது இல்லை. இயேசு சிலுவையில் மரித்தபின், வெளியரங்கமான விருத்தசேதனம் எனும் அடையாளம் நீக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் உள்ளே நிறைந்திருக்கும் நிலை உருவாயிற்று. அவரே எசேக்கியேல் தீர்க்கதரிசன புத்தகத்தில் காணப்படும் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாயிருக்கிறார். "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்." (எசே.36:26) பரிசுத்த ஆவியானவர் உள்ளே வரும்போது, பழைய வாழ்வு உருண்டு ஓடிப்போகிறது. நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டி ஆகிவிடுகிறோம் (2கொரி.5:17). இந்த அனுபவம் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம். நீங்கள் இப்பொழுதும் பழைய பாவ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பீர்களானால் இன்றே இயேசுவை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? அவர் உங்கள் பாவங்களைப் புரட்டிப்போட்டு, அதனால் ஏற்பட்ட நிந்தையை விலக்கிவிடுவார். இயேசுகிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் மாற்று உருவாக்கம் செய்துவிடுகிறார். அங்கே தான் எதிர்கால நம்பிக்கை தோன்றும்.

*வாசிப்பு:*
யோசுவா 5:2-10

*ஜெபம்:*
"பிதாவே, உம்மையல்லாமல் என் வாழ்வைப் புதிதாக்க இவ்வுலகில் எதனாலும் முடியாது. இன்றே என்னை அர்ப்பணிக்கிறேன். என்னைப் புதுப்பித்து ஏற்றருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
18
வியாழன்

# 'என்ன' என்று கேட்கும் மனிதன்

...யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்ந்தவரோ. எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். (யோசுவா 5:13)

தகப்பன் தனது காரைச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த அவருடைய 5வயது மகன், "நான் வளர்ந்து ஒரு "what man" ஆகுவேன்" என்றான். அதைக் கேட்டு வியப்படைந்த அப்பா, அதற்கு விளக்கம் கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன், "கார்கள் பழுதுபார்க்கப்படும்" என்று ஒரு அறிவிப்புப் பலகையைத் தொங்கவிட்டு, ஒரு பணிக்கூடத்தை நடத்துவானாம். மக்கள் தங்கள் கார்கள் பழுதடைந்ததும், இந்த மையத்தில் கொண்டுவந்து சேர்ப்பார்களாம். அவன் ஒவ்வொரு காரையும் சோதித்துப் பார்த்துவிட்டு, "என்ன செய்யவேண்டும்" என்று கேட்பானாம். அப்படிக் கேட்பவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறவன்தானாம் "what man" என்றான் அவன்.

"என்ன செய்ய வேண்டும்?" என்று சொல்லக்கூடிய ஒரு "what man" இஸ்ரவேலருக்குத் தேவைப்பட்டான். அவர்கள் பல ஜாதியினரோடு யுத்தம் செய்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் தடுமாறியபோது, "என்ன செய்யவேண்டும்?" என்று கூறக்கூடிய ஒரு "what man" கிடைப்பானா என்று தேடினார்கள். அவர்களுக்கு முன்னிருந்த எரிகோ பட்டணம் அரணான மதிற்சுவரால் சூழப்பட்டிருந்தது. போர் வீரர்கள் ஆங்காங்கே ஆயுதந் தாங்கி நின்றார்கள். இந்த மதிற்சுவரும், போர் வீரர்களும், மேற்கொள்ளமுடியாத தடைகளாய் இருந்தார்கள். இந்த நிலையில் யோசுவா யோசித்துக்கொண்டிருந்த போதுதான், பரலோக தேவனுடைய இராணுவ தளபதி, யோசுவாவுக்குக் காட்சியளித்தான். வந்திருப்பது வானசேனையின் தளபதி என்று அறிந்ததும் யோசுவா முகங்குப்புற விழுந்து வணங்கி, "அடியேனுக்குச் சொல்லுகிறது என்ன" என்று கேட்டான்.

நமது வாழ்விலும் குழப்பமடைகின்ற சந்தர்ப்பங்களில் "என்ன செய்ய வேண்டும்" என்று தெரிவிக்கும் ஒருவர் தேவைப்படுகிறார். அப்படிப்பட்ட வேளைகளில் ஆண்டவரை நோக்கிப் பார்க்கவேண்டும். "என்ன செய்யவேண்டும்" என்று தெரிவிக்க வல்லவர் ஆண்டவர் ஒருவரே. அவர் நமக்கு ஒரு திட்டம் வைத்திருக்கின்றார். அது நமது வாழ்வில் தோன்றும் கேள்விகளுக்கு விடையளித்துவிடும். "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே." (எரே.29:11) தேவனைத் தேடுங்கள். தினமும் வேதாகமத்தை வாசியுங்கள். தேவன் உங்கள்மீது கொண்டிருக்கும் சித்தத்தைக் கண்டுகொள்ளுங்கள். நீங்கள் செய்யவேண்டியது என்ன என்பது அவருக்கு தெரியும் என்று அப்போது அறிந்துகொள்ளலாம். நமது கேள்விகளுக்கு அவரிடமே பதில் உண்டு.

*வாசிப்பு:*
யோசுவா 5:10-15

*ஜெபம்:*
"பிதாவே, எனது கேள்விகளுக்கெல்லாம் உம்மிடமே பதில் உண்டு என்பதை விசுவாசிக்கிறேன். உமது வழியில் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
19
வெள்ளி

# 'அது எனக்குப் புரியாத புதிர்'

ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்... (யோசுவா 6:4)

மனித புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டவற்றைக்குறித்து ஒருவர் இப்படிக் கூறினார். "தர்ப்பூசணி(water melon) பழத்தின் விதைக்கு ஒரு சக்தியுண்டு. அது தன் எடையைப்போல 200,000 மடங்கு அதிக எடையை நிலத்திலிருந்தும் தன்னிலிருந்தும் பெற்றுக்கொள்கிறது. அதாவது, மேல்பக்கத்திலுள்ள பச்சையும் வெள்ளையும் கலந்த ஒரு அழகிய தோற்றம், அது ஓவியக் கலைஞர்களையும் மிஞ்சி விடுகிறது. உள்ளே ஒரு வெள்ளை நிறப் பகுதி சுமார் ஒரு அங்குலம் தடிப்புக்கு உள்ளது. உட்பாகம் முழுவதும் இருதயம்போல அழகிய இளம்சிவப்பு நிறத்தில் தசைப்பற்று நிறைந்திருக்கும். அதனுள் கறுப்பு விதைகள் வரிசையாகப் புதைந்திருக்கும். தர்ப்பூசணிப் பழத்தின் இந்த அற்புதங்களை நீங்கள் விளக்கும் போது, ஆண்டவருடைய அற்புதமான செயல்களையும், புதிர்களையும் விளக்கிக் கூறும்படி நீங்கள் என்னிடம் கேட்கலாம்" என்றார் அவர்.

ஆண்டவருடைய அற்புத செயல்களைக் காணும் அனுபவம் யோசுவாவுக்குக் கிடைத்தது. தேவன் ஒரு திட்டத்தை யோசுவாவுக்குக் கொடுத்தார். அப்போது, அரணான நகரத்தின் மதிற்சுவரைச் சுற்றி நடத்தல், எக்காளங்களை ஊதுதல், மக்கள் கூட்டமாக ஆர்ப்பரித்தல் என்பன எப்படி மதிற்சுவரை இடிந்து விழச்செய்யும் என்று கேட்கத் தோன்றும். இது மனித புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. ஆனால் தேவனுடைய அற்புதச் செயல்கள் வல்லமையானவை.

தெய்வீக புதிர்கள் ஏராளம் உள்ளன. ஒரு தகப்பன் இல்லாமல் ஒரு குழந்தை கருவில் எப்படி உருவாக முடியும்? இது நமக்குப் புரியாத ஒன்று. ஆனால், அது நடந்தது (லூக்.1:34). ஆதியும் அந்தமும் இல்லாத ஒரு கடவுள் எப்படி ஒரு மாம்சமான சரீரத்தினுள் அடங்கியிருக்க முடியும்? ஆனால், அவர் அப்படி இருந்தார். (கொலோ.1:15) ஒரு மனிதனின் மரணம் எப்படி இந்த உலக மக்கள் அனைவரினதும் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் ஆகமுடியும்? ஆனால், அது ஆனது; எப்படியாயிற்று என்பது புரிவதில்லை (ரோம.5:18). தேவனுடைய இரகசியங்களெல்லாம் விளக்கம் கூறுவதற்கல்ல; நாம் அவற்றை விசாரித்து, ஏற்று, அப்படியே செயல்படுத்தவேண்டும்.

*வாசிப்பு:*
யோசுவா 6:1-7

தேவனின் ஒரு அற்புத செயலை புரிந்து கொள்ள தத்தளித்துக்கொண்டிருப்பாய் என்றால் உன்னை வருத்திக்கொள்ளாதே. நாம் புரிந்துகொள்கிறோமோ இல்லையோ, நாம் அவருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாக இருக்கிறோமா என்பதே பிரச்சனை. அதற்கு விசுவாசம் தேவை. நாம் தேவனை அவரது செயல்களை நம்பவேண்டும். உட்கருத்துக்கான விளக்கங்கள் இல்லாதபோதும், விசுவாசம் கீழ்ப்படிய செய்யும். அந்த விசுவாசமே மேலானது. அதன் விளைவான மகிழ்ச்சியே மிகப் பெரியது.

*ஜெபம்:*
"பிதாவே, உமது ஆழங்களை யார் அறியக்கூடும். உம்மை விசுவாசிக்கும் விசுவாசத்தைத் எனக்குத் தந்தீரே ஸ்தோத்திரம். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
20
சனி

# வெற்றியா! எச்சரிக்கை!

...ஜனங்களின் இருதயம் கரைந்து தண்ணீராய்ப் போயிற்று.
(யோசுவா 7:5)

1776 நவம்பர் 16ம் நாள் பிரிட்டிஷ் படையினருக்கு முன்பாக வாஷிங்டன் கோட்டை விழுந்துவிட்டது. ஜெனரல் வாஷிங்டன் பின்வாங்கிப் போகவேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் ஹோ வெற்றியில் மகிழ்ந்து, அமெரிக்க இராணுவத்தைத் துரத்திக்கொண்டு போகவேண்டாம் என்று தீர்மானித்தான். தன் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களைக் குளிர்காலக் கூடாரங்களில் தங்கி இருக்கும்படி கட்டளையிட்டான். கிறிஸ்மஸ் இரவில் வாஷிங்டன் தன் இராணுவ வீரர்களில் ஒரு பகுதியை படகுகளில் ஏற்றி டெலாவெயர் ஆற்றின் மறுகரைக்கு அனுப்பி, வீரர்களைத் திடப்படுத்தி, ஓய்வாக இருந்த பிரிட்டிஷ் இராணுவ முகாம்களில் எதிர்பாராத தாக்குதல் நடத்தினர். பிரிட்டிஷ் இராணுவம் நிலைகுலைந்து தோற்றுப்போனது. 1000த்திற்கும் அதிகமான வீரர்கள் சிறைக் கைதிகளாகினர். வெற்றியில் மிதந்த பிரிட்டிஷ் இராணுவம் மாபெரும் தோல்வியைத் தழுவியது.

இதே அனுபவம் யோசுவாவுக்கும் ஏற்பட்டது. எரிகோவில் மாபெரும் வெற்றியைக் கண்ட இஸ்ரவேலர் ஒரு சிறு கூட்டமான ஆயி பட்டணத்து மக்கள் இடத்தில் தோற்றுவிட்டனர். ஆயி என்றால் 'அழிவு' அல்லது 'இடிபாடு' என்று பொருள். இஸ்ரவேலரின் கூடாரத்தில் பாவம் இருந்தது (யோசு.7:10-13). இதுவே அவர்களுடைய தோல்விக்கு ஒரு காரணம். மற்றது, தலைவர்களிடம் இருந்த ஆணவம், தற்பெருமை, கர்வம், இறுமாப்பு ஆகியவை. அவர்களின் அதிகமான தன்னம்பிக்கையே இவ்வளவாக சிறுமைக்கும் தோல்விக்கும் காரணமாயிற்று.

"ஒரு கிறிஸ்தவனுக்கு ஒரு ஆவிக்குரிய வெற்றி கிடைத்துவிட்டால் அதைத் தொடர்ந்துவரும் காலமே மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம்" என்று அனுபவசாலியான ஒரு அறிஞர் கூறியுள்ளார். பிரிட்டிஷ் தளபதி போரில் வெற்றி கண்டதும் விழிப்புணர்வை மறந்ததும், வீரர்களைக் குளிர்கால முகாமில் இளைப்பாறச் சொன்னதிலுமிருந்து அவன் கற்றுக்கொண்ட பாடம் இதற்கு நல்ல உதாரணம். வெற்றியைக் கண்டதும் அந்த வெற்றிக்களிப்பில் நாம் மிதப்போம்; காவலாளிகளும் கடமையை மறந்து இளைப்பாறச் சென்று விடுவர். இதுதான் தாக்குவதற்கான நல்ல தருணம் என்பது சாத்தானுக்குத் தெரியும்.

*வாசிப்பு:*
யோசுவா 7:1-5

நாம் ஆவிக்குரிய வெற்றியைக் கண்டால், அதன் மகிமையைக் கடவுளுக்குச் செலுத்துவோம். அதேசமயம் எச்சரிப்பும், விழிப்பும் அவசியம். எத்திசையிலிருந்து தாக்குதல் வந்தாலும், எதிர்கொள்ள ஆயத்தம் வேண்டும். "இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி.10:12). எப்பொழுதும் எச்சரிக்கையாக இருங்கள்; வெற்றிப் பாதையில் தொடர்ந்து நடவுங்கள்.

*ஜெபம்:*
"பிதாவே, நான் பெற்றுக்கொள்ளும் எந்த வெற்றியும் உமது கிருபையே. அதை உணர்ந்து, என்றும் உம்மைச் சார்ந்து ஜீவிக்கப் பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
21
ஞாயிறு

# பாவம் சகலரையும் பாதிக்கும்!

இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள். நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள். (யோசுவா 7:11)

8415 பேரிடம் ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதில் வெளிப்படுத்தப்பட்ட உண்மையானது, புகைமண்டலத்தில் வேலை செய்பவர்கள் புகையை சுவாசிப்ப தினால் கழுத்தின் இரு பக்கமும் உள்ள மூளைக்கு இரத்தம் கொண்டுசெல்லும் சுத்த இரத்த குழாய்களின் சுவர்கள் 10சதவீதம் அதிகமாகத் தடித்திருந்தது. இது மாரடைப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். இதுபோல, போதை மருந்து களையும், மதுபானங்களையும் அதிகமாகப் பயன்படுத்துவதால், ஏற்படும் விளைவாக, ஒரு வருடத்தில் தொழில் துறையில் 60 பில்லியன் டாலர் மதிப்பில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. வேலைக்கு தொழிலாளர் வராமலிருத்தல், வேலைத்தலங்களில் விபத்துக்கள், அதிகளவு ஆயுள் காப்பீட்டு தொகை இழப்பு, தொழிற்சாலைகளில் உற்பத்திக் குறைவு, சேதம், கழிவு ஆகிய இவைகளே மேற்கண்ட இழப்புக்குக் காரணமாகும். இந்த இழப்பை ஈடுகட்ட நுகர்வோர்மீது அதிக விலை, அதிக சேவைக் கட்டணம் இவற்றை விதித்துச் செயல்படுத்தி பொதுமக்கள் பாதிப்படையச் செய்கிறார்கள். நாம் செய்யும் பாவம் நம்மை மாத்திரம் பாதிப்பதில்லை.

ஆகான் ஒருவேளை தான் செய்த பாவம் தன்னை மட்டும் பாதிக்கும் என்று நினைத்திருக்கக்கூடும். ஆயியில் இஸ்ரவேலர் தோல்வியடைந்ததற்குக் காரணம் என்ன என்று விசாரிக்கும்படி யோசுவா தேவசமுகத்திற்கு சென்றபோது, "இஸ்ரவேலர் பாவம் செய்தார்கள்" என்றார் தேவன். ஆகானின் பாவம் யோசுவா வுக்கு வேதனையை உண்டாக்கிற்று (வச.6,7). அப்போ, அந்த யுத்தத்தில் கொல்லப்பட்ட 36 பேரினரும் குடும்பங்களுக்கு எப்படி இருந்திருக்கும்? (வச.5) குறிப்பாக ஆகானுடைய குடும்பத்தார் அனைவரும் கல்லெறிந்து கொல்லப்பட்ட நிலையைக் கற்பனை செய்துபாருங்கள் (வச.24,25). ஆகானின் பாவம் அவனை மாத்திரமல்ல, குடும்பம் முழுவதையும், உடைமைகளையும் பாதித்தது.

"என்னுடைய பாவம் என்னைத் தவிர வேறு எவரையும் பாதிக்காது" என்றுதான் இன்றும் கூறுகிறோம். அது தவறு. நியூயோர்க் நகரத்தில் மேற்கொள் ளப்பட்ட ஒரு புள்ளிவிபரம் கீழ்க்கண்ட உண்மை களை வெளிப்படுத்தியுள்ளன. அங்குள்ள ஒரு சுரங்க பாதையின் கட்டணம் 1.25 டாலர். டோக்கன் வாங்கா மல் போகின்ற ஏமாற்றுப் பேர்வழிகள் இல்லாவிட்டால் அக் கட்டணம் 1.19 டாலர் மட்டுமே. சொத்துச் சேதத்திற்கு உரிய காப்பீட்டு கட்டணம் 600 டாலர். அதில் கள்ளத்தனம் செய்பவர்கள் இல்லாவிட்டால் அது 540 டாலராக இருக்கும். இப்படி இன்னும் உண்டு. அடுத்தமுறை சாத்தான் உங்களைப் பாவம் செய்யத் துண்டும்போது, அதனால் பாதிக்கப்படுவது நாம் மட்டுமல்ல எனவும் பாவம் நம் அனைவரையும் பாதிக்கிறது என்பதையும் நினைவுகூருவோம்.

*வாசிப்பு:*
யோசுவா 7:6-15

*ஜெபம்:*
"பரிசுத்த பிதாவே, என் ஒருவனின் பாவம் யார் யாரைப் பாதித்ததோ, என்னையும் மன்னித்து, அவர்களையும் காத்தருளும். உமக்கே மகிமை உண்டா கட்டும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
22
திங்கள்

# பாறையைப்போல கடினமாய் இரு

"...இதோ, ஆயியின் ராஜாவையும் அவன் ஜனத்தையும் அவன் பட்டணத்தையும் அவன் நாட்டையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்." (யோசுவா 8:1)

ஸ்பெயின் தேசத்தின் தெற்குக் கரையோரத்திலுள்ள ஜிப்ரால்டர் என்ற இடம் ஒரு சிறிய தீபகற்பம். மத்திய தரைக்கடல் ஆரம்பிக்கும் இடம் இதுவே. இதன் பெரும்பகுதியை, 1398அடி உயரமுள்ள ஒரு பாரிய சுண்ணாம்புக் கற்பாறை ஒன்று ஆக்கிரமித்துள்ளது. இந்தப் பாறை உறுதிக்கும் நிச்சயத் தன்மைக்கும் ஒரு உதாரணமாக விளங்குகின்றது. இதனால், "ஜிப்ரால்டர் பாறையைப்போலக் கடினமானது" என்னும் கூற்று உருவாயிற்று.

கர்த்தருடைய வார்த்தைகள் இந்தப் பாறையைவிட, இன்னும் அதிக கடினமானவை. தேவன் யோசுவாவிடம் மூன்று தடவைகள், பின்னால் நடக்கப் போகிற காரியங்களை, அவை செய்துமுடிக்கப்பட்டவைபோலப் பேசினார். 6ம் அதிகாரத்தில் எரிகோவைப் பற்றி தேவன் கூறினார். எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன் (வச.2) என்றார்; அது நடந்தது. இப்போது, ஆயியைக் குறித்தும், ஒப்புக்கொடுத்தேன் என்றார். (8:1) பின்னர், வச.18 முதல் 25 வரை பார்க்கும்போது இது அப்படியே நடந்து முடிந்தது. மேலும், எமோரியரை அடக்குவதுபற்றி தேவன், "...உன் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன்; அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை என்றார்." (10:8). 10:10,11ம் வசனங்களில் கர்த்தர் எமோரியரை முறியடித்த விவரம் தரப்பட்டுள்ளது.

ஜிப்ரால்டரின் கடினமான பாறை ஒருநாள் தகர்ந்து உடைந்துபோகலாம். ஆனால், கர்த்தருடைய வார்த்தைகள் மாறுவதில்லை. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்றார் இயேசு. (மத்.24:35) மாற்றங்களும் நிலையற்ற தன்மையும் காணப்படும் இந்த நாட்களில், தேவன் கூறுவது எதுவோ, அதை அவர் செய்து முடிப்பார் என்று உறுதியாக நம்பலாம். தேவன் அறிவித்ததை செயல்படுத்திக் காட்டுவார்.

உங்களுடைய வாழ்க்கையில் திகைப்பும், தத்தளிப்பும், சஞ்சலமும் வரும்போது, ஜிப்ரால்டர் பாறையை அல்ல, இயேசு என்னும் நித்திய கன்மலையை நோக்கிப் பாருங்கள். அவருடைய வார்த்தைகளை நம்புங்கள். அவர் ஒரு போதும் மாறமாட்டார். அவர் என்ன சொன்னாரோ அதை நிச்சயம் செய்துமுடிப்பார். ஆனால், அவர் என்ன சொன்னார் என்பதில் நமக்குத் தெளிவு அவசியம். கன்மலையையே நாம் சொந்தமாக்கிக்கொள்ள வாய்ப்பிருக்கும்போது, கன்மலை இருக்கிறது என்று மாத்திரம் திருப்தியடைவது ஏன்? தேவனுடைய வார்த்தை, வாக்கு இருக்கிறது என்று தெரிந்தால் போதாது. அதை நமதாக்கிக்கொள்வோம்.

*வாசிப்பு:*
யோசுவா 8:1-26

*ஜெபம்:*
"பிதாவே, நீர் வாக்கு மாறாதவர். என் அவிசுவாசத்தை மன்னியும். உமது வார்த்தையில் என்னை உறுதிப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
23
செவ்வாய்

# தெய்வீக தீர்மானம் செய்தல்

...அவனையும் இஸ்ரவேல் மனுஷரையும் நோக்கி: நாங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்கள். எங்களோடே உடன்படிக்கை பண்ணுங்கள் என்றார்கள். (யோசுவா 9:6)

தீர்மானம் செய்தல் என்பது நமது வாழ்வில் ஒரு பகுதியாக இருக்கிறது. காலையில் எதை உடுப்பது என்பதிலிருந்து, எதைச் சாப்பிடுவது, எந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதுபோன்ற எண்ணற்ற தீர்மானங்களைத் தினமும் செய்கிறோம். சிலவேளைகளில், வாழ்வையே மாற்றியமைக்கும் தீர்மானங்களும் செய்ய வேண்டியிருக்கும். இது, நமது வாழ்க்கைத் துணை, குடியிருக்கும் இடம், அல்லது வேலையைப் பற்றியதாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும், நமது தெரிவுகள் நமது ஆண்டவரைக் கனப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

யோசுவா கானானுக்குள் பிரவேசித்த பின்பு, முக்கிய தீர்மானம் ஒன்று செய்யவேண்டியிருந்தது. சுற்றியிருந்த எந்த ஜாதியினரோடும் எவ்வித உடன்படிக்கையும் செய்யக்கூடாது என்று தேவன் எச்சரிக்கை செய்திருந்தார். எனினும், வெகுதூரத்திலிருந்து வருவதாகக் கூறிய ஒரு கூட்டத்தாரின் சமாதான உடன்படிக்கைக்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதா, புறக்கணிப்பதா என்பதில் பிரச்சினை உண்டாயிற்று. யோசுவாவும், அவனது ஆலோசகர்களும், வந்திருந்த மக்கள் காட்டின பழுதடைந்த உணவு, கிழிந்த உடைகள் என்று இவற்றையே பரிசோதித்தனர். இந்த விஷயத்தில் அவர்கள் தேவனுடைய ஆலோசனையைக் கேட்கவில்லை என்று 9:14ம் வசனம் கூறுகிறது. அந்த மனிதரின் பேச்சை நம்பி, இவர்கள் அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆனால், அதன்பின்புதான் தாங்கள் வஞ்சகமாக ஏமாற்றப்பட்டதை அறிந்தார்கள்.

இன்றும், வஞ்சகமும், ஏமாற்றுதலும், ஆள்மாறாட்டமும் அதிகமாக உள்ளது. பொருட்களை விற்க வருகிறவர்கள், நயமாகப்பேசி, அவற்றை வாங்கும்படி நம்மைத் தூண்டிவிடுவர். தொலைக்காட்சி மாயையான வாழ்க்கைத் தோற்றத்தைக் காட்டுகிறது. விளம்பரதாரர்கள் தங்களால் நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளைத் தந்து ஏமாற்றுகிறார்கள். இவைகளின் மத்தியில் நாம் ஆண்டவருடைய ஆலோசனையை பெற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையின்படியான விடயங்களே அவரைக் கனப்படுத்தக்கூடிய தீர்மானங்களைச் செய்ய உதவும்.

*வாசிப்பு:*
யோசுவா 9:1-16

ஒரு தீர்மானம் செய்யவேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்படும்போது, மனிதரின் ஞானத்தை மட்டும் சார்ந்திராதிருப்போமாக. தேவனுடைய வார்த்தை கூறுவது என்ன என்று பார்க்கவேண்டும். தம்முடைய சத்தியங்களை வெளிப்படுத்தும்படி ஆண்டவரிடம் வேண்டுவோமாக. அதுவே, ஞானமான தெய்வீக தீர்மானங்களை முன்னெடுக்க நமக்கு உதவும். சரியான தீர்மானம் முக்கியமானது. ஆனால், அதற்கு சரியான ஆலோசனை கட்டாயமானது. அதனைத் தரக்கூடியவர் கர்த்தர் ஒருவரே.

*ஜெபம்:*
"பிதாவே, எந்தத் தருணத்திலும் மனித ஆலோசனையின்படி அல்ல, உமது வார்த்தையின்படியே கீழ்ப்படிய உதவி செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
24
புதன்

# மண்டியிட்ட முழங்காலின் வல்லமை

"அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது. சந்திரனும் நின்றது..." (யோசுவா 10:13)

ஒரு கம்பியில் அல்லது மரக்கிளையில் அமர்ந்துகொண்டு தூங்குகின்ற பறவைகளைக் கவனித்திருக்கிறீர்களா! அவை ஏன் விழுந்துவிடுவதில்லை என்று நினைத்து ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா? இதன் இரகசியம் பறவைகளின் கால்களில் உள்ள தசைநார்களே. பறவைகள் தங்கள் முழங்கால்களை மடக்கும்போது, தங்கள் விரல்களைச் சுருக்கி, இறுக்கமாகப் பற்றிப்பிடித்துக்கொள்ளுகின்றன. பறவைகள் தங்கள் முழங்கால்களை நீட்டி நிமிர்த்திப் பறக்கத் தொடங்கும் போதுதான், அவற்றின் கால்களின் பிடி தளரும். பின்னர் பறந்து செல்லும்.

மடங்கிய முழங்கால்தான் யோசுவாவுக்கும் வல்லமையை கொடுத்தது. எமோரியர் என்னும் பகைவர்களை இஸ்ரவேலர் துரத்தியடிக்கும்போது, வெளிச்சம் குறைந்துகொண்டு வந்தது. யுத்தம் ஜெயிக்கப்பட்டிருந்தபோதிலும், பாதைகள் இன்னும் தெளிவாகவில்லை. இஸ்ரவேலர் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, யோசுவா நின்று தேவனிடத்தில் வேண்டுதல் செய்தார். உடனே சூரியன் நடுவானத்தில் நின்றது. "இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை; அதற்குப் பின்னுமில்லை.. கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்." (யோசு.10:14) இதுதான் மடங்கிய முழங்காலின் வல்லமை.

உங்களுக்கு ஆண்டவரின் வல்லமையும், சக்தியும் தேவையானால் அவருக்கு முன்பாக உங்கள் முழங்கால்களை முடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். எல்லா ஜெபங்களும் சூரியனை நிறுத்திவிட முடியாது. தேவனுடைய சித்தத்தை ஒத்திருக்கிற ஜெபமே யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுத்தரும். நமது அனுதின வாழ்க்கையில் தமது வல்லமையை வெளிப்படுத்தி, அனுப்பித்தர தேவன் தெரிந்தெடுத்திருக்கும் கருவியே ஜெபம் ஆகும்.

இந்த மாபெரிய வல்லமையை நாமும் ஏன் அனுபவிக்கக்கூடாது. இதற்குத் தடையாயிருப்பது வேறு யாருமோ எதுவுமோ அல்ல. நமது முடங்காத முழங்கால்களே. முழங்கால்கள் முடங்கும்போது நம் தேவனை இறுகப் பற்றிக்கொள்கிறோம் என்பதை அனுபவித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். ஜெப வல்லமையை செயல்படுத்திப் பழக, இன்றே நாம் தீர்மானிப்போமாக. ஒவ்வொருநாளும் முழங்கால்களை மடக்கி, தேவனைத் தேட நேரம் ஒதுக்கிக்கொள்வோமாக. மடக்கிய முழங்கால்கள்மூலம் வாழ்வையே மாற்றிப்போடும் ஆற்றல்கள் கிடைப்பதை நாமே கண்டுகொள்ளலாம். வாழ்வில் நூலில் தொங்குகின்ற அனுபவம் நேரிட்டாலும், விழுந்து விடாதிருக்கும்படி, தேவனை உறுதியாகப் பற்றிக்கொள்ள, இன்றே நமது முழங்கால்களை மடக்குவோமாக.

*வாசிப்பு:*
யோசுவா 10:6-21

*ஜெபம்:*
"பிதாவே, முழங்காலை முடக்காத நாட்களை எனக்கு மன்னித்து, உம்மை இறுகப் பற்றிக் கொள்ள இன்றே என்னைப் பெலப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
25
வியாழன்

# உண்மையான நட்பு

...கர்த்தர் என்னைக்குறித்தும் உம்மைக்குறித்தும் தேவனுடைய மனுஷனாகிய மோசேயோடே சொன்ன வார்த்தையை நீர் அறிவீர்.... (யோசுவா 14:6)

புகழ்பெற்ற ஆராய்ச்சியாளரும் பகுப்பாய்வாளருமான ஆபிரகாம் மாஸ்லோ என்பவர் கணக்கிட்டுக் கூறியதாவது, "ஒரு சராசரி அமெரிக்கன், தனக்குத் தேவையான அன்பு, ஆதரவு, உதவி, அந்நியோன்னியமாகப் பழகும் தன்மை ஆகியவற்றில் 50சதவீத அளவுதான் அனுபவிக்கிறான்." ஆனால், அவருடைய கடைசிக்கால ஆராய்ச்சியின் முடிவு முற்றிலும் எதிர்மறையாக மாறிற்று. கடைசியில் அவர் கூறியது, "சராசரி அமெரிக்கனுக்கு இந்த உலகத்தில் உண்மையான ஒரு நண்பனே கிடையாது" என்பதே.

யோசுவாவுக்கும், காலேபுக்கும் இடையே இருந்த நட்பு இதற்கு முற்றிலும் எதிரிடையாக இருக்கிறது. முதலில் இவர்கள் இருவரும் மோசேயினால் ஒரு குழுவாக இணைக்கப்பட்டு, கானானை வேவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்டனர். மக்கள் இவர்களைக் கல்லெறியத் துணிந்தபோதும்கூட, இவர்கள் இருவரும் ஒன்றாகத் திடமாக நின்றனர் (யோசுவா 14:6-10). பின்னர், இவர்களில் யோசுவா இஸ்ரவேலரைத் தலைமை தாங்கி நடத்திச்செல்ல மோசேயின் ஸ்தானத்தில் தெரிந்தெடுக்கப்பட்டான். இது இவர்களின் நட்பில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. 45வருடங்களுக்குப் பிறகு, வாக்குதத்தம்பண்ணப்பட்ட தேசத்தைப் பங்கிடுவதில் தோளோடுதோள் நின்று போராடுவதைக் காண்கிறோம். யோசுவா ஒரு வாக்குத்தத்தத்தை அங்கு நிறைவேற்றினான். "அப்போழுது யோசுவா: எப்புன்னேயின் குமாரனாகிய காலேபை ஆசீர்வதித்து, எபிரோனை அவனுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தான்." (வச.13)

நிச்சயமாகவே காலேபும் யோசுவாவும் உண்மையான நண்பர்களாக இருந்ததுமட்டுமன்றி, செயல்களிலும் நண்பர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய நட்பு, காலத்தாலும், நெருக்கடிகளாலும் சோதனைகளாலும் சோதிக்கப்பட்டது. ஆனால், அவர்களுடைய நட்பு அர்ப்பணிப்புள்ளதாயிருந்தது என்பது, அவர்கள் செய்த செயல்களின்மூலம் வெளிப்பட்டது. வார்த்தைகளில் கூறப்பட்டிருந்த வாக்குத்தத்தங்கள், செயல்களின்மூலம் நேர்த்தியாக நிறைவேற்றப்பட்டன.

ஒருவேளை காலேபைப்போல உண்மையான, நல்ல, உறுதியான ஒரு நண்பன் நமக்கும் இருக்கலாம். எந்த நிலைக்கு நாம் உயர்த்தப்பட்டிருந்தாலும்கூட, நண்பரிடம் நமது நட்பைப் பாராட்டிப் பேசுவதோடு, அதைச் செயலிலும் காட்ட முயற்சிப்போமாக. 1யோவான்3:18ல் தரப்பட்டிருக்கும் புத்திமதியைப் பின்பற்றுவோம். "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்." கிரியையிலும், உண்மையிலும் தன்னை வெளிப்படுத்துகிறவனே உண்மையான நண்பனாவான். நாம் எப்படி?

*வாசிப்பு:*
யோசுவா 14:6-15

*ஜெபம்:*
"பிதாவே, வாயின் வார்த்தையினால் மாத்திரமல்ல, என் செயலினாலும் உண்மையுள்ள நண்பனாய் வாழ கிருபை செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
26
வெள்ளி

# எவ்வளவு காலம்?

'...கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளப்போகிறதற்கு, நீங்கள் எந்தமட்டும் அசதியாயிருப்பீர்கள்.' (யோசுவா 18:3)

1947, ஜூன் 22ம் நாளிலே நடந்த ஒரு திருமண நிகழ்வு இது. அன்று மழை அதிகமாயிருந்ததால் வெள்ளம் கரைபுரண்டோடியது. மணமகளின் வீடு ஆற்றின் அக்கரையில் இருந்ததால், திருமணம் நடைபெறவேண்டிய இடத்துக்கு வந்துசேர முடியாத நிலையில் அவள் இருந்தாள். மணமகனோ மனந்தளராமல் துணிச்சலுடன் தன்னுடைய பழைய காரில் முழங்காலளவு தண்ணீரில் புறப்பட்டு சென்றான். வழியில் ஒரு ரயில்வே பாலம், பெரும்பகுதி தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டு, தொங்கிக் கொண்டிருந்தது. மணமகன் காரை விட்டிறங்கி பாலத்தில் தவழ்ந்து தவழ்ந்து ஏறி அக்கரைப்பட்டார். அங்கிருந்து சிறிது தூரம் நடந்தே சென்றார். அங்கே ஒரு குட்டி விமானம் இருந்தது. இவர் தனது இக்கட்டான நிலையைக் கூறி, தன்னுடைய திருமணம் நடக்கவேண்டுமானால், மணமகளை அழைத்துக்கொண்டு, தன்னுடைய இடத்துக்குச் செல்லவேண்டும் என கெஞ்சினார். விமானி இரக்கங்கொண்டு உதவிசெய்தார். மணமகன் அந்த விமானத்தில் சென்று, தன்னுடைய மணமகளை அழைத்துக் கொண்டு, தனது இடத்திற்குச் சென்று திருமணம் செய்தான். அத் திருமணம் 13மணி நேரம் தாமதமானாலும் நடந்தேறியது.

இந்த மணமகனிடமிருந்த ஆர்வமும், வேகமும், துணிச்சலும், முயற்சியுமே அவருக்குச் சுதந்திரமான மனைவியை அடையச் செய்தன. இந்த ஆர்வம் இஸ்ரவேலரிடம் இருக்கவில்லை. கானான் தேசத்தில் தங்கள் சுதந்தர பாகத்தை இன்னும் பெற்றுக்கொள்ளாத ஏழு கோத்திரங்கள் இருந்தன. அத் தேசத்தைத் தேவன் அவர்களுக்கு வாக்களித்திருந்தபோதிலும், இஸ்ரவேலர் வேகமாகச் சென்று அதைச் சுதந்தரித்துக்கொள்ள முந்திக்கொள்ளவில்லை. கானான் தேசம் இருக்கிறது. அதைப் பங்கிட்டு சுதந்தரித்துக்கொள்வதுதான் அவர்களது வேலை. இஸ்ரவேலரில் அந்த ஏழு கோத்திரத்தாரும் எவ்வளவு காலம்தான் காத்திருக்கப் போகிறார்கள் என்று ஆச்சரியப்பட்டான் யோசுவா.

நாமும் அந்த இஸ்ரவேலரைப்போலத்தான். தேவன் நமக்கு வைத்திருக்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துக்கொள்ள இன்னும் ஏன் காலதாமதம்? வாழ்க்கையை மாற்றக்கூடியதான ஜெபம் ஏறெடுக்கக்கூடிய வாய்ப்பைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையை நமது மொழியில் வாசிக்கக்கூடிய வாய்ப்பும் நமக்குண்டு. வீண் தாமதம் செய்வதை விட்டுவிட்டு, இப்பொழுதே நமக்காகத் தேவன் வைத்திருக்கும் ஆசீர்வாதங்களையெல்லாம் பெற்றுக்கொள்ள எழுந்திடுவோமாக. நாம் எதை எடுத்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமோ அதையே தேவன் நமக்குத் தருவார்.

*வாசிப்பு:*
யோசுவா18:1-7

*ஜெபம்:*
"பிதாவே, நீர் வாக்களித்த ஆசிகளைச் சுதந்தரித்து அதைப் பெற்றுக்கொள்ள நீரே என்னை வழி நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
27
சனி

# களைத்தவனுக்கு இளைப்பாறுதல்

இப்பொழுதும் உங்கள் தேவனாகிய கர்த்தர்.... உங்களுக்குக் கொடுத்த உங்கள் காணியாட்சியான தேசத்திலிருக்கிற உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப்போங்கள். (யோசுவா 22:4)

இரட்சணிய சேனையின் ஸ்தாபகரான வில்லியம் பூத் அவர்கள் ஒரு தடவை ஒரு நீண்டதூர ஊழியப் பயணம் சென்றார். அப்போது, அவருடைய மனைவியிடமிருந்து அவருக்கு வந்த கடிதத்தின் ஒரு பகுதி இது. "செவ்வாய்க் கிழமை நடந்த ஊழியங்கள்பற்றிய உங்கள் அறிக்கை பத்திரமாகக் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. ஆண்டவருக்கே மகிமை. ஆனால், அதிக உழைப்பினால் மிகவும் களைப்படைந்திருப்பீர்கள் என்று நினைக்கும்போது வருத்தமாயிருக்கிறது. ஊழியத்தின் வெற்றி உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிப்பது குறித்துதான் கவலை. நீங்களும் உங்கள் ஊழியமும் பிறருக்கு நன்மையும் ஆசீர்வாதமாகவும் இருப்பதைத் தடைசெய்ய விரும்பவில்லை. ஆனால், ஞானமில்லாமல் அதிகமாக அலட்டிக்கொள்வதால் உங்கள் பெலனும், ஆரோக்கியமும் பாதிக்கப்பட இடமளிக்கக்கூடாது. நீண்ட காலம் வாழ்ந்து, திடமனதாய், பலமுள்ளவனாய் பரிசுத்த ஊழியம் செய்வதால் வரும் ஆசீர்வாதங்கள், குறுகிய காலம் அதிகமாக உடலை வருத்தி உழைப்பதால் வரும் பலனைவிட இருமடங்கு அதிகமாயிருக்கும். விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருந்து உங்கள் சரீரத்தின் பெலனைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்பதே.

ஐந்து வருடமாக யுத்தங்கள் நடத்தியபின், "தேவன் இளைப்பாறுதல் தந்திருக்கிறார்" என்று யோசுவா ஒரு அறிவித்தல் கொடுத்தார். இதற்கு, தேசம் முழுவதும் பூரணமாகப் பிடிக்கப்பட்டுவிட்டது என்பது பொருளல்ல. ஆனால், எப்படியும் மக்கள் இளைப்பாறி ஓய்வெடுக்கவேண்டிய அவசியமான காலமும் வந்திருந்தது. சில கிறிஸ்தவர்கள், "சாத்தான் ஒருபோதும் விடுமுறையில் செல்லுவதில்லை" என்று சொல்லலாம். அது உண்மையாயுமிருக்கலாம். ஆனால், நாம் பின்பற்றவேண்டிய முன்னுதாரணம் சாத்தான் அல்ல. நற்செய்தி நூல்கள் நான்கையும்பற்றி ஆராய்ச்சிசெய்த ஒரு வேதாகம அறிஞர் கூறியது: "இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்த மூன்று வருடங்களில் 10 தடவை இளைப்பாறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது". இளைப்பாற இடமளித்து, ஊழியத்தை நிறுத்தி நிறுத்திச் செய்வது நல்லது என இயேசுவே உணர்ந்திருப்பாரானால், நாம் நமது ஊழியக்காலத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? தனிமையாக இருப்பதும், சிறிது ஒய்வு எடுப்பதும் சுயநலம் அல்ல. இது கிறிஸ்துவைப் போன்றது. இளைப்பாறுதல் மாம்சத்துக்குரியதல்ல. அது ஆவிக்குரியது. இரத்தக் குழாய்களும், நரம்புகளும் சோர்ந்துபோகுமளவுக்கு உழைப்பவர்களால் தேவராஜ்யம் விரிவுபடுத்தப்படுவதில்லை. களைத்தவனுக்குத் தேவன் இளைப்பாறுதல் தந்துள்ளார். அதைப் பெறவேண்டியது நமது பொறுப்பு. தனியாக வந்து சற்றுநேரம் இளைப்பாறு; இல்லையேல், இனி ஒருபோதும் எழும்பமுடியாத அளவுக்கு இளைப்பாறுதல் பெற்றுவிடுவாய். எச்சரிக்கை!

*வாசிப்பு:*
யோசுவா 22:1-9

*ஜெபம்:*
"பிதாவே, உமது பாதத்தில் இருந்து, இளைப்பாறி பெலன் பெற்று, உமது ஊழியத்தை இன்னும் அதிக ஊக்கத்துடன் செய்ய என்னை நீரே நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
28
ஞாயிறு

# கடத்தி விடு

ஆகையால், மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதைவிட்டு, வலதுபுறமாகிலும் இடதுபுறமாகிலும் விலகிப்போகாமல்... (யோசுவா 23:6)

நம் வாழ்வில் சில காரியங்கள் நடக்க தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்று கேட்கிறோம். ஒவ்வொரு சூழ்நிலைக்கும் பொருத்தமான ஒரே விடை இல்லை. சிலவேளைகளில் நாம் கசப்பான அனுபவங்களைக் கடந்துபோக தேவன் அனுமதிக்கிறார். அவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுபவற்றை, பின் தொடர்ந்து வருகிறவர்களுக்குக் கூறலாம் அல்லவா?

தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட யோசுவா மிகவும் பயந்த வேளைகள் உண்டு. அப்போதெல்லாம், தேவன், "பலங்கொண்டு திடமனதாயிரு" (யோசு.1:7) என்று திடப்படுத்தினார். மேலும், "இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக..." (யோசு.1:8) என்றும் தேவன் கட்டளையிட்டார். யோசுவா தான் கடந்துவந்த சூழ்நிலைகளிலிருந்து பல காரியங்களைக் கற்றுக் கொண்டான். தன்னுடைய ஆயுசின் கடைசி வருஷங்களுக்கு வந்தபோது, தான் கற்றுக்கொண்ட அனுபவப் பாடங்களைத் தன் காலத்துக்குப்பின் இஸ்ரவேலரின் தலைவர்களாயிருந்து நடத்தக்கூடியவர்களுக்குக் கற்றுக்கொடுத்தான்.

தேவன் நமக்குக் கற்றுத்தருகின்ற சத்தியங்களையும், பாடங்களையும், பின்வரும் அடுத்த தலைமுறையினருக்குக் "கடத்தி விடுவது" - கற்றுத்தருவது நமது முக்கியமான பொறுப்பாகும். இதனைச் சிலர் "திருத்துதல்" (mentoring) என்பர். இதையே பவுல், தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் செய்து, சபையில் உள்ள மூப்பரை ஊக்குவிக்கும்படி சொன்னார். (2தீமோ.2:2; தீத்து2:3-5)

தேவன் உங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ள ஞானத்தை வீணாக்கிவிடாதீர்கள். சிலவேளைகளில் இக்கால சிறுவர்களும், வாலிபர்களும் உபதேசத்துக்கு செவிகொடுக்க மனதில்லாதிருப்பார்கள். எனவே, அவர்களை நல்வழிப்படுத்த புதிய புதிய உத்திகளைப் பயன்படுத்துங்கள். சத்தியங்களைக் கதைகளின் ரூபத்தில் பிள்ளைகளின் மனதிற்குள் கடத்திவிடுங்கள். அவர்களுக்கு குறிப்பேடு கொடுத்து, அதில் எழுதி வைக்க ஊக்குவியுங்கள். தேவன் உங்களுக்குக் கற்பித்த சத்தியங்கள் வீணாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெற்ற ஞானம், அறிவு, சத்தியம் என்பவற்றை உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் கடத்திவிடுங்கள். ஒரு பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் கருது வாரானால், நாம் அதை மற்றவருக்குக் கடத்திவிட, பகிர்ந்துகொள்ள அது ஏற்றது என்பதை நாம் கருத்திற்கொள்ளவேண்டும்; செயற்படுத்தவேண்டும்.

*வாசிப்பு:*
யோசுவா 23:1-8

*ஜெபம்:*
"பிதாவே, என் வாழ்வில் கற்றுக் கொண்டவற்றை பின்வரும் சந்ததியினருக்குக் கடத்த என்னை ஒப்புவிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
29
திங்கள்

# விற்பனைக்கு அல்ல

'அப்படியே நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும்.....உங்களுக்குக் கொடுத்தேன்.... என்றார்.' (யோசுவா 24:13)

அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்த கிளாரா பார்ட்டன் கியூபாவில் பணிசெய்து கொண்டிருந்தார் ஒருநாள் இராணுவத் தளபதி ரூஸ்வெல்ட் அவரிடம் வந்து, யுத்தத்தில் காயமடைந்த தனது வீரருக்கு உணவு வாங்க பணத்துடன் வந்திருப்பதாகக் கூறினார். ஆனால் கிளாரா கொடுக்க மறுத்துவிட்டார். தனது சொந்த நிதியிலிருந்து உணவிற்கான விலையைக் கொடுக்க தயாராயிருந்த தளபதிக்கு, கிளாராவின் செயல் புரியவில்லை. தலைமை டாக்டரிடம் சென்று கேட்டபோது, அவர், அங்குள்ள உணவுப்பொருட்கள் விற்பனைக்கு இல்லை என்று சொல்லி, "காயமடைந்த என்னுடைய போர்வீரர்களுக்குக் கொஞ்சம் உணவு தாருங்கள்" என்று சாதாரணமாகக் கேட்கும்படி சொல்லிக்கொடுத்தார். நிலைமையைப் புரிந்துகொண்ட தளபதி, டாக்டர் சொன்னபடியே கேட்டார். அவருக்குத் தேவையான உணவும் உடனே கிடைத்தது.

இப்போது தமக்கு சொந்தமாக வைத்து அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலம், திராட்சைத்தோட்டங்கள், ஒலிவத்தோப்புகள் எதுவும் அவர்களுடைய சொந்த முயற்சியால் பெற்றவை அல்ல என்பதை இஸ்ரவேலருக்கு யோசுவா நினைப்பூட்டினான். அவர்கள் ஆபத்தான யுத்தங்களில் எதிரிகளைச் சந்தித்தனர் என்பது உண்மை. ஆனால், அந்த வெற்றிகள், இவர்கள் அனுபவிக்கும் சுதந்தரங்களுக்குப் பிறப்பிடம் அல்ல. அவை ஆண்டவர் கொடுத்த இலவச ஈவு.

ஆண்டவர் பொருட்களை வாங்கி, விற்கும் தொழில் செய்பவரல்ல. நம்முடைய தயாள குணமுள்ள கொடைகள், நற்செயல்கள், ஆவிக்குரிய சமய நிகழ்ச்சிகள் போன்றவற்றால் இரட்சிப்பை வாங்கமுடியாது. ஆனால், தேவன் அதை நமக்குத்தர சித்தமாயிருக்கிறார். இயேசுவை நமது இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய உடைமைகள் யாவும் நம்முடையவைகள் ஆகிவிடுகின்றன. அவற்றை நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். ரூஸ்வெல்ட் கிளாராவிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டதுபோல, ஆண்டவருடைய கிருபை வரங்களை இன்று நாமும் நன்றாக அனுபவிக்கலாம். விலையில்லாமல் அவற்றைக் கொடுப்பதற்காக, தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நாம் பெற்றுக் கொள்வதால் அவைகள் நம்முடையவைகள் அல்ல. ஆண்டவரே அவற்றை நமக்குத் தருகிறார். தேவ ஈவுகள் யாவும் இலவசமானவைகள். ஆனால் அவை மிகவும் விலைமதிப்பானவைகள். ஆகவே, இலவசமாகக்கிடைப்பதால் அவற்றைக் குறித்து நாம் பெருமை பாராட்டமுடியாது; அவை நம்மாலேதான் ஆனது என்றும் சொல்லக்கூடாது. தேவன் தந்த ஈவுகளை நன்றியறிதலோடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொண்டு, தேவநாம மகிமைக்காக வாழுவோமாக.

*வாசிப்பு:*
யோசுவா 24:8-13

*ஜெபம்:*
"பிதாவே, நான் மகிழ்ந்திருப்பதும், இவ்வுலகில் அனுபவிக்கின்ற யாவுமே நீர் கிருபையாகத் தந்தது. உமக்கே நன்றி ஐயா! ஆமென்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல்
30
செவ்வாய்

# தெரிவு உங்களுடையதே!

...நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். (யோசுவா 24:15)

தன் கணவனுக்கு வேறு இரண்டு மனைவிகளும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் பல பிள்ளைகளும் உண்டு என்று அறிந்ததால் மூன்றாம் மனைவி தன் கணவனை விவாகரத்துச் செய்தாள். கணவனுடைய விளக்கம் இதுதான். "நான் ஊர் ஊராய் சுற்றித்திரியும் ஒரு விற்பனையாளன். நான் சந்தித்த பெண்கள் மூவர். அவர்களும் என்னை விரும்பினர். எனவே, அவர்கள் மனதை நோகச் செய்ய விரும்பாமல், ஒவ்வொருவரையும் திருமணம் செய்துகொண்டேன்" எனக் கூறினான். கடினமாயினும் சரியான ஒரு தெரிவைச் செய்யமுடியாமல், அவர்கள் ஒவ்வொருவரையும் திருமணம் செய்கின்ற எளிதான குறுக்கு வழியானதொரு தெரிவைச் செய்திருந்தான் அவன்.

இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தில் குடியமர்ந்த பின்னர், அவர்கள் தெரிவுசெய்யக்கூடிய பல வாய்ப்புகள் இருந்தன. அவை சுலபமானவைகள் அல்ல. அவர்களது பிதாக்கள் எகிப்தில் பழக்கப்பட்டிருந்த எகிப்தின் கடவுள்களை அவர்களும் வணங்கலாம். இப்போது அவர்கள் அகப்பட்டிருப்பது எமோரியரின் கடவுள்களிடம். இந்தக் கடவுள்கள் மாம்ச இச்சைக்கு இடம் கொடுத்தன. இது பலருக்குக் கவர்ச்சியாக இருந்தது. பலர் இத் தெரிவுகளில் திகைத்து நிற்கையில், யோசுவா கடினமான தீர்மானத்தைச் செய்திருந்தான். யாரைத் தெய்வமாகக் தொழுதுகொள்வது என்று தீர்க்கமாகத் தெரிந்துகொண்டிருந்தான். எனவேதான், "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்." என்று உறுதியாக அறிக்கைசெய்தான்.

"கர்த்தரைச் சேவிப்பது" என்பதைத் தெரிந்துகொள்ளுவது என்பது இலேசான காரியமல்ல. சிலவேளைகளில் இது குடும்பத்தாரின் சமய நம்பிக்கைகளுக்கு எதிரானதாக இருக்கலாம். சில நேரங்களில் நண்பர்களின் நெருக்கடி, எல்லோருடனும் ஒத்துப்போகவேண்டும் என்ற எண்ணம் என்பன, ஆண்டவர்மீது நமக்குள்ள பற்றுதலை வெளிப்படையாக அறிவிக்க அனுமதிப்பதில்லை. மேலும் பலர், இடத்துக்குத் தகுந்தவாறு தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தியைப்போல, இடத்திற்கேற்ப தங்களையும் மாற்றிக் கொள்கிறார்கள். இது, உறுதியான தீர்மானம் எடுப்பதைத் தடுக்கும். ஒரு முடிவை நீங்களே எடுங்கள். நீங்கள் யாரைச் சேவிப்பீர்கள்? உல்லாசத்தையும், ஆஸ்தியையும், சிற்றின்பத்தையும் தருகின்ற கடவுள்களையா? அல்லது, உங்களை நேசிக்கும் இயேசு கிறிஸ்துவையா? கிறிஸ்துவுக்காக ஒரு தீர்மானம் செய்வது கடினமாக இருந்தாலும், அவரைச் சேவிப்பதையே தீர்க்கமாகத் தெரிந்துகொள்வீர்களானால், அதற்காக நீங்கள் வாழ்வில் ஒருபோதும் மனம் வருந்தவேண்டி நேரிடாது.

*வாசிப்பு:*
யோசுவா 24:14-18

*ஜெபம்:*
"பிதாவே,
நானும்
என் குடும்பமும்
எந்த நிலையிலும்
உம்மையே
சேவிப்போம். நீரே
எம்மை நடத்தும்.
ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நினைவுபடுத்துகிறோம்

எமது வெளியீடுகளை
புதிதாக பெற
விரும்புகிறவர்கள் மற்றும்
எமது வெளியீடுகளை
தொடர்ந்து பெற்றுவரும்
சந்தாதாரர்களுக்காக எமது
சந்தா கட்டண விபரங்கள்
கீழே தரப்பட்டுள்ளன.




### ஒரு வருடத்திற்கான சந்தா

| | |
|---|---|
| இலங்கையில் உள்ளவர்களுக்கு | - ரூ. 600.00 |
| இந்தியாவில் உள்ளவர்களுக்கு | - ரூ. 1,500.00 |
| தென்னாசிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |
| மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |
| ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 3,000.00 |
| அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 3,000.00 |

### உங்கள் சந்தா பணத்தை

**மணியோடர் மூலம் பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் **(CINNAMON GARDENS POST OFFICE)** என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் **(BACK TO THE BIBLE)** என்றும் குறிப்பிட்டு அனுப்பவும்.

**காசோலை மூலம் அனுப்புவதாயின்: (BACK TO THE BIBLE)** என்ற பெயருக்கு காசோலை எழுதவும்.

***மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் பணம் அனுப்புவதில் உங்களுக்கு சிரமம் அல்லது சிக்கல்கள் ஏதும் இருக்குமானால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.***

***இங்கிலாந்து மற்றும் கனடாவில் உள்ளவர்களுக்கு***

பணம் அனுப்பிவைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு எம்மோடு தொடர்புகொண்டு விசாரிக்கவும்.

*(சந்தாதாரருக்கான படிவம் மறுபக்கத்தில் உள்ளது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தா படிவம்

எமது வெளியீடுகளை புதிதாக பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த புதியவர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்த விரும்பினால் இந்த படிவத்தை தெளிவாக நிரப்பி அனுப்பவும்.

நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் உங்கள் பெயர், முகவரியுடன் உங்கள் கணனி இலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள். உங்கள் முகவரியில் மாற்றம் ஏதும் இருக்குமானால் உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

பெயர் :............................................... கணனி இல.: ....................

முகவரி :..................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

எந்த மாதத்திலிருந்து எமது வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்? [ ]

நீங்கள் புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா? [ ]

இப் படிவத்துடன் ரூபா............................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

அனுப்பியவர் பெயர்: ..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| மார்ச் | | | ஏப்ரல் | |
|---|---|---|---|---|
| காலை | மாலை | திகதி | காலை | மாலை |
| எண். 16,17 | மாற் 8:01-21 | 01 | யோசு. 14,15 | லூக் 7:19-35 |
| எண். 18,19 | மாற் 8:22-38 | 02 | யோசு. 16,17,18 | லூக் 7:36-50 |
| எண். 20,21 | மாற் 9:01-29 | 03 | யோசு. 19,20 | லூக் 8:01-15 |
| எண். 22,23 | மாற் 9:30-50 | 04 | யோசு. 21,22 | லூக் 8:16-39 |
| எண். 24,25 | மாற் 10:01-22 | 05 | யோசு. 23,24 | லூக் 8:40-56 |
| எண். 26,27 | மாற் 10:23-52 | 06 | நியா. 1,2 | லூக் 9:01-21 |
| எண். 28,29 | மாற் 11:01-33 | 07 | நியா. 3,4 | லூக் 9:22-43 |
| எண். 30,31 | மாற் 12:01-17 | 08 | நியா. 5,6 | லூக் 9:44-62 |
| எண். 32,33 | மாற் 12:18-44 | 09 | நியா. 7,8 | லூக் 10:01-24 |
| எண். 34,35,36, | மாற் 13:01-13 | 10 | நியா. 9 | லூக் 10:25-42 |
| உபா. 1,2, | மாற் 13:14-37 | 11 | நியா. 10,11 | லூக் 11:01-23 |
| உபா. 3,4 | மாற் 14:01-25 | 12 | நியா. 12,13,14 | லூக் 11:24-38 |
| உபா. 5,6 | மாற் 14:26-52 | 13 | நியா. 15,16 | லூக் 11:39-54 |
| உபா. 7,8,9 | மாற் 14:53-72 | 14 | நியா. 17,18 | லூக் 12:01-15 |
| உபா. 10,11 | மாற் 15:01-23 | 15 | நியா. 19 | லூக் 12:16-41 |
| உபா. 12,13 | மாற் 15:24-47 | 16 | நியா. 20,21 | லூக் 12:42-59 |
| உபா. 14,15,16 | மாற் 16:01-20 | 17 | ரூத் 1,2 | லூக் 13:01-35 |
| உபா. 17,18,19 | லூக் 1:01-25 | 18 | ரூத் 3,4 | லூக் 14:01-35 |
| உபா. 20,21 | லூக் 1:26-56 | 19 | 1சாமு. 1,2 | லூக் 15:01-32 |
| உபா. 22,23 | லூக் 1:57-80 | 20 | 1சாமு. 3,4,5 | லூக் 16:01-31 |
| உபா. 24,25,26 | லூக் 2:01-35 | 21 | 1சாமு. 6,7,8 | லூக் 17:01-19 |
| உபா. 27,28 | லூக் 2:36-52 | 22 | 1சாமு. 9,10 | லூக் 17:20-37 |
| உபா. 29,30 | லூக் 3:01-20 | 23 | 1சாமு. 11,12,13 | லூக் 18:01-17 |
| உபா. 31,32 | லூக் 3:21-38 | 24 | 1சாமு. 14 | லூக் 18:18-43 |
| உபா. 33,34 | லூக் 4:01-30 | 25 | 1சாமு. 15,16 | லூக் 19:01-27 |
| யோசு. 1,2 | லூக் 4:31-44 | 26 | 1சாமு. 17 | லூக் 19:28-48 |
| யோசு. 3,4,5 | லூக் 5:01-16 | 27 | 1சாமு. 18,19 | லூக் 20:01-26 |
| யோசு. 6,7 | லூக் 5:17-39 | 28 | 1சாமு. 20,21,22 | லூக் 20:27-47 |
| யோசு. 8,9 | லூக் 6:01-19 | 29 | 1சாமு. 23,24,25 | லூக் 21:01-19 |
| யோசு. 10,11 | லூக் 6:20-49 | 30 | 1சாமு. 26,27,28 | லூக் 21:20-38 |
| யோசு. 12,13 | லூக் 7:01-18 | 31 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Sathiya Vasanam" - Supplimentary

Registered in the Department of Post of Sri Lanka under
No. QD/88/News/2012

இந்நூலை புதிதாக வாசிப்பவர்கள் தொடர்ந்தும் இந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் எமது வெளியீடுகளை பெற்றுவரும் சந்தாதாரரானால் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருமுறையும் உங்கள் கணனி (கம்யூட்டர்) பதிவு இலக்கத்தையும் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் கணனி பதிவு இலக்கம், உங்களுக்கு எமது வெளியீடுகள் அனுப்பப்படும் உறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது வெளியீடுகள் ஏதாவது தவறுதலாக இரண்டு பிரதிகள் உங்களுக்கு கிடைத்தால் தயவுசெய்து உங்களுடைய கணனி பதிவு இலக்கத்துடன் எமக்கு அறியத்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

நீங்கள் வீடு மாறும்போது உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட்டு அறியத்தாருங்கள்.

எமது வெளியீடுகள் உரிய காலத்தில் உங்களுக்கு வந்து சேராவிடில் அது குறித்து உடனடியாக அறியத்தாருங்கள்.

BACK TO THE BIBLE

ජීවිතාලෝකය சத்தியவசனம்

தபால் முகவரி
*P.O Box 1012*
*Colombo,*
*Sri Lanka.*

நேரில் எமது முகவரி
*120A ,Dharmapala Mawatha*
*Colombo 7,*
*Sri Lanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org